உங்களுக்குள்ளிருக்கும் சுகத்தை கட்டவிழ்த்துவிடுங்கள்

Dr. ஆன்ட்ரூ டேவிட்

notionpress.com

INDIA • SINGAPORE • MALAYSIA

Notion Press Media Pvt Ltd

No. 50, Chettiyar Agaram Main Road,
Vanagaram, Chennai, Tamil Nadu – 600 095

First Published by Notion Press 2021
Copyright © Dr. Andrew David 2021
All Rights Reserved.

ISBN 978-1-68538-326-8

This book has been published with all efforts taken to make the material error-free after the consent of the author. However, the author and the publisher do not assume and hereby disclaim any liability to any party for any loss, damage, or disruption caused by errors or omissions, whether such errors or omissions result from negligence, accident, or any other cause.

While every effort has been made to avoid any mistake or omission, this publication is being sold on the condition and understanding that neither the author nor the publishers or printers would be liable in any manner to any person by reason of any mistake or omission in this publication or for any action taken or omitted to be taken or advice rendered or accepted on the basis of this work. For any defect in printing or binding the publishers will be liable only to replace the defective copy by another copy of this work then available.

அர்ப்பணம்

இந்த புத்தகத்தை, என்னுடைய மனைவி நிஷா மற்றும் எங்களுடைய பிள்ளைகளாகிய சாமுவேல் மற்றும் ரூத் ஆகியோருக்கு அர்ப்பணிக்கிறேன்.

நிஷா! நீ எனக்கு தேவன் கொடுத்த ஈவு. உன்னுடைய அன்பும் பொறுமையும் இல்லாமல், என்னுடைய சுகத்தின் பயணத்தில் நான் தொடர்ந்து ஓடியிருப்பேனா என்பது சந்தேகம்தான். உன்னுடைய எல்லாவிதமான தியாகங்களுக்கும், நிபந்தணையற்ற அன்புக்கும் நான் எப்பொழுதும் நன்றியுள்ளவனாக இருப்பேன். நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவன்!

சாமுவேல், ரூத்! நீங்கள் இருவரும் எனக்கு மிகவும் விலையேறப்பெற்றவர்கள். நீங்கள் எனக்கு கற்றுக் கொடுக்கும் காரியங்கள் என்னை வியக்க வைக்கின்றன. உங்களுடைய விசுவாசம் என்னை உற்சாகப்படுத்துகிறதாக இருக்கின்றது. *சிறுபிள்ளைகளை போல விசுவாசியுங்கள்* என்று இயேசு கூறியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! தொடர்ந்து நம்புங்கள். தொடர்ந்து விசுவாசத்தை பேசுங்கள். ஏனென்றால், நான் உங்களிடத்திலிருந்து கற்றுக்கொண்டே இருக்கிறேன்.

உள்ளே...

முகவுரை *7*

முதலாவது இதை வாசியுங்கள் *13*

நான் பெற்ற சுகம் *23*

பகுதி 1

1. சுகம் - தேவனுடைய சித்தம் 33
2. தேவனுடைய ராஜ்யம் 53
3. இயேசு - தேவனுடைய குமாரன் 72
4. புது பிறப்பு 92
5. தேவநீதியினால் உண்டாகும் சுகம் 118

பகுதி 2

6. இருதயம் 137
7. தியானம் - சுகம் மற்றும் ஆரோக்கியத்திற்கான திறவுகோல் 160
8. கர்த்தருடைய பந்தி 177
9. ஆவியில் நடப்பது 190
10. அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல் 218

முடிவுரை *233*

கடைசியாக சில வார்த்தைகள் *239*

ஏழு திறவுகோல் வசனங்கள் *241*

ஆசிரியரை பற்றி *245*

விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்

– இயேசு

முகவுரை

இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய இவைகளை குறித்த சத்தியங்களே இந்த புத்தகத்தின் மையப்பொருளாகும். நீங்கள் மிகுந்த ஆவலுடன் நாடித்தேடுகின்ற சரீரம் மற்றும் மனதின் சுகமானது, இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் வெளிப்பாட்டில்தான் அடங்கியுள்ளது. இந்த புத்தகத்தில், கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய உண்மையான அடையாளத்தை முறையாக எடுத்து காண்பித்திருக்கிறேன்.

சிலுவையிலே இயேசு கிறிஸ்து செய்து முடித்த காரியங்களை குறித்த அறியாமையினிமித்தம் என் வாழ்க்கையின் பல ஆண்டுகளை பாடுகளில் கழித்தேன். அது மட்டுமல்ல! என்னுடைய ஜெபங்கள், புதிய உடன்படிக்கையின் சத்தியத்தை அஸ்திபாரமாக கொண்டிருக்கவில்லை. ஆம், 'கிறிஸ்துவுக்குள் நான் யார்?' என்ற சத்தியத்தை அறியாமலிருந்தேன். இந்த மாபெரும் சத்தியத்தை நான் முற்றிலும் அறிந்துகொண்டேன் என்று கூறமாட்டேன். ஆனால், நான் முன்னிருந்த அறியாமை என்ற இடத்திலிருந்து விடைபெற்றுவிட்டேன். "கிறிஸ்துவுக்குள் நீங்கள் பரிபூரணமாக இருக்கின்றீர்கள்" என்ற உங்களுடைய உண்மையான அடையாளத்தை குறித்து நீங்களும் அறிந்துகொள்ள, இன்றே தொடங்குவீர் உங்களின் ஒப்பற்ற பயணத்தை! வெகு காலமாக, என்னுடைய வாழ்க்கை தோல்வியின் அடையாளமாகவே இருந்து வந்தது. அதாவது, நான் பலவிதமான பாவ பழக்கவழக்கங்களுக்கு

அடிமையாக இருந்துவந்தது மட்டுமல்லாமல், என் சரீரத்திலும் வியாதிப்பட்டிருந்தேன். வேதவார்த்தைகளில் உள்ள ஆசீர்வாதங்களுக்கும் என்னுடைய வாழ்க்கையின் அனுபவத்துக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளி காணப்பட்டது. தேவனிடத்தில் எனக்கு தேவையான பதில் உள்ளது என்று அறிந்திருந்தேன். ஆனால், அதை அவரிடத்திலிருந்து எவ்வாறு பெற்றுக்கொள்வது என்று வகை அறியாதிருந்தேன். ஒரு சமயம், முற்றிலும் விரக்தியடைந்த ஒரு காலகட்டத்திற்குள்ளானேன். அப்பொழுதுதான், தேவனை நான் ஊக்கமாக தேட ஆரம்பித்தேன். அவ்வாறு நான் அவரை தொடர்ந்து தேடுகையில், ஒரு நாள், என் கண்களிலிருந்த செதில்கள் விழ ஆரம்பித்தன. வேதாகமத்திலுள்ள ரோமர் 6 முதல் ரோமர் 8 வரையுள்ள அதிகாரங்களை நான் தியானித்துக் கொண்டிருக்கையில், கிறிஸ்துவின் சிலுவையை முதன்முதலாக என்னுடைய இருதயத்தில் கண்டேன். சிலுவையில் தேவன் செய்து முடித்தவை யாவும் அற்புதமான கிருபையின் செயல்பாடு. ஒவ்வொரு விசுவாசியும் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டிய வெளிப்பாடு என ஒன்று இருக்குமென்றால், அது சிலுவையின் வெளிப்பாடுதான்! இப்பொழுதும், இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் இயேசு சிலுவையில் செய்து முடித்தவைகளை குறித்தே நான் பறைசாற்ற விரும்புகிறேன். விசேஷமாக, தங்களுடைய சரீரத்திலும் மனதிலும் வியாதியுற்று தவிப்பவர்களுக்கு இந்த நற்செய்தியை கூற விரும்புகிறேன்.

இந்த புத்தகம் இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பாகத்தில், மனிதன் விழுந்துபோன பிற்பாடு அவனுக்கிருந்த மனநிலையையும், இயேசு அதை எவ்வாறு நிவிர்த்தி செய்தார் என்றும் காணலாம். ஒவ்வொரு விசுவாசியும், வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் வெற்றியுள்ளவர்களாக திகழுவதற்கு அறிந்திருக்க வேண்டிய மிக முக்கியமான வெளிப்பாடு என்னவென்றால் - இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்த வெளிப்பாடுதான்! இதில் வருத்தத்திற்குரிய காரியம் என்னவென்றால், சிலுவையில் என்ன நடந்ததென்றே அநேகருக்கு

தெரியவில்லை. சிலுவையை குறித்து பெரும்பாலான விசுவாசிகள் அறிந்திருப்பதெல்லாம், இயேசு தங்களுடைய பாவங்களையெல்லாம் கழுவுகிறார் என்ற தெளிவற்ற உணர்வு மாத்திரமே! அது ஒருவகையில் உண்மையாக இருந்தாலும், இன்னும் அதிக ஆழமான சத்தியங்கள் சிலுவையில் உண்டு என்பதே அதிமேன்மையான உண்மை! இந்த வெளிப்பாடுதான், தேவனிடத்திலிருந்து நீங்கள் சகலத்தையும் பெற்றுக்கொள்வதற்கான திறவுகோல். தேவன் எல்லாவற்றையும் சிலுவையில் முடித்துவிட்டார் என்பதை முதலாவது நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இத்தனை இலவசமாக நமக்கு அருளப்பட்ட ஈவை, நாம் நம் வாழ்வில் செயல்பட வைப்பதற்கு, நாம் செய்ய வேண்டியதெல்லாம், நம்முடைய மனதை தேவனுடைய வார்த்தையைக் கொண்டு புதிதாக்குவதுதான். இதை எவ்வாறு செய்வது என்பதில் இந்த புத்தகம் உங்களுக்கு உதவி செய்யும். முதல் ஐந்து அத்தியாயங்கள், சிலுவையில் என்ன நடந்தது என்பதைப் பற்றியும், மற்றும் நாம் இயேசுவை முதன்முதலில் விசுவாசித்தபோது நமக்கு என்ன நடந்திருக்கிறது என்பதைப் பற்றியும் விளக்குகிறது. சிலுவையினிமித்தம், நீங்கள் நோயையும் பேயையும் மேற்கொண்டு, தற்போது சந்தித்துக்கொண்டிருக்கிற வாழ்வின் சீற்றங்களையும் ஜெயித்து, ஜெயமுள்ள வாழ்க்கையை வாழ முடியும். இவ்வாறாக, முதல் பாகமானது, இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை குறித்த துல்லியமான தகவலை தருவதில் கவனம் செலுத்துகிறது. துல்லியமான தகவலை மட்டும் தருவது எனது பிரதான நோக்கம் அல்ல. ஆகவேதான், பிறந்தது பாகம் இரண்டு!

இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில், நீங்கள் முதல் பாகத்தில் கற்றுக்கொண்ட தகவல்களை செயல்முறைபடுத்துவதில் ஈடுபடும்பொழுது, அந்த தகவல்கள் உங்கள் வாழ்வில் உருமாற்றமடைந்து மெய்யாவதை பார்ப்பீர்கள். இந்த இரண்டாம் பாகத்தில், நீங்கள் சிலுவையோடு இணைக்கப்பட்டு எவ்வாறு உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பது என்பதை குறித்து புரிந்துகொள்ளலாம். உங்கள் இருதயத்தில் தேவனோடு கூட

உறவுகொள்வதை குறித்து இன்னும் அதிகமாக கற்றுக்கொள்வீர்கள். ஆம்! நம் தேவன் இருதயங்களின் தேவன்! தேவன் நமது இருதயங்களில் வாழ்கிறார். மனிதனுடைய இருதயம்தான் தேவனுடைய "புதிய" மகா பரிசுத்த ஸ்தலம். பழைய ஏற்பாட்டில் உள்ள ஆசரிப்புக் கூடாரம் என்பது மனிதனை படமாக்கி காட்டுகிறது. மனிதன்தான் பரிசுத்த ஆவியானவரின் மெய்யான ஆலயம். மனிதனுடைய ஆவிதான் "புதிய" மகா பரிசுத்த ஸ்தலம். தேவன் நம்முடைய ஆவியில் வாழ்கிறார்! நம்முடைய இருதயத்தில் தேவனோடு ஐக்கியம் கொள்ள அறியாத வரைக்கும், நித்திய ஜீவனை நாம் அனுபவிப்பதும் நமக்கு தூரமாகவே இருக்கும். நம்முடைய அறியாமையினிமித்தம், தேவன் எங்கேயோ தூரமான பரலோகத்தில் இருக்கிறதாக நாம் நினைத்துக்கொண்டு, அவரை நம்முடைய ஜெபங்களால் அசையப்பண்ணுவதாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மை என்னவென்றால், அவர் தம்முடைய "புதிய" மகா பரிசுத்த ஸ்தலமாகிய நம்முடைய இருதயத்தில்தான் வாசம்பண்ணுகிறார். நாம் செய்ய வேண்டியதெல்லாம், உன்னதமானவரின் மறைவிற்குள் ஜெபத்தில் நுழையவும், அவரோடு ஐக்கியம் கொள்ளவும் கற்றுக்கொள்ள வேண்டும். அவரை நாம் காணக்கூடாதபடிக்கு நம்மை அவரிடமிருந்து தடுப்பதெல்லாம் நம்முடைய மாம்சீகமான மனம்தான். இந்த "மாம்சீகமான மனம்" என்ற திரையை நாம்தான் கிழிக்க முடியும் என்பதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த திரையை முற்றிலும் நாம் கிழித்த பிறகுதான், நம்முடைய ஆவியில் உள்ளவாறு தேவனை அறிந்து கொள்ள முடியும். இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமையானது, நமக்குள்ளே நம்முடைய ஆவியில் அடைக்கப்பட்டுள்ளது! எப்படி நமக்குள்ளிருந்து அதனை கட்டவிழ்ப்பது என நாம் அறிந்துகொள்ளவில்லை என்றால், தேவனுடைய அபரிமிதமான ஜீவனை அனுபவிக்காமல் நாம் இழந்துவிடுவோம். எல்லா விசுவாசிகளும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிற 'எழுப்புதல்' என்பது ஆவியில் நிரப்பப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும்தான் குடிகொண்டிருக்கிறது. உங்களுடைய சுகம், உங்களுக்குள்தான்

இருக்கிறது. நீங்கள் அதனை கண்டுபிடித்து செயல்படுத்த போகின்றீர்கள்!

முடிவு குறிப்பு: ஒவ்வொரு அத்தியாயத்திலும் தகுந்த இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வேதவசனங்கள், மேல் ஒட்டாக (superscript) குறிக்கப்பட்டுள்ள எண்களின் வரிசைபடி, அந்தந்த அத்தியாயத்தின் முடிவில் பட்டியலிடப்பட்டுள்ளது.

முதலாவது இதை வாசியுங்கள்

உங்கள் தேவனுடைய வார்த்தையின் மீதுள்ள நம்பிக்கையை இன்னமும் இழக்காததினாலும் மற்றும் உங்கள் சரீரத்திலும் மனதிலும் தெய்வீக சுகத்தை அனுபவித்தே ஆக வேண்டும் என்பதினால்தான் இந்த புத்தகத்தை தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். ஒருவேளை, உங்களுடைய சுகவீனம் உங்களை மிகவும் கவலைக்குள்ளாக்கி இருக்கலாம். தெய்வீக சுகத்தை குறித்த தேவனுடைய வார்த்தைகளை அறிக்கையிட்டு, அவைகளையே ஜெபித்து, சுகத்தை பெற்றுக்கொண்ட சில சாட்சிகளை கேட்டதினால், நீங்களும் இடைவிடாமல் தணியா தாகத்தோடு அதை செய்து பார்த்தும், ஒருவேளை, நீங்கள் எதிர்பார்த்த முடிவை பெற்றுக்கொள்ள முடியாமல் ஏமாற்றம் அடைந்திருக்கலாம். அதனால், "நான் என்ன தவறு செய்கிறேன்?" என்ற கேள்வி உங்களுடைய மனதில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கலாம். நீங்கள் சுகவீனமாகி களைப்படைந்ததினிமித்தம் இன்னமும் சுகவீனமாகி சோர்வடைந்திருப்பீர்களாகில் ஒரு வியக்கத்தக்க பயணத்தை வீரியத்தோடு தொடங்குவதற்கு நீங்கள் தயாராகிவிட்டீர்கள்! தேவன் உங்களை அதிகமாக நேசிப்பதினாலும், சுகத்தை குறித்த இந்த சத்தியத்தை நீங்கள் அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்புவதினாலும்தான் இந்த புத்தகத்தை உங்கள் கரங்களில் அவரே வைத்துள்ளார் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன். உங்களிடத்தில் என்ன தவறு இருக்கிறது என்று இந்த புத்தகம் சுட்டிக்காட்டாமல், ஏற்கெனவே உங்களை குறித்து சிலுவையில் என்ன சரி செய்யப்பட்டுள்ளது என்பதையே எடுத்துக் காட்டும். இந்த

புத்தகம் உங்களை ஒரு சுவாரஸ்யமான பயணத்தில் எடுத்துச் செல்லும். புகழ்பெற்ற வேதாகம நபர்களை போல நீங்களும் ஒரு பயணத்திற்கென்று நியமிக்கப்பட்டுள்ளீர்கள்! அநேகர் இந்த வழியாக ஏற்கெனவே பயணித்துள்ளார்கள். இன்னும் என்னைப் போன்றவர்கள், குறைவாக பயணிக்கப்பட்ட இந்த பாதையை, ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறார்கள். "கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று இயேசு சொல்லியிருக்கிறார்[1]. நீங்கள் அந்த பாதையை கண்டுபிடிக்க போகின்றீர்கள்!

இந்த வேத ஆராய்ச்சியின்போது நீங்களும் உங்களுடைய சுகத்தை பெற்றுக்கொள்வீர்கள். ஆனால், உங்களை குறித்த என்னுடைய ஆசையோ அதைவிட மேலானது. நீங்கள் அவருக்குள் இருக்கின்றீர்கள் என்ற சத்தியத்தை அறிவதினிமித்தம், தெய்வீக ஆரோக்கியத்தை அனுபவிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிற அந்த விருப்பத்தை நீங்கள் காண வேண்டும் என்று ஆசிக்கிறேன். இந்த சத்தியத்தை நீங்கள் புரிந்துகொண்டு உங்கள் வாழ்வில் இதனை அனுசரிப்பதால், நீங்கள் மறுரூபமடைவீர்கள். இது வலியில்லா மறுரூபம் (painless transformation) ஆகும்!

சோம்பேறியின் வயலையும், மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாயிருந்தது; நிலத்தின் முகத்தைக் காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது (நீதிமொழிகள் 24:30-31).

வியாதிகளும் நோய்களும் நம்முடைய வாழ்வில் முட்களும் நெரிஞ்சில்களும் போன்றவை. அவை நம்முடைய வாழ்க்கை எனும் திராட்சத்தோட்டத்தை அழித்து கற்சுவரை இடித்துவிடுகின்றன. இங்கு ஞானம் கூறுகிறதென்னவென்றால், அழிவுக்கு காரணம் மதியீனமே; மற்றும் சோம்பேறி அறிவை பெற்றுக்கொள்ள நேரத்தை செலவிட்டு முயற்சிப்பதில்லை. "அறியாமை ஒரு ஆசீர்வாதம்" என்ற பழமொழியை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், உண்மையில்

அது ஆசீர்வாதம் அல்ல. மாறாக, அறியாமை, நம்மை கொன்று அடிமைத்தனத்திற்குள்ளாக நடத்தி செல்லுகின்றது[2]. தன் ஜனங்களை சிறைப்படுத்தி அடிமைகளாக்குவதற்கு ஒன்று இருக்குமென்றால், அது அறிவில்லாமைதான் என்று தேவனே சொல்லியிருக்கிறார்[3]. அடிமைத்தனம் என்றால் செயல்பட முடியாமல் சிக்கிக்கொள்வது அல்லது கைது செய்யப்படுவது. பெரும்பாலான நேரங்களில் நாம் நோய்வாய்படுவதற்கான காரணம் அறிவில்லாமையே! எபிரெயு பாஷையில் 'அறியாமை' என்பது இருளோடு ஒப்பிடப்பட்டுள்ளது. சத்தியத்தை குறித்து நாம் அறிவில்லாமலிருப்பதுதான் சாத்தானுக்கு நாம் கொடுக்கும் வலிமை. விதைக்கிறவனுடைய உவமையில், இயேசு, "வார்த்தையை ஏற்றுக்கொண்டு புரிந்துகொண்டவர்கள்தான் மிகப்பெரிய அறுவடையை பிறப்பிப்பார்கள்" என்றார்[4].

இஸ்ரவேலின் ராஜாக்களில் தாவீது மாபெரும் ராஜாவாக திகழ்ந்தான். அவன் தன் வாழ்நாளெல்லாம் தேவனை மிகவும் அதிகமாக நேசித்தான். அவனுக்குப் பின்னர் ஆண்ட அவனுடைய குமாரன் சாலொமோன், இஸ்ரவேலில் ஆளுகை செய்த சகல ராஜாக்களிலும் ஞானமுள்ளவனும் ஐஸ்வர்ய சம்பன்னனுமாயிருந்தான். தன் தகப்பனுடைய அரவணைப்பில் வளர்ந்த சாலொமோன், அவரிடமிருந்து அநேக அறிவுரைகளை பெற்றிருந்தான். அவ்வாறு கொடுக்கப்பட்ட அறிவுரையில் ஒன்றுதான் இது -

ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள் (நீதிமொழிகள் 4:7).

புரிந்துகொள்வது அல்லது அறிவு என்பது இருதயத்தை சார்ந்தது. "அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்" என்று வேதாகமம் கூறுகிறது[5]. தேவன் தம்முடைய பிள்ளைகளை நேசிப்பதினால், அவர்கள் யாவரும் தெய்வீக ஆரோக்கியத்தோடும் செழிப்போடும் வாழ்வதையே விரும்புகிறார்[6]. இதற்காகவே தேவன் தம்முடைய வார்த்தையை அனுப்பியிருக்கிறார். அவருடைய வார்த்தையை விசுவாசத்துடன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதை

வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தும்போது, அந்த வார்த்தையின் பலனை நாம் அனுபவித்து மகிழ்வோம். தேவனுடைய வார்த்தை நமது சரீரங்களில் சுகத்தை கொண்டு வரும்! தம்முடைய வார்த்தையை ஆராய்ந்து புரிந்துகொள்ளும்படியாகத்தான் சபைக்கு இயேசு ஞானத்தை தந்திருக்கிறார். இந்த புரிந்துகொள்ளுதல் என்பது மூளையில் சில தகவல்களை கிரகித்துக்கொள்வது அல்ல. மாறாக, ஒரு சத்தியம், நம்முடைய அடையாளமாக மாறும்வரை அதனை குறித்து மாத்திரம் தியானித்து ஆராய்ந்தறிவது. மனிதன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல தேவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்கும்படியாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறான். தேவனுடைய வார்த்தையை விட்டு வழி விலகுகிற 'மறுபடியும் பிறந்த' விசுவாசி, ஜீவன் கொடுக்கும் ஊற்றிலிருந்து விலகுவதால், சீக்கிரத்தில் வாடிப்போவான்.

தேவனுடைய வார்த்தையை தியானிக்கும்படியாகவும், முற்றிலும் அதற்கென்றே தன்னை அர்ப்பணிக்கவும், தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் அறிவுரை கூறியது போல[7], நாமும் தேவனுடைய வார்த்தையை தியானிப்பதற்கு நம்மை முற்றிலும் அர்ப்பணிப்போமாக. இதை செய்ததற்காக பின்னாட்களில் ஒருபோதும் வருந்தவே மாட்டீர்கள்! தன்னுடைய எஜமானைப் போலவே வாழ வேண்டும் என்று விரும்புபவனே சீஷன். இதற்கு அத்தியாவசியமானது அர்ப்பணம்! ஆகவே, அவருடைய வழிகளை கற்றறிந்துகொள்ள உங்களையே அர்ப்பணியுங்கள் என்று இந்த புத்தகத்தின் மூலமாக ஊக்குவிக்க விரும்புகிறேன். இந்த அர்ப்பணிப்பு இருந்தால், நீங்கள் முன்னேறி செல்ல ஆயத்தமாகிவிட்டீர்கள்!

இயேசு தமது சீஷர்களை நோக்கி: நீங்கள் எதை பற்றி கேட்கிறீர்கள் என்பதைக் குறித்து கவனமாயிருங்கள். தாங்கள் கேட்ட சத்தியத்திற்கு, எந்த அளவிற்கு எண்ணமும் தியானமும் கொடுக்கிறார்களோ, அந்த அளவிற்குத்தான் ஒழுக்க நெறிமுறைகளும் அறிவும் அவர்களுக்குள்ளிருந்து வெளிப்படும். அப்படிப்பட்டவர்களுக்கு இன்னும் அதிகம் கொடுக்கப்படும்

(மாற்கு 4:24 - பொழிப்புரை). "என்னோடு அதிக நேரம் செலவழித்தால் உன்னை அதிகமாக ஆசீர்வதிப்பேன்" என்று தேவன் கூறுவதில்லை. இல்லவே இல்லை! மாறாக, நாம் அவரோடு அதிக நேரம் செலவழிக்கும்போது, அவரை அனுபவிக்கத்தக்கதாக நம்முடைய அளவு அல்லது திறன் அதிகமடைகிறது! இப்பொழுது, தேர்வு செய்வது நம்முடைய கைகளில்தான் உள்ளது!

என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் **ஆரோக்கியமுமாம்** (நீதிமொழிகள் 4:20-22).

தேவனுடைய வார்த்தையில்தான் ஆரோக்கியம் இருக்கிறது. அது மட்டுமல்ல, அவருடைய வார்த்தையானது உங்கள் சரீரத்திலிருந்து வியாதிகளை விலக்கிப்போடும். மேலே கூறப்பட்டுள்ள வசனத்தில் உள்ள *"ஆரோக்கியம்"* என்ற வார்த்தை *"மருந்து"* என்று பொருள்படும் எபிரெயு வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இன்றைக்கு உள்ள நவீன மருத்துவத்திற்கு அநேக எதிர்மறையான விளைவுகள் உண்டு. சில நேரங்களில், வியாதியை காட்டிலும் எதிர்மறையான விளைவுகளே மோசமாக இருக்கின்றன. எனினும், நவீன மருத்துவத்தைப் போல இல்லாமல், தேவனுடைய வார்த்தையானது முற்றிலும் நேர்மறையான விளைவுகளை மட்டுமே உள்ளடக்கியது!

சில சத்தியங்களை, விதவிதமான கோணத்திலிருந்து இந்த புத்தகத்தில் அணுகியிருக்கிறேன். கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் அடையாளம், வேதாகமம் சார்ந்த தியானம், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுவது போன்ற சத்தியங்கள் ஆராய்ந்து அறியப்பட வேண்டியவை. ஏனென்றால், அப்படிப்பட்ட சத்தியங்கள்தான் உங்களுடைய சுகத்தை தூண்டிவிடுவதற்கும், உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்கவும் உதவுகின்ற திறவுகோல்கள். உங்களுடைய சூழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும்,

தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அதை மாற்ற முடியும். நாம் செய்ய வேண்டியதெல்லாம், எவ்வாறு நம்புவது என்பதை கற்றறிய வேண்டும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று இயேசு சொன்னார். சில காரியங்களை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால், இன்னும் அதை பெற்றுக்கொள்ளத்தக்கதாக நம்புவதற்கு கற்றுக்கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ, நாம் நமது சமுதாயத்தின் ஒரு விளைபொருள். நாம் வாழுகிற சமுதாயமானது நம்முடைய ஆழ்மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு பேராற்றல் வாய்ந்தது. ஆகவே, எந்த இடத்திலாவது, தற்போதைய கலாச்சாரத்திற்கு எதிர்மாறாக (counter culture) நாம் செல்லும்போது, நம்முடைய வாழ்க்கையை அதற்கேற்றாற்போல் அனுசரிக்க, அதிக அளவில் அர்ப்பணமும் கவனமும் தேவைப்படுகிறது. மாற்றம் என்பது எப்பொழுதும் நம்மை அச்சுறுத்துவதாகவே உள்ளது. மனந்திரும்புதல் என்றால், ஒருவர் தன்னுடைய மனதை முற்றிலும் வேறு திசையில் திருப்புவது என்று பொருள்படும். எப்பொழுதெல்லாம் என்னுடைய கருத்தும் தேவனுடைய கருத்தும் முரண்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் நான் என்னுடைய கருத்தை தரையில் இறக்கிவிட்டு, அவருடைய கருத்தை என்னுடையதாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே மனந்திரும்புதல் ஆகும். இதுவே ஒரு சீடனுடைய வழியும் ஆகும்.

இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டு சுகத்தை பெற்றுக்கொண்ட பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குறித்து வேதாகமத்தில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது: “நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்” (மத்தேயு 9:21). இதுதான் தியானம். அவள் தன்னுடைய மனதில் அதை மறுபடியும் மறுபடியும் சொல்லிக்கொண்டே இருந்தாள். “தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு” என்றால் தனக்குள்ளாகவே பேசிக்கொள்வது ஆகும். தன்னை அச்சுறுத்திக்கொண்டிருந்த பிரச்சனையைக்

காட்டிலும், தான் பார்க்க போகிற நல்ல முடிவை மாத்திரம் பேசிக்கொண்டே இருந்தாள். உங்கள் வாழ்க்கையில் மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சத்தம் உண்டென்றால், அது உங்களுடைய சத்தம்தான். தாவீதுடைய வாழ்க்கைமுறையே இப்படித்தான் இருந்துள்ளது. ஏனென்றால், அநேக சங்கீதங்கள், தாவீது தனக்குள் தனக்குத்தானே பேசிக்கொண்டவையே! நம்முடைய வாழ்க்கையும் நன்மைகளால் நிறைந்திருப்பதற்கு இதுதான் வழியாக இருக்க முடியும் என்று நான் நம்புகிறேன். சமுதாயம் மற்றும் சமுதாய வலைதளங்களும் எதிர்மறையான சத்தங்களால் நிறைந்திருக்கின்றன. நாம் அவைகளை தெளிவாக வடிகட்டாவிட்டால், அவைகளின் எதிர்மறையான தாக்குதல்களுக்கு இணங்கிவிடுவோம்.

ஆவிக்கேற்றபடி நடந்துகொள்வது என்ற ஒரு அம்சத்தை மாத்திரம்தான், கிறிஸ்தவ வாழ்க்கை முறையாக, வேதாகமம் தொடர்ச்சியாக வலியுறுத்தகிறது. வேதாகமத்தில், ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரையில், இதுதான் மைய செய்தியாக இருக்கிறது. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்[8]. உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கக்கூடிய மிகப்பெரிய சவால் ஒன்று இருக்குமென்றால், அது உங்களுடைய "வேதாகமத்திற்கு புறம்பாக எண்ணுகிற 'நிலைப்படுத்தப்பட்ட மனப்பாங்கை' மாற்ற நினைப்பது" ஆகும். மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். நீங்கள் ஆவிக்கேற்றபடி நடக்க கற்றறிந்துகொள்ளும்போது, வியாதிகளிலிருந்து விடுதலையை பெற்றுக்கொள்வது எளிதாக மாறிவிடுகிறது. இந்த சத்தியத்தை நீங்கள் தெளிவாக பார்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடுத்தான் இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தின் வாயிலாக, இருதயத்தை குறித்தும், உங்களுடைய உண்மையான அடையாளத்தை குறித்தும் அறிந்துகொள்ளலாம். மேலும், சுகம் என்பது உங்களுடைய இருதயத்தில்தான் தொடங்குகிறது என்பதையும் அறிந்துணர்வீர்கள்.

ஆவிக்கேற்றபடி நடப்பது என்பது உங்களுடைய இருதயத்தின் நிலைமையோடு (heart's condition) பின்னிப் பிணைந்துள்ளது. இந்த புத்தகமானது, உங்கள் இருதயத்தை தேவனுடைய வார்த்தையைக் கொண்டு, நேர்மறையான மற்றும் நிரந்தரமான மாற்றத்தைக் எவ்வாறு கொண்டுவர முடியும் என்று எடுத்துக் காட்டும். விழுந்துபோன மனிதனின் சீர்குலைந்த இருதயத்தையும், இயேசு அதனை சீர்பொருந்தப்பண்ணுவதற்கு தாமாக முன்வந்ததையும் குறித்து புரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. நம்முடைய வாழ்க்கையின் பிரச்சனைகளை நமது பெலனைக் கொண்டு சரிசெய்ய முடியாது என்பதால்தான், கிறிஸ்து நமக்காக தம்மைத்தாமே பலியாக்கி, நம்மை தம்முடையவர்களாக்கினார். நீங்கள் இப்புத்தகத்தை வாசிக்கையில், இதனை மேலும் புரிந்துகொள்வீர்கள். உடைந்துபோன இருதயத்தையுடையவர்களுக்கு உறவுகளில் ஆரோக்கியமான எல்லையை குறிப்பதற்கேற்ற மனப்பாங்கு இருக்காது. ஆகவே, அவர்கள், எங்கு நிறுத்த வேண்டும் என்றும், மற்றவர்கள் எங்கு ஆரம்பிப்பார்கள் என்றும் உணர முடிவதில்லை. சகலவிதமான வியாதிகளுக்கும் உடைந்த இருதயம்தான் வேராக இருக்கிறது! மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாக இருப்பினும், நம்முடைய இருதயங்களும் வாழ்க்கையின் பாடுகளினால் உடைந்துபோக முடியும். எனினும், அவ்வாறு நடக்கும்போது, நம்மை எப்படி காப்பாற்றிக்கொள்வது என்று நாம் அறிந்திருக்க வேண்டும். சிலுவையின் சந்திப்பு என்பது விசுவாசியின் வாழ்வில் ஒருமுறை நடக்கிற சம்பவம் அல்ல. அது, அனுதின வாழ்வின் ஒவ்வொரு காரியத்திலும் அனுபவிக்க வேண்டிய மீட்பின் காரியம் ஆகும். இதனால்தான், வேதாகமம் "அவரே தேவனால் நமக்கு மீட்புமானார்" (1 கொரிந்தியர் 1:31) என்று கூறுகிறது. நாம் அவருக்குள் மாத்திரம்தான் முழுமையாக இருக்கிறோம். இதுதான் மொத்த செய்தியின் துவக்கமும் முடிவும் ஆகும்.

வசனங்களும் முடிவு குறிப்பும்

1. இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் (மத்தேயு 7:13-14).

   இந்த வசனத்தை, "அநேகர் நரகத்திற்கும் ஒரு சிலர்தான் பரலோகத்திற்கும் செல்கின்றனர்" என்று வியாக்கியானம் செய்துவிட்டார்கள். ஆனால் இயேசுவோவென்றால், ராஜ்ஜிய வாழ்க்கையின் பிரமாணங்களை குறித்து பிரசங்கிக்கும்பொழுதுதான் இதை கூறுகிறார். இந்த வேத ஆராய்ச்சியின்போது நீங்கள் இதை கற்றுக்கொள்வீர்கள்.

2. என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய்... (ஓசியா 4:6)

3. என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்போகிறார்கள்; அவர்களில் கனமுள்ளவர்கள் பட்டினியினால் தொய்ந்துபோகிறார்கள்; அவர்களுடைய திரளான கூட்டத்தார் தாகத்தால் நாவறண்டுபோகிறார்கள் (ஏசாயா 5:13).

4. ஆகையால் விதைக்கிறவனைப்பற்றிய உவமையைக் கேளுங்கள். ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன்; ஆகிலும் தனக்குள்ளே வேரில்லாதவனாய், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும்,

உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார் (மத்தேயு 13:18-23).

5. அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங்கீதம் 107:20).

6. என் நீதிவிளங்க விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ்ந்து, தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்போதும் சொல்லக்கடவர்கள் (சங்கீதம் 35:27).

7. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய் (1 தீமோத்தேயு 4:15-16).

8. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது (கலாத்தியர் 5:17).

நான் பெற்ற சுகம்

என்னுடைய ஆரோக்கியத்தை ஒரு காலகட்டத்தில் இழக்க நேரிட்டபோது, அது என் வாழ்க்கையை முற்றிலும் புரட்டிப்போட்டது! ஆம், ஒருவிதமான கொடிய நோயினால் நான் பீடிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டபோது, "வெற்றிகரமான வேலையை நிலைநாட்டி, நன்றாக சம்பாதித்து, வாழ்க்கையை அனுபவித்து மகிழ வேண்டும்" என்றிருந்த என்னுடைய கனவுகளில் பேரிடி விழுந்தது போல இருந்தது. இதினிமித்தம், மனச்சோர்வு, விரக்தி மற்றும் ஏமாற்றங்கள் எனக்குள் பொங்கி எழுந்தன. வேதாகமத்தின் தேவன், தம்மைத்தாமே *'யெகோவா ரஃபா'* (பரிகாரியாகிய கர்த்தர்) என்று இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தியிருந்தார் (யாத்திராகமம் 15:22-27). வேதாகமம் முழுவதிலும், வெவ்வேறு காலகட்டத்தில், தேவனுடைய சுகமளிக்கும் வல்லமை வெளிப்பட்டதைக் குறித்து, வரலாறு பதிவு செய்துள்ளதை நாம் காணலாம். இந்நாள்வரைக்கும், தேவனுடைய அற்புத சுகமளிக்கும் வல்லமைக்கு சாட்சியாக, திரளான மக்கள் கூட்டம் உலகமெங்கிலும் உள்ளனர். அப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட சந்திப்புகள் மற்றும் அனுபவங்களினால்தான் எழுப்புதலின் அலைகள் பிறந்தன. இயேசு, தம்முடைய சரீரத்தில் நம்முடைய மீறுதல்களை சிலுவையிலே சுமந்தார். அவருடைய தழும்புகளால் நாம் சுகமானோம்! இருப்பினும், தங்களுடைய சரீரத்தில் சுகத்தை பெற்றனுபவிக்காத அநேக விசுவாசிகள் சபையில் உள்ளனர். அவர்களும் ஜெபித்தார்கள். அவர்களும் விசுவாசித்தார்கள். ஆனால், அவர்களால் சுகத்தை பெற்றுக்கொள்ள

முடியவில்லை. ஏன்? என்னுடைய சரீரத்தில் நான் நோய்வாய்ப்பட்டு அவதியுறும்வரை இந்த காரியத்தை குறித்து நான் பெரிதாக பொருட்படுத்தவில்லை. நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும் (நீதிமொழிகள் 13:12). தங்களுடைய சுகத்திற்காக அநேகர் வெகுநாட்கள் காத்திருந்தும் அதனை பெற்றுக்கொள்ளாததால் சோர்வடைந்துவிட்டனர். அதுமட்டுமல்ல, தாங்கள் ஏமாந்துவிட்டதாக எண்ணி, தேவனிடம் கோபமாகவும் உள்ளனர்.

ஒரு மருத்துவராக நான் இருந்ததால், தெய்வீக சுகத்தின் மீது நான் அதிகமாக கவனம் செலுத்தவில்லை. ஏனென்றால், நவீன மருத்துவமானது அண்மைக்கால தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கியிருந்ததால், பெரும்பாலான வியாதிகளுக்கு தீர்வுகள் இருந்தன. ஆகவே, வியாதிகள் மற்றும் நோய்களை குறித்து இதுவே எனது மனப்பான்மையாகவும் இருந்தது. ஆனால், எனது சரீரத்தில், நோய் எதிர்ப்பு மண்டல கோளாறினால் உண்டாகும் ஒரு கொடிய வியாதியால் (chronic auto-immune health condition) நான் தாக்கப்பட்டபோது, மருத்துவத்தின் மீது எனக்கிருந்த மனப்பாங்கு வெகுசீக்கிரத்தில் நொறுங்க ஆரம்பித்தது. இதினிமித்தம், பதில் காண வேண்டும் என்ற நோக்கோடு, மருத்துவ புத்தகங்களையும் தேவனுடைய வார்த்தையையும் பல வருடங்களாக ஆராய ஆரம்பித்தேன். என்னை குணமாக்கும்படியாக தேவனிடம் கதறி அழுதிருக்கிறேன். விரக்தியினிமித்தம் தேவனை நோக்கி கூச்சலிட்டிருக்கிறேன். மனச்சோர்வுக்கும் ஆளாகியிருக்கிறேன். சில சமயங்களில், என் வாழ்வையே முடித்துவிடலாம் என்று கூட எண்ணியிருக்கிறேன். இப்படிப்பட்ட எண்ணங்களின் சுழற்சியில் வெகுகாலமாக சுழன்றுக்கொண்டிருந்தேன். ஆகவே, ஒரு மருத்துவராக மாத்திரம் அல்ல, நானும் ஒரு நோயாளியாக இருந்திருக்கிறேன் என்ற சிந்தையுடையவனாக, எல்லா அனுதாபங்களோடும் உங்களிடம் வருகிறேன். என்னுடைய சொந்த அனுபவத்தில் பிறந்ததுதான் இந்த புத்தகம்.

17 வயதில் நான் இரட்சிக்கப்பட்டேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாமல் ஆலயம் செல்லும் குடும்பத்தில் நான் பிறந்திருந்தாலும், 17 வயதில் என் வாழ்க்கையை இயேசுவுக்கு கொடுக்கும்வரையில், நான் என்னை அவருடைய சீடன் என்று சொல்ல முடியாது. ஒப்புக்கொடுத்த பின்னரும், நான் அவரை தூரத்திலிருந்துதான் பின்தொடர்ந்தேன். என்னுடைய மருத்துவ பட்டப்படிப்பையும் முதுகலை டிப்ளோமா படிப்பையும் இந்தியாவில் முடித்தேன். அதன் பின்னர், மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சை நிபுணராக (Anaesthesiology and Intensive Care Medicine) பணி செய்வதற்காக இங்கிலாந்து சென்றேன். லண்டன் மாநகரத்தில் FRCA fellowship program முடித்தேன். மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் ஏழு ஆண்டுகால பயிற்சிக்குப் பின்னர், அத்துறையில் நான் மருத்துவ நிபுணராக தகுதி பெற்றேன். பிற்பாடு, இங்கிலாந்தில் உள்ள தேசிய மருத்துவ சேவையில் (National Health Services) இணைந்து, மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் பணியாற்றினேன்.

ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு (United Kingdom) நான் சென்ற பின்னர், இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே, "க்ரோன்ஸ் நோய்" (Crohn's disease) எனப்படும் குடல் அழற்சி நோயின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தது. அந்த நோய் எனக்கு இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டபோது, நான் மிகவும் அழுதேன். அது என் வாழ்க்கையின் துக்க நாளாக இருந்தது. அச்சமயத்தில், அந்த நோயைக் குறித்த எல்லா மருத்துவ அறிவும், என்னை விரக்தியிலும் மனச்சோர்விலும் மூழ்கடித்தது. ஏனென்றால், அந்த கொடிய நோய்க்கு எந்தவிதமான நிரந்தர மருத்துவ தீர்வும் கிடையாது என்று நான் அறிந்திருந்தேன். ஓரளவிற்கு மருந்துகளை கொண்டு கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியும். அவ்வளவுதான்! நோய் கண்டறியப்பட்டதும், ஸ்டீராய்டுகள் (steroids) மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கும் மருந்துகள் (immuno suppressive medicines) எனக்கு பரிந்துரைக்கப்பட்டது. அந்த மருந்துகள் என் சரீரத்தில் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தியது.

அவ்வப்பொழுது கொடுக்கப்பட்ட வலுவான மருந்துகள், அடிக்கடி செய்யப்பட்ட இரத்த பரிசோதனை, உடற்குழாய் உள்நோக்கல் (endoscopy) பரிசோதனை போன்ற புதுவிதமான வாழ்க்கைக்கு என்னை நானே மெதுவாக மாற்றியமைத்துக் கொண்டேன். அந்த மருந்துகள் எனக்கு எதிர்மறையான விளைவுகளை கொடுத்ததால், மருந்தின் அளவு அவ்வப்போது மாற்றப்பட்டுக் கொண்டேயிருந்தது. இப்படிப்பட்ட வாழ்க்கையை நான் வெறுத்ததால், சில சமயங்களில் தற்கொலை செய்துவிடலாம் என்று கூட எண்ணினேன். எனக்கு திருமணமாகி குழந்தைகள் இருந்ததால், என்னுடைய வலி மற்றும் நம்பிக்கையில்லாத சூழ்நிலையின் மத்தியில், அவர்கள்தான் எனது பெருத்த மகிழ்ச்சியாக இருந்தார்கள். வாழ்க்கை இவ்வாறு நகர்ந்துகொண்டிருக்க, நான் எனது பணியில் சிறந்து விளங்குவதின் மீது என் கவனத்தை திருப்பினேன். என்னுடைய பயிற்சியை முடித்து, இங்கிலாந்தில் உள்ள தேசிய மருத்துவ சேவையில் (National Health Services) இணைந்து பணிபுரிய ஆரம்பித்தேன்.

ஒருமுறை, வழக்கம்போல, பின்தொடர் (followup) பரிசோதனைக்காக என்னுடைய மருத்துவரை நான் சந்திக்க சென்றிருந்தபோது, இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு நான் பழகிக்கொள்ள வேண்டும் என ஒரு மருத்துவர் கூறினார். அச்சமயம், எனக்குள்ளிருந்து "முடியவே முடியாது" என்று ஒரு சத்தம் எதிரொலித்தது. அதை என் ஆவியில் மிக தெளிவாக கேட்டேன். இருந்த போதிலும், என்னுடைய ஓய்வில்லாத பணிக்கு மத்தியில், நோயின் விகாரம் தோன்றுவதும் மறைவதும், வலுவான மருந்துகள் மற்றும் இரத்த பரிசோதனைகள் என்று உழன்று கொண்டிருந்தேன்.

உங்களுக்கு மிகவும் அவசியமான நேரத்தில் தேவன் எங்கே இருக்கிறார்?

எனது 17 வயதிலிருந்து நான் கிறிஸ்தவனாக இருக்கிறேன். அந்த நாளிலிருந்து, என்னுடைய பார்வையில், நான் ஒரு நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறேன். ஆலயத்திற்கு தவறாமல் செல்வது மட்டுமல்லாமல், ஆலயத்தோடு தொடர்புள்ள

அநேக சுவிசேஷ பணிகளில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வந்தேன். தேவனுடைய பணிக்காக நான் எனது நேரத்தையும் பணத்தையும் ஒழுங்காக கொடுத்து வந்தேன். எனக்கு ஏன் இது நேர்ந்தது? நான் ஒரு பலியாளின் மனநிலையை (victim mindset) என்மீது போட்டுக்கொண்டு, ஜெப நேரங்களில், தேவனிடம் வாதாடுகிறவனாக காணப்பட்டேன். தேவன் என்னை கடந்தகால பாவங்களுக்காக தண்டிக்கிறார், நான் மிகவும் கெட்டவன், என்னுடைய மூதாதையர்களில் யாரோ சபிக்கப்பட்டிருக்கிறார்கள் - இப்படிப்பட்ட எண்ணங்களோடு தொடர்ந்து நான் போரிட்டுக்கொண்டிருந்தேன். உங்களுக்கு மிகவும் அவசியமான நேரத்தில் தேவன் எங்கே இருக்கிறார்? எனக்காக ஜெபிக்கக்கூடிய கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் போதகர்களை நான் நாடினேன். ஆனால், என் சரீரத்தில் எந்தவிதமான சுகத்தையும் நான் பெறவில்லை. இதினிமித்தம், தேவனோடுள்ள எனது உறவு குளிர்ந்து போனது.

எனக்கிருந்த ஒரு நல்ல மருத்துவ நண்பர், தேவனுடைய வல்லமையினால் சுகம் பெற்ற அநேக சாட்சிகள் அடங்கிய ஒளித்தட்டு (DVD) ஒன்றினை எனக்கு பரிசளித்தார். நானோவென்றால், அநேக நாட்கள் அதை பார்க்க விருப்பமில்லாமல் உதாசீனப்படுத்தினேன். ஆனால், ஒரு நாள், அந்த ஒளித்தட்டை பார்க்கவேண்டும் என்று பெரிய உந்துதல் வந்தது. அதில், தேவனுடைய வார்த்தையிலிருந்து புறப்பட்ட தேவ வல்லமையை தாங்கள் அனுபவித்ததைக் குறித்து அநேகர் சாட்சியிட்டனர். அதிலும், தேவனுடைய வார்த்தையை விசுவாசித்ததினால் எவ்வாறு சுகம் பெற்றுக்கொண்டார்கள் என்று சாட்சி கூறினோர் அநேகர். இந்த சாட்சிகளை பார்த்துக்கொண்டிருந்த நான், இதற்கு முன் கேள்விப்பட்டிராத விசுவாசத்தைக் குறித்து அறிந்து கொண்டேன். விசுவாசம் என்பது நிஜம் என்றும், நான் அப்படிப்பட்ட விசுவாசத்திற்கு தூரமாயிருக்கிறேன் என்றும் உணர்ந்தேன். நான் மிகவும் ஊக்கமாக தேவனை தேடினாலும், அவருடைய வழிகளை அறியாதிருந்தேன். புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையோடு, மறுபடியும் தேவனை நாட ஆரம்பித்தேன். என்னையே நான் தாழ்த்தி, அவரிடமிருந்து கற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறேன்

என்று ஜெபிக்க ஆரம்பித்தேன். அந்த நாளில்தான் என்னுடைய சுகத்திற்கான பயணத்தை தொடங்கினேன். உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், நான் முழுவதும் சுகமானது எப்போது என்று எனக்கே தெரியாது. என்னுடைய முழு கவனத்தையும் நான் அவர்மீது வைத்தபோது, என்னுடைய சுகம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க ஆரம்பித்தது. பல ஆண்டுகளாக மனதில் பதிந்திருந்த தவறான இறையியல், மருத்துவ அறிவு மற்றும் அவிசுவாசம் போன்றவைகளோடு போரிட வேண்டியிருந்தது. தேவன் என்னை ஒரு பயணத்தில் கொண்டு செல்ல ஆரம்பித்தார். அந்த 'ஆயுட்கால அர்ப்பணிப்பு' என்ற பயணத்தில் நான் என்னுடைய சரீர சுகத்தை மாத்திரம் பெற்றுக்கொள்ளவில்லை; என் வாழ்வின் மற்ற பகுதிகளிலும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிக்க கற்றுக்கொண்டிருக்கிறேன். நான் இன்னும் என் இடத்திற்கு வந்தடையவில்லை என்றாலும், நான் இருந்த இடத்தை விட்டு புறப்பட்டுவிட்டேன். நான் சரியான பாதையில்தான் பயணிக்கிறேன் என்று எனது ஆழ்மனது சொல்கிறது.

இந்த பயணத்தின் விளைவுதான் இப்புத்தகம். உங்கள் வாழ்க்கையையும் நன்மைக்கேதுவாக மறுரூபப்படுத்தும் என்ற விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் இந்த புத்தகத்தை எழுதியிருக்கிறேன். உண்மையில், கிறிஸ்தவ வாழ்க்கைமுறை என்று பார்ப்போமென்றால், இரண்டு தேர்ந்தெடுப்புகள்தான் உள்ளன - தேவ வல்லமையினால் வாழ்க்கை மறுரூபமாவது மற்றும் செத்த மதச்சடங்குகளை அனுசரிப்பது. மூன்றாவதாக எதுவும் கிடையாது! நீங்கள் இந்த புத்தகத்தை வாசித்து புரிந்துகொள்ளும்போது, நீங்கள் உங்களுடைய சரீர சுகத்தை பெற்றுக்கொள்வீர்கள் என்று நிச்சயமாய் நம்புகிறேன். ஆனால், அது மாத்திரம் இந்த புத்தகத்தின் நோக்கமல்ல; சுகத்தில் ஆரம்பித்து, வாழ்வின் எல்லா பகுதிகளிலும் தேவனுடைய நன்மைகளை அனுபவிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தை குறைவற்றதும், பிழையற்றதும், பூரணமானதும், அசைவற்றதுமாக இருக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டு அதனை வாழ்க்கையில் பயன்படுத்துவதுதான்,

இயேசு நமக்கு கற்றுக்கொடுத்திருக்கும் ஞானம். துக்கமான காரியம் என்னவென்றால், அதைத்தான் நாம் அசட்டை செய்திருக்கிறோம். உங்களின் சரீர சுதத்திற்கும் தேவனுடைய வல்லமைக்கும் நடுவில் இருக்கும் இணைப்பு உங்களுடைய இருதயம்தான் என்று சீக்கிரத்தில் கண்டுபிடிப்பீர்கள். தேவனுடைய வார்த்தையானது உங்களுடைய இருதயத்தில் கிரியை செய்வதற்கேற்றபடி வடிவமைக்கப்பட்டுள்ளது என்று புரிந்துகொள்வீர்கள்! தேவனுடைய வல்லமையானது உங்களுடைய இருதயத்திலிருந்துதான் புறப்பட்டு சரீரத்திற்கு பாய்ந்து செல்லும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை முழுவதும் நம்பி இணங்கியுள்ள உங்கள் இருதயத்திலிருந்துதான் விசுவாசம் வேலை செய்யும்.

அநேக ஆண்டுகள் மருத்துவராக பணியாற்றின பின்பு, தேவன் என்னை தம்முடைய ஊழியத்திற்கென்று அழைத்தார். ஆகவே, என் மருத்துவ பணியை ராஜினாமா செய்துவிட்டு, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து உலகமெங்கிலும் போதித்தும் பிரசங்கித்தும் வருகிறேன். என்னுடைய உள்ளூர் ஆலயத்தில் துணை போதகராகவும் பணியாற்றி வருகிறேன். நான் என்னுடைய சாட்சியை பகிர்ந்து, விசேஷமாக சுகத்திற்காக மக்களுக்கு ஊழியம் செய்யும்பொழுதெல்லாம், அவர்கள் சத்தியத்தோடு இணைக்கப்பட்டு, இயேசு வாக்குத்தத்தம்பண்ணியுள்ள பரிபூரண வாழ்வினுள் அடியெடுத்து வைக்கிறார்கள்.

எனக்கு பிரியமானவர்களே, என்னுடைய சாட்சி உங்களுடைய இருதயத்தில் நம்பிக்கையை பற்றியெரிய வைத்திருக்கும் என்று விசுவாசிக்கிறேன். இப்பொழுதும், சத்தியத்தை அறிந்துகொள்ள உங்களையே நீங்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். இந்த அறிவு என்பது, மனதில் பதிக்கும் சில தகவல்கள் அல்ல; மாறாக, அனுபவரீதியான அறிவு. சத்தியமானது நமது இருதயங்களில் உயிர்ப்பிக்கப்பட்டு, நமது வாழ்க்கையில் வெளிப்பட வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். ஆம், இது ஒரு மறுரூப வாழ்க்கைக்கான அழைப்பு!

ஜெபம்

பரலோகத்தில் இருக்கும் எங்கள் அன்புள்ள பிதாவே, இதுவரை என் வாழ்நாள் முழுவதும் நடத்தி வந்ததற்காக நன்றி. நான் ஏன் சுகவீனமாக இருக்கிறேன் என்று இப்பொழுது புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், மறுபடியும் என் வாழ்க்கையையும் நேரத்தையும் உமக்கென்று அர்ப்பணிக்கிறேன். இந்த புத்தகத்தை நான் வாசிக்கையில், என்னோடு நீர் பேசும். என்னுடைய மனக்கண்களை பிரகாசிக்கப்பண்ணும். உம்முடைய வார்த்தையை எனக்கு வெளிப்படுத்தும். நீர் என்னை அழைத்ததினாலே எனக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், என்னிடத்தில் உமக்குள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும் நான் அறிந்துகொள்ள ஜெபிக்கிறேன். உம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையோடு இணைந்து ஐக்கியம்கொள்ள வேண்டுகிறேன். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

நீங்கள் மனப்பூர்வமாக இந்த ஜெபத்தை ஏறெடுத்திருந்தால், உங்கள் வாழ்வில் தேவன் செய்யவிருப்பதை பொறுத்திருந்து பாருங்கள். உங்களுடைய சுகத்தின் பயணம் தொடங்கட்டும்!

பகுதி 1

1

சுகம் - தேவனுடைய சித்தம்

ரளான ஜனங்களுக்கு இயேசு பிரசங்கித்துவிட்டு, மலையிலிருந்து இறங்கின போது, திரள் கூட்டம் அவரை பின்சென்றது. அப்பொழுது, அக்கூட்டத்திலிருந்து, குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: "ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்" என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: "எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார்[1].

தன்னுடைய குஷ்டரோகத்தை சுகமாக்குவதற்கு இயேசுவினிடம் வல்லமை உண்டு என்று அவன் அறிந்திருந்தான். எல்லோரையும் இயேசு சுகமாக்கும்பொழுது, அநேகமாக, தூரத்திலிருந்து அவன் பார்த்திருக்கக்கூடும். ஆகவே, இயேசுவிடம் சுகமளிக்கும் வல்லமை உள்ளதா இல்லையா என்பது அவனுடைய மனதின் கேள்வி அல்ல. தம்முடைய வல்லமையினால் தன்னுடைய குஷ்டரோகத்தை குணப்படுத்துவாரா இல்லையா என்பதுதான் அவனுடைய கேள்வி. ஏனென்றால், குஷ்டரோகிகள், அந்நாட்களில் தீண்டத்தகாதவர்களாகவும் சமுதாயத்திலிருந்து தள்ளப்பட்டவர்களாகவும் கருதப்பட்டனர். ஆகவே, அவனுடைய சந்தேகம் முறையானதே! இந்தக் கேள்வியோடு அவன் இயேசுவை அணுகினான். இயேசுவோவென்றால், தாம் அவனை நேசிப்பதையும்

ஏற்றுக்கொண்டதையும் காண்பிக்கும்பொருட்டாக, அவனை தொட்டு சுகமாக்கினார்.

அநேகருக்கு இப்படிப்பட்ட கேள்விகள் உண்டு: என்னுடைய சரீர பெலவீனத்தை குணமாக்குவது என்பது எப்பொழுதுமே தேவனுடைய சித்தம்தானா? இந்த கேள்விக்கான சரியான பதில் ஒருவருடைய இருதயத்தில் உறுதியாக்கப்படாமல் இருந்தால், தேவனிடமிருந்து எந்த நன்மையையாகிலும் பெற்றுக்கொள்வதற்கு, மனஉறுதியோடு அவரிடம் சேர முடியாது. நன்மையான காரியங்களை மனஉறுதியுடன் எதிர்பார்ப்பதுதான் நம்பிக்கை. நம்பிக்கை இல்லாமல் விசுவாசம் பயனளிக்காது. இப்படிப்பட்ட கேள்விகள் நம்முடைய மனதில் தோன்றி, தேவன் மீது நமக்குள்ள நம்பிக்கையை மங்கிபோகச் செய்கிறது. இப்படிப்பட்ட கேள்விகள், உண்மையாக நமக்கு நேரிட்ட பல எதிர்மறையான அனுபவங்களின் விளைவுதான். தங்களுடைய சுகத்திற்காக தேவனை விசுவாசித்திருந்தாலும், மரித்துப்போன சிலரையும், இன்னும் வியாதியில் அவதியுறும் சிலரையும் நம் அனைவருக்கும் தெரியும். இப்படிப்பட்ட எதிர்மறையான அனுபவங்கள்தான் அநேக விசுவாசிகளுக்குள் கடினப்பட்ட இருதயத்தை உருவாக்கியிருக்கிறது. இதனால் சிலர் அற்புத சுகத்தை குறித்து தவறான எண்ணமுடையவர்களாகவும் இருக்கிறார்கள். தேவனிடம் ஜெபித்த பின்னர், அவர் தம்முடைய நேரத்தில், தங்களுக்கு ஏதாவது செய்வார் என்று மக்கள் காத்திருக்கின்றனர். இதற்கு மிஞ்சினது தயக்கமே! 19-வது நூற்றாண்டில், தேவனுடைய வல்லமையில் செயலாற்றிய ஸ்மித் விகிள்ஸ்வொர்த் (Smith Wigglesworth) என்ற தேவ மனிதர், "விசுவாசம் பயமின்றி பாயும். ஆனால், பயமோ தயங்கும்" என்றார். தயக்கம் என்பது விசுவாசத்தின் பயங்கரமான எதிரி. மக்களுடைய சுகத்திற்காக நான் ஊழியம் செய்யும்போது, அவர்களிடம் நான் கேட்கும்

"விசுவாசம் பயமின்றி பாயும். ஆனால், பயமோ தயங்கும்"

பிரதானமான கேள்வி என்னவென்றால், "உங்களை சுகப்படுத்துவது தேவனுடைய சித்தம் என்பதில் உறுதியாக இருக்கிறீர்களா?" என்பதே. ஒருவேளை, அதில் உறுதியில்லாதவர்களாக இருப்பார்களானால், வேத வசனங்களையெல்லாம் காண்பித்து, அவர்களை சுகமாக்குவதுதான் தேவனுடைய சித்தம் என்பதை கர்த்தருடைய வார்த்தையிலிருந்து அவர்களே பார்க்கும்படியான இடத்திற்கு அவர்களை கொண்டு வருவேன். அதன் பின்னர்தான், நான் சுகத்திற்கான ஊழியத்தினுள் பிரவேசிப்பதுண்டு. இந்த சந்தேகத்தை தெளிவாக்காமல், சுகத்தை நோக்கி நான் எடுக்கும் எந்த முயற்சியும் வீணானதே.

தேவன் வெளிப்படுத்தினார்

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" என்று எபிரெயர் புத்தகத்தில் வாசிக்கிறோம்[2]. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து, தம்முடைய வாயை திறந்து இயேசு பிரசங்கிக்க ஆரம்பித்தபோதுதான், மேலே குறிப்பிடப்பட்டுள்ள *"இந்தக் கடைசி நாட்களில்"* என்ற காலகட்டமானது துவங்கியது!

இயேசு என்ற சரியான தரநிலை (absolute reference point) இல்லாமல், தேவனை அறிந்து புரிந்துகொள்வது என்பது கூடாத காரியம்.

இயேசுதான், சரீரப்பிரகாரமாக வந்த பிதாவின் பூரணமான பிரதிநிதி. பழைய ஏற்பாட்டு காலத்தில், தேவனுடைய தன்மையானது, தீர்க்கதரிசிகள் மூலமாக மனிதர்களுக்கு வெளியாக்கப்பட்டது. ஆனால், இயேசுவில் நாம் காண்பது என்னவென்றால், தேவனே மனிதனானார்[3]. பிதாவுடைய சரீரப்பிரகாரமான மொத்த

உருவகம்தான் இயேசு. அப்போஸ்தலனாகிய பவுல் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோசெயர் 2:9) என்றார். இயேசு என்ற சரியான தரநிலை (absolute reference point) இல்லாமல், தேவனை அறிந்து புரிந்துகொள்வது என்பது கூடாத காரியம். தேவனையும் அவருடைய தன்மையையும் குறித்த சரியான உருவகத்தை இயேசுவில்தான் பார்க்க முடியும். இயேசுவை தவிர்த்துவிட்டு, தேவனுடைய உண்மையான தன்மையை குறித்து நாம் ஒரு முடிவுக்கு வருவது என்பது தவறான மொழிபெயர்ப்பு அல்லது நம்முடைய அரைகுறையான புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் பிறந்ததாக இருக்கலாம். அப்போஸ்தலனாகிய யோவான், கீழ்கண்ட வசனத்தில் இதனை தெளிவுபடுத்துகிறார்:

தேவனை (அவருடைய சாராம்சத்தை, அவருடைய தெய்வீக தன்மையை) ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே (தனித்தன்மை வாய்ந்த குமாரனே) அவரை வெளிப்படுத்தினார் (பிதாவின் வியப்பூட்டும் அதிசயத் தன்மையை வியாக்கியானம் செய்து வெளிப்படுத்தினார்) (யோவான் 1:18).

இயேசு மறுரூபமான மலையில், அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்து, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்" என்றது[4]. அப்பொழுது, சீடர்களோடு கூட, மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அந்த மலையில் காணப்பட்டார்கள். ஆயினும், பிதாவோ, தம்முடைய குமாரன் மீது மட்டுமே தன் முழு கவனத்தை செலுத்தினார். தேவனுடைய மெய்யான தன்மையைக் குறித்து அறிந்துகொள்ள, நாம் கவனிக்க வேண்டியதெல்லாம் இயேசு ஒருவரை மட்டும்தான்! தேவனுடைய மெய்யான தன்மையைக் குறித்து புரிந்துகொள்ள, இயேசுவிடம் செல்லாமல், வேறு எங்காவது நாம் தேடினால், அது நிச்சயமாக தவறான இடமாகத்தான் இருக்கும்.

தவறான இடத்திலிருந்து தேவனை குறித்து நம்முடைய மனதில் பதிக்கப்பட்ட சாயலானது, விக்கிரகமாகத்தான் இருக்கும். அந்த சாயலானது (விக்கிரகம்), பழைய ஏற்பாட்டு வசனங்களில் இருந்தோ அல்லது நமது வாழ்க்கை அனுபவங்களில் இருந்தோ அல்லது நமது பாரம்பரிய நம்பிக்கையில் இருந்தோ வந்திருக்கலாம். எப்படியிருந்தாலும் அது தவறுதான்! ஆம், இது மறுக்கமுடியாத சத்தியம் ஆகும்! கடவுளை என்றுமே யாராலும் புரிந்துகொள்ள முடியாது என்ற போதனைகளுக்குள் (agnostic) வழிவிலகி சென்ற சபையை நோக்கி, அப்போஸ்தலனாகிய யோவான், "நீங்கள் உங்கள் மனதிலே விக்கிரகங்களை உண்டாக்குவதிலிருந்து விலகியிருங்கள்" என்று எச்சரித்து கூறினார். "நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார்" என்பதே யோவானுடைய உறுதியான போதனையாக இருந்தது![5]

பழைய ஏற்பாட்டில், தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக தம்மை வெளிப்படுத்தியிருந்தார். ஆனாலும், நிஜ வாழ்க்கையின் நடைமுறையில், அந்த வார்த்தையானது, எப்படி இருக்கும் என்று இயேசுவின் வாழ்க்கைமுறை மற்றும் போதனைகள் மூலமாக மட்டும்தான் நம்மால் காண முடியும். தேவன் அன்பாகவேயிருப்பதால், இயேசுவின் ஒவ்வொரு செயலுமே அன்பினால் உந்தப்பட்டதாக இருந்தது. ஆதியிலிருந்தே தேவன் வார்த்தையாயிருந்தார் என்றும், இயேசுவே மாம்சமாக வந்த வார்த்தை என்றும் அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார்[6,7].

தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக தம்மை வெளிப்படுத்தியிருந்தார்.

ஒரு கேள்வியை உங்களிடத்தில் எழுப்புவதற்காகத்தான் இவைகளையெல்லாம் நான் எழுதுகிறேன். தேவனிடத்தில் விசுவாசத்தோடு வந்த யாவரையும் அவர் சொஸ்தமாக்கினாரா?

இதற்கு உங்கள் பதில் *'ஆம்'* என்றால், உங்களுடைய சூழ்நிலைக்கும் அதுவே பதில் ஆகும்.

கீழ்கண்ட வசனங்களை சற்றே கருத்தில் கொண்டு, ஆழமாக யோசித்துப் பாருங்கள்.

பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த **சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.** அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார் (மத்தேயு 4:23-24).

அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, **பிணியாளிகளெல்லாரையும்** சொஸ்தமாக்கினார் (மத்தேயு 8:16).

பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த **சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்** (மத்தேயு 9:35).

இயேசு அதை அறிந்து, அவ்விடம்விட்டு விலகிப்போனார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்; **அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கி** (மத்தேயு 12:15).

அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; **அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்** (மத்தேயு 15:30).

அவர்கள் படவிலிருந்து இறங்கினவுடனே, ஜனங்கள் அவரை அறிந்து, அந்தச் சுற்றுப்புறமெங்கும் ஓடித் திரிந்து, பிணியாளிகளைப் படுக்கைகளில் கிடத்தி, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களிலெல்லாம் சுமந்து கொண்டுவந்தார்கள்; அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமங்கள் பட்டணங்கள் நாடுகள் எவைகளோ, அவைகளின் சந்தைவெளிகளிலே வியாதிக்காரரை வைத்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தரவாகவேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள்; **அவரைத் தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள்** (மாற்கு 6:54-56).

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட **யாவரையும்** குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38).

உங்களை குணமாக்குவதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. எவ்வாறு சுகத்தை பெற்றுக்கொள்வது என்பதை குறித்து இப்புத்தகத்தின் பின்பகுதியில் கற்றுக்கொள்ளலாம்.

உங்களை குணமாக்குவதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது.

தற்பொழுது, நீங்கள் குணமாவதே தேவனுடைய பரிபூரண சித்தம் என்பதை துளியளவு கூட மனதிலே சந்தேகம் இல்லாமல் நீங்கள் தெளிவாக காணவேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை நேரமெடுத்து தியானித்து, அதற்கு உங்கள் சிந்தனையை கொடுங்கள். இதனை உங்கள் இருதயத்தில் என்றென்றைக்குமாய் பதித்துவிடுவதற்கு இதுவே சரியான சமயம். இப்புத்தகத்தை படித்து முடிக்க வேண்டும் என்று அவசரப்படாதீர்கள். சுகத்தை குறித்த தேவனுடைய பரிபூரணமான சித்தம் முதலாவது உங்களுக்குள் நங்கூரமிட்டு, உங்கள் இருதயத்தில் ஆழமாக வேர்கொள்ளட்டும். இது உங்களுக்கு துவக்கப் புள்ளியாக

இல்லாவிட்டால், உங்களுடைய இருதயத்தை இந்த சத்தியத்திற்கு சம்மதிக்க வைக்கும் பயணத்தை நீங்கள் தொடங்கவே முடியாது. மேலும், இவ்வாறாக இருந்தால், நீங்கள் சென்று சேர வேண்டிய இடத்தை அடையவே மாட்டீர்கள்.

இப்பொழுது, நான் இன்னுமொரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். இயேசு, மாம்சமாக வந்த தேவனாக இருந்தாலும், எல்லோரையும் அவரால் குணமாக்க முடிந்ததா?... இல்லை!

கீழ்கண்ட வசனத்தை கருத்தில் கொள்ளுங்கள்:

அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். **அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை** (மத்தேயு 13:57-58).

அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, **வேறாரு அற்புதமும் செய்யக்கூடாமல்**, அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு; கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம்பண்ணினார் (மாற்கு 6:5-6).

இயேசு, மாறுகிற தன்மையுடையவர் அல்ல. தேவனுடைய வல்லமை என்பது, எல்லோரும் பெற்றுக்கொண்டு அனுபவிக்கக்கூடியது. ஆகவே, மாறக்கூடிய தன்மையுடையது எதுவென்றால், மனிதர்களுடைய இருதயம்தான்! அநேகர் இயேசுவை மாம்சரீதியாக அறிந்து வைத்திருந்தார்கள். அதற்கு அப்பால் அவர்களால் அவரை காணமுடியவில்லை. அவருடைய குடும்பம் மற்றும் குழந்தைப் பருவத்தை குறித்து நன்கு அறிந்துவைத்திருந்தார்கள்[8]. இயேசு, வெளிப்புற பார்வைக்கு, மிகவும் சாதாரணமாகவே காட்சியளித்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவனுடைய வல்லமையானது அவருடைய ஆவியில்தான் குடிகொண்டிருந்தது. பரிச்சயம் அலட்சியத்தை வளர்க்கிறது (Familiarity breeds contempt)! இப்புத்தகத்தை நீங்கள்

வாசிக்கையில், விசுவாசம் மற்றும் அவிசுவாசம் போன்ற சொற்களின் அனுபவப்பூர்வமான அர்த்தங்களை விளங்கிக்கொள்ளலாம். தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது அசைவில்லா நம்பிக்கை உருவாகிற இடத்திற்கு உங்களை கொண்டு வருவதே இந்த வேதபாடத்தின் நோக்கம் ஆகும். இதுதான் விசுவாசம். உங்கள் இருதயத்தை தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு முழுவதும் சம்மதிக்கவைப்பதினால், நான் இதனை *வேதப்பூர்வமான விசுவாசம்* என்றழைக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு இடத்திற்கு அப்போஸ்தலனாகிய பவுலுடைய இருதயம் வந்துவிட்டதால், "நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்"[9] என்கிறார். அவ்வாறு, முழுமையாக உங்கள் இருதயத்தில் நம்பும் இடத்திற்கு வராதவரைக்கும், விசுவாசம் வேலை செய்யாது.

உங்களுடைய இருதயமானது, தேவனுடைய நன்மைகளை குறித்து முழு நிச்சயத்திற்குள் வந்து, அவ்விடத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்பதுதான் இந்த புத்தகத்தை நான் எழுதுவதற்கான நோக்கமாகும். உண்மையாகவே தேவன் யார் என்றும், அவருடைய வழிகள் எவ்வளவு அற்புதமாகவும் நன்மையால் நிறைந்ததாகவும் இருக்கிறது என்றும், அவருடைய சுமை எத்தனை இலகுவாயும் மெதுவாயும் இருக்கிறது என்றும் நீங்கள் பார்க்கும்போது, உங்கள் இருதயம் முழுவதும் நிச்சயிக்கப்பட்ட இடத்திற்குள் வந்துவிடும். இந்த காரணத்திற்காக நாம் வேதாகமத்தை வாசிக்காமலிருந்தால், நாம் நம்முடைய நேரத்தை வீணடிக்கிறோம் என்றுதான் அர்த்தம். அநேக நேரங்களில், நம்முடைய கற்பனைகளுக்கெல்லாம் தேவன் ஒத்துக்கொள்ள வேண்டும் என்கிற முயற்சியில் நம்முடைய ஜெபங்கள் உள்ளன. ஆனால், சத்தியம் என்னவென்றால், தம்முடைய முடிவில்லாத அன்பினால், அவர் ஏற்கெனவே பரலோகத்தைவிட்டு இறங்கி, சகலத்தையும் நமக்காக முடித்துவிட்டார். அகில உலகின் பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார். மரித்தவர் உயிரோடெழுந்தார். திரையும் கிழிந்தது. இப்பொழுது, தன்னிடம் வரும்படியாக

அனைவருக்குமே அவர் அழைப்பு விடுக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்களும் உண்மையானவை. தேவனுக்கு முன்பாக செல்லுபடியாகின்ற ஒரே உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை மட்டும்தான். அது கிறிஸ்துவினால் உறுதிசெய்யப்பட்ட உடன்படிக்கை! நீங்களும் அதற்குள் அடியெடுத்து வைப்பீர்களா? உங்களுடைய மனதை மாற்றிக்கொள்வீர்களா? நம்முடைய மனதை மாற்றுவதுதான் *மனந்திரும்புதல்* ஆகும். நம்முடைய கருத்துக்களை முற்றிலும் இறக்கி வைத்துவிட்டு, அவருடைய சத்தியத்தை நம்முடைய வாழ்வின் மெய்ப்பொருளாக ஏற்றுக்கொள்ளும்பொழுதுதான் மனந்திரும்புதல் நடக்கிறது. இந்த அறிவிற்கு நம்முடைய கண்கள் திறக்கப்பட்டு, அவருடைய வழிநடத்துதலுக்கு நாம் ஒப்படைக்க வேண்டும் என்று தேவன் தம்முடைய ஜனங்களுக்காக ஆசையோடு காத்துக்கொண்டிருக்கிறார். ஒரு அன்பான தகப்பனாக, தேவன் எப்போதுமே பசும்புல் நிறைந்த இடங்களிலும் அமர்ந்த தண்ணீர்கள் அண்டையிலும்தான் நம்மை நடத்துவார்.

தேவனுக்கு முன்பாக செல்லுபடியாகின்ற ஒரே உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை மட்டும்தான்.

இயேசு சாபமானார்

இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, சிலுவையிலே இயேசு அனுபவிக்கப்போகும் பாடுகளைக் குறித்து தீர்க்கதரிசியாகிய ஏசாயா கண்டார். அகில உலகத்தின் பாவங்களுக்காக, அவர் எவ்வாறு காயப்படுவார் என்றும், முழு உலகத்தின் சமாதானத்திற்காக எவ்வாறு தம் மீது நம்முடைய தண்டனைகளை ஏற்றுக்கொள்வார் என்றும் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்[10]. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்த சமாதானத்தின் உடன்படிக்கை இதுதான்[11].

இயேசுவின் மூலமாக, பிதா, மனிதர்களுக்கு சமாதானத்தை அளித்ததுதான் புதிய உடன்படிக்கை. அந்த சமாதானத்தை சம்பாதிப்பதற்காகத்தான், இயேசு சிலுவையில் நமக்காக சாபமாக வேண்டியிருந்தது.

மருத்துவம் எவ்வளவுதான் மேம்பட்டு முன்னேற்றமடைந்திருந்தாலும், அநேக வியாதிகளுக்கான தோற்றத்தை குறித்து கண்டுபிடிக்க முடியாமல், மருத்துவர்கள் குழப்பத்தில் உள்ளனர்! வியாதி எங்கிருந்து வருகிறது? மோசேயின் நியாயப்பிரமாணங்களோடு இணைந்துள்ள ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் உபாகமம் 28-ஆம் அதிகாரம் பதிவிட்டுள்ளது. அந்த அதிகாரத்தில் பட்டியலிடப்பட்டுள்ள சாபங்களை நீங்கள் வாசித்து பார்த்தால், எல்லாவிதமான வியாதிகளுமே சாபங்கள் என்று காணலாம். இந்த பட்டியலை, மருத்துவ புத்தகங்களிலுள்ள பட்டியலோடு நான் ஒப்பிட்டுப் பார்த்தபோது, மருத்துவ புத்தகங்களிலுள்ள எல்லா வகையான வியாதிகளும் உபாகமம் 28-ஆம் அதிகாரத்திலும் உள்ளன. ஆதாமின் பாவத்தினிமித்தம்தான் மனுக்குலத்தின்மீது இந்த சாபம் வந்தது. ஆதாமின் பாவம் மாம்சத்தை பிறப்பித்தது! மாம்சத்தின் வாயிலாகத்தான் பிசாசு நம் வாழ்வினுள் நுழைய முயல்கிறான்.

நியாயப்பிரமாணமும் கட்டளைகளும் இவ்வுலகிற்குள் வரும் வரையில், முழு மனுவர்க்கமும் சாபத்திற்குள் இருந்தது. நியாயப்பிரமாணமானது பாவத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தது. அதுமட்டுமல்ல, மனிதன் சாபங்களிலிருந்து தற்காலிகமாக தப்பித்துக்கொள்வதற்காக, சில வழிகளையும் வகுத்து கொடுத்தது. நியாயப்பிரமாணம் மனிதனை பாவி என்று காட்டியதேயல்லாமல், அவனை முழுமைப்படுத்தவில்லை. மனிதன் தன் பாவத்திற்கான தண்டனையிலிருந்து தன்னை காத்துக்கொள்ள, ஒரு மிருகத்தின் இரத்தத்தை பலியிடுவது ஒன்றுதான் வழியாக இருந்தது. இதற்காகவே, பழைய உடன்படிக்கையின் நியாயப்பிரமாணத்தில், தேவன், மிருகங்களின் இரத்த பலிகளை ஏற்படுத்தியிருந்தார். பழைய உடன்படிக்கையில் அனுசரிக்கப்பட்ட இரத்த பலிகள்,

இயேசு கிறிஸ்துவின் நிழலாயிருக்கிறது. தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய், நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, பிசாசின் கொடுங்கோன்மையிலிருந்து தற்காலிகமாக மனிதனை காப்பாற்றுவதற்காக, மிருகத்தின் பலி என்ற ஒழுங்குமுறையைகொண்டுவந்தார்.மோசேயின்நியாயப்பிரமாணம் என ஒன்று கொடுக்கப்படாமல் இருந்திருந்தால், மேசியாவை உலகத்திற்கு கொண்டுவருவதற்கு ஒரு கன்னி மரியாள் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. ஏனென்றால், பிசாசானவன் இயேசுவின் வம்சாவழியை கெடுத்துப்போட்டிருப்பான[12]. ஆகவே, மோசேயின் நியாயப்பிரமாணமானது, பாவத்தின் விளைவுகள் மீது தற்காலிகமாக ஒரு கட்டுப்பாட்டை வைத்தது. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலருக்காக ஒரு மேசியாவை அனுப்புவதே தேவனுடைய உச்சக்கட்டமான குறிக்கோளாக இருந்தது. பாவத்தின் கொடுங்கோன்மையிலிருந்து அகில உலகத்தை காப்பாற்றுவதே தேவனுடைய விருப்பமாயிருந்தது. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) என்று யோவான் எழுதுகிறார். இதனை நிறைவேற்றி முடிக்கவேண்டுமென்றால், முழு மனுக்குலத்தையும் பாவத்திலிருந்து மீட்கும்படியாக, ஒரு மேசியா, பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்படி, உலகத்தினுள் வர வேண்டும்.

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலருக்காக ஒரு மேசியாவை அனுப்புவதே தேவனுடைய உச்சக்கட்டமான குறிக்கோளாக இருந்தது.

இரட்சிப்பு என்று பொருள்படும் கிரேக்க கூட்டு வார்த்தைக்கு (compound word) பல அர்த்தங்கள் உள்ளன: சுகமாக்குவது, விடுதலையாக்குவது, முழுமையாக்கப்படுவது, பாதுகாக்கப்படுவது

மற்றும் செழிப்பாக இருப்பது! இதனால்தான், சிலுவையில் இயேசு செய்த காரியமானது, இரட்சிப்புக்கு மாத்திரம் அல்ல; அது சுகத்திற்கும் உரியது. இந்த சுகமானது, மனக்காயங்களை ஆற்றுவது மட்டுமல்லாமல், சரீர சுகத்தையும் உள்ளடக்கியது. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்[13] என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். ஆகவே, சாபத்தின் தாக்கத்தினால் நாம் துன்புற வேண்டிய அவசியம் இல்லை என்பதுதான் சுவிசேஷத்தின் நற்செய்தி ஆகும். சிலுவையிலே, இயேசுதான் நமது பூரணமான பிரதிநிதி! இப்பொழுது நாம் அவருக்குள் இருப்பதால், நம்முடைய சுகத்தை உரிமையாக கேட்க முடியும்.

சுகமடைதல் – உங்களுடைய பிறப்புரிமை

நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, ஒரு புதிய குடும்பத்தினுள் பிறந்துவிட்டீர்கள். அதனோடு இணைந்து வருவதுதான் உங்களுடைய புதிய பிறப்புரிமை. ஒருமுறை, சுகத்திற்காகவும் விடுதலைக்காகவும் இயேசுவை தேடி வந்த ஒரு பெண்ணைக் குறித்து சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். அதில் இயேசு, சுகத்தை குறித்து கூறும்போது, அது 'பிள்ளைகளின் அப்பம்'[14] என்று கூறுகிறார். எந்த அன்புள்ள தகப்பனும் தன் பிள்ளைகளுக்கு அப்பத்தை மறுக்கமாட்டார். அப்படியென்றால், பரலோகத்திலுள்ள அன்புள்ள தகப்பன், தம்முடைய பிள்ளைகள் தெய்வீக ஆரோக்கியத்தில் வாழ வேண்டும் என்று எத்தனை அதிகமாய் விரும்புவார்? அதைக் குறித்து சிந்தியுங்கள்!

அர்ப்பணிக்கப்பட்ட ஓர் வாழ்க்கை

குருவுக்கு தெரிந்த காரியங்களை தானும் அறிந்துகொள்ள வேண்டும் என்று முயற்சி செய்பவன் மட்டும் சீடனாகிவிட முடியாது. சீடனாக இருக்க விரும்புபவன் குருவைப் போல வாழ வேண்டும். ஆம்! இயேசுவைப் போல வாழ வேண்டும் என்பதே உங்களுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஒருமுறை,

வேதபாரகன் ஒருவன் இயேசுவிடம் வந்து: போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்[15]. ஒரு மாணவனுக்கு எப்போதுமே அதிகளவில் அறிவை பெருக வைக்க வேண்டும் என்று விருப்பம் இருக்கும். ஆனால், இயேசுவோ அப்படிப்பட்ட அறிவை மாத்திரம் கொடுக்க வரவில்லை. அறிவு இறுமாப்பை உண்டாக்கும்! ஆனால், இயேசுவோ, நாம் விரும்புவதற்கும் கேட்பதற்கும் மேலான வழியையே அருள்கிறார். ஆம், இவ்வுலகிலும் மறு உலகிலும் தேவனுடைய ஜீவனை, அதாவது நித்திய ஜீவனை அனுபவிப்பதற்கான திறவுகோல்களை தேவன் நமக்கு அருள்கிறார். அப்பொழுது, அவருடைய சீடர்களில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார். மேலோட்டமாக பார்த்தால், அர்ப்பணிப்பின் வாழ்க்கை என்பது பயமுறுத்துவதாக இருக்கிறது; மாத்திரமல்ல, கொஞ்சம் வலியும் வேதனையும் உள்ளதாய் காட்சியுமளிக்கிறது. ஆனால், உண்மை என்னவென்றால், ஆவியில் நடத்தப்படுகிற வாழ்க்கைக்காக மாம்ச வாழ்க்கையை நாம் அர்ப்பணிக்கிறோம். இத்தனை நாட்களாக, ஒருவிதமான மாயையை 'ஜீவன்' என நம்பிக்கொண்டிருந்தோம். அதனை அர்ப்பணித்துவிட்டு, அதற்கு மாற்றாக, தேவன், கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்று அனுபவிக்கும்படியாக அருளியிருக்கிற மேன்மையான நித்திய ஜீவனை பெற்றுக்கொள்கிறோம்!

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில்தான் மெய்யான விடுதலையை காண முடியும்!

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில்தான் மெய்யான விடுதலையை காண முடியும்! கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சிலுவையிலே பரிமாற்றம் செய்யப்பட்ட வாழ்க்கை - நமது வாழ்க்கைக்காக

அவருடைய வாழ்க்கை, நம்முடைய வியாதிகளுக்கு பதிலாக அவருடைய ஆரோக்கியம், நம்முடைய தோல்விகளுக்கு பதிலாக அவருடைய வெற்றிகள். கலாத்தியர் 2:20ல் பவுல் இவ்வாறு கூறுகிறார்: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன் (அவருக்குள் அவருடைய சிலுவை மரணத்தில் நான் பங்கெடுக்கிறேன்); ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் *பிழைத்திருக்கிறதோ*, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே (அவரை பற்றிக்கொண்டு, அவர்மேல் சார்ந்து, அவரை முழுவதுமாக நம்பி வாழும் வாழ்க்கை) பிழைத்திருக்கிறேன்." 'இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்பது ஒரு முரண்பாடான சொற்றொடர் (paradoxical phrase). மாம்சீகமான மனம் திருப்தியடையத்தக்கதாக, இதை புரிந்துகொள்ளவைக்க இயலாது. ஆனால், இதனை வாழ்க்கையில் அனுபவிக்க முடியும்.

தேவனிடம் நம்மை அர்ப்பணிப்பதை குறித்து மதம் இவ்வாறு வரையறுத்துவிட்டது - ஒரு தாழ்வான சுய-சாயலை போட்டுக்கொள்வது, தன்னையே ஒரு தகுதியற்ற புழு என்று அழைப்பது, தேவனுடைய இரக்கத்திற்காக எந்நேரமும் அழுவது. அவ்வாறெல்லாம் நாம் செய்யும்போது, ஒருவேளை தேவன் நல்ல மனநிலையில் இருந்தால், தேவன் அவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு நம்மை நேசிப்பார் என்று எண்ணுவது. இது, மிகைப்படுத்தி பேசுவதாக தோன்றினாலும், அநேக நேரங்களில், இதுவே நம்முடைய அர்ப்பணிப்பின் தொனியாக இருக்கிறது. இப்படிப்பட்ட *அர்ப்பணிப்பு*, மாறுவேடம் போட்டுக்கொண்ட துறவறமேயல்லாமல் வேறல்ல. இது, மதரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சொற்களால் அலங்கரிக்கப்பட்ட மாம்சத்தின் செயல்பாடு. சில சபைகள், இப்படிப்பட்ட மாயையான அறிவுரைகளால் நிரம்பியிருக்கின்றன. இப்படிப்பட்ட மனப்பான்மை உடையவர்களாக நீங்கள் இருந்தால், உங்களை மிகவும்

தாழ்மையான நபர்களாக கருதி கொண்டாடவும் செய்வார்கள். இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது (கொலோசெயர் 2:23) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். உங்கள் வாழ்க்கையை நீங்கள் மதரீதியாக வாழலாம் (மாம்சீக சிந்தையின்படி) அல்லது தேவனுடைய வழியில் வாழலாம் (ஆவியின்படி நடத்தப்படுதல்). இதை தவிர வேறே வழியில்லை!

வேதப்பூர்வமான அர்ப்பணிப்பு என்பது இருவழி செயல்முறை. நம்முடைய மாம்சீக மனதுக்கு அர்த்தமுள்ளதாக காணப்படாவிட்டாலும், நம்முடைய கருத்துக்களை கீழே இறக்கிவைத்துவிட்டு, அவருடைய கருத்துக்களை சத்தியமென்று ஏற்றுக்கொள்வதுதான் உண்மையான வேதப்பூர்வமான அர்ப்பணிப்பு ஆகும்[16]. எடுத்துக்காட்டாக, தேவனுடைய வார்த்தை உங்களை ஒரு நீதிமான் என்று கூறும்போது, நீங்களோ உங்களையே ஒரு பாவியைப் போல் எண்ணி உணருவீர்களென்றால், தேர்வு உங்களுடையதுதான். ஒன்று, நீங்கள் உங்களுடைய உணர்வுகளோடு ஒத்துப்போகும்பொருட்டு உங்களை குறித்து தேவனுடைய வார்த்தை சொல்வதை உதாசீனப்படுத்தலாம். அல்லது உங்களுடைய உணர்வுகள் மற்றும் கருத்துக்களை உதாசீனப்படுத்தி விட்டு, தேவன் உங்களை பார்க்கும் விதத்தை சத்தியமென்று எடுத்துக்கொள்ளலாம். விசுவாசத்தில் நடப்பது என்பது அறியாத இருட்டுக்குள் குதிப்பது அல்ல. தேவன் உண்மையுள்ளவர் என்றும், அவருடைய வாக்குத்தத்தங்கள் பிழையற்றவை என்றும் நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அந்த வாக்குத்தத்தங்களுக்கு இருதயமானது முழுவதும் இணங்கி நடப்பதே விசுவாசத்தில் நடப்பது ஆகும்.

வேத வசன ஆதாரங்கள்

1. அவர் மலையிலிருந்து இறங்கின போது, திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள். அப்பொழுது குஷ்டரோகி ஒருவன் வந்து அவரைப் பணிந்து: ஆண்டவரே! உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான். இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான் (மத்தேயு 8:1-3).

2. பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் (எபிரெயர் 1:1-2).

3. அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (1 தீமோத்தேயு 3:16).

4. அவன் பேசுகையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று (மத்தேயு 17:5).

5. அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்; அவருடைய குமாரனாகிய

இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம்; இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென் (1 யோவான் 5:20-21).

6. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது (யோவான் 1:1-4).

7. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14).

8. அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை (மத்தேயு 13:58).

9. அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும் நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன் (2 தீமோத்தேயு 1:12).

10. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:4-5)

11. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 54:10).

12. இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது. அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன் (ரோமர் 5:12-14).

13. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:13).

14. அவள் வந்து: ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார் (மத்தேயு 15:25-26).

15. அப்பொழுது, வேதபாரகன் ஒருவன் வந்து: போதகரே! நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார். அவருடைய சீடர்களில் வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே! முன்பு நான் போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை

அடக்கம்பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார் (மத்தேயு 8:19-22).

16. நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:20-24).

2

தேவனுடைய ராஜ்யம்

சகல தேசங்களிலும் உள்ள சாதாரணமான மக்கள் கூட தேவனுடைய ராஜ்யத்தை அடைந்து அனுபவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இயேசு இந்த பூமிக்கு வந்தார். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்[1]. வேதாகமத்தில், தேவனுடைய ராஜ்யம், சீயோன், நித்திய ஜீவன், உயிர்த்தெழுந்த வாழ்க்கை, ஆவிக்குரிய வாழ்க்கை போன்ற எல்லா வார்த்தைகளும் ஒரே அர்த்தமுடையதாக இருப்பதால், ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் மற்றும், அவரோடு கூட இருந்த சீடர்கள் உட்பட, இயேசுவின் வருகைக்கான இந்த குறிப்பிட்ட நோக்கத்தை பார்ப்பதற்கு முற்றிலும் தவறிவிட்டார்கள். பரிசுத்த ஆவியானவரை சீடர்கள் பெற்றுக்கொண்ட அந்நாளுக்குப் பிறகுதான், இந்த சத்தியத்திற்கு அவர்களுடைய கண்கள் திறந்தன. பூமியிலுள்ள சகல ராஜ்யங்களையும் முறியடித்து, தங்களுடைய இஸ்ரவேல் நாட்டை வல்லரசாக மாற்றி, ஒரு புறம்பான ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக, எல்லாவற்றையும் கைப்பற்றி வெற்றிவாகை சூடும் ராஜா ஒருவர், மகிமை நிறைந்த மேசியாவாக வருவார் என்பதுதான் விசுவாசமில்லாத யூதர்கள்

எண்ணிய காரியம். ஆம், அதுபோன்ற ஒன்றைத்தான் அவர்கள் எதிர்பார்த்தனர். ரோம சாம்ராஜ்யம் மற்றும் புறஜாதியாருடைய தேசங்கள் மீது அவர்களுக்கு இருந்த வெறுப்புத்தான் அவர்களை இவ்வாறு எதிர்பார்ப்பதற்கு உந்தி தள்ளியது. இதைத்தான் தேவன் தம்முடைய வார்த்தையிலும் வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பது அவர்களுடைய புரிந்துகொள்ளுதல் (வியாக்கியானம்)! அவர்களுடைய இப்படிப்பட்ட எதிர்பார்ப்புகளுக்கு இயேசு பொருந்தாததினால், அவர்களால் அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்றிலிருந்தே, தேவனுடைய ராஜ்யம் என்பது அநேகரால் தவறாக புரிந்துகொள்ளப்படுகிறது; புறம்பான ராஜ்யத்தை எதிர்பார்த்ததினால், இயேசு கொண்டு வந்த மேன்மையான ராஜ்யத்தை அனுபவிக்க அவர்கள் தவறிவிட்டார்கள் - அதாவது, தம்மீது விசுவாசம் வைப்போருடைய இருதயத்தை ஆக்கிரமிக்கின்ற உள்ளான ராஜ்யத்தை பெற்று அனுபவிக்க தவறிவிட்டார்கள்!

இந்த ராஜ்யம் எவ்வாறு இருக்கும் என்ற கண்ணோட்டத்தை வேதாகமத்திலுள்ள ஆதியாகமம் என்ற புத்தகத்தில் நாம் காணலாம். தேவன் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, அதற்கு 'ஏதேன்' என்று பெயரிட்டார். 'ஏதேன்' என்ற வார்த்தைக்கு பயன்படுத்தப்படுகிற எபிரெய வார்த்தைக்கு 'இன்பத்தின் வீடு' (House of Pleasure) என்று பொருள்படும். இன்பத்தின் வீடாகிய ஏதேன் தோட்டம்தான் ஆதாமின் வீடாக இருந்தது. இன்பம் என்றால் மன நிறைவு ஆகும். திருப்தி மற்றும் மன நிறைவு நிறைந்த வாழ்க்கையை அனுபவிப்பதைத்தான், 'உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு' என்று சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறான். பற்றாக்குறை என்ற உணர்வுதான் பாவத்தின் மையமாகும். ஏதேன் தோட்டத்தை குறித்து எழுதப்பட்டுள்ள சுருக்கமான வர்ணனையிலிருந்து, அந்த தோட்டத்தில், ஆதாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்திருப்பான் என்பதைப்பற்றி சிறிதளவேனும் அறிந்துகொள்ளலாம். இதனை ஆதியாகமம் 2ஆம் அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம். இந்த தோட்டத்தை பற்றி நாம்

நினைக்கையில், ஆராய்ந்தறிய ஆர்வமுள்ள மனதையும் மிஞ்சுகிற, விவரிக்கமுடியாத அமைதியை காணலாம். ஆதாம் அனுபவித்து சுகித்திருப்பதற்கு, விலையேறப்பெற்ற கற்கள் என்ற புதையல், பழமரங்கள், பூத்துக்குலுங்கும் செடிகள், காய்கறி தோட்டங்கள், தேவைகள் சந்திக்கப்படுதல் ஆரோக்கியம் மற்றும் செழிப்பு அங்கு மிகுதியாக இருந்தன. அவனுடைய சகல தேவைகளும் அந்த தோட்டத்தில் நேர்த்தியாக சந்திக்கப்பட்டிருந்தது. அங்கு வியர்வையோ அல்லது கலக்கமோ இல்லை. சாபத்திற்கு முன்பாக, முட்களோ அல்லது நெருஞ்சில்களோ பூமியில் இருந்தது இல்லை. இது உண்மைக்கு மிஞ்சி இருப்பது போல காணப்பட்டாலும், அப்படிப்பட்ட ஓர் மெய்யான வாழ்க்கையை வாழ்வதற்காகவே ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான்.

இழந்துபோன ராஜ்யம்

ஆதாம் பாவம் செய்தபோது, தேவன் அவனை ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்தவேண்டியதாயிருந்தது. ஆதாமின் கீழ்ப்படியாமை, ஆவிக்குரிய மரணத்தை கொண்டு வந்தது. பாவம் என்பது ஆவிக்குரிய மரணம். அதாவது, தேவனிடமிருந்து பிரிந்துபோவது. ஆதாமுடைய இருதயமானது விசுவாசம் என்ற இடத்திலிருந்து அவிசுவாசத்திற்குள் நகர்ந்தபோதுதான், அவன் கீழ்ப்படியாமைக்குள் விழுந்தான். எல்லா பாவங்களுக்கும் அவிசுவாசம்தான் வேராயிருக்கிறது!

இப்பொழுது, மிக நேர்த்தியான ஒரு அழகிய தோட்டத்தை உங்கள் கற்பனையில் கொண்டு வாருங்கள். அப்படிப்பட்ட ஒரு தோட்டம் ஆதாமுடைய இருதயத்தில் இருந்ததாக கற்பனை செய்துகொள்ளுங்கள். சமாதானமும் அமைதியும் நிறைந்த சூழல்தான் ஆதாமின் உட்புற சூழல் என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆவிக்குரிய மரணம் அவனுக்குள் நுழைந்தபோது, அந்த தோட்டம் கெட்டுப்போனது. உருவகமாக சொல்ல வேண்டுமானால், கோரமான களைகளாலும், முட்களாலும், நெருஞ்சில்களாலும் அந்த தோட்டம் சிதைந்திருந்தது. ஆதாம் பாவம் செய்த பின்னர், இதுவே

அவனுடைய இருதயத்தின் நிலை. உள்ளான தோட்டம் பாவத்தினால் கெட்டுப்போயிருக்கையில், வெளிப்புறத்தில் நேர்த்தியான தோட்டமாகிய ஏதேன், ஒரு மனிதனுக்கு வீடாக இருக்க முடியாது. இந்த முரண்பாடுதான் தேவன் அவனை ஏதேனிலிருந்து துரத்தும்படி செய்தது. பூமியானது முள்ளும் குருக்கும் விளைவித்தது என்று வேதாகமம் கூறுகிறது. இப்படிப்பட்ட பூமியானது, மனிதனுடைய உள்ளார்ந்த இருதயத்தின் நிலையை குறிப்பிடுகிறது. உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் மனிதன் ராஜ்யத்தை இழந்துவிட்டான். பாவம் பூமியின்மீது சாபத்தை கொண்டுவந்தபோது, புறம்பான ராஜ்யத்தை என்றென்றுமாய் இழக்கச் செய்தது. இதினிமித்தம்தான், மறுபடியும் பிறந்தவர்களாகிய நாம், நீதி வாசம் செய்யும் புதிய பூமியும், புதிய எருசலேமும் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்[2].

பழைய ஏற்பாட்டில், இந்த ராஜ்யத்தை மறுசீரமைத்து தருவதாக தேவன் வாக்குப்பண்ணியிருந்தார். இது, முதலாவது உட்புற மறுசீரமைப்பை குறிக்கிறது. உட்புற மறுசீரமைப்பு நடந்த பின்னர், புறம்பான ராஜ்யமானது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையிலே தானாகவே ஸ்தாபிக்கப்படும். தன்னுடைய இருதயத்தினுள் தேவனை தேடாமல், வெளிப்புற வாழ்க்கையில் மாத்திரம் தேடும் மனதிற்கு இப்படிப்பட்ட அறிவு என்பது மிகவும் எட்டாத உயரமாயிருக்கிறது. *உண்மையான மறுரூபமான வாழ்க்கையில் விருப்பம் கொள்ளாமல், வெளிப்புற தோற்றத்திற்கு மாத்திரம் கவனம் செலுத்துவதுதான் மதவாத மனப்பான்மையின் சாராம்சம் ஆகும்*. பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில் உள்ள யூதர்கள், தேவனுடைய ராஜ்யம் வெளிப்படுவதை, தவறான இடங்களில் தேடினர். பழைய ஏற்பாட்டில், சீயோன் என்ற வார்த்தையும் தேவனுடைய ராஜ்யத்தைத்தான் குறிக்கிறது. சீயோன் என்பது முதலாவது ஓர் உள்ளான ராஜ்யம்[3]. மறுபடியும், மதவாத மனநிலை உள்ளவர்கள் புறம்பான சீயோனைத்தான் தேடுகிறார்கள். ஆம், இரண்டாம் வருகையின்போது. இயேசு தம்முடைய பிதாவின் மகிமையில் வரும்போது, புறம்பான சீயோன் உண்டாகும். ஆனால், நம்முடைய மனதை இந்த புறம்பான சீயோன்

மீது பதியவைப்பதால், இப்பொழுது நாம் அனுபவிக்கத்தக்கதாக அருளப்பட்டிருக்கிற, மகிமையான விடுதலை நிறைந்த உள்ளான சீயோனை தவறவிட்டுவிடுகிறோம்.

ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில், உள்ளான மறுசீரமைப்பை முதன்மைப்படுத்தும் ஒரு விளக்கத்தை நாம் காணலாம்.

"கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்;

அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து,

அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும்,

அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்"

(ஏசாயா 51:3)

ஆம்! எல்லா பிணிகளிலிருந்தும் குணமாக்கப்பட்ட இருதயத்தை எடுத்துக்காட்டும் அழகான படம்தான் இவ்வசனத்தின் விளக்கம். புதிய ஏற்பாட்டில், ஆவியால் நடத்தப்படுகிற வாழ்க்கையைக் குறித்து பவுல் கொடுத்த விளக்கமும் இதுதான்[4]. ஆவியால் நடத்தப்படுகின்ற வாழ்க்கை என்பது மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்த வாழ்க்கை. தேவனுடைய ராஜ்யம், நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.

இப்பூமியில், இயேசு தம்முடைய ஊழியத்தின் ஆரம்பகாலத்தில், ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை எடுத்து கீழ்கண்ட வார்த்தைகளை வாசித்தார்.

"கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்;

தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார்;

இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும்,

சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்,

குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும்,

நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்"

(லூக்கா 4:18)

மனிதர்களுடைய இருதயங்களுக்கு சுகத்தை கொண்டு வரும் நற்செய்தியை பிரசங்கிப்பதே தம்முடைய ஊழியம் என்று இயேசு பிரகடனப்படுத்தினார். அதாவது, இனி வரப்போகும் ராஜ்யத்தைக் குறித்து இயேசு பிரசங்கித்தார்! மனிதனுடைய இருதயமானது, பாவத்தினால் உடைந்து சிதைந்து போயிருந்தது. இருதயத்தை குறித்து மேலும் பிற்பாடு அறிந்துகொள்வீர்கள். இருதயம் குணமாக்கப்பட்டு, நித்திய ஜீவன் மனிதனுக்குள் நுழைந்த பின்னர், மகிழ்ச்சியும் நன்றியறிதலும் கலந்த மெல்லிசை குரல் இருதயத்திலிருந்து தானாகவே எழும்பும். அப்படிப்பட்ட மொழியை, மாம்சீகமாக வெளிப்புற தோற்றத்திற்கு அதிக கவனம் செலுத்தும் மனதால் புரிந்துகொள்ளவே முடியாது. உலகம் கொடுக்கிற சமாதானத்தை விட மேலான சமாதானத்தையே தருவதாக இயேசு கூறினார்[5]. உலகம் கொடுக்கிற சமாதானம் சூழ்நிலைகளை சார்ந்தது. உங்களுடைய எல்லா கட்டணங்களும் செலுத்தப்பட்டு, நீங்கள் முற்றிலும் ஆரோக்கியமாக இருந்து, எல்லா உறவுகளும் நன்றாக இருந்தால், நீங்கள் சமாதானத்தை உணருவீர்கள். ஆனால், இயேசுவோவென்றால், புத்திக்கெட்டாத தேவசமாதானத்தை அருளி, அதை அனுபவித்தவர்கள் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய ஒரு மேலான வாழ்க்கைக்கு அவர்களை உயர்த்துகிறார். அது, அனுபவித்து அறிந்துகொள்ள வேண்டிய சமாதானமும் அமைதியும் ஆகும்; மாம்சரீதியான மனம் திருப்தியடையத்தக்கதாக, இதற்கு விளக்கம் கொடுக்க முடியாது. பவுல் இதைத்தான்: "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்"[6] என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட சமாதானமான நிலையில்தான் மனிதனுடைய உடல் இளைப்பாறுதலுக்குள் நுழைகிறது. அப்பொழுது, உடலில் உள்ள எல்லா பாகங்களுக்கும் இரத்தம் சீராக பாய்கிறது. உடலின்

நோய் எதிர்ப்பு சக்தியும் சுமூகமாக வேலை செய்கிறது. இப்புத்தகத்தை நீங்கள் மேலும் வாசிக்கும்பொழுது, தேவனுடைய ஜீவன் (நித்திய ஜீவன்) இதைத்தான் உங்களுடைய சரீரத்தில் செய்ய வல்லமையுள்ளது என்று புரிந்துகொள்வீர்கள். இது நீங்கள் பெற்றுக்கொள்ளவோ காணவோ முடியாத தூரத்திலுள்ள மாய சக்தி அல்ல; நீங்கள் பெற்று அனுபவிக்கத்தக்கதாக அது உங்களுக்குள்தான் இருக்கிறது. நித்திய ஜீவன் என்பது இப்போதைக்குரியது. தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது. உங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதை நீங்கள் புரிந்துகொண்டால், இது ஒரு கற்பனை கதை அல்ல என்றும், இப்பூமியிலுள்ள உங்கள் வாழ்க்கையிலேயே அனுபவித்து மகிழக்கூடிய ஒரு உண்மை நிலை என்றும் புரிந்துகொள்ளலாம்.

இப்படிப்பட்ட சமாதானமான நிலையில்தான் மனிதனுடைய உடல் இளைப்பாறுதலுக்குள் நுழைகிறது.

உங்களுக்குள்ளிருக்கும் ராஜ்யம்

தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே[7]. இதுவே ஆதி யூதர்களுக்கு இருந்த மனநிலை. இதே மனநிலையை ஆண்டவராகிய இயேசுவின் சீடர்களிடத்திலும் காண முடிந்தது. இயேசு உயிர்த்தெழுந்த பின்னர், இதேபோன்ற கேள்வியை சீடர்கள் அவரிடம் கேட்டனர்: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?[8]. தங்களுடைய இஸ்ரவேல் தேசத்தை வல்லரசு நாடாக மாற்றக்கூடிய ஒரு புறம்பான ராஜ்யம் வரும் என்று எண்ணிக்கொண்டிருந்தனர். நிச்சயமாக புறம்பான

ராஜ்யம் என ஒன்று வரத்தான் போகிறது! அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனபோதிலும், வரவிருக்கிற புறம்பான ராஜ்யத்தின்மீது நம்முடைய மனதை பதியவைத்துவிட்டு, நமக்குள்ளாக இருக்கும் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து ஊற்றெடுத்து வரும் மகிழ்ச்சியான வாழ்க்கையை தவறவிட்டுவிடுகிறோம். உங்களுடைய ஆவியில் உள்ள தேவனுடைய ராஜ்யத்தின்படி நீங்கள் உங்களது வாழ்க்கையை வாழ்ந்தால், விசுவாசமும் அன்பும் நிறைந்ததாக உங்களுடைய வாழ்க்கை பயணம் அமையும். அவ்வாறு நீங்கள் செய்வீர்களாகில், நீங்கள் தேவனை பின்பற்றுகிறவர்களாக இருந்து, அவருடைய சமாதானத்தில் உங்களை காத்துக்கொள்வீர்கள். இவ்வாறு, நீங்கள் தேவனுடைய சித்தத்தின் மையத்தில் இருந்துகொண்டு, புறம்பான ராஜ்யம் வெளிப்படும் எந்த சமயத்திலும், அதில் நீங்கள் நுழையும்படியாக நீங்களே உங்களை ஆயத்தமாக வைத்துக்கொள்வீர்கள்.

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த ஒரு சொற்பொழிவில், இயேசு நிக்கொதேமுவுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்[9] என்றார். நீங்கள் மறுபடியும் பிறந்தபொழுது, உங்களுக்குள்ளாக தேவனுடைய ராஜ்யத்தை பெற்றுக்கொண்டீர்கள். இருப்பினும், தேவனுடைய வார்த்தையைக் கொண்டு மனதை புதிதாக்கி, தேவனுடைய ராஜ்யத்தில் எவ்வாறு பிரவேசிப்பது என்று கற்றுக்கொள்ளாமல், அனுதின வாழ்வில் இந்த ராஜ்யத்தை ஒருவரால் அனுபவிக்க முடியாது. நம்முடைய மனம் புதிதாகிற அளவுக்கு தக்கதாகத்தான் மறுரூபத்தை அனுபவிக்க முடியும் என்று

நீங்கள் மறுபடியும் பிறந்தபொழுது, உங்களுக்குள்ளாக தேவனுடைய ராஜ்யத்தை பெற்றுக்கொண்டீர்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். வெளிப்புறத்தில் மாத்திரம் நம்முடைய கண்களை பதிய வைக்கும் வரையில், நம்முடைய இருதயங்கள் மீது ஒரு முக்காடு இருந்து கொண்டே இருக்கும்[10]. ஆனால், ஆண்டவரை நோக்கி மனம் திரும்பும்போது, இந்த முக்காடு நீக்கப்படுகிறது. தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவதற்கு எந்தவிதமான மாயாஜால சூத்திரங்களையும் ஒருவர் கண்டறிய வேண்டியதில்லை. தேவனுடைய ராஜ்யமானது உங்களுக்குள் ஏற்கெனவே இருப்பதால், மனதை புதிதாக்கி, அந்த ராஜ்யத்தை உங்களால் அனுபவிக்க முடியும்[11].

இயேசுவை சிலுவையில் அறையும் முன்பாக, பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்[12]. மூல பாஷையில் உள்ள *'ராஜ்யம்'* என்ற வார்த்தையை *'மண்டலம்'* என்றும் மொழிபெயர்க்கலாம். தேவனுடைய ராஜ்யம் என்பது, மறுபடியும் பிறக்கும்போது, ஒருவர் பிறக்கின்ற ஆவிக்குரிய மண்டலம் ஆகும். மறுபடியும் பிறப்பதற்கு முன்னர், ஒருவர் மாம்சீகமாக மட்டுமே இருக்கிறார். மாம்சரீதியான மனுஷனாக இருக்கும் வரையில், தேவனுடைய ஆவிக்குரிய மெய்ப்பொருள்களை அவனால் அணுக முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு, இயற்கை மண்டலம் என்ற நிஜத்தில் மட்டுமே இயங்கத் தெரியும். மற்றும், ஆவிக்குரிய மெய்ப்பொருள் அப்படிப்பட்டவர்களுக்கு மறைக்கப்பட்டு இருக்கிறது. ஜம்புலன்களுக்கு இந்த ஆவிக்குரிய மண்டலம் புலப்படுவது அரிது[13]. இயற்கை மனதுக்கு மிகவும் நேர்த்தியாக உணர்த்தும் வகையில், சோதனை குழாயில் வைத்தோ அல்லது விளக்கவுரை கொடுத்தோ நிரூபித்துக் காட்ட இயலாது. ஆனால், மறுபடியும் பிறந்தவர்களாக இயேசுவை ஆண்டவராக பின்பற்ற வேண்டும் என்பவர்கள், இந்த ஆவிக்குரிய மண்டலத்தை தங்கள் இருதயங்களில் அனுபவிக்க முடியும்.

ராஜ்யத்தின் ராஜா

இயேசு பரமேறுவதற்கு முன்பாக, பரிசுத்த ஆவியானவரை சீடர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்[14]. இயேசு, தம்முடைய வாழ்க்கை முழுவதும், பரிசுத்த ஆவியானவரை, தனக்குள் வாழ்ந்த பிதாவாகவும், தேவனுடைய எல்லா கிரியைகளையும் தனக்குள் செய்பவராகவும் கண்டார்[15]. இயேசு அவர்களிடம், "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்"[16] என்றார். திக்கற்றவர்கள் என்றால் தகப்பனில்லாதவர்கள் என்று பொருள்படும். மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும், விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பரிசுத்த ஆவியானவரைத்தான், இயேசு, அங்கு 'தகப்பன்' என்று குறிப்பிட்டார். ஒரு மனிதனுக்குள் பரிசுத்த ஆவியானவர் வசிக்க வரும்பொழுது, அந்த மனிதனுக்குள், ஒரு தகப்பனும் ராஜாவுமாயிருக்கிறவர், நித்திய காலமாக வசிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாழ்வதையே தேவனுடைய ராஜ்யம் எனவும் புரிந்துகொள்ளலாம். இதனால்தான், "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது"[17] என்று பவுல் கூறுகிறார்.

இந்த ஆவிக்குரிய மண்டலத்தை, உயிரோட்டம் நிறைந்த மெய்ப்பொருளாக உங்கள் இருதயத்தில் காண்பிப்பது பரிசுத்த ஆவியானவர்தான். ராஜ்யத்தை தன் இருதயத்தில்தான் ஒருவரால் உணர்ந்து அனுபவிக்க முடியும். தேவனுடைய வார்த்தையை நம்புகிற இருதயத்திலிருந்துதான் விசுவாசம் ஊற்றெடுக்கும். உங்களுடைய மனம் தேவனுடைய வார்த்தையினால் புதிதாக்கப்பட்டிருந்தால், உங்களுடைய ஐம்புலன்கள் சொல்வதை விட தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை

இந்த ஆவிக்குரிய மண்டலத்தை, உயிரோட்டம் நிறைந்த மெய்ப்பொருளாக உங்கள் இருதயத்தில் காண்பிப்பது பரிசுத்த ஆவியானவர்தான்.

நீங்கள் உண்மையாக அனுபவிப்பீர்கள். இப்படிப்பட்ட மனநிலையில்தான், நீங்கள் ராஜ்யத்தினுள் நுழைகின்றீர்கள். சிலர் எண்ணுகிறவாறு, ராஜ்ய வாழ்க்கை என்றால், ஏதோ மாய தோற்றமோ கற்பனையோ (illusion) அல்ல; மாறாக, மனம் புதிதாகிறதினாலே, ஒருவர் விசுவாசத்தினால் இந்த மண்டலத்திற்குள் நுழைகிறார்.

பரிசுத்த ஆவியானவரால் மறுரூபப்படுத்தப்பட்ட ஒரு தோட்டத்தை குறித்து ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில் கீழ்கண்டவாறு வர்ணிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய கிரியையினால் குணமாக்கப்பட்ட இருதயத்தின் விளக்கப்படம்தான் இது:

உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும் (ஏசாயா 32:15).

என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும் (ஏசாயா 32:18).

இப்படிப்பட்ட சமாதானம் நிறைந்த வாழ்வினை தருவதற்காகத்தான் இயேசு வந்தார். இந்த வாழ்க்கையில் நமக்கு கிடைக்கக்கூடிய நித்திய ஜீவன்தான் இது. இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களுடைய இருதயங்களில், தேவனுடைய ராஜ்யம் ஏற்கெனவே உள்ளே நுழைந்துவிட்டது. பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ராஜா. அவர், நம்முடைய அனுதின வாழ்வை வெற்றிக்குள்ளாக வழிநடத்த வேண்டும் என்று விரும்புகிறார். உங்களுக்குள் இருக்கும் நித்திய ஜீவனை, வெளியே கொண்டு

உங்களுக்குள் இருக்கும் நித்திய ஜீவனை, வெளியே கொண்டு வந்து, அதை அனுபவிக்க உதவி செய்கிறவர்தான் பரிசுத்த ஆவியானவர்.

வந்து, அதை அனுபவிக்க உதவி செய்கிறவர்தான் பரிசுத்த ஆவியானவர். உங்களுடைய ஆவியும் (நித்திய ஜீவனால் ஊடுருவி இருக்கும்போது) மனமும் இசைந்திருக்கும்போது, நீங்கள் சமாதானமான நிலையை அடைகின்றீர்கள். இந்நிலையில், உங்கள் சரீரம் மற்றும் மனதின் ஆரோக்கியமும் சுகமும், இயற்கையாக வரும் விளைவாக வெளிப்பட தொடங்குகிறது.

தேவனுடைய ராஜ்யமும் தேவனுடைய வார்த்தையும்

நமக்குள்ளாக கிரியை செய்யும் தேவனுடைய ராஜ்யம், எவ்வாறு இயங்குகிறது என்று விளக்குவதற்கு, இயேசு அநேக உவமைகளை பயன்படுத்தினார். அவ்வாறு பயன்படுத்தப்பட்ட உவமைகளுள் ஒன்றுதான், விதைக்கிறவனும் விதையும்[18]. இந்த உவமையில், விதை என்பது வார்த்தையை குறிக்கிறது. நிலம் என்பது இருதயத்தோடு ஒப்பிடப்பட்டுள்ளது. விதைக்கிறவர் தேவனுடைய குமாரன். அவர், மக்களுடைய இருதயங்களில் தேவனுடைய வார்த்தையை விதைக்கிறார். அநேகர் தேவனுடைய வார்த்தையை அறிவுப்பூர்வமாக அணுகியிருக்கிறார்களே தவிர, அதிலுள்ள ஜீவனை அனுபவித்ததில்லை. வேத வசனங்களை மனப்பாடமாக சொல்லக்கூடிய அநேகருடைய வாழ்க்கையோவென்றால், தோல்விகளால் நிறைந்திருக்கும். பல ஆண்டுகளாக அவர்களில் ஒருவனாகத்தான் நானும் இருந்தேன். நான் இன்னமும் வந்தடையாவிட்டாலும், ஏற்கெனவே இருந்த இடத்திலிருந்து புறப்பட்டுவிட்டேன்!

தேவனுடைய வார்த்தை, உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் வெற்றியை கொண்டு வரும்.

தேவனுடைய வார்த்தை, உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் வெற்றியை கொண்டு வரும். ஒருவேளை நம்முடைய வாழ்க்கை அப்படியிராவிட்டால், இயேசுவின் போதனைகளிலுள்ள ஞானத்தை நாம் புறக்கணித்து இருக்கின்றோம்

என்றுதான் பொருள்படும். ஜனங்களுடைய இருதயங்களில் ராஜ்யம் வந்துவிட்டதால், பரலோகத்தையே பூலோகத்தில் அனுபவிக்கும்படியாக இயேசு தம்முடைய சீடர்களுக்கு, கர்த்தருடைய ஜெபத்தில் ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார்[19]. இது இயேசுவின் போதனையினால் வந்த ஏதோ ஒருவிதமான புதிய யோசனை அல்ல. இயேசுவின் சகல போதனைகளும் பழைய ஏற்பாட்டு வசனங்களில் வேரூன்றியிருந்தன. அன்பினால் தூண்டப்பட்டு, தேவனுடைய வார்த்தையை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதின்படி நடக்கும்போது, உங்களுடைய நிஜ வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்று காண்பிக்கவே இயேசு வந்தார். மிகவும் சாதாரணமான வாழ்க்கை போதனைகள் மூலமாக, உலகத்தோற்ற முதல் மறைக்கப்பட்டிருந்த ரகசிய ஞானத்தைதான் இயேசு வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார்[20].

மோசே, தான் மரிக்கும் முன்பாக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில், இஸ்ரவேலர்கள், எவ்வாறு தங்களுடைய வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சில விதிமுறைகளை கொடுத்தார். அவனுடைய ஞானத்தை சற்றே கவனியுங்கள்:

"ஆகையால் கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும், உங்கள் பிள்ளைகளின் நாட்களும், பூமியின்மேல் வானம் இருக்கும் நாட்களைப்போல அநேகமாயிருக்கும்படிக்கு, நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின்மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக்குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக. அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும் உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக" (உபாகமம் 11:18-21).

இயேசுவும் மோசேயும் ஒரேவிதமாகத்தான் போதிக்கிறார்கள். பரலோகத்தை பூமியில் அனுபவிப்பதற்காக, உங்கள் இருதயத்தில்

தேவனுடைய வார்த்தையை காத்துக்கொள்வதுதான் ஞானம். இதை எவ்வாறு நடைமுறைபடுத்துவது என்பதை வரவிருக்கும் பக்கங்களில் காணலாம். உங்களுடைய இருதயத்தை குறித்தும், தேவனுடைய வார்த்தையை அதில் எப்படி காத்துக்கொள்வது என்றும் நீங்கள் புரிந்துகொண்டால், தேவன் வாக்குப்பண்ணியிருக்கின்ற சுகம், ஆரோக்கியம் மற்றும் பரிபூரண வாழ்க்கைக்கான திறவுகோல்களை பயன்படுத்துவது மிகவும் சுலபமாகிவிடும். பரலோகத்தின் மெய்ப்பொருள்களை அனுபவிக்கிற இடம்தான் இருதயம். பரலோகம் உங்கள் இருதயத்தை ஆக்கிரமிக்கும்பொழுது, அதில் வியாதி இருக்க வாய்ப்பே இல்லை. அவ்வாறு உங்கள் இருதயம் குணமாக்கப்பட்டிருக்கும்போது, உங்கள் சரீரமானது தானாகவே சுகத்தை வெளிப்படுத்த ஆரம்பிக்கும். உங்கள் சுகம் அத்தனை எளிதானது!

தேவனுடைய ராஜ்யத்தில் சுகமாகுதல்

உங்களுடைய மறுபடியும் பிறந்த ஆவியோடு உங்களுடைய மனதை இசைந்திருக்கச் செய்யும்போது, நீங்கள் மறுரூபத்தை அனுபவிக்க ஆரம்பிப்பீர்கள். மறுரூபமானது உங்களுடைய வாழ்க்கையில் நம்ப முடியாத நன்மைகளை கொண்டு வரும். அவைகளில் ஒன்றுதான் சரீர சுகம்! ஆவிக்குரிய மனம் என்றால் ஏதோ மாயையான உலகில் வாழ்வது அல்ல. மாறாக, சிலுவையிலே கிறிஸ்து நமக்காக செய்து முடித்த கிரியைகளைக் குறித்த துல்லியமான தகவலினால் நிரப்பப்பட்ட மனம்தான் ஆவிக்குரிய மனம் ஆகும். இது, அறிவை மட்டும் பெருக வைக்கிற தகவல் அல்ல. ஆனால், அந்த தகவல், வெளிப்பாடாக மாறி, உங்கள் வாழ்க்கையை மறுரூபப்படுத்துகின்ற ஒன்றாகும். இந்நிலையில்தான், 'இளைப்பாறுதல்' என்று வேதாகமம் கூறுகின்ற ஓர் இடத்திற்கு நீங்கள் வருகின்றீர்கள். எல்லா விசுவாசிகளும் அந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்[21] என்று எபிரெய நிருபத்தை எழுதினவர் கூறுகிறார்.

உங்களுடைய இருதயமானது சுகத்தையும் முழுமையையும் அனுபவிக்கும்போது மாத்திரம்தான், உள்ளான மனிதனுக்கேற்ப உங்கள் சரீரமானது தன்னையே சீரமைத்துக்கொள்ளும். முழுமையடையாத உள்ளான இருதயத்தை வைத்துக்கொண்டு, வெளிப்புறமாக சரீரத்தில் மாற்றத்தை எதிர்பார்ப்பது என்பது தற்காலிகமானதாகத்தான் இருக்கும். வெளிப்புறத்தை மாற்றியமைத்தல் நல்லதுதான். ஆனால், அதற்கு மிகவும் வலுவான மன உறுதி தேவைப்படுவதால், அது ஒரு கடினமான வேலை. இது மாம்சத்தின் வஞ்சனையேயன்றி வேறல்ல. எந்த குறிப்பிட்ட சமயத்திலும், ஒன்று நீங்கள் ஆவியில் நடப்பீர்கள் அல்லது மாம்சத்தில் நடப்பீர்கள். ஆவியில் நடக்கிறவர்களை, ஆவிக்குரிய மனம் உள்ளவர்கள் என்றும் வேதாகமம் கூறுகிறது. உங்கள் மனதுதான் உங்களுடைய வாழ்க்கைபோக்கை நிர்ணயிக்கிறது. உங்கள் மனதானது, எந்த குறிப்பிட்ட சமயத்திலும், ஒன்று மாம்சத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் அல்லது ஆவியானவரின் தலைமைத்துவத்தில் இயங்கும். ஆவியில் நடத்தப்படுகின்ற வாழ்க்கையானது ஜீவனையும் சமாதானத்தையும் உண்டாக்கும். ஆரோக்கியத்தையும் சுகத்தையும் உள்ளடக்கியதுதான் ஜீவன் ஆகும். ஞானம் சொல்கிறது: *சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்* (நீதிமொழிகள் 14:30). இது உருவகம் அல்ல; ஒரு உண்மையான கூற்று!

சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்

கண்களின் ஒளி இருதயத்தைப் பூரிப்பாக்கும்; நற்செய்தி எலும்புகளைப் புஷ்டியாக்கும் (நீதிமொழிகள் 15:30). 'கண்களின் ஒளி' என்பது, நாம் எங்கே கவனம் செலுத்துகிறோம் என்பதை குறிக்கிறது. புறம்பான ராஜ்யத்திலிருந்து, நம்முடைய இருதயத்தில் ஜீவனோடிருக்கின்ற உள்ளான ராஜ்யத்திற்கு நேராக நமது கவனத்தை திருப்புவதுதான் ஞானம்!

வேத வசன ஆதாரங்கள்

1. தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

2. பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-3).

3. நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள் (எபிரெயர் 12:22-24).

4. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் (கலாத்தியர் 5:22).

5. சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27).

6. அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலிப்பியர் 4:7).

7. தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார் (லூக்கா 17:20-21).

8. அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள் (அப்போஸ்தலர் 1:6).

9. இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவான் 3:5).

10. மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே (2 கொரிந்தியர் 3:15).

11. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்

இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

12. இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார் (யோவான் 18:36-37).

13. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (யோவான் 14:17).

14. நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவான் 14:16).

15. நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார் (யோவான் 14:10).

16. நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன் (யோவான் 14:18).

17. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14:17).

18. கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான் (மாற்கு 4:3).

19. நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத்தேயு 6:9-10).

20. என் வாயை உவமைகளினால் திறப்பேன்; உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது (மத்தேயு 13:35).

21. ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:11-12)

3

இயேசு - தேவனுடைய குமாரன்

இயேசு, தேவனுடைய குமாரன் என்ற வெளிப்பாட்டில்தான் நீங்கள் ஆவலோடு நாடித்தேடுகின்ற சுகம் ஆரம்பிக்கிறது. இயேசு யார்? அவருடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன? "இயேசு, மனுக்குலத்தின் பாவங்களுக்காக மரிக்க வந்தார். அவரை நம்புகிறவர்கள் பரலோகம் செல்வார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்கள் நரகத்திற்கு செல்வார்கள்" - இப்படிப்பட்ட பிரசங்கங்களைத்தான் நான் ஒரு வாலிபனாக கேட்டு வளர்ந்து வந்தேன். சுவிசேஷம் என்ற பெயரில் இப்படிப்பட்ட அநேக காரியங்கள் பிரசங்கிக்கப்படுகின்றன. எனினும், சுவிசேஷத்தை புரிந்துகொள்வதற்காக நான் வேதாகமத்தை ஆராய்ச்சி செய்கையில், நான் எனது ஆலயத்தில் கேட்ட செய்தியானது வேதாகம சுவிசேஷத்திலிருந்து மிகவும் வேறுபட்டிருந்ததை நான் கண்டறிந்தேன். முதலாவது, நித்திய ஜீவனை அளிக்கவே இயேசு வந்தார்[1]. தேவ ரகமான வாழ்க்கையை இப்பொழுது அனுபவிப்பதா அல்லது சாதாரணமான சலிப்பு நிறைந்த, எந்தவித வல்லமையுமில்லாத மதரீதியான வாழ்க்கையை அனுபவிப்பதா என்பது நீங்கள் நித்திய ஜீவனை எவ்வாறு வியாக்கியானம் செய்கிறீர்கள் என்பதில்தான் இருக்கிறது. "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று இயேசு கூறினார். இப்படிப்பட்ட பரிபூரண ஜீவன் நிறைந்த வாழ்க்கை, நாம் மரித்த பின்னர்தான் அனுபவிக்க முடியும்

என்று பலர் வியாக்கியானம் கொடுத்துவிட்டார்கள். ஆனால், இயேசு, இந்த வாழ்க்கையில் நாம் அனுபவித்து மகிழத்தான் பரிபூரண ஜீவனை கொடுக்கிறார். பரிபூரண ஜீவனை நாம் புரிந்துகொள்வதற்கு முன்னர், அதை கொடுக்கிறவரை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இயேசு, தேவனுடைய குமாரன் என்று புரிந்துகொள்வதற்கு, முதல் மனிதனின் சிருஷ்டிப்பை புரிந்துகொள்ள வேண்டும். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவனுடைய சரீரம் மண்ணிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டது. அவனுடைய ஜீவனோ தேவனிடத்திலிருந்து வந்தது[2]. தன்னுடைய ஆவியில், ஆதாம்; தேவனுடைய சாயலை கொண்டிருந்தான். மண்ணான சரீரத்திற்குள்ளாக வசித்த ஆவிக்குரிய மனுஷன்தான் ஆதாம். ஆகவே, ஆவிக்குரிய மரணத்தின் (பாவம்) ஆளுகைக்குள் அதுவரையில் வராத மிகவும் ஆரோக்கியமான சரீரமே அவனுக்கு இருந்தது. ஆங்கில வேதாகமத்தில், ஆதாம் தேவனுடைய குமாரன்[3] என்று எழுதப்பட்டுள்ளது.

சிருஷ்டிப்பின்படி ஆதாம் தேவரகமானவன். ஆனாலும், அவன் பாவம் செய்தபோது, அந்த மகிமையான நிலையிலிருந்து விழுந்துபோனான். முதலாவது, மனிதனை, சரீரத்தில் வசிக்கும் *ஆவி மனிதனாகத்தான்* தேவன் சிருஷ்டித்தார். ஆனால், விழுந்து பின்னர், ஆதாம், தேவன் சிருஷ்டித்தபடி இல்லாமல், மிகவும் வித்தியாசமானவனாக மாறிப்போனான். இவ்வாறு விழுந்துபோன மனிதனைத்தான் மாம்சமான மனிதன்[4] என்று கூறுகிறார்.

தேவனிடத்திலிருந்து மனிதனுடைய ஆவி பிரிந்த பிறகு, அவன், வெறுமனே மாம்சீகமான மனதினால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட வாழ்க்கையை வாழுகின்ற மாம்சீக மனிதனானான்.

தேவனிடத்திலிருந்து மனிதனுடைய ஆவி பிரிந்த பிறகு, அவன், வெறுமனே மாம்சீகமான மனதினால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட வாழ்க்கையை வாழுகின்ற மாம்சீக மனிதனானான். ஆதாம் விழுவதற்கு முன்னர், அவனுடைய மனதானது, ஆவியின்

அதிகாரத்தின் கீழ் இருந்தது. அவன் விழுந்த பிறகோ, அவனுடைய மனதானது, தேவனை சார்ந்துகொள்ளாமல், தன் இஷ்டப்படி இயங்க ஆரம்பித்துவிட்டது. ஆகவே, தேவனுக்கு தன்னை கீழ்ப்படுத்தாத மனுக்குலத்தின் மனதின் மூலமாகத்தான் இப்பொழுது பிசாசு ஆளுகை செய்கிறான்[5].

இயேசுவின் ஆவி, ஆத்துமா, சரீரம்
(*அவர் இப்பூமியில் வாழ்ந்தபோது*)

ஆதாமிலிருந்து வந்த ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மற்றும் மனுஷிக்குள்ளும், பாவ சுபாவம் ஏற்கெனவே இருக்கிறது. இயேசுவின் பிறப்பு என்ற சம்பவம், எல்லா வகையிலும் அசாதாரணமானது. அது, ஏதேன் தோட்டத்தில், முதல் மனிதனை இயற்கைக்கு அப்பாற்பட்டவிதமாக சிருஷ்டித்த விதத்துக்கு ஈடானது. ஆதாமும் இயேசுவும் அவரவர் வகையில் மூல முன்மாதிரியாக (prototype - first of its kind) இருக்கிறார்கள். தேவகுமாரன், இவ்வுலகத்திற்குள் இயற்கையான உறவின் மூலம் வர முடியாது. ஒருவேளை, இயேசு அவ்வாறு பிறந்திருந்தால், ஒரு பூமிக்குரிய தகப்பனின் வித்திலிருந்து பிறந்ததால், அவர் தம்முடைய ஆவியில் பாவ சுபாவத்தை உடையவராக காணப்படுவார். இயேசுவின் பிறப்பினிமித்தம், ஒரு புதுவிதமான மனிதன் இப்பூமியில் வாழ வந்திருந்தார் - ஒரு பாவமில்லாத ஆவிக்குரிய மனிதன்!

காபிரியேல் என்ற தூதன் மூலமாக தேவன் மரியாளுக்கு ஒரு வார்த்தையை அனுப்பினார்[6]. மரியாள், அந்த வார்த்தைக்கு தன்னை அர்ப்பணித்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவள் மீது நிழலிட்டார்; அதினால், இயேசு அவளுடைய கருவில் உருவானார்[7]. தேவனுடைய வார்த்தைதான் அந்த குழந்தையின் ஆவியாக இருந்தது. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை இப்பொழுது மாம்சமானது. தேவன் மாம்சமாக வெளிப்பட்டார்[8]. இவ்விடத்தில், மாம்சம் என்பது, மரியாளின் கருவில் உருவான சரீரத்தை குறிக்கிறது. எழுத்தின்படியே, வார்த்தை மாம்சமானது![9]

மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக மேசியாவை உலகத்திற்கு கொண்டுவர வேண்டும். அதற்காக தேவன் ஆபிரகாம் என்ற ஒரு மனிதனை தம்முடைய ஞானத்தில் தெரிந்தெடுத்தார். அந்த மனிதன் மூலமாக, தமக்கென்று ஓர் ஜனக்கூட்டத்தை ஏற்படுத்தினார். இதற்காகத்தான், பழைய உடன்படிக்கையில், பிரமாணங்கள், கட்டளைகள், பரிகார பலிகள், ஆசாரியத்துவம் போன்றவை கொடுக்கப்பட்டன. ஆம், இவைகளின் நோக்கமெல்லாம் ஒன்றே ஒன்றுதான் - விசுவாசத்தில் காலடி எடுத்து வைத்து, பரலோகத்தின் ஆணைக்கு 'ஆம்' என்று சொல்லும் அந்த ஒரு நபரை (மரியாள்) ஆயத்தப்படுத்துவதுதான். கீழ்கண்ட வேத வசனங்களில், அப்போஸ்தலனாகிய பவுலுடைய எழுத்துக்கள் மூலமாக பரிசுத்த ஆவியானவர் இந்த மாபெரும் திட்டத்தை வெளிப்படுத்துகிறார்.

அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கமென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது (கலாத்தியர் 3:19).

காலம் நிறைவேறினபோது, **ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும்** நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார் (கலாத்தியர் 4:5).

இப்பூமியில் வாழ்ந்த இயேசு தேவனும் மனுஷனுமாய் இருந்தார். இயேசு, தம்முடைய ஆவியில் 100% தேவனாயிருந்தார். தம்முடைய மாம்சத்திலோ அவர் 100% மனிதனாக இருந்தார். எனினும், அவர் ஆவியினால் ஆளுகை செய்யப்பட்ட மனிதனாக இருந்தார். அவர் தம்முடைய ஆவியில், தேவனுடைய அறிவாலும் ஞானத்தாலும் ஆட்கொள்ளப்பட்டவராக இருந்தார். இருப்பினும், அவருடைய மனதிலும் சரீரத்திலும், சக மனிதர்களை போல, ஞானத்திலும், வளர்த்தியிலும், மனுஷ தயவிலும் வளர வேண்டியவராக இருந்தார்[10]. அவருடைய மனமும் சரீரமும் பூமிக்குரிய வேலையாட்களாகவும் (faculty of earth), அவருடைய ஆவியோ பரலோகத்தின் வேலையாளாகவும் (faculty of heaven) செயல்பட்டது. எந்த மனுஷனையும்போல அவருக்கும் சோதனைகள்

வந்தன. எனினும், தம்முடைய ஆவியை பின்பற்றி வாழ அறிந்திருந்த அவர், ஆவியானவரின் தலைமைத்துவத்துக்கு தன்னை முற்றிலும் விட்டுக்கொடுத்ததினால், எல்லாவிதமான சோதனைகளையும் மேற்கொள்ள முடிந்தது. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு தன்னை விட்டுக்கொடுத்து நடக்கும், மறுபடியும் பிறந்த ஒவ்வொரு மனுஷன் மற்றும் மனுஷியுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டுதான், நான்கு சுவிசேஷங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள இயேசுவின் வாழ்க்கை ஆகும். மாம்சத்தை மாம்சத்தினால் மேற்கொள்ள முடியாது. ஆவியில் நடத்தப்படுவதுதான் மாம்சத்தை மேற்கொள்ள ஒரே வழி[11]. மனிதனுடைய மாம்சத்தை சில விதிமுறைகளைக் கொண்டும், சமயச்சடங்குளை கொண்டும் சீராக்கி, அவனை பூரணப்படுத்தும்படியாக, உலகில் உள்ள அநேக மதங்கள் முயற்சிக்கின்றன. ஆனால், இது, மிகவும் பதட்டமான மதவாதிகளையே உருவாக்கும். அப்படிப்பட்டவர்களில் ஒருவனாகத்தான் நானும் பல வருடங்களாக இருந்து வந்தேன்.

ஆவியில் நடத்தப்படுவதுதான் மாம்சத்தை மேற்கொள்ள ஒரே வழி

யோர்தான் நதிக்கரையில், யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, ஆச்சரியமூட்டும் பிரகடனத்தை கூறியது: "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." இந்த பிரகடனம், பிதாவாகிய தேவனால் இயேசுவை குறித்து சொல்லப்பட்டது[12]. அந்நேரம் வரைக்கும், பிதாவின் எந்தவிதமான கிரியைகளையும் இயேசு செய்யவில்லை: ஒரு பிரசங்கமும் பண்ணவில்லை, ஒருவரையும் சுகமாக்கவில்லை, மரித்த எவரையும் உயிரோடெழுப்பவில்லை. இருப்பினும், இயேசு, பிதாவினால் மிகவும் நேசிக்கப்பட்டிருந்தார். ஆம்! இயேசு, பிதாவின்

மகிழ்ச்சியாக இருந்தார். அதுபோல, இரட்சிப்பை பெற்றிருக்கிற நாம், நமது ஆவியில் இயேசுவோடு இணைந்திருப்பதால்[13], நாமும் பிதாவின் மகிழ்ச்சியாய் இருக்கிறோம். நாம் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும் அந்த தருணத்தில், பிதா நம்மை குறித்து சொல்லுகிற முதல் பிரகடனம் இதுவாகத்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

பிதா தங்களை மிகவும் நேசிக்கிறார் என்ற தங்களுடைய உண்மையான நிலையை பலர் அறியாமலிருப்பதால், தங்களுடைய மதரீதியான கடமைகளை நிறைவேற்றி அவரை பிரியப்படுத்துவதற்காக பதட்டமான பரபரப்புடன் முயற்சிக்கிறார்கள். நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களாக இருந்தால், உங்கள் பிதாவின் கண்களில் நீங்கள் மிகவும் பிரியமானவர்களாக இருக்கின்றீர்கள். ஆகவே, உங்களால் இளைப்பாற முடியும். இயேசுவுக்குள்ளாக இதுவே உங்கள் நிலைப்பாடு. ஒருவேளை உங்களுடைய மனம் இதை ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம்; இதுவரைக்கும் உங்களுடைய நடத்தை, இந்த சத்தியத்தோடு இசைந்து போகாமல் கூட இருந்திருக்கலாம். ஆனாலும், கிறிஸ்துவுக்குள்ளாக, தேவன் உங்களை தமக்கு மிகவும் பிரியமானவனாகவும் பிரியமானவளாகவும்தான் பார்க்கிறார். ஆம், தேவனுடைய கிருபையானது, உங்களையும் என்னையும் பிதாவின் மகிழ்ச்சியாக மாற்றியிருக்கிறது. இந்த வெளிப்பாட்டை நான் பெற்றுக்கொண்டதும், நான் மெய்சிலிர்த்துப் போனேன். எனக்குள் பொங்கிய மகிழ்ச்சியை என்னால் அடக்கவே முடியவில்லை. கூட்டத்தில் தன்னுடைய தந்தையை தொலைத்துவிட்டு திரிந்த ஒரு குழந்தை, திடீரென தன் தந்தையை கண்டதுபோல நானும் துள்ளிக் குதிக்க ஆரம்பித்தேன். மறுபடியும் பிறந்தவுடனே, ஒரு நபர், பிதாவுக்கு பிரியமானவராக மாறிவிடுகிறார். இந்த நிலையை அடைவதற்கு நீங்கள் எதையுமே செய்யவில்லை. கிறிஸ்து செய்து முடித்த கிரியைகளின் மேல் நீங்கள் விசுவாசம் வைத்ததினால், இது உங்களுக்கு கிடைத்த கிருபையின் ஈவு.

சுருக்கமாக, இயேசுவின் ஆவி என்பது பிதாவினிடத்திலிருந்து வந்த *தேவனுடைய வார்த்தை* ஆகும். ஆனால், அவருடைய சரீரமோ மரியாளிடத்திலிருந்து வந்தது. ஆவி (வார்த்தை), ஆத்துமா, சரீரம்!

இயேசு, பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்ட அந்த நாளிலிருந்து ஆவியானவர் அவருக்குள் குடிகொண்டார். கிறிஸ்துவுக்குள்ளாக, வார்த்தையும் ஆவியானவரும் அந்த நாள் முதற்கொண்டு ஒன்றானார்கள்.

புதிய ஏற்பாட்டின் சில இடங்களில், *கிறிஸ்துவின் ஆவியானவர்* என்பது வார்த்தையை குறிக்கிறது[14]. உங்களுடைய மறுபிறப்பின்போது, இந்த வார்த்தைதான் (தேவனுடைய ஆவி) உங்களுடைய ஆவியோடு இணைந்து புது பிறப்பை உங்களுக்குள் கொண்டு வந்தது!

இயேசு, தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்று சொன்னதினால், பரிசேயர்கள் மற்றும் அவரை நம்பாத யூதர்களும் அவரை கல்லெறிந்து கொல்லும்படி வகைதேடினார்கள்[15]. ஒருவர் தன்னையே தேவனுடைய குமாரானாக பாராட்டினால், அவர் தன்னை தேவனுக்கு சமமாக ஆக்குகிறார் என்று தெளிவாக அவர்கள் புரிந்துகொண்டனர். அவரை சிலுவையில் அறைய வேண்டும் என்று அவர்கள் விரும்பினதற்கு ஒரு காரணம் இதுதான். இயேசு தம்மை தேவனாக கூறினார் என்பதே பிலாத்துவிடம் அவர்கள் வைத்த குற்றச்சாட்டு[16]. இயேசு தம்மைக் குறித்து தேவனுடைய குமாரனாக உரிமைபாராட்டியது உண்மையாக இருந்தாலும், அவர் தேவனோடு ஒன்றிணைந்து இருப்பதை இயற்கையான மனிதனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய மனதில், அது தேவதூஷணமாக கருதப்பட்டது. இயேசு தேவனுடைய குமாரனாக இருந்ததுபோல, கிறிஸ்துவுக்குள் நாமும் **இப்பொழுது** தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாக இருக்கிறோம்!

பாவநிவாரண பலி

இயேசு, முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் பாவநிவாரண பலியானார். வேதம் கூறுவது என்னவென்றால், பாவம் அறியாத

அவரை, தேவன் நமக்காகப் பாவமாக்கினார்![17] இந்த சத்தியத்தை நீங்கள் கிரகித்துக்கொள்ள வேண்டும். பாவம் என்பது ஆவிக்குரிய மரணத்தை குறிக்கிறது. இயேசு, சிலுவையிலே ஆவிக்குரிய மரணத்தை எடுத்துக்கொண்டார். அதாவது, இயேசு, சிலுவையிலே நமக்காக பாவமானார்.

ஆதாமிலிருந்து வந்த முழு மனுக்குலமும், ஆவிக்குரிய மரணத்தை அவனிடமிருந்து சுதந்தரித்துக்கொண்டது. ஆதாம், மனுக்குலத்தின் மூல முன்மாதிரியாக (prototype) இருந்தான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். முதல் நகல் சிதைந்தபொழுது, அதிலிருந்து தொடர்ந்து வந்த எல்லா நகல்களும் சிதைந்த நிலையில் இருந்தன. இந்த ஆவிக்குரிய மரணத்தினிமித்தம் பிறந்தவைதான், விபச்சாரம், திருட்டு, கொலை போன்றவை. இப்படிப்பட்ட அந்தகாரத்தின் கிரியைகள், கெட்ட எண்ணங்கள் மற்றும் கெட்ட நடத்தை போன்ற இன்னும் பல வகையான நிறங்களில் வெளிப்படும். இவ்வுலகத்தில் நாம் காணும் எல்லா தீமைகளின் ஆழங்களும் இந்த அந்தகார அலைவரிசைக்கு உரியவைகளே! ஆதாமுக்குள் எல்லாருமே பாவிகள்தான் என்பதை நீங்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் பாவம் செய்ததினால், நீங்கள் பாவியாகவில்லை. மாறாக, ஆதாமுக்குள் நீங்கள் பாவியாக இருந்ததால் பாவம் செய்தீர்கள். சுவிசேஷத்தின் செய்தியை மட்டும்தான் அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தார்களே தவிர, இரட்சிக்கப்படாத மக்கள் இரட்சிக்கப்படுவதற்கு, தங்கள் பாவங்களை (பாவ செயல்களை அல்லது நடத்தையை) அறிக்கையிடும்படியாக சொல்லவில்லை. ஆம்! ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, அவரை தங்கள் ஆண்டவராக அறிக்கையிடும்படி மட்டும்தான் கூறினார்கள்[18].

சிலுவையில்தான் இயேசு ஆவிக்குரிய மரணத்தை அனுபவித்து, தன்னுடைய ஆவியில் முதலாவது மரித்தார்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது, அவர் *ஒருவர்தான்* பாவமில்லாத

மனிதன்! சிலுவையில் மட்டுமே இயேசு விழுந்துபோன மனிதனின் பூரணமான பிரதிநிதியானார். தம்மிடமிருந்து பிதா தம்முடைய பிரசன்னத்தை விலக்கியபோதுதான், இயேசு, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறினார்[19]. ஆம்! இந்த கட்டத்தில்தான், விழுந்துபோன மனிதனின் தன்மையை எடுத்துக்கொண்டார். சிலுவையில்தான் இயேசு ஆவிக்குரிய மரணத்தை அனுபவித்து, தன்னுடைய ஆவியில் முதலாவது மரித்தார். இந்த கட்டத்தில்தான், விழுந்துபோன முழு மனுக்குலத்தின் பூரணமான பிரதிநிதியானார். "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்"[20] என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். இயேசு, ஆதாமின் இனத்தில் வந்த கடைசி மனிதனானார். கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட ஒரு நாமம் 'கடைசி ஆதாம்'[21]. அதாவது, இயேசுவுக்கு பின்னர் இன்னொரு ஆதாம் இருக்கப்போவதில்லை. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குள், ஆதாமின் இனம் சுவடு தெரியாமல் நின்று போனது மட்டுமல்லாமல் ஒரு புதிய இனமே பிறந்துவிட்டது! இதைதான் புது சிருஷ்டி என்று அழைக்கிறோம்!

"யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்"[22] என்று இயேசு தீர்க்கதரிசனமாக உரைத்தார். யோனா 2ஆம் அதிகாரத்தில், மீனின் வயிற்றிலிருந்து, யோனா ஒரு தீர்க்கதரிசனமான ஜெபத்தை ஏறெடுத்தார். இது, பாதாளத்திலிருந்து இயேசு ஏறெடுத்த ஜெபத்திற்கு ஒப்புமையாக உள்ளது. பூமியின் இருதயம் என்பது பாதாளத்தை குறிக்கிறது. அது, இரட்சிக்கப்படாமல் மரித்துப்போனவர்கள் செல்லுகிற இடம். மனுக்குலத்தின்

மனுக்குலத்தின் பாவத்திற்காக, இயேசு, ஆக்கினைக்கும் நியாயத்தீர்ப்புக்கும் ஆளானார்.

பாவத்திற்காக, இயேசு, ஆக்கினைக்கும் நியாயத்தீர்ப்புக்கும் ஆளானார். முதல் மனிதனின் பாவத்திற்கான முழு கிரயத்தையும் இயேசு சிலுவையிலே செலுத்திக்கொண்டிருந்தார். இயேசுவுக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று சிலுவையினடியில் நின்று அவருடைய மரணத்தை பார்த்துக்கொண்டிருந்த சீடர்களுக்கு புரியவில்லை. அச்சமயத்தில், இந்த வெளிப்பாடு அவர்களிடமிருந்து மறைக்கப்பட்டிருந்தது. பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட மேசியாவின் பாடுகள், தாவீது உட்பட அநேக தீர்க்கதரிசிகளால் முன்னராகவே பார்க்கப்பட்டது. இதை குறித்து மிக தெளிவாக சங்கீதம் 22ல் தாவீது எழுதியிருக்கிறார். பிசாசின் வல்லமை மற்றும் அவனுடைய சேனையின் கீழ் மேசியா வருவதை ஆவி மண்டலத்தில் தாவீது கண்டார். மானிட வரலாற்றிலேயே அந்த மூன்று நாட்கள்தான் இருண்ட நாட்களாக இருந்தன. காயீன் மற்றும் ஆபேல் காலத்திலிருந்து பல தலைமுறைகளாக தொடர்ந்து தேடிக்கொண்டிருந்த அந்த வித்தை பிசாசு கண்டுபிடித்துவிட்டான். அந்த மூன்று நாட்களும், வெளிச்சத்தின் மீது இருள் வெற்றிபெற்றதை, ஒவ்வொரு பிசாசும் பாதாளத்தில் கொண்டாடியிருக்கும். உயிர்த்தெழுதலை குறித்து தேவன் வைத்திருந்த திட்டத்தை அவைகள் அறியாதிருந்தன. அறிந்திருந்தால், மகிமையின் தேவனை கொன்றிருக்கமாட்டார்கள்!

உயிர்த்தெழுந்த வல்லமையும் தேவநீதியும்

அந்த மூன்று இருண்ட நாட்களுக்குப் பின்னர், பாவத்திற்கான தண்டனை முற்றிலும் செலுத்தப்பட்டாயிற்று என்று பிதாவாகிய தேவன் அறிவித்து, பாதாளத்திலிருந்து இயேசுவை உயிருடன் எழுப்புவதற்காக பரிசுத்த ஆவியானவரை அவர் அனுப்பினார். பரிசுத்த ஆவியானவரால் இயேசு கிறிஸ்து புதுப்பிக்கப்பட்டு உயிர்த்தெழுப்பப்பட்டவுடன் எல்லா பிசாசுகளும் நடுங்கியிருக்கும். அவ்வாறு உயிர்ப்பிக்கப்பட்ட இயேசுவின் ஆவியானது, கல்லறையிலிருந்த அவருடைய சரீரத்திற்குள் புகுந்ததினால், மறுபடியும் பிறந்த அந்த ஆவியினால் அவருடைய சரீரம்

உயிர்ப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு பிசாசுக்கும் அதின் பொருள் புரிந்துவிட்டது. ஆவிக்குரிய மரணத்தின் முடிவு அது! மனுக்குலத்தின் மீதிருந்த பிசாசின் ஒடுக்கத்திற்கு அது முடிவு! இவ்வுலகத்தின் ஆவியாகிய அந்தகார லோகாதிபதியின் ஒடுக்கத்தின் கீழாகத்தான் மனிதன் இருந்தான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆவியிலே மரித்துப்போயிருந்த மனிதனின் மனதின் (மாம்சம்) மூலமாகத்தான் பிசாசு உலகை ஆளுகை செய்து வந்தான். ஆவியிலே மரித்துப்போயிருந்த மனிதனுக்கு அந்தகார லோகத்தின் மீது எந்தவிதமான அதிகாரமும் இல்லாமலிருந்தது. அப்படிப்பட்ட மனிதன் பாவத்திற்கு அடிமையாயிருந்தான். ஆனால், இயேசு உயிர்த்தெழுந்தபோதோ, எல்லாம் தலைகீழாக மாறிப்போனது. ஆம்! கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்றால் மனுக்குலத்தின் மீது பிசாசின் ஆதிக்கம் முடிந்துவிட்டது என்று அர்த்தம். பலவந்தமாக மனுக்குலத்தின் மீது செலுத்தப்பட்ட பிசாசின் ஆளுகைக்கு இதுவே முடிவு. இன்னமும் அவன் வஞ்சனை மூலமாக ஆண்டுகொண்டுத்தான் இருக்கிறான். இருப்பினும், மனுக்குலத்தின் மீது அவனுக்கு இருந்த முழுமையான வல்லமை முற்றிலும் உடைந்து நொறுங்கிவிட்டது. மரணத்தின் (ஆவிக்குரிய) மேல் பிசாசுக்கு இருந்த வல்லமையை, இயேசு மரணத்தின் (ஆவிக்குரிய) மூலமாக முடக்கினார்[23].

உயிர்த்தெழுந்தவர்களில் முதற்பேறானவர் இயேசு[24,25]. ஒரேபேறானவருக்கும் முதற்பேறானவருக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்பூமிக்குரிய வாழ்வில், பிதாவின் ஒரேபேறான குமாரன்தான் இயேசு. ஆனால் சிலுவையிலோவென்றால், அவர், எந்தவொரு பாவியான மனுஷனைப்போல ஆனார். மரித்தோர் உயிரோடெழுவதில்தான், இயேசு, பிதாவின் முதற்பேறானவராக ஆனார்[26]. அவருடைய பிறப்பில், இயேசு, பிதாவின் ஒரே குமாரனாக இருந்தார். உயிர்த்தெழுதலிலோ, அவர், பிதாவின் முதல் குமாரனாக ஆனார். அப்படியென்றால், இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும், அடுத்தடுத்து வரும் அனைவருமே, பிதாவின் குமாரர்களும் குமாரத்திகளும்

ஆவார்கள். நீங்கள் மறுபடியும் பிறந்திருப்பீர்களென்றால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றீர்கள்! உங்களுடைய நிலை தேவரகத்திற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது[27].

உயிர்த்தெழுதலின்போது, புது வகையான மனிதனின் முதற்பலனாக இயேசு விளங்கினார். சிலுவையில் இயேசு செய்து முடித்த கிரியைகளினிமித்தமாக, ஆதாமின் வம்சம் முற்றுப்பெறுவதற்கு ஓர் வழி உண்டாக்கப்பட்டது. கிறிஸ்துவுக்குள்ளாக, ஒரு புதுவிதமான இனம் எழுப்பப்பட்டிருக்கிறது. இதனால்தான், "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்" என்று பவுல் கூறுகிறார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் இழந்த அதிகாரம் கூட மீட்கப்பட்டது. உயிர்த்தெழுந்த பிறகு, இயேசு, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது"[28] என்று பறைசாற்றினார். அவருடைய நாமம் பிசாசின் உலகத்திற்குள் நடுக்கத்தை உண்டாக்குகிறது. ஆம், அவர் அவ்விடத்தில் இருந்தது மட்டுமல்லாமல், அவைகளின் களத்திற்கே சென்று அவைகளை தோற்கடித்து, உயிருடன் எழுந்தும் வந்துவிட்டார். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே![29]

உயிர்த்தெழுதலின்போது, புது வகையான மனிதனின் முதற்பலனாக இயேசு விளங்கினார்.

பாதாளத்திலுள்ள பிசாசுகளின் வல்லமைகள் அனைத்தையும் இயேசு பறித்துக்கொண்டு அவைகளை ஓடவிட்டார். துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்[30]. இந்த காட்சியையெல்லாம் பார்த்துக்கொண்டு இருந்த பரிசுத்தவான்கள் மகிழ்ச்சியின் உச்சகட்டத்தில் எப்படியெல்லாம் கூச்சலிட்டு ஆனந்த ஒலி எழுப்பியிருப்பார்கள்

என்று என் இருதயத்தில் ஓரளவிற்காவது காண முடிகிறது. ஒரு மனிதன் (ஆதாம்) நம் அனைவரையும் பாவத்திற்குள்ளாக அமிழ்த்தினான். மற்றுமொரு மனிதரோ (இயேசு கிறிஸ்து) பிசாசை மேற்கொண்டு, அவனுடைய வல்லமைகளை முற்றிலும் நிர்மூலமாக்கி, நம்மை பாவத்தின் பிடியிலிருந்து விடுவித்துவிட்டார். ஒரு மனிதன், பிசாசின் சகல அதிகாரங்களின் மீதும் வெற்றிசிறந்ததை கண்ட தேவதூதர்கள் அனைவரும் பேரானந்தத்தால் நிறைந்து, ஆரவாரமாக கரகோஷம் எழுப்பியிருப்பார்கள்! இயேசு, இவை எல்லாவற்றையும் ஒரே மனிதனாக செய்து முடித்தார். அந்நேரத்தில், "யார் இந்த மகிமையின் ராஜா? அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே"[31] என்று பரலோகத்தில் ஆரவார சத்தம் தொனித்தது.

மற்றுமொரு மனிதரோ (இயேசு கிறிஸ்து) பிசாசை மேற்கொண்டு, அவனுடைய வல்லமைகளை முற்றிலும் நிர்மூலமாக்கி, நம்மை பாவத்தின் பிடியிலிருந்து விடுவித்துவிட்டார்.

சிலுவையிலே, இயேசுவிடத்திலிருந்து, பரிசுத்த ஆவியானவரை பிதா எடுத்துக்கொண்டபோது, இயேசு பாவமானார். பின்னர் உயிர்த்தெழுந்தபோதோ, இயேசு, மறுபடியும் நீதியானார். மிகவும் குறுகின நாட்களுக்கு நீதி இழக்கப்பட்டபோதிலும் (3 நாட்களும் 3 இரவுகளும்), இயேசுவின் உயிர்த்தெழுதலில், அந்த நீதியானது, அவருடைய ஆவியில் மறுபடியும் மீட்டு அளிக்கப்பட்டது. இந்த நீதி சாதாரணமானது அல்ல; இது பிசாசை தோற்கடித்த நீதி. இந்த நீதியால்தான், தேவனுடைய பிள்ளைகள் நீதிமானாக ஆக்கப்படுகிறார்கள். இந்த வெளிப்பாட்டை நீங்கள் கண்டுபிடிக்கும் அந்த நாளில்தானே, உங்களை ஒடுக்கின ஒவ்வொரு பிசாசும் தங்களை காப்பாற்றிக்கொள்வதற்காக ஓட ஆரம்பிக்கும். நீங்கள் இந்த சத்தியத்தை அறிந்துகொள்வது பிசாசுக்கு விருப்பமில்லாத காரியம். இப்பொழுது நீங்கள் இதனை அறிந்துகொண்டதினால், உங்கள்

மீது பிசாசுக்கிருந்த வல்லமைகள் அனைத்தும் தகர்ந்துபோனது. இத்தனை நாட்களும் பிசாசு உங்களிடம் பொய் சொன்னான். இந்த ஆச்சரியமூட்டும் வெளிப்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, தாவீதின் மனிதர் தங்களுடைய சத்துருக்களை எவ்வாறு துரத்தினார்களோ, அப்படியே நீங்களும் பிசாசுகளை துரத்துவீர்கள்[32]. தாவீது ராஜா தன்னை சுற்றிலும் பராக்கிரமசாலிகளை கொண்ட ஒரு படையை வைத்திருந்தான். வேதாகமத்தில் உள்ள இந்த வீரம் நிறைந்த செயல்களெல்லாம், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் இவ்வாறே பிசாசுடைய சகல வல்லமைகளுக்கும் எதிராக சென்று வெற்றி எடுக்க முடியும் என்பதை காட்டும் படங்களே ஆகும். பழைய உடன்படிக்கையிலேயே, அவர்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொண்டார்கள் என்றால், புதிய உடன்படிக்கையின் கீழ் உள்ள நானும் நீங்களும், நம்மை ஒடுக்குகிறவர்கள் மேல் எத்தனை அதிகமாய் அதிகாரம் செலுத்த முடியும்! சற்றே இதை யோசித்துப் பாருங்கள்!

பிதா உங்களை பார்க்கும்போது, ஒவ்வொரு பிசாசையும், வியாதியையும், வறுமையையும் மேற்கொண்ட இயேசுவின் நீதியையே உங்கள் மீது பார்க்கிறார்[33]. நீங்கள் இயேசுவின் நீதியைத்தான் ஆடையாக தரித்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த நீதியை குறித்த வெளிப்பாட்டை நீங்கள் பெற்றுக்கொண்டதும், அதுவே உங்கள் பாவத்திற்கும் பலவீனமான பேச்சுகளுக்கும் முடிவாக இருக்கும். இயேசுவே உங்கள் பெலனாக மாறிவிட்டார். அதுவே உங்கள் வியாதிகளுக்கு முடிவாகிவிட்டது. ஏன்? ஏனென்றால், அவரே உங்களுக்காக சிலுவையிலே வியாதியானார். அதுவே உங்கள் வறுமைக்கு முடிவாகிவிட்டது. ஏன்? ஏனென்றால், அவர் உங்கள் வறுமையையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொண்டார்[34]. அதுவே உங்களுடைய எல்லாவிதமான அழிவின் அடிமைத்தனங்களுக்கும் முடிவாகும். ஏன்? ஏனென்றால், அவருடைய நீதி எல்லாவிதமான பாவ பழக்கவழக்கங்களின் முதுகெலும்பையும் உடைத்துவிட்டது.

நீதி என்ற வார்த்தைக்கு எபிரெய பாஷையின் அர்த்தம் என்னவென்றால்: *"நீங்கள் இருக்கவேண்டிய பிரகாரமாக*

இருப்பது.” பிதாவுக்கு முன்பாக, உங்களுடைய *ஆவியில்*, நீங்கள் இருக்க வேண்டிய பிரகாரமாக இருக்கின்றீர்கள். பாவம் நினைகூரப்படவேயில்லை! இப்பூமியில் வாழ்ந்தபோது பிதாவின் முன்பு இயேசு எப்படி நின்றாரோ, அவ்வாறுதான் நீங்களும் பிதாவுக்கு முன்பாக இருக்கின்றீர்கள். இந்த வெளிப்பாட்டை நீங்கள் முழுவதும் புரிந்துகொண்டால், உங்களையே பாவியாக பார்ப்பதை நீங்கள் நிறுத்திவிடுவீர்கள். இதை உங்கள் இருதயத்தில் தெளிவாக நீங்கள் பார்த்தால், அவருடைய உயிர்த்தெழுதல் உங்களுடைய உயிர்த்தெழுதலாக மாறிவிடும். இயேசு கிறிஸ்துவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உங்கள் இருதயத்தில் நம்புவது என்றால் இதுதான் அர்த்தம்[35].

தேவ குமாரன் யார் என்றும் இயேசு என்ற நாமத்தின் வல்லமையையும் இப்பொழுது நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவே உங்களுடைய தெய்வீக சுகத்தின் பயணத்திற்கான ஆரம்பம்!

வேதவசன ஆதாரங்கள்

1. திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10).

2. தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் (ஆதியாகமம் 2:7).

3. ஏனோஸ் சேத்தின குமாரன்; சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டானவன் (லூக்கா 3:38).

4. அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார் (ஆதியாகமம் 6:3).

5. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம் (எபேசியர் 2:1-3).

6. ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள் (லூக்கா 1:26-27).

7. அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான் (லூக்கா 1:38).

8. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவான் 1:1-3).

9. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14).

10. பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது (லூக்கா 2:40).

11. பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் (கலாத்தியர் 5:16).

12. அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது (மத்தேயு 3:17).

13. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (1 கொரிந்தியர் 6:17).

14. தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோமர் 8:9).

15. இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன்

என்றார். அவர் ஓய்வுநாள் கட்டளையை மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப் பிதா என்றுஞ்சொல்லித் தம்மைத் தேவனுக்குச் சமமாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்படி அதிகமாய் வகைதேடினார்கள் (யோவான் 5:17-18)

16. யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்டும் என்றார்கள் (யோவான் 19:7).

17. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5:21).

18. அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி (அப்போஸ்தலர் 16:31).

19. ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம் (மத்தேயு 27:46).

20. கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும் (2 கொரிந்தியர் 5:14).

21. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார் (1 கொரிந்தியர் 15:45).

22. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார் (மத்தேயு 12:40).

23. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் (எபிரெயர் 2:14).

24. அந்தப்படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராயிருக்கிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார் (எபிரெயர் 5:5).

25. நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று இரண்டாம் சங்கீதத்தில் எழுதியிருக்கிறபடியே, இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம் (அப்போஸ்தலர் 13:32-33).

26. அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோசெயர் 1:18).

27. இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான் (1 யோவான் 5:1).

28. அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத்தேயு 28:18).

29. அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே (1 கொரிந்தியர் 2:8).

30. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (கொலோசெயர் 2:14-15).

31. யார் இந்த மகிமையின் ராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே (சங்கீதம் 24:8).

32. தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலிகள் (2 சாமுவேல் 23:8-39).

33. பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் (1 யோவான் 4:4).

34. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே (2 கொரிந்தியர் 8:9).

35. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் (ரோமர் 10:9).

4

புது பிறப்பு

தன்னுடைய பார்வையில், புது பிறப்பு என்ற சத்தியம்தான், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனைக் குறித்து அதிகமாக மறைக்கப்பட்ட சத்தியமாக இருக்கிறது. மறுபடியும் பிறந்தபொழுது ஒரு நபருக்கு உண்மையில் என்னதான் நடந்தது? "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதின் கருத்து என்ன?[1]

எனது 17-ஆவது வயதில், நான் என்னுடைய வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, *மறுபடியும் பிறந்த* கிறிஸ்தவனானேன். ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு மேலாக, என்னுடைய இருதயத்தில் என்ன நடந்திருக்கிறது என்பதை நான் புரிந்துகோள்ளவேயில்லை. இந்த அறியாமை, என் மனதை, பாவம், வியாதி, நோய், தரித்திர மனநிலை போன்ற அடிமைத்தனங்களுக்குள்ளாகவே வைத்திருந்தது. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், நான் என்னுடைய மனதை தேவனுடைய வார்த்தையை கொண்டு புதுப்பிக்கவில்லை. இதைவிட பரிதாபமான நிலை என்னவென்றால், இப்படிப்பட்ட வெளிப்பாடு நிறைந்த அறிவு, பிரசங்க பீடங்களிலிருந்து கற்றுக்கொடுக்கப்படவுமில்லை.

"என்னுடைய சரீரமும் மனமும் சுகமடைய வேண்டும் என்பதே என்னுடைய இலக்காக இருக்க, நான் எதற்காக புது பிறப்பை

குறித்து அறிந்துகொள்ள வேண்டும்?" என்று நீங்கள் ஒருவேளை ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கலாம். கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய புதிய அடையாளத்தில்தான் உங்களது சுகமானது பின்னிப் பிணைந்துள்ளது என்பதை வருகின்ற பக்கங்கள் மூலமாக நீங்கள் அறிந்துகொள்வீர்கள். இதை நம்புங்கள்!

கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்[2] என்று பவுல் கூறுகிறார். விசுவாசிப்பது என்றால், ஆழ்மன எண்ணங்களில், நீங்கள் எதிர்பார்க்கும் காரியத்தை, பார்ப்பதும் உணர்வதும் ஆகும். இயேசுவின் உயிர்த்தெழுதலை நான் விசுவாசிக்கிறேன் என்றால், என்னுடைய இருதயத்தில் அவருடைய உயிர்த்தெழுதலை காண்கிறேன் என்று அர்த்தம். நீங்கள் இவ்வாறு காண்கையில், அவருடைய உயிர்த்தெழுதலானது, உங்களுடைய இருதயத்தில் உங்களுடைய உயிர்த்தெழுதலாக மாறிவிடும்![3] கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய உண்மையான அடையாளத்தின் உறைவிடமாக உங்கள் இருதயம் இருப்பதால், இயேசு உயிரோடு எழுப்பப்பட்டதை உங்கள் இருதயத்தில் நீங்கள் நம்பும்போது, அவருடைய உயிர்த்தெழுதலானது உங்களுடைய அடையாளமாக மாறிவிடுகிறது. கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில், "கிறிஸ்துவே உங்களுடைய ஜீவன்"[4] என்று பவுல் குறிப்பிடுகையில், இதைத்தான் சொல்ல முற்பட்டார்.

விசுவாசிப்பது என்றால், ஆழ்மன எண்ணங்களில், நீங்கள் எதிர்பார்க்கும் காரியத்தை, பார்ப்பதும் உணர்வதும் ஆகும்.

கோதுமை மணி

ஒரு முறை, கிரேக்க கூட்டத்தாரில் சிலர் இயேசுவை காண வேண்டுமென்று விரும்பினர். ஆகவே, அவர்கள் இயேசுவுடைய சீடர்களாகிய அந்திரேயா மற்றும் பிலிப்புவிடம் சென்றனர்.

சீடர்கள், இயேசுவை சந்திக்கும்படி அவர்களை கூட்டிச்சென்றனர். இப்பொழுது, அவர்களுடைய உரையாடலை மிகவும் கவனமாக வாசிக்கவும்.

"பண்டிகையில் ஆராதனை செய்ய வந்தவர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள். அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்.

பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷகுமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:20-25).

(ஒருவேளை நீங்கள் இந்த உரையாடலை மேலோட்டமாக கவனித்தால், எஜமானாகிய இயேசுவின் ஞானத்தை நீங்கள் தவறவிட்டுவிடுவீர்கள்).

அவர்கள் இயேசுவைத்தான் காண வந்தார்கள். அதற்கு இயேசு, "இதோ, இங்கே இருக்கிறேன்" என்று பதில் அளித்திருக்கலாம். ஆனால், இயேசுவோ அவர்களுக்கு அவ்வாறு பதிலளிக்கவில்லை. அவருடைய பதில் என்னை வெகுநாட்களாக கலங்கடித்தது. கடைசியாக, ஒரு நாள், இயேசு அவ்விடத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்று நான் கண்டபோதோ, நான் அதிசயித்து பூரித்துப்போனேன்.

தத்துவ ஞானத்தையும் அறிவையும் சார்ந்த மக்கள்தான் கிரேக்கர்கள். அறிவில் நாட்டம் கொண்டு, அதையே நாடுபவர்களாகத்தான் பரிசுத்த வேதாகமமும் கிரேக்கர்களை

படம்பிடித்து காட்டுகிறது. அவர்கள், மனம் சார்ந்த செயல்பாடுகளால் அதிகமாக இயக்கப்படுபவர்கள். அதாவது, இப்போதைய 21-ஆம் நூற்றாண்டு மக்களை போல!

இங்கு, இயேசு, கோதுமை மணியை குறித்து பேசுகிறார். ஒரே ஒரு கோதுமை மணியை மண்ணில் புதைத்துவைத்தால், ஒரு பயிர் விளைந்து வரும். அதிலிருந்து அநேக கோதுமை மணிகளை அறுவடை செய்யலாம். எனினும், கோதுமையை மண்ணில் புதைக்காவிட்டால், அது ஒரு தனி தானியமாகத்தான் இருக்கும். கோதுமை மணி என்பது இயேசுவின் ஜீவனை குறிக்கிறது. இயேசு, சிலுவையிலே மரிப்பதற்கு ஒப்புக்கொடாமல் இருந்திருந்தால், அவர் தனித்து இருந்திருப்பார். ஆனால், அவர் மரித்து உயிரோடெழுந்தால், அவருடைய உயிர்த்தெழுதலானது, கோடிக்கணக்கானோருடைய உயிர்த்தெழுதலுக்கு வழி வகுக்கும். அதன் பிறகு, இந்த கோடிக்கணக்கான மக்கள், இயேசுவை தங்கள் இருதயங்களிலேயே காண்பார்கள். தம்மை மெய்யாகவே காண்பதற்கான ஒரே வழி, தங்களுடைய இருதயங்களில் அவரை காண்பதுதானேயன்றி, அறிவு சார்ந்த மனதில் அல்ல என்பதையே இயேசு இங்கு சுட்டிக் காண்பித்தார்.

உலக முறைமைகளிலுள்ள அறிவிலிருந்து நீங்கள் புரிந்துகொண்டதெல்லாம், வாழ்க்கையை நேசிப்பதென்றால், அதை உறுதியாக பற்றிப்பிடித்துக்கொள்வது ஆகும். ஆனால் இயேசுவோ, அதை விட்டுவிட்டு, உங்களுடைய இருதயத்தில் இருக்கும் அவருடைய ஜீவனை பற்றிக்கொள்ளும்படியாக கூறுகிறார்.

இன்றைக்கு நாம் இயேசுவை காண முடிகிறது! மனிதனை சந்திப்பதாக சொன்ன இடத்தில், தேவன் எப்போதும் மனிதனை சந்தித்துக்கொண்டே இருக்கிறார் - இருதயமாகிய தோட்டத்தில்! வெளிப்படுத்தின விசேஷத்தில், இயேசு வாசற்படியில் நின்று கதவை தட்டுவதாக பார்க்கிறோம்[5]. இரட்சிக்கப்படாத நபருக்கு, இயேசு, வெளியே நின்று தட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால், இரட்சிக்கப்பட்டவருக்கோ, இயேசு, அவர்களுடைய இருதயத்தினுள்ளிருந்து கதவை தட்டிக்கொண்டிருக்கிறார். உங்கள்

இருதயத்தில் அவரோடு ஐக்கியப்படுவதினால் அவருக்கு மறுமொழி கொடுப்பீர்களா? அல்லது அறிவை சார்ந்த மனதை கொண்டு தேவனை தேடுவதினால் நீங்கள் இயக்கப்பட போகின்றீர்களா?

புது பிறப்பு

கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய புதிய அடையாளத்தை மிகவும் துல்லியமாக நீங்கள் புரிந்துகொள்ளும்படியாக, புது பிறப்பு எவ்வாறு நடைபெறுகிறது என்பதை நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். இதை நீங்கள் மிகவும் நிதானமாகவும் கவனமாகவும் வாசியுங்கள்!

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்[6]. நீங்கள் துவக்கத்தில் கேட்ட சுவிசேஷத்தில் இருந்துதான், நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கான விசுவாசம் வந்தது. நீங்கள் இயேசுவை குறித்து கேள்விப்பட்டீர்கள். அவரை குறித்து மிகவும் அதிகமான விவரங்கள் தெரியாவிட்டாலும், உங்களுடைய வாழ்க்கைக்கு அவர் தேவை என்பதை நீங்கள் கண்டு, *அவரை* ஏற்றுக்கொண்டீர்கள். தேவனுடைய பிரசன்னத்திற்கு நேராக கர்த்தருடைய ஆவியானவர்தாமே உங்களை கவர்ந்திழுத்தார். அந்த சமயத்தில்தான், புது பிறப்பு என்ற அற்புதம் உங்களுடைய இருதயத்தில் வெடித்தது! திடீரென சந்தோஷமாகவும், இருதயத்தில் இலகுவாகவும் உணர்ந்தது ஏன் என்று உங்களுக்கே புரியவில்லை. இந்த அனுபவத்தின் அளவு, ஒவ்வொரு நபருக்கும் மாறுபட்டதாக இருக்கும். எனினும், நீங்கள் விவரிக்க முடியாத ஒன்றை அனுபவித்தீர்கள். நீங்கள் தேவனால் பரத்திலிருந்து மறுபடியும் பிறந்தவர்கள்![7]

நீங்கள் நின்று அந்த சுவிசேஷ செய்தி பிரசங்கிக்கப்பட்டதை கேட்டீர்கள். அந்த சுவிசேஷ செய்திக்குள்ளாக இருந்தது என்னவென்றால் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை (கிறிஸ்துவின் ஆவியானவர்). முந்தின அத்தியாயத்தில், கிறிஸ்துவின் ஆவியானவர் என்பது வார்த்தையை குறிக்கிறது என்று நான் காண்பித்தது ஞாபகமிருக்கிறதா? தற்போதைக்கு, கிறிஸ்துவின்

ஆவியானவர் என்ற பதத்தையும் பரிசுத்த ஆவியானவர் என்ற பதத்தையும் வெவ்வேறாக பார்ப்போம். சத்தியத்தின் மாபெரும் திட்டத்தில்: பிதாவாகிய தேவன், வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் - இவர்கள் யாவரும் ஒருவர்தான். தற்போதைக்கு, புது பிறப்பின் போது நமக்குள்ளாக நடைபெறுகின்ற உள்வேலைகளை புரிந்துகொள்வதற்காக, இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக பார்ப்போம்.

நீங்கள் சுவிசேஷத்தின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்தபோது, தேவனுடைய வார்த்தை (கிறிஸ்துவின் ஆவியானவர்) உங்களுடைய ஆவியோடு இணைந்து, உங்களுடைய ஆவி மனிதனுக்குள் ஜீவனையும் சாவாமையையும் கொண்டு வந்தது[8]. "நீங்கள் அவரோடு கூட எழுப்பப்பட்டும் இருக்கிறீர்கள்" என்று பவுல் கூறுகிறார். 'அவரோடு கூட' என்பதற்கு கிரேக்க பாஷையில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை ஒரு மருத்துவ சம்பந்தமான வார்த்தை. அந்த வார்த்தை என்னவென்றால், *"சுசூபோயியோ" (suzoopoieo).* இந்த வார்த்தைக்கு "மற்றொன்றோடு இணைந்து உயிர்ப்பிக்கப்படுதல்" என்று பொருள்படும்[9].

என்னுடைய மருத்துவ துறையில் நான் பணியாற்றியபோது, அநேக நோயாளிகளுக்கு 'இருதய நுரையீரல் புத்துயிர்ச்சி' (cardiopulmonary resuscitation) செய்திருக்கிறேன். அதில், வெளிப்புறமாக நெஞ்சை அழுத்தி (external chest compressions), இருதயத்தை உயிர்ப்பிப்பதினால், மறுபடியும் செயல்பட வைத்து, மூளைக்கு இரத்தம் சீராக ஓடும்படி செய்வதுண்டு. அதுபோல, தேவன், தம்முடைய வார்த்தையை (கிறிஸ்துவின் ஆவியானவர்) நமது ஆவியோடு இணைத்து, நமக்குள் ஒரு உள்வேலையை செய்து உயிர்ப்பித்திருக்கிறார். நீங்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட அதே நிமிடத்தில்தான் இது நடந்தது. இது ஒரு பிரிக்கமுடியாத இணைப்பு. இது உங்களுக்குள், உங்களுடைய ஆவியில் நிகழ்ந்தது! கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்[10] என்று வேதாகமம் கூறுகிறது. 'ஒரே' என்ற பதத்திற்கு கிரேக்க பாஷையில் பயன்படுத்தப்பட்டுள்ள

பதம் 'ஹெய்ஸ்' (heis) ஆகும். இது, 'இரண்டு காரியங்கள் இணைந்து ஒன்று போல காட்சியளிப்பது' அல்ல. மாறாக 'எண் மதிப்பின்படி ஒன்று' ஆகும் (This word means 'numerical one' and not 'two appearing as one'). நம்முடைய மரித்துப்போன ஆவியோடு கூட கிறிஸ்துவின் ஆவியானவர் (தேவனுடைய வார்த்தை) இணைந்து **ஒன்றானார்**. உங்கள் ஆவியில், நீங்கள் தேவனுக்கு ஜீவனுள்ளவர்களாக காணப்படுகின்றீர்கள். உங்கள் ஆவியில் நீங்கள் சாவாமையுடையவர்களாக இருக்கின்றீர்கள். நீங்களோ, அந்தகாரத்தினின்று தம்முடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்குள் இடம் பெயர்க்கப்பட்டு இருக்கின்றீர்கள்[11]. உங்களுடைய ஆவி முழுவதும் வெளிச்சமாயிருக்கிறது! "அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எபிரெயர் 8:10) என்று தேவன் கூறியதற்கு இதுதான் அர்த்தம். இங்கே, *'மனம்'* என்பது, உங்கள் இருதயத்தின் ஆழமான யோசனைகளை குறிக்கிறதேயன்றி, உங்களது அறிவு சார்ந்த மனதை அல்ல. உங்களுடைய இருதயத்தின் ஆவி பகுதி முற்றிலும் புதுப்பிக்கப்பட்டாயிற்று. தேவனுடைய வார்த்தை உங்களுடைய ஆவியில் எழுதப்பட்டுள்ளது. ஆகவே, உங்களது ஆவி உள்ளுணர்வின் மூலமாக தொடர்பு கொள்கிறது.

தேவனுடைய வார்த்தை

உங்கள் இருதயத்தின் ஆவியில்தான் தேவனுடைய வார்த்தை நிரந்தரமாக எழுதப்பட்டுள்ளது. யாக்கோபு இதைத்தான் *"நாட்டப்பட்ட வார்த்தை"*[12] என்று அழைக்கிறார். ஆம்! உங்களுடைய ஆவியில் தேவனுடைய வார்த்தை நாட்டப்பட்டிருக்கிறது!

"ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் **நாட்டப்பட்டதாயும்** உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க

வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான் சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக்கோபு 1:21-25).

ஆகவேதான், உள்ளத்தில் நாட்டப்பட்ட வார்த்தையை ஏற்றுக்கொள்ளும்படியாக, எவ்விடத்திலுமிருக்கும் விசுவாசிகளுக்கு யாக்கோபு அழைப்பு விடுக்கிறார். அதாவது, சுயாதீன பிரமாணத்தில் உள்ள தங்கள் ஆவியின் மெய்யான நிலையின்படி தங்கள் அறிவு சார்ந்த மனதை புதுப்பிப்பது ஆகும்[13]. ஒரு கண்ணாடி, தனக்கு முன்பாக இருக்கிறதைத்தான் பிரதிபலிக்கும். அதுபோல, உங்களுடைய ஆவியில் இருக்கிற, கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் அடையாளத்தை பிரதிபலிக்கிற ஒரு புத்தகம்தான் பரிசுத்த வேதாகமம். இதுதான், யாக்கோபு தன் உரையை கேட்கிறவர்களுக்கு கொடுக்கிற ஞானம். ஆம், வேதாகமத்திலிருக்கிற, உங்களை குறித்த கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் அடையாளமாகிய பிரதிபலிப்பை காண்பதற்காக அதனை வாசிக்க வேண்டும்!

கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்

"தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று அப்போஸ்தலனாகிய

பேதுரு சொன்னது மட்டுமல்லாமல், ஏசாயாவின் தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்தும் ஒரு வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். பேதுரு எழுதின நிருபத்திலிருந்து கீழ்கண்ட சத்தியத்தை நீங்கள் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

"ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாய் இருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்; அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே" (1 பேதுரு 1:22-25).

இதில், கடைசியில் பேதுருவால் சொல்லப்பட்டுள்ள கூற்றை கவனியுங்கள் - "உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே." சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்ட வசனம் - அதாவது ஜீவனுள்ள வார்த்தையானது (கிறிஸ்துவின் ஆவியானவர்) சுவிசேஷத்தில் மறைக்கப்பட்டிருந்தது. நீங்கள் கிறிஸ்துவின் ஆவியானவரால் (வார்த்தை) உயிர்ப்பிக்கப்பட்டுள்ளீர்கள்.

நான் சொல்லிக்கொண்டிருக்கிற காரியங்களின் சாராம்சம் என்னவென்றால்:

- ❖ தேவன்தான் வார்த்தை என்பது பழைய ஏற்பாட்டின் வெளிப்பாடு
- ❖ வார்த்தை மாம்சமானது என்பது நான்கு சுவிசேஷங்களின் வெளிப்பாடு

- இப்பொழுதோ, நாமே அந்த மாம்சமாக வாழும் வார்த்தை என்பது அப்போஸ்தலர்களின் நிருபத்திலுள்ள வெளிப்பாடு. வார்த்தைதான் உங்களுடைய உண்மையான அடையாளம்!

நீங்கள் தேவனுடைய (வார்த்தையானவர்) சந்ததியாக இருப்பதனால், நீங்களும் மாம்சமான வார்த்தைதான்!

இப்பொழுது, கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய அடையாளத்தை குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் கூறுவதை கவனியுங்கள்:

"சகோதரரே, நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழைய கற்பனையையே எழுதுகிறேன்; **அந்தப் பழைய கற்பனை நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிற வசனந்தானே**. மேலும், நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன், **இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது**; ஏனென்றால், இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது" (1 யோவான் 2:7-8).

எது அவருக்குள் மெய்யாக இருந்தது? வசனம் என்ற வார்த்தை. இப்பொழுது, அதுதான் உங்களை குறித்த உண்மையும் கூட! இப்பொழுது உங்களால் காண முடிகிறதா? இதனால்தான், மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய வார்த்தைக்காக, தங்கள் உள்ளத்தின் ஆழத்தில் ஏங்குகிறார்கள். நீங்கள் வார்த்தையின் பிள்ளைகள். நீங்கள் வார்த்தையினிடத்தில் வரும்பொழுது, உங்கள் வீட்டிற்கே வருகின்றீர்கள்! தேவனுடைய வார்த்தையில் உங்களுடைய வாழ்க்கை பின்னிப் பிணைந்துள்ளது. தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையாலும் வாழும்படியாகத்தான் நீங்கள் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றீர்கள். இதை வாசிக்கும்போதே, உங்களுடைய இருதயம் படபடப்பாக இருக்கலாம். இந்த சத்தியத்தை குறித்து பரிசுத்த ஆவியானவர் உங்களிடத்தில் சாட்சி பகிர்ந்துகொண்டிருக்கிறார். இந்த சத்தியத்தை கேட்பதற்காக நீங்கள் வாழ்நாளெல்லாம் காத்துக்கொண்டிருந்தீர்கள். இப்பொழுதோ, சொல்லி முடியாத சந்தோஷத்தினால் உங்களுடைய

இருதயம் நிரம்பி வழிகிறது. தொடர்ந்து வரும் அத்தியாயங்களில், இந்த வெளிப்பாட்டை நடைமுறையில் எவ்வாறு செயல்படுத்துவது என்று கற்றுக்கொள்ளலாம்.

தேவன் உங்களை குறித்து சொல்லுகிற அறிக்கை மாத்திரமே உண்மையானது.

தேவன் உங்களை குறித்து சொல்லுகிற அறிக்கை மாத்திரமே உண்மையானது. மற்ற யாவும் உங்களுடைய வெளிப்புறமான நிஜத்தை மட்டுமே விளக்குகிறது. உங்களுடைய உண்மையான ஆவிக்குரிய அடையாளத்தை, தேவனுடைய வார்த்தைதான் விளக்கி காட்டுகிறது. வேதாகமத்தை ஏன் வாசிக்க வேண்டும் என்று இப்பொழுது புரிகிறதா? அவருக்குள் நீங்கள் யார் என்று புரிந்துகொள்வதற்காகத்தான் வேதாகமத்தை ஆராய்கின்றீர்கள். திராட்சைக்செடியோடு இணைந்திராத கொடி வாடிப்போய்விடும் என்று இயேசு சொல்லியிருக்கிறார். அதுபோல, ஆவியில் நாம் யார் என்ற நம்முடைய அடையாளத்தைக் கொண்டு, நம்முடைய மனதை புதுப்பிக்காவிட்டால், நம்முடைய அனுதின வாழ்வில் அந்த ஆவியில் இருக்கும் ஜீவனை அனுபவிக்கவே முடியாது.

"பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டானவர்கள்"[14] என்றும், "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்"[15] என்றும் அப்போஸ்தலர்கள் கூறியதின் அர்த்தத்தை இப்பொழுது புரிந்திருப்பீர்கள். இத்தனை வருடங்களாக, இந்த வார்த்தைகள் உங்கள் கவனத்தைவிட்டு தப்பிச்சென்றது. இனிமேல் அப்படியிராது! இப்பொழுதிலிருந்து, உங்களை குறித்து சொல்லப்பட்ட அடையாள வார்த்தைகளை புதையலை தேடுவது போல் வேதாகமத்தில் தேட ஆரம்பியுங்கள். இப்பொழுது நீங்கள் இதை புரிந்துகொண்டபடியால், இந்த சத்தியத்திற்கேற்ப உங்கள் மனதை புதுப்பிப்பதின் அவசியத்தை தெளிவாக அறிந்திருப்பீர்கள்.

சத்தியத்தை குறித்து ஒரு வார்த்தை

சத்தியம் என்றால் உண்மை என்று அர்த்தம். அநேக ஆதாரங்கள் மூலமாக உங்களுடைய மனம் தகவல்களை பெறுகிறது. அந்த தகவல் மெய்யாகவும் இருக்கலாம் அல்லது பொய்யாகவும் இருக்கலாம். அந்த தகவல் வேதாகமத்திலிருந்தோ அல்லது செய்தி ஊடகங்களிலிருந்தோ வந்திருக்கலாம். தேவனுடைய வார்த்தை சத்தியமாக இருந்தாலும், அதுவும் ஒரு *தகவலாகத்தான்* வருகிறது. சத்தியத்தை தியானிப்பதின் மூலமாக அது உங்கள் இருதயங்களில் நிஜமாக (reality) மாறுகிறது. அதன் பிறகுதான், அந்த தகவல் *உங்களுக்கு சத்தியமாக* (truth) *மாறுகிறது*. அதுவரையில், அது வெறும் தகவல்தான்! நீங்கள் ஒரு வார்த்தையை மேற்கோள் காட்டலாம், மனப்பாடம் செய்து ஒப்பிக்கலாம், அதை குறித்து பாடலாம்; ஆனால், அது உங்கள் இருதயத்தில் சத்தியமாக இருக்காது! உங்கள் இருதயம் என்பது, தேவனுடைய வார்த்தையினால் உண்டாகும் நிஜங்களின் (realities) பிறப்பிடம். அது உருவாக ஆரம்பித்துவிட்டால், அந்த உண்மையின்படி நீங்களும் வாழ ஆரம்பித்துவிடுவீர்கள். ஒருவேளை, இந்த உள்வேலையை குறித்து நீங்கள் உணர்வில்லாதவர்களாக இருக்கலாம். ஆனாலும், அந்த உள்வேலைதான் உங்களுடைய வாழ்க்கையின் போக்கையே நிர்ணயிக்கிறது. "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்"[16] என்று வேதாகமம் கூறுவதின் அர்த்தம் இதுதான். உங்கள் வாழ்நாளெல்லாம் நீங்கள் சிந்தித்து உருவாக்கிய நிஜங்களில்தான் (reality) நீங்கள் வாழ்ந்து வருகின்றீர்கள். உங்களுடைய வாழ்க்கையை குறித்த நிஜங்களை (reality) உருவாக்குவது உங்களுடைய கைகளில்தான் உள்ளது என்பதை நினைவில்கொள்ளுங்கள். நீங்கள் பெறுகிற ஒவ்வொரு தகவலும், உங்களுடைய சம்மதத்தாலும் மற்றும் தெரிந்தெடுப்பினாலும், நிஜமாக (reality) மாறக்கூடிய ஆற்றல் உள்ளது. இதனால்தான், ஞானமானது, "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதிமொழிகள் 4:23) என்று சத்தமிட்டுக் கூப்பிடுகிறது.

"அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்றால், *"எல்லை"* என்று கூட பொருள்படும். அப்படியானால், நமது இருதயங்களில், கண்ணுக்கு தெரியாத ஒரு எல்லையை நாம் வரைந்திருக்கிறோம். அந்த எல்லைக்குள் மட்டும்தான் நமது வாழ்க்கையை வசதியாக உணர்கிறோம். நம்முடைய இருதயத்தின் நம்பிக்கைகளே இந்த எல்லைகளை நாட்டுகின்றன. ஆகவே, நம்முடைய வாழ்வின் எல்லைகளை விரிவாக்கம் செய்வதற்கு ஒரே வழி என்னவென்றால், நம்முடைய இருதயத்தின் நம்பிக்கைகளை மாற்றிக்கொள்வதுதான்.

புது சிருஷ்டி

கொரிந்திய சபைக்கு அநேக உட்பிரச்சனைகள் இருக்கின்றன என்று அறிந்துகொண்ட பவுல், இரண்டு நிருபங்களை எழுதுவதின் மூலமாக அந்த பிரச்சனைகளை எதிர்கொண்டார். முதலாவது நிருபத்தில், சபைக்குள்ளாக பேதகங்களை உருவாக்கியதை குறித்து தனது அதிருப்தியை தெரியப்படுத்தினார்[17]. இப்படி செய்வதினால், அவர்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து *மனுஷமார்க்கமாய்* நடக்கிறார்கள் என்று கூறினார்.

பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா? (1 கொரிந்தியர் 3:3-4).

இங்கே, பவுல், *'மனுஷ'* என்ற வார்த்தைக்கு பயன்படுத்திய கிரேக்க வார்த்தை 'அன்த்ரோபாஸ்' (anthropos) என்பதாகும். பவுல், மிக முக்கியமானதொன்றை இங்கு சொல்ல விரும்புகிறார்! கொரிந்து சபையில் இருந்த மறுபடியும் பிறந்த விசுவாசிகள், சாதாரணமான *மனிதர்களை போல* நடந்துகொள்கின்றனர் என்று கூறுகிறார். அப்படியென்றால், உண்மையில் அவர்கள் யார்? அவர்கள் சாதாரணமான மனிதர்களை போல நடந்து கொள்கின்றனர் என்றால், உண்மையில் அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல

என்பதுதானே சத்தியம். அவர்கள் அப்படிப்பட்டவர்களா? அவர்கள் மறுபடியும் பிறந்த மனிதர்கள்! ஆவியில் நிரப்பப்பட்ட மனிதர்கள்! தேவனையே தனக்குள்ளாக கொண்ட மனிதர்கள்! உடன்படிக்கையின் மனிதர்கள்! நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களாக இருப்பீர்களானால், நீங்களும் சாதாரணமான மனிதர்கள் அல்ல. பலவீனமானவர்கள் என்ற இடத்திலிருந்து, அவருடைய பெலன் என்ற இடத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அவரோடு கூட சிங்காசனத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள்!

விசுவாசிகளை, புது சிருஷ்டிகள் என பவுல் அழைக்கிறார்! இதற்கு முன்னர் இருந்திராத புது வகையான சிருஷ்டிப்புதான் இது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின்போது, ஆதாமின் இனம் அவருக்குள் ஒரு முடிவுக்கு வந்தது. கிறிஸ்து, கடைசி ஆதாம் என்று அழைக்கப்பட்டார்! நித்திய ஜீவனை உடைய மனித சரீரத்தைத்தான் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவன் என்று அழைக்கிறோம். ஒரு புது வகையான மனிதன்! இந்த சத்தியம், ஒவ்வொரு விசுவாசியாலும், உணரப்பட்டு செயல்படுத்தப்பட்டால், எப்படிப்பட்ட மக்களாக நாம் இருப்போம் என்று சற்று கற்பனை செய்து பாருங்கள்! கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்று ஒவ்வொரு பிசாசுக்கும் தெரியும்; கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்று ஒவ்வொரு தேவதூதனுக்கும் தெரியும். ஆனால், நீங்களும் நானும் கிறிஸ்துவுக்குள் யார் என்று உணர்ந்து, அதின்படி செயல்படாதவரை, ஒரு பிரயோஜனமும் இல்லை.

தாங்கள் ஆவியில் ஏற்கெனவே எவ்வாறு இருக்கிறார்களோ, அவ்விதமாக தங்களுடைய வெளிப்புற நடக்கைகளை சீராக்கி நடந்துகொள்ளும்படியாக, புதிய ஏற்பாட்டை எழுதிய ஒவ்வொருவரும், எவ்விடத்திலும் உள்ள விசுவாசிகளுக்கு அழைப்பு கொடுக்கின்றனர். இதுதான், ஆவியில் நடப்பது ஆகும்! ஆவியில் நடக்காமல், நம்முடைய ஆரோக்கியத்தில் உயிர்த்தெழுந்த ஜீவனை அனுபவிக்கவே முடியாது. 'ஐக்கியம்' என்றால் பகிர்வது அல்லது பரிமாற்றம் செய்து கொள்வது அல்லது இணைந்து பங்கேற்பது என்று பொருள்படும். தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார்; நமது

ஆவிக்குள்ளாக இருக்கும் இயேசுவின் உயிர்த்தெழுதலின் ஜீவனில் இணைந்து பங்கெடுக்கவோ அல்லது பகிர்ந்து கொள்வதற்கோ அவர் நம்மை அழைக்கிறார்[18]. இந்த சத்தியத்தை உங்கள் மனதிலே நீங்கள் அரவணைத்துக்கொள்ளும்போது, உங்களுடைய பலவீனமான பிச்சைக்கார தன்மையுடைய ஜெப வாழ்க்கை முடிவிற்கு வரும். இவ்வாறு இருக்கும்போது, முதிர்ந்த தேவ குமாரர்களைப் போல நீங்கள் நடக்கவும் பேசவும் ஆரம்பிப்பீர்கள். "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது"[19] என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். இங்கு, 'புத்திரர்கள்' எனப்படுவது, கிறிஸ்துவுக்குள் தங்களுடைய நிலைப்பாட்டை நன்கு அறிந்து, அதின்படி செயல்படுகிற முதிர்ந்த புத்திரர்களை குறிக்கிறது.

உங்களுக்குள் நாட்டப்பட்ட உயிர்த்தெழுதலின் ஜீவனை கொண்டு உங்களையே (எண்ணங்களையும் உணர்வுகளையும்) நீங்கள் போர்த்திக்கொள்ளும்போது, உங்கள் சரீரத்திலுள்ள வியாதி மற்றும் வலி குறித்த உங்களுடைய மனப்பான்மை மாறிவிடும். இந்த கட்டத்தில்தான், தெய்வீக சுகத்தை குறித்த உங்களுடைய அனுபவமானது, அடுத்த நிலைக்கு தாவிப் பாயும்!

எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்

கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், **எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்**; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் (2 கொரிந்தியர் 5:14-15).

ஆதாமுக்குள், முழு மனுவர்க்கமே மரித்துப்போயிருந்தது. அதாவது, தேவனிடமிருந்து பிரிந்துவிட்டது. பிதாவிடமிருந்து பிரிவதுதான் ஆவிக்குரிய மரணம். கிறிஸ்து இப்பூமிக்கு வந்தபோது, ஆவியில் ஜீவனோடிருந்த ஒரே மனிதன் அவர்தான். ஆவியில் மரித்துப்போன மனிதர்களுக்கு மத்தியில் அவர் உலாவினார்.

கிறிஸ்து இன்னும் சிலுவைக்கு போகாததினால், அவர்களால் மறுபடியும் பிறக்க இயலாது. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரையில், எவரும் மறுபடியும் பிறக்க இயலாது. கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, அவர் நம்முடைய மரணத்தை தம்மீது ஏற்றுக்கொண்டார். அதாவது, ஆவிக்குரிய மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அவ்வாறு செய்ததினால், அவர் நம்மில் ஒருவரானார்! மரித்துப்போயிருந்த எல்லா மனிதருக்கும், அவர் சிலுவையிலே, மிகவும் நேர்த்தியான பிரதிநிதியானார். நம்முடைய ஆவிக்குரிய மரணம்தான் அவர்மீது வைக்கப்பட்டது. மரித்துப்போயிருந்த முழு மனுவர்க்கத்துக்காகவும், அவர் சிலுவையிலே, மிகவும் நேர்த்தியான பிரதிநிதியானார். இதுதான் இயேசு கிறிஸ்து நமக்காக மாற்றாக ஏற்றுக்கொண்ட மரணம் (substitutionary death). மாற்று (substitution) என்றால், ஒரு பாவமில்லாத பூரணமான மனுஷன், எவருக்கு பிரதிநிதியாக நிற்கிறாரோ, அவர்களுடைய பாவங்களை முற்றிலும் ஏற்றுக்கொள்வது ஆகும்.

(ஆதாமுக்குள் எல்லாரும் மரித்ததுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் **இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள்** என்ற தவறான கோட்பாட்டை குறித்த விழிப்புணர்வு எனக்கு உண்டு. இது முற்றிலும் தவறான கோட்பாடு. வேதாகமமோ அல்லது அப்போஸ்தலனாகிய பவுலோ அல்லது நானோ இதை இங்கு சொல்ல முற்படவில்லை).

நாம் அனைவருமே ஆதாமிலிருந்து வந்தவர்கள். ஆகவே, அவன் பாவம் செய்தபோது, அவனுக்குள்ளாக நாம் அனைவருமே பாவம் செய்திருக்கிறோம். ஆதாமுக்குள்ளாக நமக்கு எந்தவிதமான தெரிந்தெடுக்கும் உரிமையும் (choice) கொடுக்கப்படவில்லை. சொல்லப்போனால், கிறிஸ்து சிலுவையிலே அறையப்பட்டபோது, முழு உலகமும் சிலுவையில் அறையப்பட்டது. *எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள்* என்று பவுல் கூறியதின் அர்த்தம் இதுதான். எனினும், கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார். ஆகையால், யாரெல்லாம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை தங்கள் இருதயங்களில் விசுவாசிக்கிறார்களோ, அவர்கள் அனைவரும் அவரோடு கூட எழுப்பப்பட்டவர்களாகவே

கருதப்படுகிறார்கள். கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து எழுந்தவுடன், தெரிந்தெடுக்கும் உரிமை (choice) மனிதனுக்கு மீட்டுக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது, ஆவியில் மரித்துப்போனவர்கள் எல்லாரும் அவரை நோக்கி கூப்பிட்டு மறுபிறப்பு அடைய முடியும். அவ்வாறு நாம் செய்யும்போது, அவருடைய உயிர்த்தெழுதலின் ஜீவன் நம்முடைய ஜீவனாக மாறிவிடுகிறது! ஆனால், அவரை ஆண்டவராக ஏற்றுக்கொள்வது நம்முடைய தீர்மானத்தில்தான் இருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுதோவென்றால், நம்முடைய வாழ்க்கையை புரிந்துகொள்வதற்கு, நாம் நம்மை நோக்காமல், அவரையே நோக்கி பார்க்கிறோம். கீழ்கண்ட வசனத்தில், முரண்பாடாக தோன்றும் இந்த உண்மையை பவுல் அழகாக விளக்குகிறார்.

"**கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்**; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; **நான் இப்பொழுது** மாம்சத்தில் **பிழைத்திருக்கிறதோ**, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த **தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்**" (கலாத்தியர் 2:20).

இரண்டு வகையான மனிதர்கள் மட்டுமே இவ்வுலகில் இன்றைக்கு வாழுகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருப்பது அவசியம். ஒரு கூட்ட மக்கள் கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் (சபை). மற்றொரு கூட்டம், மரித்த நிலையிலேயே இருக்கும் கூட்டம். ஆவிக்குரிய மரணத்தை தழுவிக்கொண்டிருப்பவர்கள் பரலோகத்திற்குள் நுழைய முடியாது. கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே பரலோகத்திற்குள் பிரவேசிப்பார்கள்.

புது உடன்படிக்கை

தேவன் மனிதனோடு பண்ணின சகல உடன்படிக்கைகளிலும் மிகவும் வித்தியாசமான உடன்படிக்கைதான் இந்த புதிய உடன்படிக்கை. இயேசுவின் உயிர்த்தெழுதலினிமித்தமாக, புதிய உடன்படிக்கையில், ஒரு புதிய விதமான உடன்படிக்கையை தேவன் பண்ணினார். *புதிய*

உடன்படிக்கையானது, தேவனுக்கும் தனிப்பட்ட விசுவாசிக்கும் நடுவில் செய்யப்பட்ட ஒன்றல்ல. அது தேவனுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் நடுவில் செய்யப்பட்ட ஒன்று. "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன"[20] என்று பவுல் தெளிவாக கூறுகிறார். சந்ததிகள் என்று சொல்லப்படவில்லை! இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தவுடன், அவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களை எல்லாம் சுதந்தரித்துக்கொண்டார். ஆகவே, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே[21].

நாம் தேவனுக்கு செய்யும் சின்ன சின்ன வாக்குறுதிகளின் அடிப்படையில் தேவனுடைய நன்மைகள் நம்மை நோக்கி வருவதில்லை. மாறாக, அது இயேசுவின் உயிர்த்தெழுதலின் அடிப்படையில்தான் வருகிறது. திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் - பொருட்டு, இப்படிப்பட்ட மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் நம்முடைய ஆவியில் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது[22].

இயேசு எல்லா வாக்குத்தத்தங்களையும் சுதந்தரித்துக்கொண்டதாலும், நீங்கள் அவருக்குள் இருப்பதாலும், வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தங்களையும், இயேசுவின் நிமித்தமாக, நீங்களும் உரிமை பாராட்டி பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும்பொழுது, நீங்கள் இயேசுவின் சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் எடுத்துள்ளீர்கள் அல்லது அவருக்குள் மூழ்கடிக்கப்பட்டு இருக்கிறீர்கள். "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று பவுல் கூறுகிறார். இயேசு எல்லா வாக்குத்தத்தங்களையும்

சுதந்தரித்துக்கொண்டதாலும், நீங்கள் அவருக்குள் இருப்பதாலும், வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தங்களையும், இயேசுவின் நிமித்தமாக, நீங்களும் உரிமை பாராட்டி பெற்றுக்கொள்ள முடியும். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தமும் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பது ஒரு பொருட்டல்ல. இயேசுவின் மீது நமக்குள்ள விசுவாசத்தின் நிமித்தமாக அவை அனைத்தும் நமக்குரியதே! நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராக இருக்கிறீர்கள்[23]. ஆகவே, நம்முடைய தேவைகள் சந்திக்கப்படும்படியாக, தேவனுடைய சமூகத்தினுள் நுழைந்து, எந்த வாக்குத்தத்தத்தையும் செயல்பட வைக்க முடியும். அவருடைய வாக்குத்தத்தங்களில் நாம் பங்கெடுக்க கற்றுக்கொள்ளும்போது, நாம் நமது சுதந்தரவீதமாகிய ஆரோக்கியத்தையும் சுகத்தையும் நமது வாழ்வின் எல்லா பகுதிகளிலும் அனுபவிக்க ஆரம்பிக்கிறோம். இந்த உடன்படிக்கை உங்களுக்கு புரியவில்லையென்றால், பிசாசானவன், உங்களுடைய தப்பிதங்களை காண்பித்து உங்களை வஞ்சித்துவிடுவான். பிறகு, நீங்களே உங்களை தகுதியற்றவர்களாக கண்டுணர்ந்து, தேவனுடைய ஆசீர்வாதங்களை தவறவிட்டுவிடுவீர்கள். உங்களுடைய நல்ல செயல்கள் மற்றும் கெட்ட செயல்கள் மீது உங்கள் கண்களை பதிக்கின்ற அதே சமயத்தில், இயேசுவின் மீதுள்ள உங்கள் கண்களை எடுத்துவிடுகிறீர்கள். உடனே, நீங்கள் பாவ உணர்வுள்ளவர்களாகி, உங்களை நீங்களே தகுதியற்றவர்களாக பார்க்க ஆரம்பிப்பீர்கள். இதுதான் ஆக்கினைத்தீர்ப்பின் வேராக இருக்கிறது. ஆக்கினைத்தீர்ப்பு உங்கள் இருதயத்தில் பிரவேசித்ததும், உங்களையே நீங்கள் தகுதியற்றவர்களாக்கி, தேவன் கொடுக்கும் நன்மைகளை அனுபவிக்க தவறிவிடுவீர்கள். ஆகவே, இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்[24].

பழைய மனுஷன்: மரித்தானா அல்லது உயிரோடிருக்கிறானா?

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; **பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது**; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் (2 கொரிந்தியர் 5:17-18).

இந்த வசனத்தை நாம் மறுபடியும் ஆராய்வோம்! ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது மனுஷனாயிருக்கிறான்! பழைய மனுஷன் ஒழிந்துபோனான். அவன் இருந்த இடத்தில்தான் புதிய மனுஷன் வந்துவிட்டான். அநேகர் இதை புரிந்துகொள்ளாததினால், பழைய மனுஷனை சிலுவையில் அறைவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். உங்களுடைய பழைய மனுஷன், அதாவது, அந்த மரித்த ஆவி ஒழிந்துவிட்டது. அது, இயேசு மரித்து அடக்கம்பண்ணப்பட்டபோது, இயேசுவோடு கூட அடக்கம்பண்ணப்பட்டது. பவுல் இவ்வாறு கூறுகிறார்: "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6:4-6). '*இணைக்கப்படுவது*' என்றால், பிரிக்கமுடியாதபடி பின்னிப்பிணைந்திருப்பது ஆகும். அப்படியென்றால், வேறொரு இடத்தில், "பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோடுங்கள்" என்று பவுல் ஏன் கூறுகிறார் என

நீங்கள் கேட்கலாம். அந்த வசனத்தையும் சற்று ஜாக்கிரதையாக கவனிப்போம்.

அந்தப்படி, **முந்தின நடக்கைக்குரிய** மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற **பழைய மனுஷனை** நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:22-24).

பழைய மனுஷனுடைய முந்தின நடக்கை பற்றித்தான் பவுல் குறிப்பிடுகிறாரே அல்லாமல், *பழைய மனுஷனை அல்ல*. உங்களால் வித்தியாசத்தை காண முடிகிறதா? நீங்கள் மறுபடியும் பிறப்பதற்கு முன்பு, உங்களுடைய பழைய மனுஷனானவன், நீங்கள் ஒருவிதமாக யோசிக்கவும் பேசவும் உங்களுடைய மனதை பயிற்றுவித்துவிட்டான். இப்பொழுது, அந்த பழைய மனுஷன் ஒழிந்துபோனதினால், விசுவாசிகள், தங்களுடைய மனதை மீண்டும் கற்பித்து (புதுப்பித்து), புதிய மனுஷனை அனுதினமும் தரித்துக்கொள்ளும்படி பவுல் வலியுறுத்துகிறார். இப்புத்தகத்தில், தியானத்தை குறித்து எழுதியுள்ள அத்தியாயத்தில், 'பழைய மனுஷனை களைந்து போடுவது' மற்றும் 'புதிய மனுஷனை போட்டுக்கொள்வது' போன்ற ஆவிக்குரிய பயிற்சிகளை குறித்து அறிந்து கொள்ளலாம். நாம் நீதிமான்களாக மாற வேண்டும் என்று பவுல் சொல்லவில்லை என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். மாறாக, "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்றுதான் பவுல் வலியுறுத்துகிறார். ஒருவேளை, உங்களுடைய நற்கிரியைகளினால் நீங்கள் நீதிமானாக விரும்பினால், சிலுவையிலே இயேசு செய்து முடித்த கிரியைகளை நீங்கள் மறுதலிக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

பழைய மனுஷன்தான் உங்களுடைய நோய்களுக்கும் வியாதிகளுக்கும் மூலாதாரமாக இருக்கிறான். ஆனால், கோடாரியானது, நோய்கள் மற்றும் வியாதிகளின் வேரருகே

வைக்கப்பட்டிருப்பதால், அது தன்னுடைய வல்லமையை இழந்துவிட்டது. நாம் தேவனுடைய பந்தியில் பங்கெடுக்கும்போது, ஆண்டவராகிய இயேசுவின் மரணத்தை அறிக்கையிடுகிறோம் என்று பவுல் கூறுகிறார். இப்பொழுது நமக்கு தேவனுடைய பந்தி குறித்து நன்கு புரிந்திருக்கும். தேவனுடைய பந்தியில் நாம் பங்கெடுத்து, ஆண்டவருடைய மரணத்தை அறிக்கை செய்யும்போதெல்லாம், அவருடைய மரணத்தில் மறைந்துள்ள நம்முடைய மரணத்தைத்தான் நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்கிறோம்.

நாம் தேவனுடைய பந்தியில் பங்கெடுக்கும்போது, ஆண்டவராகிய இயேசுவின் மரணத்தை அறிக்கையிடுகிறோம்

வேதவசன ஆதாரங்கள்

1. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின (2 கொரிந்தியர் 5:17).

2. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் (ரோமர் 10:9).

3. அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் (எபேசியர் 2:5,7)

4. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள் (கொலோசெயர் 3:4).

5. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான் (வெளிப்படுத்தின விசேஷம் 3:20).

6. கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசியர் 2:8).

7. அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள் (யோவான் 1:13).

8. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது

வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் (2 தீமோத்தேயு 1:10).

9. Strong's Number G4806, Strong's concordance smart phone app.

10. அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (1 கொரிந்தியர் 6:17).

11. நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9).

12. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் (யாக்கோபு 1:21).

13. என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான் (யாக்கோபு 1:23-24).

14. பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் (1 யோவான் 4:4).

15. இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான் (1 யோவான் 5:1).

16. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் (நீதிமொழிகள் 23:7).

17. மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரிந்தியர் 3:1-3).

18. தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1 கொரிந்தியர் 1:9).

19. மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது (ரோமர் 8:19).

20. ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே (கலாத்தியர் 3:16).

21. எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரிந்தியர் 1:20).

22. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (2 பேதுரு 1:4).

23. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள் (கலாத்தியர் 3:29).

24. ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபிரெயர் 12:1-2).

5

தேவநீதியினால் உண்டாகும் சுகம்

தலால் **பாவம் மரணத்துக்கு** ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, **கிருபையானது** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் **நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக** ஆண்டுகொண்டது (ரோமர் 5:21).

மேலே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தில், நான் சில முக்கியமான வார்த்தைகளை வலியுறுத்தி காண்பித்திருக்கிறேன். சுகத்தை பெற்றுக்கொள்வதற்காக, இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்துகொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது.

- பாவம் என்றால் என்ன? அநேக கிரேக்க வார்த்தைகள் *பாவம்* என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பொதுவாக, பாவம் என்றால்: *"பந்தயப்பொருளுக்கான குறியை தவறவிடுவது."* ஆகவே, ஆவியின் வழிநடத்துதலை தவறவிட்டு மாம்சத்தில் முடிக்கும்போது, மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி பாவஞ்செய்கிறான். அந்த பாவம் என்பது, வெளிப்படையான ஒரு தீய செயலாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், மிகவும் நுட்பமான அல்லது நுணுக்கமான முறையில் கூட ஆவியின் வழிநடத்துதலை தவறவிட்டு, மாம்சத்தில் இறங்கியிருப்போம். எடுத்துக்காட்டாக, இஸ்ரவேலின் அடுத்த ராஜாவை அபிஷேகிக்கும்படியாக,

ஈசாயுடைய வீட்டிற்கு தீர்க்கதரிசி சாமுவேல் சென்றபோது, ஈசாயின் உயரமான திடமான குமாரர்களை கண்டு, 'இவர்களில் ஒருவன்தான் அடுத்த ராஜாவாக இருக்க முடியும்' என்று தனக்குள் எண்ணிக்கொண்டான். அவர்களில் ஒருவனை அபிஷேகிக்கும்படியாக தயாராகிவிட்டான். ஆனால், கர்த்தர் குறுக்கிட்டு அவனுடைய இருதயத்தில் தடுத்து நிறுத்தினார்[1]. சாமுவேல் மாம்சீகத்தில் பார்த்ததினால் பாவஞ்செய்தான் (குறியை தவறவிட்டான்). அவன் உடனே மனந்திரும்பி, தன்னுடைய போக்கை திருத்தி அமைத்துக்கொண்டான். இதுதான் ஆவியின்படி நடப்பதின் அழகு! அப்படியென்றால், நீங்கள் பாவமே (குறியை தவறவிடுவது) செய்ய மாட்டீர்கள் என்று அல்ல. மாறாக, உங்கள் இருதயத்தில் தேவனுடைய சத்தத்தை கேட்ட ஓர் ஆழமான திருப்திகரமான விழிப்புணர்வில் நடப்பீர்கள். தேவனால் உங்களுக்கு அருளப்பட்ட நீதியை குறித்த உள்ளான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம், உங்களுடைய ஆவிக்குரிய காதுகளை கூர்மையாக்குவீர்கள். அவ்வாறு செய்வதினால், ஆவியின் வழிநடத்துதலை விட்டு வழி விலகும்போதெல்லாம், நீங்கள் உடனே உணர்வடைந்து மனந்திரும்பிவிடுவீர்கள் (மனதை மாற்றிக்கொள்வீர்கள்).

அதற்காக, உங்கள் உணர்ச்சிகளிலும் குணநலன்களிலும் அனுபவிக்கும் பரிசு ஆவியின் கனி (அன்பு, சந்தோஷம், சமாதானம் போன்றவை) ஆகும். சமாதான உணர்வு என்பது உங்களுடைய வாழ்க்கையின் அச்சாணியாக இருக்கும்.

❖ மரணம் என்றால் என்ன? இருள் மற்றும் மாம்ச கிரியைகளின் வெளிப்பாடுதான் மரணம். இது, மன அழுத்தம், விரக்தி, வலி மற்றும் கசப்பு போன்றவைகளால் தன்னை வெளிப்படுத்தும். நோய்களும் வியாதிகளும் கூட நம்முடைய வாழ்க்கையின் தரத்தை திருடும் மரணத்தின் சாயல்தான். மரணத்தின் அதிகாரி சாத்தான் ஆவான்[2]. ஆகவே, ஆவியில் நடப்பதைப் பற்றி கற்றறிந்துகொண்டால், பிசாசின் திட்டங்களுக்கு தப்பித்துக்கொள்ளலாம்.

- கிருபை என்றால் என்ன? தகுதியற்ற உங்கள் மீது தேவன் கொண்ட தணியாத அன்பு மற்றும் தயவின் நிமித்தமாக, அவரால் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவனுடைய திறன் அல்லது ஆற்றல் ஆகும். ஆம், தேவனுடைய ஆற்றலை நீங்கள் பெற்று அனுபவிக்க முடியும். விசுவாசத்தினால் மட்டுமே நீங்கள் இதனை அணுக முடியும்[3].

- நீதி (Righteousness) என்றால் என்ன? தேவநீதி என்றால் *ஆவியில் நீங்கள் இருக்க வேண்டிய பிரகாரமாகவே மாற்றப்பட்டு இருக்கின்றீர்கள்*. விசுவாசத்தின் மூலமாக வரும் தேவநீதியின் சாராம்சம் இதுதான். விசுவாசத்தினால், இயேசுவை போலவே நீங்களும் உங்களை நீதிமான்களாக காண்பீர்கள். உயிர்த்தெழுதலின்போது இயேசு பெற்றுத் தந்த அவருடைய நீதி எனும் ஆடையினால் நீங்கள் உடுத்துவிக்கப்பட்டு இருக்கிறீர்கள். இது, நம்மை, வெற்றியாளர்கள் மற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களின் கூட்டத்தில் சேர்க்கிறது[4].

- நித்தியஜீவனுக்கு *ஏதுவாக* என்றால் என்ன? *நித்திய ஜீவனை* வெளிப்பட வைப்பது ஆகும். நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, உங்களுடைய ஆவியில் வியாபித்த ஜீவன்தான் நித்திய ஜீவன் ஆகும். இப்படிப்பட்ட மேன்மையான ஜீவனை உடையவர்தான் தேவன். அதை நீங்களும் அறிந்து அனுபவிக்க முடியும்[5]. நித்திய ஜீவன் எவ்வாறு இருக்கும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டை, இயேசுவின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் காணலாம். நோய்கள், வியாதிகள், பிசாசுகள், இயற்கை சூழ்நிலைகளின் சீற்றங்கள் போன்ற எதையும் கண்டு, இயேசு சோர்வடையவே இல்லை. தரித்திரம், தேவைகள் என்பவைகளுக்கு மேலாக பரிபூரணத்திலும் அபரிமிதத்திலும்தான் அவர் வாழ்ந்தார்! நம்முடைய ஆவியில் இருக்கும் ஜீவனும் இதுதான். ஆனால், நாம் அதை அதிகமாய் அனுபவித்தது கிடையாது. அந்த ஜீவன் நமக்குள்தான் இருக்கிறது. ஆனால், விசுவாசத்தினால் மட்டும்தான் அதை செயல்படுத்த முடியும்.

ஆகவே, ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட வேத வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது இதுதான்:

பரிசுக்கான குறியை நாம் தவறவிடும்பொழுது, நாம் இருளின் கனிகளை வெளிப்படுத்த ஆரம்பித்துவிடுவோம். எனினும், நம்முடைய இருதயங்களில், விசுவாசத்தினால் வரும் தேவநீதி உறுதியாக நாட்டப்பட்டிருக்கும்போது, கிருபை (தேவனுடைய ஆற்றல் அல்லது திறன்) நம்முடைய இருதயத்திலும், இருதயத்தின் மூலமாகவும் எந்தவிதமான தடையுமின்றி பெருக்கெடுத்து ஓடி, தேவனுடைய ஜீவனை (நமது ஆவியில் இருக்கும் நித்திய ஜீவன்) வெளிப்புறத்தில் காணத்தக்கதாக வெளிப்படுத்த ஆரம்பிக்கும். இதுதான் சுவிசேஷத்தின் சாராம்சம். இந்த சுவிசேஷத்தைதான் அப்போஸ்தலனாகிய பவுலும் பிரசங்கித்தார்.

இப்பொழுது, இந்த அழகிய வெளிப்பாட்டை தரித்துக்கொண்டவர்களாக, சுகம் மற்றும் ஆரோக்கியம் குறித்த வேறொரு வசனத்தை ஆராய்வோம்.

மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:10-11).

நான் உடல்நிலை சரியில்லாமலிருந்த சமயத்தில், மேலுள்ள வசனத்தின் அர்த்தத்தை புரிந்துகொள்ளாமலேயே தொடர்ந்து அறிக்கையிட்டுக் கொண்டிருந்தேன். "சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாய் இருக்கிறது" என்று பவுல் கூறுகிறார். இதின் அர்த்தம் என்னவாக இருக்க முடியும்? நீங்கள் மறுபடியும் பிறந்தபொழுது, உங்கள் ஆவி மட்டும்தான் உயிர்ப்பிக்கப்பட்டு ஆரோக்கியமடைந்தது; சரீரமோ அதேதான். அது, ஆதாமின் பாவத்தினால் தொடங்கப்பட்ட

அழிவுக்குரிய பகுதியாகத்தான் இன்னமும் இருக்கிறது. மருத்துவ பதத்தில் சொல்ல வேண்டுமானால், *'அபோப்டாஸிஸ்' (apoptosis)* என்று கூறுவர். அதாவது, *திட்டமிடப்பட்ட உயிரணு இறப்பு (programmed cell death)* என்று பொருள்படும். பாவமானது மனுக்குலத்திற்குள் பிரவேசித்தபோது, ஆதாமுக்குள், நம்முடைய அணுக்கள் மரிக்கும்படியாக திட்டமிடப்பட்டன. அதன் பிறகு, பவுல், நான் அநேக வருடங்களாக தவறவிட்ட ஓர் அதிர்ச்சிகரமான சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். 'ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாய் இருக்கிறது' என்று பவுல் தொடர்கிறார். நீதியானது ஏற்கெனவே உங்களுடைய ஆவியில் கொடுத்தாயிற்று. இப்பொழுது, இந்த எண்ணப்போக்கில் அந்த வசனத்தின் அடுத்த வரியை வாசியுங்கள்: "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." நம்முடைய சாவுக்கேதுவான சரீரங்களும் கூட, இந்த வாழ்க்கையிலேயே, உயிர்த்தெழுந்த ஜீவனை அனுபவிக்க முடியும்.

பாவமானது மனுக்குலத்திற்குள் பிரவேசித்தபோது, ஆதாமுக்குள், நம்முடைய அணுக்கள் மரிக்கும்படியாக திட்டமிடப்பட்டன.

இது உண்மையென்றால், எல்லா விசுவாசிகளும் ஒரு நோயற்ற வாழ்வை தங்கள் சரீரங்களில் அனுபவிக்க வேண்டுமே என்று நீங்கள் யோசித்துக்கொண்டு இருப்பீர்கள். அப்படியென்றால், இந்த இணைப்பு எங்கே துண்டிக்கப்பட்டிருக்கிறது?

பவுல் கூறுவது என்னவென்றால்: இவ்வுலகத்தின் காரியங்களால் நமது சரீரம் பாதிக்கப்பட்டு, வயதாகி பெலவீனமானாலும், கர்த்தருடைய ஆவியானவர், உயிர்த்தெழுந்த ஜீவனை நமக்குள்

உட்புகுத்தி, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆரோக்கியத்தை நமது சரீரத்திற்கு தர முடியும் (நம்முடைய பூமிக்குரிய வேலை முடியுமட்டும்). எப்படி? நீங்கள் உங்கள் இருதயத்தை விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியினால் காத்துக்கொள்வதினால் மட்டுமே! இதுதான் விசுவாசத்தின் வல்லமை. இப்புத்தகத்தில், *"தியானம் - சுகம் மற்றும் ஆரோக்கியத்திற்கான திறவுகோல்"* என்ற அத்தியாயத்தில், உங்கள் இருதயத்தை விசுவாசத்தில் எவ்வாறு காத்துக்கொள்வது என்று நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் இருதயத்தை விசுவாசத்தினால் வரும் தேவநீதியினால் காத்துக்கொள்ளும்போது மட்டும்தான் உங்கள் சரீரங்களிலும் நடக்கைகளிலும், தேவநீதியின் வல்லமையை காண்பீர்கள். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்"[6] என்பதின் பொருள் இதுவே.

நீதி என்பது தேவனுடைய தன்மை ஆகும். தேவனுடைய எண்ணங்கள் நீதியானவைகள். தேவனுடைய வழிகள் நீதியானவைகள். தேவனுடைய கிரியைகள் நீதியானவைகள். மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்ட நமது ஆவியில், நீதியென்னும் ஈவு திரும்பவும் மீட்டு அளிக்கப்பட்டிருக்கிறது[7]. நாம் நேசித்து ஆராதிக்கும் தேவன், *விசுவாசத்தின் தேவன்*. தேவன் இருப்பதும், சகலத்தையும் செய்வதும் விசுவாசத்தினால்தான். ஆதி அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த சுவிசேஷமானது, ஒரு விசுவாசியுடைய வாழ்க்கையின் தொடக்கம் முதல் முடிவு வரைக்கும் செயல்படுகிற 'விசுவாசத்தினால் வரும் தேவநீதியை' வெளிப்படுத்துகிறது[8]. சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள வைக்கும் விசுவாசம் சுவிசேஷத்திலேயே இருக்கிறது. ஒரு பாவியை எடுத்து, அவன் இதுவரை பாவமே செய்யாததுபோல, தேவனுக்கு முன்பாக நிறுத்துவதற்கான ஆற்றல் சுவிசேஷத்தில் உள்ளது. தேவனுக்கு முன்பாக பூரணராக நிறுத்துவது மட்டும் தேவநீதி அல்ல; அது, உங்களுடைய சத்துருக்களான வியாதி, பெலவீனம், தரித்திரம், வலி போன்றவைகளுக்கு முன்பாகவும் சரியானவர்களாக நிறுத்தும். தேவநீதியை குறித்த இந்த அம்சத்தை

அநேக விசுவாசிகள் அறியாமலேயே இருக்கிறார்கள். நீங்கள் இந்த அம்சத்தை புரிந்துகொள்வீர்கள் என்றால், உங்களுடைய ஜெப வாழ்க்கையானது, அடுத்த புதிய மகிமையான நிலைக்கு சென்றுவிடும். கிறிஸ்துவுக்குள்ளாக உங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தவும் ஆரம்பித்துவிடுவீர்கள்.

ஆவிக்குரிய யுத்தத்திற்கான சர்வாயுதவர்க்கத்தை குறித்து பவுல் விளக்கும்போது, "நீதி எனும் மார்க்கவசம்" என்று குறிப்பிடுகிறார்[9]. ஒரு போர்வீரனுடைய இருதயத்தை பாதுகாப்பதற்காகத்தான் மார்க்கவசம் அணியப்படுகிறது. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று ஒருவர் நம்பும்போது, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியானது, பாவத்தின் சீர்கேட்டிலிருந்து அவருடைய இருதயத்தை காப்பாற்றும். உங்களுடைய இருதயத்தை எல்லா காவலோடும் காத்துக்கொள்ள இதுவே பிரதானமான வழி[10]. விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியினால் நம்முடைய இருதயத்தை காத்துக்கொள்ளும்போது, நம்முடைய வாழ்வின் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும்.

விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியினால் நம்முடைய இருதயத்தை காத்துக்கொள்ளும்போது, நம்முடைய வாழ்வின் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும்.

விசுவாசத்தினால் நீதிமானாகிறோம் என்று நம்புவதில் அநேக நன்மைகள் இருக்கின்றன. அது விசுவாசத்தை அதிகரிக்கிறது, பிதாவோடு ஐக்கியம்கொள்வதற்கு சுதந்திரம் அருள்கிறது, குமாரத்துவத்தை மீட்டளிக்கிறது, இருதயத்தில் சமாதானத்தை கொடுக்கிறது, பாவ உணர்விலிருந்து விடுதலை அளிக்கிறது. விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியில் ஸ்திரப்பட்டிருக்கும் இருதயத்திலிருந்து விசுவாசம் பிறக்கும். இப்பொழுது, கிறிஸ்தவ வட்டாரங்களில் சித்தரிக்கப்பட்ட வண்ணம், 'விசுவாசம் என்பது ஏதோ புரிந்துகொள்ள முடியாத ஒன்றல்ல' என்பது உங்களுக்கு புரிந்திருக்கும். 'இயேசுவே

எனது நீதி' என்று உறுதியாக நம்புகிற இருதயத்திலிருந்து இயற்கையாகவே விசுவாசம் பிறக்கும்.

விசுவாசத்தினால் நீதிமானாகிறீர்கள் என்று நீங்கள் *நம்பும்போது*, உங்கள் வாழ்க்கையில் உள்ள பிசாசின் கிரியைகளை அது உடனடியாக அழித்துவிடுகிறது. நம்புவது என்றால், உங்கள் இருதயத்தில் பார்ப்பது என்று பொருள்படும். ஒரு விசுவாசி, இருளின் வல்லமையிலிருந்து தேவனுடைய ராஜ்யத்திற்குள் உட்படுத்தப்படுகிறார்[11]. தேவனுடைய நீதி உங்களை சிங்கத்தைப்போல தைரியமாயிருக்கப் பண்ணுகிறது[12]. இந்த வாழ்க்கையில், கிறிஸ்து அளிக்கும் எல்லா நன்மைகளையும் பெற்று அனுபவிப்பதற்கு, விசுவாசத்தினால் வரும் தேவநீதிதான் திறவுகோல். சுகமும் ஆரோக்கியமும் இதில் அடங்கும்!

விருத்தசேதனத்தை முன்பிருந்த நிலைக்கு கொண்டுவர முடியாது
(Circumcision is irreversible)

என்னுடைய இருபது ஆண்டுகால மருத்துவ அனுபவத்தில், அறுவை சிகிச்சையின் மூலமாக விருத்தசேதனம் செய்து கொள்ள வந்த அநேக நோயாளிகளுக்கு நான் மயக்க மருந்து கொடுத்திருக்கிறேன். ஆனால், இதுவரையிலும், செய்யப்பட்ட விருத்தசேதனம், ஒரு முறை கூட முன்பிருந்த நிலைக்கு கொண்டு வரப்பட்டு (reverse) நான் பார்த்ததேயில்லை! ஏன்? நீக்கப்பட்ட நுனித்தோல் அழிக்கப்படுவதாலும், மறுபடியும் எதிர்காலத்தில் இணைக்கப்படும்படி பாதுகாக்கப்பட்டு வைக்கப்படாததாலும், அதற்கு சாத்தியமே இல்லை. "புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனம் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்" (ரோமர் 2:28) என்று பவுல் எழுதுகிறார். இது ஒரு அற்புதமான வெளிப்பாடு! மறுபிறப்பில், நம்முடைய பாவ சரீரமான பழைய மனுஷன், கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானத்தினாலே அடக்கம்பண்ணப்பட்டாயிற்று (ரோமர் 6:4-6). இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின,

எல்லாம் புதிதாயின (2 கொரிந்தியர் 5:17). உங்களால் பார்க்க முடிகிறதா? கிறிஸ்துவின் மரணத்தோடு, உங்களுடைய பழைய மனிதனாகிய உங்கள் இருதயத்தின் நுனித்தோலானது அழிக்கப்பட்டுவிட்டது; அந்த இடத்தில், புதிய மனுஷனாகிய உயிர்த்தெழுந்த கிறிஸ்து வாழ்கிறார்![13]

உங்களுடைய பழைய மனுஷனானவன், ஏதோ ஒரு கற்பனையின் மூலையில் வாழ்ந்து கொண்டு, எப்பொழுது நீங்கள் பாவத்தில் சறுக்கி விழுவீர்கள் என்று காத்திருந்து, உங்களுக்குள் மறுபடியும் வருவதற்கு பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று எண்ணாதிருங்கள். உங்களுடைய நீதி முன்பிருந்த பழைய நிலைக்கு மாற்றப்பட முடியாது (irreversible). மறுபடியும் சொல்லுகிறேன் - உங்களுடைய நீதி முன்பிருந்த பழைய நிலைக்கு மாற்றப்பட முடியாது. உங்களுடைய கடந்தகால, நிகழ்கால, எதிர்கால பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டன. நீங்கள் சுத்தமாக உள்ளீர்கள்! உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக உள்ள உறவில் உங்களுடைய பாவங்கள் ஒரு பிரச்சனையல்ல. புதுப்பிக்கப்படாத உங்கள் மனம்தான் பிரச்சனை. இந்த சத்தியத்தை அறியாததினால், அநேக விசுவாசிகள், தேவனுக்கு முன்பாக தகுதியுள்ளவர்களாக காணப்பட வேண்டும் என்ற நம்பிக்கையில், பாவங்களை 'அறிக்கை' செய்து கொண்டே இருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியால் முத்திரை போடப்பட்டீர்கள்

எபேசியர் 1:13ல், பவுல், "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, *விசுவாசிகளானபோது,* வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" என்று சொல்லுகிறார்.

கிறிஸ்துவோடுள்ளநமது இணைப்பு, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டுள்ளது! நம்மீது வைக்கப்பட்ட இந்த முத்திரை, ரப்பர் முத்திரை (rubber stamp) போன்றது அல்ல; மாறாக, ஒரு ஜாடியில் (jar) உள்ள பொருளை பாதுகாப்பதை குறிக்கிறது. உங்களுடைய ஆவியானது, மெய்யான

நீதியிலும் பரிசுத்தத்திலும் புதுப்பிக்கப்பட்டது மட்டுமல்லாமல், மாசுபடாமல் இருக்கும்படியாக, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டும் உள்ளீர்கள். ஒருவேளை, நீங்கள் இந்த உண்மையை அறியாதிருப்பீர்களானால், உங்களுடைய மறுபிறப்பின் சந்தோஷத்தையும் திருப்தியையும் அனுபவிக்கவே மாட்டீர்கள். ஆனால், இப்பொழுதோ, நீங்கள் இந்த வல்லமையான வெளிப்பாட்டை ஆயுதமாக தரித்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த சத்தியம் இப்பொழுது உங்களுக்குள் பொங்கி வழிவதால், ஏற்கெனவே நீங்கள் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள். இதுதான் தேவநீதியின் வல்லமை. புதிய உடன்படிக்கையில், இது வரவிருப்பதை கண்ட தாவீது, அதை அனுபவிக்க ஏங்கி தவித்தார்.

"எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்" (ரோமர் 4:7-8).

மறுபடியும் பிறந்த விசுவாசியின் மீது தேவனால் பாவத்தை சுமத்த முடியாது. ஒரு சராசரியான விசுவாசியிடமிருந்து மறைக்கப்பட்டுள்ள அற்புதமான சத்தியம் இது. பாவம் செய்வதற்கான உரிமத்தை (license) இது நமக்கு தருவதில்லை. மாறாக, ஒரு விசுவாசியின் மீது பிசாசானவன் குற்றச்சாட்டை வைக்க முடியாது என்பதால், வாழ்க்கையின் எல்லா சூழல் மீதும் அதிகாரம் எடுக்கும்படியான தைரியத்தை அது நமக்கு கொடுக்கிறது.

போலியான நீதி

மெய்யான தேவநீதி இருக்குமாயின், போலியான நீதி என ஒன்று நிச்சயமாக இருக்கும். அதுதான், மதத்தால் விற்கப்படுகின்ற நீதி ஆகும். அது, நீங்கள் நீதிமானாக வேண்டுமென்றால், நன்மையான கிரியைகளை செய்ய வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கை (demand) வைக்கும். யூத பரிசேயர்கள், இப்படிப்பட்ட நீதியினால் வெறிகொண்டவர்களாக காணப்பட்டனர்[14]. இந்த பொறியில் சிக்கிக்கொள்ளாதீர்கள்! சத்தியத்தை கொண்டு

உங்களுடைய இருதயத்தை எப்பொழுதும் எல்லாக் காவலோடும் காத்துக்கொள்ளுங்கள்! பிரமாணங்களும் கட்டளைகளும் உங்கள் சார்பில் நிறைவேற்றப்பட்டாயிற்று. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்[15]. அப்படியென்றால், இப்பொழுதிருக்கிற விசுவாசியின் வாழ்க்கையில், பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளின் நோக்கம் என்ன?

பிரமாணங்களும் கட்டளைகளும், விசுவாசிகளிடம் எந்தவிதமான கோரிக்கைகளையும் (demands) இன்னமும் வைப்பதில்லை. மாறாக, நீங்கள் யார் என்பதையே அடையாளம் காட்டுகிறது! நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள். நீங்கள் அவருடைய நீதியை பெற்றவர்களாக இருக்கிறீர்கள். வேதாகமத்தில் வாக்குப்பண்ணப்பட்டுள்ள அனைத்து வாக்குத்தத்தங்களையும் சுதந்தரிப்பதற்கு நீங்கள் தகுதியுள்ளவர்களாக இருக்கிறீர்கள். இந்த புதிய கண்களோடு (பார்வையோடு) பிரமாணங்களையும் கட்டளைகளையும் பார்க்க ஆரம்பியுங்கள். உங்கள் இருதயத்தில் நீங்கள் அவ்வாறு பார்த்த பின்னர், அதின்படி நடக்க ஆரம்பியுங்கள். இதனால்தான், யாக்கோபு, "சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்"[16] என கூறினார்.

பிரமாணங்களும் கட்டளைகளும், விசுவாசிகளிடம் எந்தவிதமான கோரிக்கைகளையும் (demands) இன்னமும் வைப்பதில்லை. மாறாக, நீங்கள் யார் என்பதையே அடையாளம் காட்டுகிறது!

சிலர், கிறிஸ்தவ கூட்டங்கள் நடத்தப்படுகையில், உணர்ச்சிகளால் ஆளப்பட்டவர்களாக, தங்கள் அறியாமையினிமித்தம், அடுத்த முறை இன்னும் நல்லவர்களாக இருப்போம் என்று சுயபெலத்தில் வாக்குறுதி எடுப்பதுண்டு. ஆனால், தங்கள் தீர்மானங்களில் தவறிவிடுவார்கள். இதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றுமேயில்லை! ஆகவே அவர்கள், ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்திற்கும், ஒரு அர்ப்பண அழைப்பிலிருந்து (altar call) மற்றொன்றுக்கும் தாவித் திரிந்து, ஏமாற்றத்தில் வாழ்கின்றனர். இவ்வாறு செய்வீர்களாகில், உங்கள் இருதயத்தை குழப்பத்தில் ஆழ்த்திவிடுவீர்கள். ஒருவேளை, இப்படிப்பட்ட காரியங்களை தொடர்ந்து செய்பவர்களாக நீங்கள் இருந்தால், கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய உண்மையான சாயலை அறிந்துகொள்ள நேரமெடுத்து தியானியுங்கள்.

(ஒருவேளை, நீங்கள் பாவம் செய்திருந்தால், அறிக்கை செய்து மனந்திரும்புங்கள். அவ்வாறு செய்வது ஆரோக்கியமானது. ஆனால், உங்களை கீழே விழத்தள்ளின அந்த பாவ உணர்விலேயே வாழாதீர்கள்! விசுவாசம் என்ற இடத்திலிருந்து நீங்கள் அறிக்கை செய்வதுதான் ஆரோக்கியமானது. நீங்கள் விசுவாசம் என்ற இடத்தை விட்டு விலகி அறிக்கை செய்யும்பொழுது, அது உங்கள் இருதயத்தை குழப்புவதால், அப்படிப்பட்ட அறிக்கையானது, உங்களுக்கு விரோதமாக செயல்பட ஆரம்பிக்கும்).

இரண்டு உண்மைகளும் இரண்டு வெளிப்பாடுகளும்

கிறிஸ்துவுக்குள் நீங்கள் நீதிமான்களாக இருக்கிறீர்கள் என்று நம்பும்போது, நீங்கள் விசுவாசத்திலும் தேவனுடைய வார்த்தையினால் உண்டாகும் நிஜத்திலும் (God's reality) இருக்கிறீர்கள் என்று அர்த்தம். மறுபுறம், உங்களை நீங்கள் மாம்சத்தில் பார்க்கும்போது, நீங்கள் மாம்சரீதியான நிஜத்தில் (Carnal reality) இருக்கிறீர்கள். எந்த உண்மை உங்களுடைய வாழ்க்கையில் அதிகாரம் செலுத்தப்போகிறது? அது, நீங்கள் எதை உங்களுடைய இருதயத்தின் நம்பிக்கையாக தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள் என்பதை சார்ந்தது. ஆவியில் நடப்பது என்பதின் அச்சாணி இதுதான்! ஒரு

தகவலை எவ்வாறு இருதயத்தின் நம்பிக்கையாக மாற்றுவது என்பதை குறித்து, இனி வரும் பக்கங்களில் காணலாம்.

உங்கள் இருதயத்தை சரியான உண்மைக்கு நேராக இணங்கச் செய்யும் போக்கில் நீங்கள் ஈடுபடும்போது, ஒரே நேரத்தில் இரண்டு உண்மைகளும் உங்கள் இருதயத்தோடு போராடும் என்பதை நினைவில்கொள்ளுங்கள். உங்களுடைய ஆவியின் மீது மாத்திரம் கவனம் செலுத்தி, அந்த உண்மையில் வாழ்வதாக உங்களையே நீங்கள் பார்க்கும்போது மட்டும்தான், அந்த உண்மை உங்கள் இருதயத்தில் நாட்டப்படும். இவைகளை உங்கள் மனதில் சுமந்தவர்களாக, 'இருதயம்' என்ற அடுத்த அத்தியாயத்திற்குள் கடந்து செல்ல நீங்கள் தயாராகிவிட்டீர்கள்.

வேதவசன ஆதாரங்கள்

1. அவர்கள் வந்தபோது, அவன் எலியாபைப் பார்த்தவுடனே: கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுபவன் இவன் தானாக்கும் என்றான். கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார் (1 சாமுவேல் 16:6-7).

2. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் (எபிரெயர் 2:14).

3. இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம் (ரோமர் 5:1-2).

4. இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோமர் 8:37).

5. ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான் 17:3).

6. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும் (ரோமர் 10:10).

7. அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:17).

8. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது (ரோமர் 1:17).

9. சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும் (எபேசியர் 6:14).

10. எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும் (நீதிமொழிகள் 4:23).

11. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் (கொலோசெயர் 1:13).

12. ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்; நீதிமான்களோ சிங்கத்தைப்போல தைரியமாயிருக்கிறார்கள் (நீதிமொழிகள் 28:1).

13. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் (2 கொரிந்தியர் 5:17-18).

14. இப்படியிருக்க நாம் என்னசொல்லுவோம்? நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்; அது விசுவாசத்தினாலாகும் நீதியே. நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள் (ரோமர் 9:30-32).

15. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார் (கொலோசெயர் 2:14-15).

16. சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான் (யாக்கோபு 1:25).

பகுதி 2

6

இருதயம்

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டில், *இருதயம்* என்ற வார்த்தை பல முறை வருகிறது. ஆனால், வேதாகமத்தின் பல இடங்களில் தோன்றுகிற அந்த வார்த்தையின் அர்த்தமானது, நுணுக்கமான வகையில்தான் வித்தியாசப்படுகிறது[1]. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அவ்வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று புரிந்துகொண்டால், அந்த குறிப்பிட்ட வேதாகம பகுதியை நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதை குறித்து எளிதில் அறிந்து கொள்ளலாம். எந்தவொரு வேதாகம வசனத்தையும் நாம் ஆராய்வதின் நோக்கம், அனுதின வாழ்வில் அதை எவ்வாறு நடைமுறைபடுத்துவது என்பதாக இருக்க வேண்டும். இதை நினைவில் கொள்ள வேண்டும்! ஆகவே, கற்றுக்கொண்டதை செயல்முறைப்படுத்தும் இருதயம் என்பது மிகவும் முக்கியமானது. இந்த அத்தியாயத்தில் நான் பயன்படுத்தியிருக்கிற கருத்து சார்ந்த மாதிரியைக் (conceptual understanding) கொண்டு, மாம்சீகமான மனதின் திருப்திக்கேற்ப துல்லியமாக விளக்குவது என்பது கடினமான காரியம். ஆகவே, சத்தியத்தை அனுபவிப்பதின் நிமித்தம் நம்முடைய வாழ்க்கை மறுரூபமடைவதற்கு, நான் சொல்ல வருகிற கருத்தை மாத்திரம் புரிந்துகொள்வதே போதுமானதாக இருக்கும். இந்த அத்தியாயத்தில், மருத்துவத்தில் பயில்வதை போல, மனுஷ இருதயத்தின் உடற்கூறியல் (anatomy) பற்றி நாம்

கற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; மாறாக, *ஆவிக்குரிய இருதயத்தை* குறித்தும், அது எவ்வாறு நம்முடைய சரீரத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்றும் புரிந்துகொள்ளப்போகிறோம்.

இருதயத்தில், நீங்கள் உங்களை குறித்து நம்புகிற அடையாளம் (believed identity) எதுவோ, அந்த இருதயம்தான் 'நிஜமான நீங்கள்'[2]. 'நம்புகிற அடையாளம்' என்று நான் சொல்வதற்கு காரணம், நீங்கள் எதை உங்கள் இருதயத்தில் நம்புகிறீர்களோ, அதுதான் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படும். உங்கள் மனதை புதிதாக்குகிற இந்த பயணத்தை துவங்கும் இச்சமயத்தில், 'உண்மையான அடையாளம்' (true identity) மற்றும் 'நம்புகிற அடையாளம்' (believed identity) ஆகிய இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை மிகவும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். ஆரம்பத்தில், உங்களுடைய 'உண்மையான அடையாளமும்' 'நம்புகிற அடையாளமும்' வெவ்வேறாகத்தான் இருக்கும். ஆனால், உங்கள் மனதை புதிதாக்குவதில் நீங்கள் தொடர்ந்து ஈடுபடும்போது, இவ்விரண்டும் ஒன்றிணைய ஆரம்பிக்கும்[3]. மேலும் வாசிக்கையில், இதைக் குறித்து நீங்கள் புரிந்துகொள்வீர்கள். எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது[4] என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். இதிலிருந்து, மாற்றப்படக்கூடிய ஒரு பகுதி இருதயத்தில் இருக்கிறது என்று புரிகிறது. இது தானாக நடக்கும் ஒன்றல்ல. மாறாக, மனம் புதிதாவதினால் நடைபெறுகிற காரியம் ஆகும். நீங்கள் மறுபடியும் பிறப்பதற்கு முன் இருந்த உங்களுடைய இருதயமானது, மறுபடியும் பிறந்த பின்னர் இருக்கும் உங்களுடைய இருதயத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. இதை

இருதயத்தில், நீங்கள் உங்களை குறித்து நம்புகிற அடையாளம் (believed identity) எதுவோ, அந்த இருதயம்தான் 'நிஜமான நீங்கள்'

புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது! இந்த சத்தியத்தை நீங்கள் கிரகித்துக்கொள்ள தவறுவீர்களானால், சில வேதவசனங்களால் குழப்பமடைவீர்கள். பழைய ஏற்பாட்டு காலத்தில், கிறிஸ்து இன்னும் பூமிக்கு வந்து சிலுவையில் மரிக்காததாலும், மரித்தோரிலிருந்து உயிரோடு எழும்பாததினாலும், எவரும் மறுபடியும் பிறக்க இயலாது என்பதை நினைவில்கொள்ளுங்கள். எனினும், கிறிஸ்துவின் முன்னடையாளமாகவும் நிழலாகவும் தம்மையே தேவன் வெவ்வேறு விதங்களில் வெளிப்படுத்தும்போதெல்லாம், அவர் மேல் நம்பிக்கை வைத்ததினால், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் மீது தேவநீதி சுமத்தப்பட்டது[5]. சிலுவைக்கு பின் வாழும் நாமோவென்றால், இயேசுவின் மூலமாக நீதிமான்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம்.

எளிதாக புரிந்துகொள்ள வேண்டுமென்றால், ஆவி மற்றும் ஆத்துமாவின் கூட்டு அல்லது சேர்க்கையைத்தான் இருதயம் என்று அழைக்கிறோம் - உங்களுடைய உள்ளான மனிதன்! ஆத்துமா என்றாலும், மனம் என்றாலும் ஒன்றைத்தான் குறிக்கிறது. உணர்ச்சிகள், மனதின் உறுதி, அறிவு அல்லது புத்தி போன்ற யாவும் மனதின் செயல்பாடுகள்தான். மறுபடியும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன் - இந்த சத்தியத்தை நடைமுறைபடுத்துவதற்கு, கருத்து சார்ந்த புரிந்துகொள்ளுதலே (conceptual understanding) மிகவும் போதுமானது.

மனம் என்பது இரண்டை உள்ளடக்கியது - சுயநினைவுள்ள மனம் (அறிவு - intellect) மற்றும் ஆழ்மனம் (உயிர்மங்களால் ஆன நினைவகம் - cellular memory). நினைவுகள் அல்லது ஞாபகங்கள் என்பவை சுயநினைவுள்ள மனம் மற்றும் ஆழ்மனம் ஆகிய இரண்டிலும் பத்திரப்படுத்தப்பட்டு இருக்கின்றன (சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன). நமது விருப்பப்படி, நாம் நினைத்த நேரத்தில் நினைவுக்கு கொண்டுவரும்படியாக, சுயநினைவுள்ள மனதானது, ஞாபகங்களை தகவல்களாக சேகரித்து வைக்கிறது. ஆழ்மனமானது, தகவல்களை எல்லாம் ஆழமான உணர்ச்சிகளாக சேகரித்து வைக்கிறது. ஆழ்மனம் தூண்டப்படும்போது, ஆழமான

உணர்ச்சிகள் உள்ளிருந்து எழும்ப ஆரம்பித்து, சுயநினைவுள்ள மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும். எப்படிப்பட்ட உணர்ச்சிகள் ஆழ்மனதில் தூண்டப்பட்டதோ, அதை பொறுத்துதான், உங்களுடைய சுயநினைவுள்ள மனதில், மகிழ்ச்சியையோ அல்லது சோகத்தையோ அனுபவிப்பீர்கள். நன்மையான கடந்தகால அனுபவங்களோ அல்லது தீமையான கடந்தகால அனுபவங்களோ, அவை யாவுமே ஆழ்மனதில்தான் சேகரித்து வைக்கப்படுகின்றன. அதினால்தான், சில வாசனைகள், சில படங்கள், சில வார்த்தைகள், சில மக்கள், அப்படிப்பட்ட ஆழ்மன உணர்ச்சிகளை உங்களுக்குள்ளிருந்து உயிர்ப்பித்து, அவைகளோடு உங்களுக்கிருந்த முதல் அனுபவத்தை பொறுத்து, சந்தோஷத்தையோ அல்லது சங்கடங்களையோ உங்கள் உணர்ச்சிகளோடு கலக்கும். நாம் கிறிஸ்துவிடத்தில் வந்தபொழுது, நம்மை குறித்து, தேவனுடைய உண்மைகளுக்கு புறம்பான எண்ணிலடங்காத தகவல்கள், நம்முடைய ஆழ்மனதில் ஏற்கெனவே பதிந்திருந்தன. இந்த தகவல்கள், 'தானியக்க விமானி' (autopilot) போல, நம்முடைய வாழ்க்கையை நடத்தி கொண்டு சென்றன. ஆகையால், இயேசுவை, நாம் ஒரு சீடனாக பின்பற்றும் இந்த பயணத்தில், தேவனுடைய சத்தியத்தை கொண்டு நம்முடைய ஆழ்மனதில் உள்ள தகவல்களை மாற்றி எழுத இப்பொழுது கற்றுக்கொண்டிருக்கிறோம். ஆழ்மனம் என்பது, மனித உடலின் எல்லா உறுப்புகளிலும் இருக்கிறது என்று அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் மருத்துவ துறையானது நிரூபித்திருக்கிறது. மனித உடலின் எல்லா உறுப்புகளிலும் 'உயிர்மங்களால் ஆன ஞாபகங்களை' (cellular memories) சேகரித்து வைக்கக்கூடிய கொள்ளளவு (capacity) உண்டு. சங்கீதம் 51:6ல் தாவீது, "இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; *அந்தக்கரணத்தில்* ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்" என்று கூறுகிறார். இது உருவகம் (metaphor) அல்ல; மாறாக, எழுத்தின்படியே (literal) பொருள்படும். வளர்ந்து வருகின்ற விஞ்ஞான அறிவின் கண்ணோட்டத்தில் பார்க்கையில், நவீன அறிவியலானது வேதாகம ஞானத்தை மெய்ப்பிக்கிறதாகவே இருக்கிறது.

மறுபிறப்பிற்கு முன்னர், நமது ஆவி செத்ததாயும், தேவனிடமிருந்து பிரிந்தும் இருந்தது என்று முந்தின அத்தியாயங்களில் கற்றுக்கொண்டதை நினைவில்கொள்ளுங்கள். ஆகவே, மனுஷன் ஆத்தும மண்டலத்திலிருந்து (soulish realm) மட்டும் செயல்பட்டு வந்தான். ஆவியில் செத்த மனிதர்களிடம் *ஜீவனின் வெளிச்சம்* இல்லையென்பதால், அவர்கள் முழுவதும் இருளுக்குள் இருக்கின்றனர். ஆவியில் வெளிச்சம் இல்லையென்றால், ஐம்புலன்கள் வாயிலாக பெறும் தகவல்கள் யாவும் அறிவு சார்ந்த மனதில் சிதைந்துபோனதாகத்தான் (distorted) காட்சியளிக்கும். இவ்வாறு சிதைந்துபோன தகவல்களால் நிறைந்த உலகத்தை, ஆதாம் காலத்திலிருந்தே, மனிதர்கள் தங்களை சுற்றி சிருஷ்டித்துவிட்டார்கள். இதனால்தான், மனிதன் செய்ய முயற்சிக்கும் நற்கிரியைகள் கூட அதிக குழப்பம் நிறைந்ததாய் இருக்கிறது. குழப்பம்தான் புதிய ஒழுங்குமுறை போலாகிவிட்டது! மனிதன் உண்டாக்கிய எல்லாவற்றிலும் இந்த குழப்பத்தை நீங்கள் காண முடியும். மதம், அரசியல், கல்வி, வங்கி, சுகாதார அமைப்பு போன்ற எல்லாவற்றிலும் குழப்பமும் ஒருங்கிணைந்தே காணப்படுகிறது. இன்னமும், புதிய பிரச்சனைகளை உருவாக்கக்கூடிய புதிய புதிய யோசனைகளோடு ஒவ்வொரு நாளும் மனிதர்கள் எழும்பி வருகிறார்கள். தேவனை சார்ந்திராத மனதிலிருந்துதான் இப்படிப்பட்ட குழப்பம் நிறைந்த ஒழுங்குமுறைகள் பிறக்கின்றன. இதற்கு மாறாக, தேவனுடைய ஞானம் கூறுவது என்னவென்றால், "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்"[6] என்கிறது.

எரேமியாவின் தீர்க்கதரிசன புத்தகத்தில், தேவன் இவ்வாறு விளம்புகிறார்:

எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்? (எரேமியா 17:9).

(மறுபிறப்புக்கு முன்னர் இதுதான் மனுஷ இருதயத்தின் நிலை என்பதை நினைவில் கொள்ளுங்கள்).

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேதவசனத்தில் உள்ள '*திருக்குள்ளது*' என்ற வார்த்தையை 'காலடிகளின் தடங்களை காட்டுவது' என்றும், '*மகா கேடுள்ளதுமாயிருக்கிறது*' என்ற வார்த்தையை 'குணமாக்க முடியாதபடி நோய்வாய்ப்படுதல்' என்றும் மொழிபெயர்க்கலாம். ஆகவே, தேவன் இங்கு சொல்வதென்னவென்றால்: காலடிகளின் தடங்களை காட்டும் இருதயமானது குணமாக்க முடியாதபடி நோய்வாய்ப்படும்[7] என்பதுதான்.

பொதுவாக, ஒருவர் நடந்து சென்ற பிறகு காலடிகளின் தடங்களை காணலாம். நம்முடைய சுயநினைவுள்ள மனதில் (தேர்ந்தெடுப்பின்படி - by choice) நாம் பதனம் (process) பண்ணிக்கொண்டிருக்கிற எல்லா தகவல்களுக்கும், நம்முடைய ஆழ்மனதில் (இருதயத்தின் ஒரு பகுதி) காலடி தடங்களை விட்டுச் செல்லும் ஆற்றல் உண்டு. தகவல்கள் உணர்ச்சிப்பூர்வமாக வெளிப்படும்போது, அது நமது ஆழ்மனதில் காலடி தடத்தை பதிக்கிறது. சிறு வயதிலிருந்தே, நமது மனம், வெளியிலிருந்து தகவல்களை தொடர்ந்து பெற்று வளர்ந்திருக்கிறது. பெற்ற தகவல்களை நாமாக வியாக்கியானம் செய்து, தீர்ப்பு வழங்குகிறோம். நம்முடைய மறுபிறப்பு வரையில், நமக்குள் தேவனுடைய வெளிச்சம் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆகவே, வெளிச்சம் (ஆவியிலிருந்து) இல்லாமல் வேலை செய்யும் மனதானது, எல்லா தகவல்களையும் இருளில்தான் வியாக்கியானம் செய்து பகுத்து ஆராயும். நாம் வளருவதற்கு, இது ஒன்றுதான் அறிவை பெற்றுக்கொள்ளும் முறையாக இருப்பதால், அது இயல்பற்ற (abnormal) ஒன்றாக நமக்கு தோன்றவில்லை. நம்மை சுற்றியுள்ள அனைவரும் கூட இப்படிப்பட்ட ஒழுங்குமுறையில்தான் செயல்பட்டு கொண்டிருந்தார்கள். இருப்பினும், தகவல்களின்

நாம் கிறிஸ்துவினிடம் (வெளிச்சம்) வரும்வரை, நாம் ஏற்கெனவே அநேக தவறான முன்மாதிரிகளை உருவாக்கிவிட்டோம்.

பேரில் எடுக்கப்பட்ட தவறான தீர்ப்புகளும் முடிவுகளும், சிதைந்துபோன முன்மாதிரிகளைத்தான் (paradigm - முன்னுதாரணங்கள்) உருவாக்கி இருக்கின்றன. மனதிலுள்ள இப்படிப்பட்ட தவறான முன்மாதிரிகள் மூலமாகத்தான் வெளி உலகத்தோடு நாம் தொடர்பு கொள்ளுகிறோம். இது, சிதைவை இன்னமும் அதிகரிக்க செய்தது மட்டுமல்லாமல், இந்த தீய சுழற்சி தொடரவும் ஆரம்பித்தது. நாம் கிறிஸ்துவினிடம் (வெளிச்சம்) வரும்வரை, நாம் ஏற்கெனவே அநேக தவறான முன்மாதிரிகளை உருவாக்கிவிட்டோம். தவறான முன்மாதிரிகள்தான் நம்முடைய வாழ்வின் எல்லா பகுதிகளிலும் காணப்படுகின்ற வேதனைகளுக்கெல்லாம் வேர் ஆகும். ஆம், நம்முடைய இருதயம் குணப்பட முடியாதபடி நோய்வாய்ப்பட்டிருக்கிறது!

பயம் என்பது, ஆவியில் மரித்துப் போயிருக்கும் மனிதர்களுடைய மைய உணர்ச்சியாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், பயம் என்பது, மாம்சத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் உணர்ச்சி ஆகும். ஆதாம் தேவனுடைய சத்தத்தை கேட்டபொழுது, மரத்தின் பின்னால் தன்னை மறைத்துக்கொண்டதில் இந்த பயம் என்ற உணர்ச்சியை காணலாம். அப்பொழுதிலிருந்து, தேவனை குறித்து மனிதனுடைய கண்ணோட்டம் மாறிவிட்டது. பாவத்தினிமித்தம், மனிதன் தேவனைவிட்டு தூரமாக ஓடிப்போகிறான். மனிதன் ஏன் தேவனுக்கு பயந்தான்? அவனுடைய ஆவி மரித்த பின்னர் (தேவனை விட்டு பிரிந்த பின்னர்), தேவனுடைய சத்தத்தை குறித்து மனிதனுடைய புரிந்துகொள்ளுதல் சிதைந்துவிட்டது. இதுதான் அவனுக்குள்ளாக பயத்தை உருவாக்கிவிட்டது. தேவனுடைய சத்தம் மாறவில்லை. மாறாக, அந்த சத்தத்தை ஆதாம் புரிந்துகொண்ட விதம் மாறிவிட்டது! அவனுடைய இருதயத்தில் இருந்த உலகப் பார்வையை (world view) குறித்த முன்மாதிரி மாறிவிட்டது! ஆதாமை

பயம் என்பது, மாம்சத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஓர் உணர்ச்சி ஆகும்.

எவருமே மிரட்டவோ அல்லது துரத்தவோ இல்லை. ஆனாலும், ஆதாம், தேவனுடைய சத்தத்தை ஒரு அச்சுறுத்தலாகவே கண்டு, அவரிடமிருந்து தன்னையே மறைத்துக்கொண்டான். ஆதாம், தன் தகப்பனாகிய பிதாவின் சத்தத்தை தவறாக புரிந்துகொண்டதிலிருந்து, தேவன் எல்லாராலும் தவறாகவே புரிந்துகொள்ளப்படுகிறார்! இருளடைந்த மனிதனின் இருதயங்களில் அன்பின் தேவனை குறித்த சத்தியம் அன்று முதல் சிதைந்துவிட்டது. தேவனுடைய உண்மையான தன்மையை புரிந்துகொள்ளக்கூடிய திறனை மனிதன் இழந்துவிட்டான். எல்லா பிரச்சனைகளுக்கும் தேவன் ஒருவரே தீர்வாக இருக்கையில், மனிதனோவென்றால், இப்பொழுது தனக்கு நேரிடுகிற எல்லா பிரச்சனைகளுக்கும் தேவனையே குற்றஞ்சாட்டுகிறான். மனிதனுடைய இருதயம் இருளடைந்திருப்பதாலும், தேவனுடைய ஜீவனிலிருந்து தன்னையே முறித்துக்கொண்டதாலும் (அந்நியப்படுத்திக்கொண்டதாலும்), அவனால் அதை பார்க்க முடியவில்லை. கெட்ட குமாரன் வீட்டை விட்டு புறப்பட்டு போனான்!

ஆவியில் மரித்த நிலையில் இருக்கும் மனிதர்களால் தேவனுடைய இருதயத்தை புரிந்துகொள்ள இயலாது. தேவன் ஆவியாய் இருப்பதால், இயற்கை மனிதனால் தேவனுடைய காரியங்களை அறிந்துணர முடியாது. ஆவியில் மரித்த நிலையில் இருக்கும் மனிதர்களால் தங்களை தாங்களே இரட்சித்துக்கொள்ள முடியாது. குணமாக்கப்பட முடியாத அளவுக்கு மனிதனுடைய இருதயம் நோய்களினால் பீடிக்கப்பட்டிருக்கிறது! அவன் ஆவியில் குருடனாய் இருக்கிறான்; அவனால் ஆவிக்குரிய மண்டலத்தை அறிந்துணர முடியாது; சிதைந்துபோன புத்தி கூர்மையினால் (distorted judgments) தனக்குத் தானே உண்டாக்கிய தவறான முன்மாதிரிகளால் வசப்படுத்தப்பட்டு இருக்கிறான். ஆம்! தன்னுடைய சொந்த கருத்துக்களால், மனிதன், தன்னையே சிறைப்பிடித்து வைத்திருக்கிறான். இவைகள்தான் உடைந்துபோன ஓர் இருதயத்தின் அடையாளங்களாக இருக்கின்றன. இப்படிப்பட்ட இருதயத்தோடு, மனிதன், தேவனோடு போர் தொடுத்திருக்கிறான்!

பயம் வேதனையுள்ளது; பூரண அன்பு மட்டும்தான் பயத்திற்கான ஒரே தீர்வு. தேவன் அன்பு நிறைந்தவராக இருப்பதால் நமக்கு சமாதானத்தை அருள்கிறார். நம் இருதயங்களில் நாம் உருவாக்கின தீய சுழற்சியிலிருந்து நம்மை காப்பாற்றவே தேவன் விரும்புகிறார். ஆம்! நம்மிடமிருந்து நம்மை காப்பாற்ற தேவன் விரும்புகிறார்! நியாயத்தீர்ப்பு மற்றும் ஆக்கினைத்தீர்ப்பு என்ற பயத்தை இருதயத்திலிருந்து தணிக்காமல், இருதயத்தை குணப்படுத்த முடியாது. இயேசு பிறந்தபொழுது, கூடியிருந்த மேய்ப்பர்களுக்கு முன்பாக ஒரு தேவதூதன் தோன்றி, பரலோகத்திலிருந்து வந்த அன்பின் கடிதத்தை அறிவித்தான்: "பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக"[8]. எல்லாவற்றையும் சீரமைக்கும்படியாக வந்த உலகத்தின் ஒளிதான் இயேசு[9]. இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்[10]. இவ்வுலகத்தின் மிக அத்தியாவசியமான தேவை, இயேசுதான். அவர்தான் எல்லா பிரச்சனைகளுக்கும் பதில். அவரேயன்றி வேறொன்றும் பதில் அல்ல!

தனது ஊழியத்தின் ஆரம்பத்தில், இயேசு, ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தை எடுத்து, கீழ்கண்ட வசனத்தை வாசித்தார்:

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்" (ஏசாயா 61:1).

உடைந்துபோன இருதயத்தின் அடையாளங்களாவன:

- தன்னுடைய சொந்த கற்பனைகளினால் சிறைப்பட்டிருக்கும் (தவறான முன்மாதிரிகளை உருவாக்கிக் கொண்டிருக்கும்).
- ஆவிக்குரிய மண்டலத்திற்கு குருடாயிருக்கும். இயற்கை மண்டலத்தை மட்டும்தான் அறிந்துணர முடியும்.
- நசுக்கப்பட்டு கடினப்பட்டதாக இருக்கும் (இரத்த உறைவு போல - blood clot)

இருதயத்தை குணமாக்காமல், சரீரத்தை குணமாக்க எடுக்கும் எந்த முயற்சியும் வீணென்றும், காற்றை சுதந்தரிப்பதற்கு சமம் என்றும் இப்பொழுது உங்களால் பார்க்க முடிகிறதா?

மறுபடியும் பிறக்கும் முன்பதாக, மனிதனுடைய இருதயத்தின் நிலை இதுதான். மறுபடியும் பிறந்த பின்னரும், தனக்குள்ளிருக்கும் மறுபடியும் பிறந்த ஆவியின்படி நடவாமல் இருக்கும் மனிதனுடைய இருதயத்தின் நிலையும் இதுவே! மறுபிறப்பில், தேவன் நம்முடைய ஆவியை மறுபடியும் சிருஷ்டித்துவிட்டார் என்பதை முந்தின அத்தியாயங்களிலிருந்து புரிந்திருப்பீர்கள். எனினும், ஆவியின்படி நடக்கும்போது மட்டும்தான், குணமாக்கப்பட்ட இருதயத்தின் நன்மைகளை அனுபவிக்க முடியும். அதனால்தான், அப்போஸ்தலனாகிய பவுல், மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கும்படி அறிவுறுத்துகிறார்.

"அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலும் சத்தியத்திலும் நடக்கக்கடவோம்"[11] என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். ஆவியில் நடக்கக்கடவோம் அல்லது சத்தியத்தில் நடக்கக்கடவோம் அல்லது வெளிச்சத்தில் நடக்கக்கடவோம் என்று வார்த்தைகள் மாறுபட்டு இருந்தாலும், அவை யாவும் சொல்லுகிற செய்தி ஒன்றுதான்.

இரட்சிக்கப்பட்ட நபர் ஒருவர் ஆவியின்படி நடக்காவிட்டால், இரட்சிக்கப்படாத நபருக்கு இணையாகவே தன்னைத்தான் ஏமாற்றிக்கொண்டவராக கருதப்படுவார். இரட்சிக்கப்படாதவர்களை பொறுத்தவரையில், தேவனுடைய ஜீவன் அவர்களுக்கு புறம்பாக இருக்கிறது. அவர்களுக்கு அந்த ஜீவன் தேவை என்று அறிந்திருந்தாலும், அதை அவர்கள் நிராகரிப்பதால், அதிலிருந்து தங்களை தாங்களே அந்நியராக்கிக்கொள்கிறார்கள். ஆனால், இரட்சிக்கப்பட்டவர்களுக்கோ, தேவனுடைய ஜீவன் அவர்களுக்குள்ளாக அவர்களுடைய ஆவியில் இருக்கிறது. ஆனால், இவர்களோவென்றால், ஆவியின்படி நடக்க பயிற்சிக்காததினால், அந்த ஜீவனிலிருந்து தங்களை தாங்களே அந்நியராக்கிக்கொள்கிறார்கள். முடிவு என்ன? இருதிறத்தாருமே

இருளில்தான் நடக்கிறார்கள். இருதிறத்தாருமே பாவம் செய்து (பந்தயப்பொருளுக்கான குறியை தவறவிடுவது), தேவனுடைய நன்மைகளை அனுபவிக்க தவறுகிறார்கள். நீங்கள் இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டபோது, கிறிஸ்துவின் ஆவியானவர் உங்களுடைய இருதயத்தின் ஆவி பகுதியில் வந்து இணைந்துவிட்டார். ஆகவே, இருதயமானது ஒளிர தொடங்கியது! நீங்கள் கதவை திறக்கவே, வெளிச்சம் உங்கள் இருதயத்தில் நுழைந்தது. வெளிச்சம், தேவனுடைய வார்த்தை, கிறிஸ்துவின் ஆவியானவர், தேவனுடைய ஜீவன் போன்ற எல்லா வார்த்தைகளும் ஒரே அர்த்தமுள்ளதாக இருப்பதால், வேதாகமம் முழுவதிலும் ஒன்றுக்கொன்று மாற்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது. உங்களுடைய இருதயத்தின் ஆவி பகுதியில், பிதாவாகிய தேவனோடு நீங்கள் இணைக்கப்பட்டுள்ளீர்கள்! நீங்கள் மறுபடியும் பிறந்துவிட்டீர்கள்! இவ்வாறு மறுபடியும் பிறந்தவர்களை, பரத்திலிருந்து உண்டானவர்கள் என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார். நீங்கள் பரலோகவாசிகளாக மாறிவிட்டீர்கள். ஆங்கிலத்தில் ஒரு குறிப்பிட்ட மொழிபெயர்ப்பில் (Amplified Bible) இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது:

நீங்கள் இயேசுவை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டபோது, கிறிஸ்துவின் ஆவியானவர் உங்களுடைய இருதயத்தின் ஆவி பகுதியில் வந்து இணைந்துவிட்டார்.

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் (ஒட்டிக்கொள்வது, நம்புவது, சார்ந்திருப்பது) அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் (சிறப்புரிமை, தனிச்சலுகை) கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது (இயற்கையான கருத்தரித்தல்) மாம்ச

சித்தத்தினாலாவது (உடலின் உந்துதல்) புருஷனுடைய சித்தத்தினாலாவது (இயற்கையான தகப்பன் மூலமாக) பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள் (அதாவது, தெய்வீகமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறப்பு - தேவனால் பிறப்பது - ஆவியில் மறுரூபமடைந்து, புதுப்பிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்) (யோவான் 1:12-13).

எனினும், உங்களுடைய சுயநினைவுள்ள மனமும் ஆழ்மனமும் இன்னமும் எந்த மாறுதலும் இல்லாமல்தான் இருக்கும். மறுபிறப்பில், நீங்கள் ஒரு பயணத்தை துவங்கினீர்கள் - தேவனை உங்கள் இருதயத்தில் அறிந்துகொள்ளவும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் உங்களுடைய புதிய உண்மையான அடையாளத்தை குறித்த சத்தியத்தை ஆழ்மனதில் எழுதுவது என்ற பயணமே! அது, ஒவ்வொரு சூழ்நிலையிலும் நீங்கள் மகிமை மேல் மகிமை அடைகிற வாழ்நாளெல்லாம் தொடருகிற ஒரு பயணம். உங்களுடைய மனதை மாற்றுவது என்பது முற்றிலும் உங்கள் கரத்தில்தான் உள்ளது. அதுமட்டுமல்ல, அது உங்களுடைய பொறுப்பாகவும் இருக்கிறது. தேவன் தம்முடைய பகுதியை செய்து முடித்து விட்டார். இப்பொழுது, உங்களுடைய பகுதியை செய்யும்படியாக அழைப்பு விடுக்கிறார். உங்களுடைய மனதை புதிதாக்கி, தேவனுடைய ஜீவனை அனுபவியுங்கள்!

உங்களுடைய இருதயத்தின் ஆழ்மனதை மாற்றினால் மட்டும்தான் உங்களுடைய வாழ்க்கையை மாற்ற முடியும். உங்களுடைய இருதயத்தின் ஆழ்மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை உங்களிடம் மட்டுமே உள்ளது. கடவுளிடமோ அல்லது எந்த பிசாசிடமோ அல்லது எந்த மனிதர்களிடமோ உங்களுடைய இருதயத்தின் ஆழ்மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமை இல்லை. ஒருவேளை, உங்களுடைய வாழ்க்கையில் கெட்ட சம்பவங்கள் நடந்திருக்கலாம். ஆனால், அதற்கு முக்கியத்துவத்தை கொடுத்து, உங்களுடைய இருதயத்தை அவைகள் தாக்கும்படி அனுமதிப்பது உங்களுடைய தெரிந்தெடுப்புத்தான் (choice). நல்ல செய்தி என்னவென்றால்,

மறுபடியும் நல்ல தெரிந்தெடுப்புகளை கொண்டு உங்கள் இருதயத்தை மாற்றலாம். சங்கீதம் 19:7ல் தாவீது, "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது" என்று கூறுகிறார். கடந்தகால மோசமான அனுபவங்கள், உங்களுடைய வாழ்க்கையை எவ்வளவு அதிகமாக நாசமாக்கி கீறிபோட்டிருந்தாலும், உங்களுடைய வாழ்க்கையை முற்றிலும் மாற்ற தேவனுடைய வார்த்தைக்கு வல்லமை உள்ளது. அவ்வாறு உங்களுடைய இருதயத்தின் ஆழ்மனம் மாறுதலடையும்போது, நீங்கள் மறுரூபத்தை அனுபவிப்பீர்கள்.

இப்பொழுது, உங்கள் இருதயத்தின் ஆழ்மனதை நேர்மறையாக தாக்கி எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்துவது என்று பார்க்கலாம். அப்போஸ்தலனாகிய பவுல், விசுவாசிகளுக்கு கொடுக்கும் கீழ்கண்ட அறிவுரையை சற்றே கவனியுங்கள்:

ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் **தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து**; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். **நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை**. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே (எபேசியர் 4:17-21).

தேவனுடைய ஜீவனுக்கு தன்னையே அந்நியராக்கிக்கொண்ட ஒருவருடைய விளக்கப்படம்தான் மேலே கொடுக்கப்பட்ட வசனம். *அறியாமை என்பதுதான் இதில் கோடிடப்பட வேண்டிய வார்த்தை*. விசுவாசிகளிடமோ, "நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை" என்று கூறுகிறார். கிறிஸ்துவை கற்றுக்கொள்வது என்றால், நமக்காக அவர் என்ன செய்து முடித்திருக்கிறார் என்று மிகவும் துல்லியமாக அறிந்துகொள்ளுதல்.

கிறிஸ்துவானவர், தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் என்ன செய்து முடித்திருக்கிறார் என்று மிகவும் துல்லியமாக அறிந்துகொள்வதில்தான் உங்களுடைய இருதயத்தின் ஆழ்மனம் புதுப்பிக்கப்படுகிற பயணம் ஆரம்பமாகிறது. மறுரூபமடைவதற்கு இதுதான் ஆரம்பப்புள்ளி! மனம் புதிதாவதற்கு துல்லியமான அறிவு மிகவும் முக்கியம். கீழ்கண்ட வசனத்தில் இது மிகவும் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது:

உங்களிலுள்ள சகல நன்மைகளும் **தெரியப்படுகிறதினாலே** உம்முடைய விசுவாசத்தின் **அந்நியோந்நியம்** கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்படவேண்டுமென்று வேண்டுதல்செய்கிறேன் (பிலேமோன் 1:6).

இந்த துல்லியமான அறிவில்லாமல், மறுரூபமடைவதற்கு ஒரே வழியாகிய 'மனம் புதிதாக்கப்படுவதில்' நீங்கள் பங்கெடுக்க விரும்பமாட்டீர்கள்.

மேலுள்ள வசனத்தில் 'தெரியப்படுகிறதினாலே' என்ற வார்த்தையை கிரேக்க பாஷையில் *'எபிக்னோஸிஸ்' (epignosis)* என்று கூறுவர். அதற்கு *'துல்லியமான அறிவு'* என்று பொருள்படும். தேவன் யார் என்றும், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம், தேவன் நமக்காக என்ன செய்து முடித்திருக்கிறார் என்று எல்லா விசுவாசிகளும் மிகவும் துல்லியமாக அறிந்துகொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் விரும்புகிறார். இந்த துல்லியமான அறிவில்லாமல், மறுரூபமடைவதற்கு ஒரே வழியாகிய 'மனம் புதிதாக்கப்படுவதில்' நீங்கள் பங்கெடுக்க விரும்பமாட்டீர்கள். இதற்கு மிஞ்சி என்னால் இதை அழுத்தம் திருத்தமாக கூற முடியாது! இதனால்தான், அப்போஸ்தலர்கள், சபைகளுக்கு இதை குறித்து நேரமெடுத்து நிருபங்கள் எழுதினார்கள்.

மேலுள்ள வசனத்தில் 'அந்நியோந்நியம்' என்ற வார்த்தையை கிரேக்க பாஷையில் *'கொய்னோனியா' (koinonia)* என்று கூறுவர். அதற்கு *'கூட்டு ஒப்பந்தம்' (partnership)* அல்லது *'கூட்டு பங்கேற்பு' (joint participation)* என்று பொருள்படும். பிதா, இயேசுவின் மூலமாக சிலுவையிலே செய்து முடித்ததை குறித்த துல்லியமான தகவல் இல்லையென்றால், உங்களால் இயேசுவோடு (உங்கள் ஆவியில் வாழுகிறவர்) அந்நியோந்நிய ஐக்கியம் கொள்ள முடியாது. கிறிஸ்துவுக்குள்ளாக உங்களுக்கு இருக்கும் நிலைப்பாட்டை, உங்கள் இருதயத்தில் நீங்கள் தொடர்ச்சியாக ஒப்புக்கொள்ளும்போது, கிறிஸ்துவோடு பகிரப்பட்ட இந்த வாழ்க்கையை வாழ்வதற்கான விசுவாசம், தங்குதடையின்றி பொங்கி வழிய ஆரம்பிக்கும். மறுபடியும் ஒன்றை சொல்ல விரும்புகிறேன் - இது தகவல்களை மனதில் சேகரிப்பதை குறித்தது அல்ல. ஆனால், இந்த துல்லியமான தகவல்கள் வாயிலாக சத்தியத்தை நம்முடைய இருதயத்தில் அனுபவிப்பதைத்தான் நாம் இலக்காக வைத்திருக்கிறோம். இது தியானத்தின் மூலமாகத்தான் நடந்தேறுகிறது. தியானத்தை குறித்து அடுத்த அத்தியாயத்தில் மேலும் காணலாம்.

உங்கள் இருதயம்தான் 'நிஜமான நீங்கள்' (real you). உங்களை குறித்து நீங்கள் உங்கள் இருதயத்தில் எவ்வாறு காண்கின்றீர்களோ, அந்தப்படித்தான் நிஜ வாழ்க்கையிலும் நடந்துகொள்வீர்கள். *அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான் (நீதிமொழிகள் 23:7)* என்பதற்கு இதுதான் அர்த்தம். இது, இருதயத்தின் ஆழ்மனதில் தோன்றுகிற ஆழமான யோசனைகளை குறித்து பேசுகிறது. ஆகவே, உங்களை குறித்த சாயலை, உங்களுடைய ஆழ்மனதில் மாற்றினால், உங்களுடைய வெளிப்புறமான நடக்கைகள், எந்தவிதமான முயற்சியுமின்றி தானாகவே மாற ஆரம்பிக்கும். உடைந்தபோன இருதயமுடையவர்களுக்கு தங்களை குறித்தே ஒரு ஆரோக்கியமான உணர்வு இருக்காது. அதனால், எப்பொழுதுமே மற்றவர்களுடைய அங்கீகாரத்தை எதிர்பார்த்துக்கொண்டே இருப்பார்கள். இந்த நிலையில் இருக்கும்பொழுது, அவர்கள் மற்றவர்களை அடக்கி

ஆள முயற்சிக்கிறார்கள் அல்லது மற்றவர்கள் தங்களை அடக்கி ஆளுவதற்கு அனுமதிக்கிறார்கள். எனினும், தங்களுடைய மனதை புதுப்பிக்கும்போது, கிறிஸ்துவுக்குள் இருக்கும் தங்களுடைய புதிய அடையாளத்தில் திருப்தியடைந்து, தங்களுக்குள் சமாதானத்தையும் அனுபவிக்கிறார்கள். இந்த உள்ளார்ந்த சமாதான உணர்வானது, அவர்களுக்குள்ளாக ஓர் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, மனிதர்களுக்கும் தேவனுக்கும் முன்பாக தைரியமாகவும் நிற்க செய்கிறது. இனியும் அவர்கள் வெளிப்புறமான அங்கீகாரத்தை நாடாமல், கிறிஸ்துவுக்குள் தாங்கள் பரிபூரணர்களாக இருப்பதை அனுபவிக்க ஆரம்பிக்கிறார்கள்.

எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்[12] என்று ஞானமானது சத்தமிட்டு கூப்பிடுகிறது. தேவனுடைய வார்த்தையை கொண்டு உங்களுடைய இருதயத்தில் நீங்கள் தாக்கத்தை ஏற்படுத்தும்பொழுது, வாழ்க்கையின் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும். ஒருவேளை, வியாதி உங்கள் வாழ்க்கையின் பிரச்சனையாக இருந்தால், தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அதையும் சீராக்கிவிடலாம். இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இந்த புத்தகத்தின் நோக்கமாகும்! இதை நீங்கள் புரிந்துகொள்ளாவிடில், ஒருபோதும் வெற்றியை அனுபவிக்க முடியாது. வார்த்தையின் வழியை விட்டு, வேறு வழியில் வெற்றியை அடைந்தாலும், அது வெகுகாலத்திற்கு நிலைக்காது. இதை புரிந்துகொண்டால்தான், நாம் நம் வாழ்க்கைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு செய்யும்பொழுது, மற்றவர்களையும் சூழ்நிலைகளையும் குற்றஞ்சாட்டுவதை நிறுத்திவிட்டு, நம்மையே நாம் தாழ்த்தி, தேவனுடைய வார்த்தையை நாடி, இயேசு சொன்னதை நாம் செய்ய முற்படுவோம் - அதாவது, அவருடைய வார்த்தையை நமது இருதயத்தில் விசுவாசித்து ஏற்றுக்கொள்வோம்.

சுருக்கமாக சொல்வதென்றால்,

- ஆவி, சுயநினைவுள்ள மனம் மற்றும் ஆழ்மனம் ஆகியவைகளை உள்ளடக்கியதுதான் இருதயம்.

- மறுபிறப்பில், உங்களுடைய ஆவி புதுப்பிக்கப்பட்டு மறுபடியும் சிருஷ்டிக்கப்படுகிறது.
- சுயநினைவுள்ள மனதானது மறுரூபப்படுவதற்கு துல்லியமான தகவல் என்பது மிகவும் அவசியம்.
- தியானத்தின் மூலமாகத்தான் ஆழ்மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

உங்களுடைய முழு இருதயமானது ஆரோக்கியமடையும்போது, நீங்கள் மறுரூபமடைவீர்கள். குணமாக்கப்பட்ட இருதயமானது (பரிபூரணமான இருதயம்), நீங்கள் உலகத்தை பார்க்கும் விதத்தையே மாற்றிவிடும். இந்த புதிய கோணத்தில், நீங்கள் சமாதானத்திலும் அமைதியிலும் செயல்பட ஆரம்பிப்பீர்கள். "சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்" என்று நீதிமொழிகள் 14:30 கூறுவதின் அர்த்தம் இதுதான். இது ஒரு உருவகம் அல்ல; மாறாக, எழுத்தின்படியே பொருள்படும்! வாழ்க்கையில் நன்மைகளை கண்டடைவது என்பது, இருதயத்தின் நிலையை சார்ந்தது. மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை (நீதிமொழிகள் 17:20). மறுபடியும் பிறந்த விசுவாசிகள், கிறிஸ்துவுக்குள் உள்ள தங்களுடைய ஆவியின் நிலை மீது கவனம் செலுத்தாமல் செயல்பட ஆரம்பித்தால், தங்களுடைய இருதயத்தை சிதைத்து குழப்பத்தில் ஆழ்த்திவிடுவார்கள். பரிபூரணமாக்கப்பட்ட இருதயம் மட்டுமே சரீரத்திற்கு ஜீவனை கொடுக்க முடியும். எல்லா வேதனைகளுக்கும் காரணம், திருக்குள்ள இருதயமே. இதை அறியாததினால், எல்லாவிதமான வலிகளுக்கும் நாம் பிசாசை குற்றம் சாட்டுகிறோம். ஆனால், இருதயம் குணமாவதே மிகவும் அவசியமானது. உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் என்பதை நினைவில்கொள்ளுங்கள். எனினும், நாம் மாம்சத்தின்படி நடக்கும்போது, பிசாசுக்கு இடமளிக்கிறோம். "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" (எபேசியர் 4:27) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அதாவது, நாம் மாம்சத்தின்படி நடக்கும்போது, பிசாசுக்கு இடம் கொடுக்கிறவர்களாக இருப்போம். கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய அடையாளத்தை

குறித்த ஆழமான உணர்வும் எண்ணமும், 'ஆவியில் நடக்கும் வாழ்க்கைக்கு' மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. இந்த எண்ணம் உங்களை அதிகமாக ஆளுகை செய்யும்போது, சமாதானத்திலும் நன்றியறிதலிலும் செயல்படுவது என்பது உங்களுடைய இயல்புநிலையாக மாறிவிடும்.

ஆழ்மனம்

உங்களை குறித்த எல்லாவற்றையுமே ஆழ்மனம் அடக்கி ஆளும்.

சரீரத்தில் ஆழ்மனதின் இருப்பிடத்தை துல்லியமாக சொல்லிவிட முடியாது. ஆழ்மனம் என்பது 'தானியக்க விமானி' (autopilot) போன்றது. உங்களுக்கே தெரியாமல், உங்களை குறித்த எல்லாவற்றையுமே ஆழ்மனம் அடக்கி ஆளும். சரீரத்தில் உள்ள எல்லா உறுப்புகளின் உயிரணுக்களிலும் (cells) ஆழ்மனம் இருக்கிறது என்று 'நரம்பியல் மனநோய்' (neuropsychiatry) துறையின் மருத்துவ ஆராய்ச்சி கூறுகிறது. இதை 'உயிர்மங்களால் ஆன நினைவுகள்' (cellular memories) என்று அழைக்கின்றனர். 'மனம்' என்ற தலைப்பு, மிகவும் நவீனமான 'அறிவாற்றல் சம்பந்தமான நரம்பியல் விஞ்ஞானிகளுக்கே' (cognitive neuroscientist) புதிராகத்தான் உள்ளது. என்னுடைய பார்வையில், 'மனம்' என்ற காரியத்தில், மருத்துவ துறையானது, வேதாகம ஞானத்தோடு இசைந்துகொண்டிருக்கிறது.

சத்தியத்தை உங்கள் இருதயத்தில் எழுதுங்கள், உங்கள் இருதயத்தில் எப்பொழுதும் அணிந்துகொள்ளுங்கள், அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள் - இவ்வாறு வேதாகமத்தில் நீதிமொழிகள் என்ற புத்தகத்தில், அநேக அறிவுரைகளை வாசிக்கிறோம். சிலுவை, தேவனுடைய அன்பு, புது பிறப்பு போன்றவற்றை நீங்கள் வேதாகமத்தில் ஆராய்ந்து, நேரமெடுத்து தியானிக்கும்போது, உங்களுடைய ஆழ்மனதில் தகவல்களை எழுத ஆரம்பிப்பீர்கள். சத்தியத்தை உங்களுடைய

இருதயத்தில் எழுதுவது என்றால் இதுதான் ஆகும்[13]. இந்த தகவல் உங்கள் ஆவியில் ஏற்கெனவே இருக்கிறது. நீங்கள் தியானிக்கும்போதோ, உங்களுடைய ஆவியில் இருக்கும் அந்த உண்மையை, சுயநினைவுள்ள மனதின் வாயிலாக ஆழ்மனதுக்கு கடத்துகின்றீர்கள். தகவல்களும் உணர்ச்சிகளும் கலந்து உங்கள் இருதயத்தில் சத்தியத்தை எழுதும். உங்கள் அடையாளத்தையே மாற்றக்கூடிய வல்லமை பொருந்தியதாக அந்த தகவல்களை நீங்கள் பார்க்காவிட்டால், அந்த தகவல்கள் உங்களுடைய ஆழ்மனதில் எழுதப்படாது.

நம்முடைய சுயநினைவுள்ள மனதை கற்பிப்பதற்காகத்தான் தேவனுடைய வார்த்தை கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே மறுரூப செயலாக்கத்தின் துவக்கம் ஆகும். எனினும், தியானத்தின் மூலமாகத்தான் அந்த சத்தியங்கள் இருதயத்தில் உயிர்ப்பிக்கப்பட்டு மெய்யாகும். இதை குறித்து மேலும் அடுத்த அத்தியாயத்தில் காணலாம். உங்களுடைய ஆவியில் தேவனுடைய வார்த்தை எவ்வாறு நாட்டப்பட்டது என்று 'புது பிறப்பு' என்ற அத்தியாயத்தில் கற்றுக்கொண்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். அப்போஸ்தலனாகிய யாக்கோபு, "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாய் இருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்"[14] என்று ஊக்கப்படுத்துகிறார். நாட்டப்பட்ட வசனத்தை *ஏற்றுக்கொள்வது* என்றால் என்ன? தேவனுடைய வார்த்தையை ***செயல்படுத்த*** வேண்டும் என்ற நோக்கோடு, சுயாதீன பிரமாணத்தை தொடர்ந்து உற்று நோக்கும்படியாக விசுவாசிகளை யாக்கோபு அறிவுறுத்துகிறார். உங்களுடைய ஆவியில் ஏற்கெனவே நாட்டப்பட்டதைத்தான் உங்களுடைய சுயநினைவுள்ள மனதில் *ஏற்றுக்கொள்கின்றீர்கள்*. ***"செயல்படுத்துவது."*** என்ற வார்த்தை *"கவிதை போக்கில் செயல்படுத்துபவர்" (poetic performer)* என்று பொருள்படுகிற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கவிஞர் என்றால், தன்னுடைய எல்லா உணர்ச்சிகளையும், வார்த்தைகளையும், உடல் சைகைகளையும் பயன்படுத்தி தகவலை தெரிவிப்பவர்

ஆவார். இது தியானத்தின் ஒருவகையான வடிவம் ஆகும்! ஐம்புலன்களை கொண்டு உங்களுடைய மறுபடியும் பிறந்த ஆவியை அறியவோ புரிந்துகொள்ளவோ முடியாது. ஆனால், மனதை மறுரூபமாக்குவதில் ஐம்புலன்களை ஈடுபடுத்தாவிட்டால், சுயநினைவுள்ள மனதால் தகவல்களை கிரகித்துக்கொள்ள முடியாது. ஆகவே, நமது மனதை புதிதாக்குவதற்காகத்தான் தேவன் எழுதப்பட்ட வார்த்தையை கொடுத்திருக்கிறார். நீங்கள் தேவனுடைய வார்த்தையை உற்று நோக்கி, தியானிக்கும்போது (கவிதை நயமாக செயல்படுத்தும்போது), உங்கள் ஆவியில் இருக்கும் சத்தியத்தை உங்களுடைய ஆழ்மனதிற்கு கடத்திவிடும்.

தகவல்களும் உணர்ச்சிகளும் கலந்து உங்கள் இருதயத்தில் (ஆழ்மனதில்) சத்தியத்தை எழுதும். அப்பொழுது, உங்கள் முழு சரீரமும் வெளிச்சமாக இருக்கும். மறுரூபமடைவதற்கான திறவுகோல் தியானம்தான். அதை கொண்டு நீங்கள் உங்களையே சத்தியத்தால் சூழ்ந்துகொள்கின்றீர்கள்.

இயேசு சொன்னார்:

ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி, அதை விளக்குத்தண்டின்மேல் வைப்பான். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்; உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும். ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறதுபோல, உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்றார் (லூக்கா 11:33-36).

மேலுள்ள வசனத்தில் "கண்கள்" என்றால் 'கவனம்' என்று பொருள்படும். எபிரெய பாஷையில், அறிவு என்பது வெளிச்சத்திற்கும், அறியாமை என்பது இருளுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. உங்களுடைய

சுயநினைவுள்ள மனதை கொண்டு தேவனுடைய வார்த்தையின் மீது கவனம் செலுத்தும்போது, ஏற்கெனவே உங்களுடைய ஆவியில் உள்ள வெளிச்சமானது, ஆவியிலிருந்து ஆழ்மனதிற்குள் நுழைய ஆரம்பிக்கும். இது நடக்கும்பொழுது, நீங்கள் விளக்கைக் கொளுத்தி விளக்குத்தண்டின் மேல் வைக்கின்றீர்கள். அப்பொழுது, உங்களுடைய முழு சரீரமும் வெளிச்சமாயிருக்கும். அதில் இருள் இருக்காது! வியாதிகள் (இருளின் ஒருவித வடிவம்) உங்களுடைய சரீரத்திலிருந்து தானாகவே விழ ஆரம்பிக்கும். அது பரம்பரை வியாதியோ அல்லது மரபணு சம்பந்தமான நோயோ அல்லது சுற்றுச்சூழல் நிமித்தமாக வந்த வியாதியோ - எதுவாக இருந்தாலும், வெளிச்சம் வந்ததும் இருள் விலகித்தான் ஆக வேண்டும். நீங்கள் குணமடைவது மட்டுமல்லாமல், தெய்வீக ஆரோக்கியத்தையும் அனுபவித்து மகிழ ஆரம்பிப்பீர்கள். மெதுவாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கைக்குள்ளாக நகர்ந்திருப்பீர்கள்! நித்திய ஜீவனை அனுபவிப்பதில் இது ஆரம்பம்தான்! இயேசு நமக்கு ஒப்பற்ற ஞானத்தை தருகிறார் என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆனால், அதை நடைமுறைபடுத்துவது நமது பொறுப்பாக இருக்கிறது. உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பதற்கு, மனதை புதுப்பிப்பதோ அல்லது புதுப்பிக்காமல் இருப்பதோ உங்கள் இஷ்டம் அல்ல; மாறாக, அது கட்டாயமான ஒன்றாகும். நாம் இந்த மனதை புதுப்பிக்கிற செயல்முறையில் ஈடுபடாமல் இருந்தால், விளக்கைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைப்பவர்களாக காணப்படுவோம். அவ்வாறு செய்வதால், இருளை கொண்டு வெளிச்சத்தை மறைக்கிறவர்களாக காணப்படுவோம். மற்றொரு இடத்தில் இயேசு இவ்வாறு சொல்கிறார்: "உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!"[15]

வேதவசன ஆதாரங்கள்

1. மத்தேயு 15:19ல், இயேசு, "இருதயத்திலிருந்து எல்லாவிதமான பொல்லாத காரியங்களும் புறப்படும்" என்றார். இங்கே, இருதயம் என்பது, மறுபடியும் பிறக்காதவர் அல்லது மறுபடியும் பிறந்தும் ஆவியானவரால் நடத்தப்படுவதற்கு ஒப்புக்கொடுக்காதவருடைய சுயநினைவுள்ள மனம் மற்றும் ஆழ்மனதை குறிக்கிறது.

   பேதுரு 3:4ல், ஆவி என்கிற மறைந்திருக்கும் இருதயத்தை குறித்து பேதுரு பேசுகிறார்.

   மாற்கு 4ஆம் அதிகாரத்தில், இயேசு, "வசனமாகிய விதை இருதயத்தில் விழுந்தவுடன், பிசாசு வந்து அதை திருடிவிட்டான்" என்றார். இங்கே, இருதயம் என்பது, சுயநினைவுள்ள மனதை குறிக்கிறது. இந்த நபர், நேரம் எடுத்து வார்த்தையை தியானிக்கவில்லை. அப்படிப்பட்ட நபருடைய எண்ணமெல்லாம் உலகப்பிரகாரமான காரியங்கள் மீது அதிகமாக பதிந்திருக்கும்; அந்நபருடைய மனதில் பிரசங்கியாரின் போதனைகள் பதிவதில்லை.

2. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; புசியும், பானம்பண்ணும் என்று அவன் உன்னோடே சொன்னாலும், அவன் இருதயம் உன்னோடே இராது (நீதிமொழிகள் 23:7).

3. தண்ணீரில் முகத்துக்கு முகம் ஒத்திருக்குமாப்போல, மனுஷரில் இருதயத்திற்கு இருதயம் ஒத்திருக்கும் (நீதிமொழிகள் 27:19).

4. ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது (2 கொரிந்தியர் 4:16).

5. ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ரோமர் 4:22).

6. கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் (நீதிமொழிகள் 10:22).

7. Theological Wordbook of the Old Testament. Word no:1676c, showing footprints. Word no:135, incurably sick.

8. உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:14).

9. இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் (மத்தேயு 4:15).

10. மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று (மத்தேயு 4:15).

11. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7).

12. எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும் (நீதிமொழிகள் 4:23).

13. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள் (நீதிமொழிகள் 7:3).

14. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் (யாக்கோபு 1:21).

15. உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (மத்தேயு 6:23).

7

தியானம் – சுகம் மற்றும் ஆரோக்கியத்திற்கான திறவுகோல்

உங்களுடைய ஆவியில் உள்ள உயிர்த்தெழுதலின் வல்லமைக்கும், அதை உங்கள் அனுதின வாழ்வில் அனுபவிப்பதற்கும் இடையில் விடுபட்ட இணைப்புத்தான் உங்கள் இருதயத்தின் தியானம். தியானம் என்பது, புகழ்பெற்ற தேவமனிதர்களின் வாழ்க்கைமுறையாக இருந்துள்ளது. வேதாகமம் முழுவதும், நம்மையும் அவ்வாறு செய்யும்படி ஊக்கப்படுத்தும் சம்பவங்களால் நிறைந்திருக்கிறது. ஆனால், தியானம் என்றால் என்ன? உங்களை குறித்து தேவனுடைய வார்த்தையில் சொல்லப்பட்ட உண்மைகளை உங்களுடைய இருதயத்தில் கண்டு (படமாக்கி), அது மாத்திரமே உங்கள் இருதயத்தில் உண்மையாய் நிலைக்கும் வரை அதை தொடர்ந்து இருதயத்தில் காண்பதுதான் தியானம் ஆகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், கற்பனையில் மறுபடியும் மறுபடியும் அதையே நினைத்துக் கொண்டிருப்பது ஆகும். ஒரு குறிப்பிட்ட சத்தியம் இப்பொழுது உங்கள் வாழ்க்கையில் நிஜமாகியிருந்தால் எப்படி இருக்குமோ, அவ்வாறு உங்களையே நீங்கள் கற்பனை செய்து பார்ப்பதுதான் வேதப்பூர்வமான தியானம் ஆகும். அறிவு சார்ந்த மனதில் ஒரு வேதவசனத்தை வெறுமனே யோசிப்பது தியானம் அல்ல.

இன்னும் ஆழமாக தியானத்தை குறித்து நாம் அறிந்துகொள்ளும் முன்னர், தேவனுடைய வார்த்தையை தியானிப்பது உங்களுடைய சரீரத்திற்கு என்ன செய்கிறது என்பதை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டிலிருந்து ஒவ்வொரு எடுத்துக்காட்டுகளை காண்பிக்க விரும்புகிறேன்.

எடுத்துக்காட்டு 1

தனது 85-வது வயதில், ஏனாக்கியரை கைப்பற்றும்படி சென்றவன்தான் காலேப். யோசுவாவோடு அவன் செய்த உரையாடல், வேதாகமத்தில் யோசுவா 14ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது, தெய்வீக சுகத்திற்கான முக்கியமான ஞானத்தின் திறவுகோலை வெளிப்படுத்துகிறது[1]. கானான் தேசத்தை வேவுபார்ப்பதற்காக, மோசே 12 வேவுகாரர்களை அனுப்பினார். வேவுகாரர்களில் ஒருவனாக அனுப்பப்படுகையில், காலேபின் வயது 40. காலேப் மற்றும் யோசுவா ஆகிய இருவரும், அந்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளலாம் என்ற நற்செய்தியை கொண்டு வந்தார்கள். ஆனால், மீதமுள்ளவர்களோ துர்ச்செய்தியை பரப்பினார்கள்[2]. அந்த துர்ச்செய்தியினிமித்தம், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை, இஸ்ரவேலர்களால் சீக்கிரத்தில் சுதந்தரிக்க முடியவில்லை. மேலும் 45 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாயிற்று. இப்பொழுது 85 வயதான காலேப், மோசேயிடம் **தன் இருதயத்தில் கண்டதை** எவ்வாறு கூறினானோ, அதை அப்படியே யோசுவாவிடம் விவரித்துக் காண்பித்தான். ஆனால், மற்றவர்களோவென்றால், தங்கள் கண்களால் கண்டதை கூறினார்கள். காலேப் கண்ட சூழ்நிலையும் அதேதான். ஆனால், அவனுடைய கணிப்பானது, ஏற்கெனவே இஸ்ரவேலர்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் இருந்தது. தேவனால் பேசப்பட்ட வார்த்தையை காலேப் தன்னுடைய இருதயத்தில் உள்வாங்கியிருந்ததால், அவனுடைய கண்ணோட்டம் வித்தியாசமாக இருந்தது. இந்த கோணத்திலிருந்து பார்த்ததால், அந்நிலத்தின் இராட்சதர்களை தங்களால் மேற்கொள்ள முடியும்

என்று கண்டான். ஆனால், மற்றவர்களுடைய அவநம்பிக்கையினால், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் இஸ்ரவேலர்களால் நுழைய முடியவில்லை. காலேப் 85 வயதாக இருந்தபோதிலும், 40 வயது நபருக்குரிய பெலன் அவருக்குள் இருந்தது. அது எப்படி? தன்னுடைய இருதயத்தில் உருவாக்கி வைத்திருந்த நிஜத்தின்படி, அவருடைய இருதயமானது, அவருடைய பெலத்தை முதிர்ச்சியடைய விடாமல் அந்த வயதிலேயே நிறுத்தி வைத்திருந்ததுதான் காரணம். இந்த இடத்தில்தான், தெய்வீக ஆரோக்கியம் நிறைந்த வாழ்க்கைக்கான இரகசியம் இருக்கிறது! தேவனுடைய வார்த்தை அவனுடைய இருதயத்தில் இருந்தது. அவனுடைய வாயின் அறிக்கையானது, இருதயத்தின் நம்பிக்கையோடு ஒத்திருந்தது. தேவனுடைய வார்த்தை மற்றும் அதினால் உண்டான இருதயத்தின் படமும் வாயின் அறிக்கையும் ஒன்றாக இசையும்போது, விசுவாசம் உயிர் பெறுகிறது. இப்படித்தான் விசுவாசம் வேலை செய்கிறது. இந்த எடுத்துக்காட்டிலிருந்து எல்லாருக்கும் கிடைக்கிற தேவனுடைய ஞானம் இதுதான். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உங்களுடைய இருதயத்தில் உங்களையே நீங்கள் பார்ப்பதுதான் தெய்வீக ஆரோக்கியம் நிறைந்த வாழ்க்கை ஆகும்.

எடுத்துக்காட்டு 2

ஒருமுறை, அப்போஸ்தலனாகிய பவுல், கப்பற்சேதத்தில் சிக்கிக்கொண்டு, மெலித்தா தீவில் கரை சேர்ந்தான்[3]. கரையில், நெருப்பு மூட்டுவதற்கு சில விறகுகளை வாரி போடுகையில், ஒரு விரியன்பாம்பு அவனை கடித்தது. ஆனால், அந்த தீவின் மக்கள் ஆச்சரியப்படும்படியாக, பவுலின் சரீரத்தில் அந்த விஷம் வேலை செய்யவில்லை. இது எப்படி ஆகும்? பாம்பு நிஜமானது. பாம்பு கடித்ததும் நிஜமான சம்பவம். பாம்பின் விஷம் பவுலின் சரீரம் முழுவதிலும் பரவிக்கொண்டும் இருந்தது. ஆனாலும், விஷத்தின் வல்லமையைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்த ஏதோ ஒன்று அந்த விஷத்தை நடுநிலைப்படுத்தி (neutralized) எதிர்த்து நின்றது. தம்முடைய நாமத்தின் மேல் விசுவாசம் வைப்பவர்களை குறித்து

இயேசு கூறியது பவுலுடைய சூழ்நிலையில் மெய்யாயிற்று! சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது[4] என்று இயேசு கூறியிருந்தார். அவரை போலவே, சூழ்நிலைகள் மீது அதிகாரம் செலுத்தும் இனத்தை குறித்து இயேசு பேசுகிறார். இது ஒரு மூடநம்பிக்கை அல்ல. இது விசுவாச வாழ்க்கைமுறையின் உண்மை ஆகும். ஆனால், நம்முடைய எஜமானாகிய இயேசுவின் இந்த வார்த்தைகளை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்பது துக்ககரமான விஷயம். ஆம்! மனித அறிவு சார்ந்த தர்க்கத்தில் நாம் ஈடுபடுவதால், தேவன் தம்முடைய ஞானத்தில் அவருடைய வார்த்தையின் மூலம் சொல்ல வருவதை நாம் புரிந்துகொள்ள தவறிவிட்டோம். பவுல் விசுவாசம் நிறைந்த மனிதன். இயேசுவின் வார்த்தைகள் மற்றும் அவருடைய கோட்பாட்டை அடிப்படையாக கொண்டதுதான் பவுலின் நிஜ வாழ்க்கை. தேவனுடைய வார்த்தையை தியானிப்பதே பவுலுடைய வாழ்க்கையாக இருந்தது. அவனுடைய இருதயத்திலுள்ள நிஜமானது (reality), உயிர்த்தெழுதலின் வல்லமையை அடிப்படையாக கொண்டது. ஆவியானவர், சாவுக்கேதுவான பவுலுடைய சரீரத்திற்கு உயிர் கொடுத்திருந்தார்[5].

மனப்பாடம் செய்வதைத்தான் தியானம் என்று பலர் எண்ணுகின்றனர். மக்கள் அநேக வசனங்களை மனப்பாடம் செய்திருக்கின்றனர். ஆனால் ஒன்று கூட அவர்களுக்கு பலனை தரவில்லை. அவர்கள், வேதாகமத்தை தியானிக்க வேண்டிய பிரகாரம் செய்யாமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, தியானியுங்கள்!

தியானத்தில், நாம் நமது இருதயங்களில் காட்சிகளை உருவாக்குகிறோம்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை அடிப்படையாக கொண்டு, தியானத்தில், நாம் நமது இருதயங்களில் காட்சிகளை உருவாக்குகிறோம். எடுத்துக்காட்டாக, ஒருவேளை உங்களால்

நடக்க முடியவில்லையென்றால், 'அவருடைய தழும்புகளால் நீங்கள் குணமானீர்கள்' என்ற சத்தியத்தின்படி, உங்களுடைய சரீரம் உங்களை செய்ய விடாமல் தடுக்கிற செயல்களுக்கு விரோதமாக, நீங்கள் எழுந்து, நடந்து, ஓடுவதாக உங்களுடைய இருதயத்தில் பார்க்க ஆரம்பியுங்கள். இந்த உண்மை மட்டும் உங்கள் இருதயத்தை ஆக்கிரமிக்கும் வரையில், இதையே தொடர்ந்து பார்த்துக்கொண்டு இருங்கள். உங்கள் இருதயம், அந்த குறிப்பிட்ட சத்தியத்திற்கு முழுவதும் பணிந்தவுடன், விசுவாசம் தானாகவே துள்ளிக் குதிக்கும். அதன் பின்னர், நீங்கள் எந்தவிதமான வலியுமில்லாமல் நடக்க ஆரம்பித்துவிடுவீர்கள். நீங்கள் ஒரு சத்தியத்தை ஆழ்ந்து சிந்தித்து, உங்கள் ஆத்துமாக்களில் உணர்ச்சிகளை உருவாக்கும்போது, அந்த சத்தியத்தை உங்கள் இருதயங்களில் எழுதுகின்றீர்கள் என்று அர்த்தம். ஒரு சத்தியமானது உங்களுடைய அடையாளத்தை எவ்வாறு மாற்றுகிறது என்ற கோணத்திலிருந்து நீங்கள் பார்க்காவிட்டால், அது உங்களுடைய இருதயத்தின் நம்பிக்கையாகாது.

உங்களுடைய இருதயத்தின் நம்பிக்கை என்ற எல்லைகளுக்குள்ளாகத்தான் உங்களுடைய விசுவாசம் வேலை செய்யும். உங்கள் இருதயமே 'நிஜமான நீங்கள்' என்பதால், உங்கள் இருதயத்தில் எதை நம்புகிறீர்களோ, அதுதான் உங்களுடைய வாழ்க்கையின் அனுபவமாக மாறும். இதுதான் இருதயத்தின் அற்புதம்! இப்படித்தான் வேதாகம மனிதர்கள் அனைவருமே செயல்பட்டார்கள். ஆனாலும், 21ஆம் நூற்றாண்டின் அறிவு சார்ந்த மனங்கள், விசுவாசத்தை குறித்த அறிவை இழந்துவிட்டது. இருப்பினும், நீங்கள் உங்கள் அபிப்பிராயங்களை தள்ளிவைத்துவிட்டு, அவருடைய வழியை பின்பற்றுவீர்களானால், விசுவாசம் உங்களுக்கு பலன் கொடுக்கும்.

உங்களுடைய இருதயத்தின் நம்பிக்கை என்ற எல்லைகளுக்குள்ளாகத்தான் உங்களுடைய விசுவாசம் வேலை செய்யும்.

தியானத்தை குறிக்கும் மற்ற சொற்றொடர்கள் - தேவனுக்காக காத்திருத்தல், அவரில் நிலைத்திருத்தல், அவருடைய சமூகத்தில் வசிப்பது, அவருடைய மறைவிடத்திற்குள் நுழைவது. ஆம்! இவை யாவும் தியானத்தின் வெவ்வேறு வகைகள் ஆகும்.

தேவனுக்காக காத்திருத்தல்

காத்திருத்தல் என்ற வார்த்தையை குறிப்பிடும் எபிரெய வார்த்தைக்கு *பின்னிப் பிணைந்திருப்பது* அல்லது *ஒன்றோடொன்று முறுக்கி கொண்டிருப்பது* ஆகும். தம்முடைய ஆவியானவர் மூலமாக தேவன் ஏற்கெனவே உங்களுடைய ஆவியில் குடிகொண்டிருக்கிறார். இப்பொழுது நீங்கள் செய்வதெல்லாம், உங்களுடைய மனதின் கவனத்தையெல்லாம் திசை திருப்பி, அதை உங்களுடைய ஆவியை (உங்களுக்குள்ளிருக்கும் கிறிஸ்துவின் ஆவியானவர் / தேவனுடைய வார்த்தை / பரிசுத்த ஆவியானவர்) சுற்றி வரும்படி செய்வதுதான். இவ்வாறு நீங்கள் செய்யும்போது, தியானம் செய்கிறீர்கள் அல்லது தேவனுக்காக காத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள்படும். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இப்பொழுது நிஜமாகி உங்கள் வாழ்க்கையில் வெளிப்பட்டிருந்தால் எப்படி இருக்குமோ, அவ்வாறு உங்களுடைய இருதயத்தில் நீங்கள் காண ஆரம்பிப்பீர்கள். ஐம்புலன்கள் உருவாக்கிய உண்மைக்கு புறம்பாக நீங்கள் ஒரு புதிய உண்மையை உருவாக்கி கொண்டிருப்பீர்கள்.

வேதாகமத்தில் உன்னதப்பாட்டு என்ற புத்தகம், ஒரு ராஜாவுக்கும் அவருடைய காதலிக்கும் நடக்கும் ஓர் உரையாடலின் கதை ஆகும். அதில் இவ்வாறான சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது - *ராஜா தமது பந்தியிலிருக்குந்தனையும் (உன்னதப்பாட்டு 1:12), ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டுவந்தார் (உன்னதப்பாட்டு 1:4).* இப்படிப்பட்ட வார்த்தைகள், நம்முடைய ஆவியில் நாம் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதை காட்டும் படங்களாக இருக்கின்றன. நாம் செய்ய வேண்டியதெல்லாம், நாம் நமது ஆவியில் எவ்வாறு இருக்கிறோமோ (கிறிஸ்துவுக்குள்ளாக நாம் யார் என்ற அடையாளம்), அதன் மீது மாத்திரம் நமது மனதை

பதிய வைக்க வேண்டும். இதைத்தான் ஆவிக்குரிய மனம் என்று அழைக்கிறோம். இதற்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உங்களை குறித்து எண்ண வேண்டாம்! ஏசாயா 40:31ல், "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்" என்று வாசிக்கிறோம். தேவனுக்கு காத்திருப்பது, நமது வாழ்க்கையை - ஆவி, ஆத்துமா, சரீரத்தை மறுரூபப்படுத்தும்!

திராட்சைச்செடியில் நிலைத்திருப்பது

யோவான் 15ஆம் அதிகாரத்தில், இயேசு, தியானத்தை குறித்து வேறொரு படத்தை காண்பிக்கிறார் - திராட்சைச்செடியில் நிலைத்திருப்பது!

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவான் 15:5-7).

இயேசுதான் திராட்சைச்செடி. நாம் கொடிகள்.

இயேசுதான் திராட்சைச்செடி. நாம் கொடிகள். இன்னும் துல்லியமாக சொல்ல வேண்டுமென்றால், தமது வார்த்தையினால் இயேசு வாழும் நமது ஆவிதான் திராட்சைச்செடி; நமது மனம்தான் கொடிகள். நமது மனதை ஆவியின் மீது பதிக்கும்போது (ஆவிக்குரிய மனம்), நாம் திராட்சைச்செடியில் நிலைத்திருக்கிறோம் என்று

அர்த்தம். நமது மனதின் கவனத்தை இயேசுவின் மீது திருப்புவது என்றால், நாம் அவரோடு ஒன்றிணைந்து இருப்பதையும், அவருக்குள் நமக்கிருக்கும் சகல நன்மைகளையும் (ஆரோக்கியம், சுகம், தேவைகள் சந்திக்கப்படுதல், தரிசனங்கள், வழிநடத்துதல்) நமக்கு நாமே நினைவுப்படுத்திக்கொள்வது ஆகும். நம்முடைய வாழ்வில் நாம் கனி கொடுக்கக்கூடிய இரகசியத்தை இயேசு நமக்கு இங்கு கற்றுக்கொடுக்கிறார். நமக்குள் இருக்கும் (அதாவது, கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும்) நன்மையான ஈவுகளை நாம் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்ளாதபோது, நாம் உலர்ந்துவிடுவோம். ஆகவே, நமக்கு முன் இருக்கும் தேர்ந்தெடுப்புகள் என்னவென்றால் - கனி கொடுப்பது அல்லது உலர்ந்து போவது. இவை இரண்டிற்கும் இடையில் எந்த தேர்ந்தெடுப்பும் இல்லை; மூன்றாவது தேர்ந்தெடுப்பு எனவும் ஒன்று இல்லை!

திராட்சைச்செடியில் நிலைத்திருத்தலை குறித்து, வேறொரு இடத்தில், "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்"[6] என்று இயேசு கூறுகிறார். உடலியல் ரீதியாக (physiologically) கூற வேண்டுமென்றால், நாம் உணவை உண்டதும், குடலுக்கு செல்லும் இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. இது உணவு செரிமானத்தில் உதவுவது மட்டுமல்லாமல், உடலானது ஊட்டச்சத்துக்களை உறிஞ்சிக்கொள்ளவும் உதவுகிறது. அவ்வாறு உறிஞ்சிக்கொள்ளப்பட்ட (absorbed) ஊட்டச்சத்துக்கள், சரீரம் வளர்ச்சியடையும்படி, புரத சத்தை (proteins) தயாரிக்கும்படியாக, இரத்தத்தால் உயிரணுக்களுக்கு (cells) கொண்டு செல்லப்படுகின்றன. இறுதியாக, உறிஞ்சிக்கொள்ளப்பட்ட உணவானது, சரீரத்தின் ஒரு பகுதியாகவே மாறிவிடுகிறது. அதுபோல, தேவனுடைய மாறாத வாக்குத்தத்தங்களின் அடிப்படையில், நமது கற்பனையில் (இருதயம்) நாம் உண்மைகளை உருவாக்கும்போது, நமது ஜீவரத்தமாக இருக்கும் பரிசுத்த ஆவியானவர், நமது இருதயத்திற்குள் ஊடுருவி பாய்ந்து, அந்த உருவாக்கப்பட்ட உண்மையை ஒவ்வொரு உயிரணுக்களுக்குள்ளும் கொண்டு சென்று, இயற்கைக்கு

அப்பாற்பட்ட பெலனையும் சக்தியையும் தருவார். இதுதான் நம்முடைய நம்பப்படுகிற அடையாளமாக (believed identity) மாறுகிறது! *"உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்"* (ரோமர் 8:11) என்பதற்கு இதுதான் அர்த்தம்!

நான் இங்கு எழுதியிருப்பது மிகவும் ஆழமான வேதப்பூர்வமான ஞானம் ஆகும். ஆனால், மாம்சரீதியான மனதிற்கு இது பைத்தியமாக தோன்றும். நம்முடைய கருத்துக்களை கீழே இறக்கி வைத்துவிட்டு அவருடைய ஞானத்தை ஏற்றுக்கொள்ளலாம். அல்லது, நம்முடைய கருத்துக்களை இறுகப் பற்றிக்கொண்டு நமது ஆவியில் உள்ள நித்திய ஜீவனின் நன்மைகளை இழப்பதை தேர்ந்தெடுக்கலாம்! தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நம்முடையது!

பூரண சமாதானம்

உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 26:3).

மேலுள்ள வசனத்தில் *'மனம்'* என்ற வார்த்தை *'கற்பனை'* என்று துல்லியமாக மொழிபெயர்க்கப்பட வேண்டிய எபிரெய வார்த்தையிலிருந்து வருகிறது. கற்பனை செய்வது என்றால், மனதில் உருவாக்கிய எண்ணங்களுக்கு வடிவம் கொடுப்பது என்று பொருள்படும். இந்த கற்பனை சக்தியை நாம் எதிர்மறையாக பயன்படுத்தி இருக்கிறோம். ஆனால், தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தி, நம்மை குறித்து நேர்மறையான காட்சிகளை உருவாக்குவதற்கு இந்த கற்பனை சக்தியை பயிற்றுவித்ததே கிடையாது. பூரண சமாதானம் என்பது, தேவன் உங்களுக்கு கொடுக்காமல் நிறுத்தி வைத்து, மணிக்கணக்காக நீங்கள் அவரிடம் கெஞ்சின பிறகு கொடுக்கிற ஒன்றல்ல. மாறாக, அவருடைய வார்த்தையின் மீது தன்னுடைய மனதை பதித்து வைப்பதால் உண்டாகிற விளைவுதான் பூரண சமாதானம் ஆகும். நேர்மறையாக கற்பனை செய்வதில் வல்லமை இருக்கிறது. நேர்மறையான

கற்பனை இல்லாமல், நம்பிக்கையில் செயல்படுவதென்பது உங்களுக்கு கூடாத காரியம் ஆகும். நன்மையான காரியங்கள் கிடைக்கும் என்று உறுதியுடன் எதிர்பார்ப்பதுதான் நம்பிக்கை ஆகும். இப்படிப்பட்ட நம்பிக்கை, உங்களுடைய கற்பனை திறனை சார்ந்தது!

நாம் மனப்பாடம் செய்வதற்காக தேவனுடைய வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்படவில்லை. மாறாக, அவைகளை நம்முடைய கற்பனையில் எடுத்து, நமது வாழ்க்கைக்கான காட்சிகளை உருவாக்குவதற்காக கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு நமது இருதயங்களில் கற்பனை செய்யும்போது, விசுவாசம் துள்ளிக் குதித்து, அந்த உண்மைகளை வெளிப்பட வைக்கும். விசுவாசம் வேலை செய்கிற **ஒரே வழி** இதுதான். இந்த காரியம் சபையிடமிருந்து எப்படியோ மறைக்கப்பட்டுவிட்டது. நாம் செயல்படுவதற்காகவும், நம்முடைய உலகத்தை உருவாக்குவதற்கும் தேவன் கொடுத்த ஆற்றல்தான் கற்பனை ஆகும்.

வேதாகமத்தில், யோசுவா புத்தகத்தில், யுத்தத்தின் மத்தியில், சூரியனுக்கு கட்டளையிட்டு அதை நிறுத்தி வைத்த ஒரு சுவாரசியமான சம்பவத்தை குறித்து வாசிக்கிறோம் (யோசுவா 10வது அதிகாரம்). சரித்திரத்தில், அந்த நாள் வரைக்கும், கிரகங்களுக்கு மனிதன் கட்டளையிட்டதாக எந்தவிதமான பதிவும் வேதாகமத்தில் இல்லை. யுத்தத்தின் நடுவில், யோசுவாவின் இருதயத்தில் எப்படி இப்படியொரு புதுவிதமான எண்ணம் வந்தது? மோசேக்கு பின்னர் இஸ்ரவேலர் மேல் தலைமைத்துவ பொறுப்பை ஏற்றுக்கொண்ட யோசுவாவிடம் தேவன் சொன்னதாவது: "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்" (யோசுவா 1:8). எவராகிலும் இவ்வாறு செய்வார்களாகில், தங்கள் சூழ்நிலைகளை அவர்கள் பார்க்கிற

விதமே மாறிவிடும். வேதப்பூர்வமான விசுவாசத்திற்கு எல்லையே கிடையாது. ஆம்! நீங்கள் மலைகளை நிலைபெயரச் செய்வீர்கள்! கண்ணோட்டத்தை மாற்றுவதை குறித்து இயேசு கூறும்போது, "வார்த்தையை ஆழமாக புரிந்துகொள்வோர், தங்கள் இருதயத்திலிருந்து மிகுதியான அறுவடையை உற்பத்தி செய்வார்கள்" என்றார். உங்களுடைய இருதயத்தில் இருக்கிற அவருடைய வார்த்தைதான், எல்லா தடைகளையும் மேற்கொள்கிற வெற்றி ஆகும். "புரிந்துகொள்வது" என்பதை கிரேக்க பாஷையில் "இருதயத்தின் ஆழமான யோசனைகள்" என்றும் பொருள்படுமாறு கூறுவர். ஆழமான யோசனை என்றால் ஒருமுகப்படுத்தப்பட்ட அல்லது குறிப்பிட்ட காரியத்தின்மேல் குவிக்கப்பட்ட கற்பனை (focused imagination) ஆகும்.

அவரோடு ஐக்கியம் கொள்ளுதல்

தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர் (1 கொரிந்தியர் 1:9).

'ஐக்கியம்' என்ற வார்த்தை *'கொய்னோனியா' (koinonia)* என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதற்கு, கூட்டு பங்காண்மை (partnership) அல்லது உடலுறவு கொள்ளுதல் (intercourse) அல்லது கூட்டு பங்கேற்பு (joint participation) என்றும் பொருள்படும். இரண்டு நபர்களுக்கு இடையில் நடக்கும் மிகவும் நெருங்கிய உறவில் உண்டாகும் பரிமாற்றம்தான் இந்த செயல்பாடு. இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் மீது நம்முடைய மனதை செலுத்தும்போது, நாம் சிலுவையோடு தீவிரமாக ஐக்கியம் கொள்ளுகிறோம். இங்குதான், அவருடைய மரணம் நம்முடைய மரணமாகவும், அவருடைய உயிர்த்தெழுதல் நம்முடைய உயிர்த்தெழுதலாகவும் மாறுகிறது. இதை எவ்வாறு செயல்படுத்தினார் என்று கீழ்கண்ட வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.

"நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசம் மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்" (பிலிப்பியர் 3:9-10).

தன்னுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும், தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். இதற்காக, விசுவாசத்தினால் வரும் தேவநீதியில் முதலாவது தன்னை ஸ்தாபித்துக்கொண்டார். அதற்கு பின்னர், உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பதற்காக, சிலுவையில் இயேசு பட்ட பாடுகளிலிருந்து வந்த நன்மைகளை குறித்த எண்ணங்களினால் தனது மனதை சூழ்ந்துகொண்டார். தானும் இயேசுவோடு சிலுவையில் மரித்து அடக்கம்பண்ணப்படுவதாக காண ஆரம்பித்தார். மேலுள்ள வசனத்தில், *'தகுதியாகும்படிக்கு'* என்ற வார்த்தையை *'அடையும்படிக்கு'* என்றும் சொல்லலாம். ஆகவே, உயிர்த்தெழுதலை அடைந்து, உயிர்த்தெழுதலின் வல்லமையை தன்னுடைய வாழ்விலும் ஊழியத்திலும் அனுபவிக்கத்தக்கதாக,

நீங்கள் இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் செயல்பட ஆரம்பிக்கும்பொழுது, உங்களுடைய வாழ்க்கையானது இயேசுவின் வாழ்க்கையை பிரதிபலிக்கும்.

தன்னுடைய இருதயத்தில் சிலுவையை குறித்து தியானிப்பதினால், சத்தியத்தின் அடிப்படையில் உண்மைகளை, பவுல் தன்னுடைய இருதயத்தில் உருவாக்கி கொண்டிருந்தார். நீங்கள் இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் செயல்பட ஆரம்பிக்கும்பொழுது, உங்களுடைய வாழ்க்கையானது இயேசுவின் வாழ்க்கையை பிரதிபலிக்கும். நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் உயிர்த்தெழுந்த வல்லமையோடு செயல்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

இதற்காகத்தான், "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று பவுல் கூறுகிறார்[7]. அவருடைய மரணத்தை நாம் தெரிவிப்பதினால், அவருக்குள் நம்முடைய பழைய மனுஷன் மரித்ததைத்தான் நாம் காண்கிறோம். நம்முடைய பழைய மனுஷன் மரித்துவிட்டான் என்று காண்பதுதான், அவரோடு நமக்குள்ள ஐக்கியத்தில் துவக்கப்புள்ளி ஆகும். கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கெடுப்பது கூட ஒருவிதமான தியானம்தான். அதினால், தேவனுடைய சத்தியத்தின் அடிப்படையிலான உண்மைகளை கொண்டு நம்முடைய இருதயத்தில் ஒரு தாக்கத்தை நாம் ஏற்படுத்துகிறோம். இதை குறித்து 'கர்த்தருடைய பந்தி' என்ற அடுத்த அத்தியாயத்தில் நான் மேலும் விளக்கியிருக்கிறேன்.

அறிவியலும் தியானமும்

தியானத்தின் ஆழமான நிலைக்குள் நீங்கள் செல்லும்போது, *'ஆல்ஃபா அலைகள்' (alpha waves)* என்ற மெதுவான அலைகளின் பாங்குக்குள் *(slower wave pattern)*, மூளையின் அலைகள் நுழையும். நீங்கள் விழித்திருந்து எச்சரிக்கையோடு இருக்கும்போது, மூளையின் அலைகள் முதன்மையாக *'பீட்டா அலைகளாக' (beta waves)* இருக்கும். ஆனால், உங்கள் கண்களை மூடியவுடன், மூளையின் அலைகளானது *'ஆல்ஃபா அலைகளாக' (alpha waves)* மாறிவிடும். உங்கள் மனதின் கவனத்தை ஆழமாக ஒரு காரியத்தில் ஈடுபடுத்தும்போதோ அல்லது கண்களை மூடி இசையில் மனதை

செலுத்தி உங்களையே அமைதிப்படுத்தும்போதோ, இன்னமும் ஆழமான 'ஆல்ஃபா அலைகளின்' (alpha waves) நிலைகளுக்குள் நீங்கள் கடந்து செல்வீர்கள். இந்த நிலையில்தான், உங்களுடைய இருதயத்தின் ஆவி பகுதியோடு நீங்கள் தொடர்பில் வருகிறீர்கள். இந்த நிலையில் இருக்கும்பொழுதுதான், உங்கள் இருதயத்தின் நம்பிக்கைகள் எளிதாக மாற ஆரம்பிக்கிறது. இந்த நிலையில் இருக்கையில், தேவனுடைய வாக்குத்தத்தங்களின் உண்மையில் நீங்கள் வாழ்வதாக கற்பனை செய்யும்பொழுது, அந்த காட்சிகள் உங்களுடைய இருதயத்தில் பதிந்து, உங்கள் வாழ்க்கையை அடுத்த மகிமையான நிலைக்கு கொண்டு செல்லும்.

அதிகாலை நேரங்களில், *'ஆல்ஃபா அலைகளின்' (alpha waves)* நிலையை எளிதில் அடையலாம். இதனால்தான், ஒரு நாளின் மற்ற நேரங்களை காட்டிலும், அதிகாலை நேரங்களில், தேவனுடைய சத்தத்தை எளிதாக கேட்க முடிகிறது. இவ்வாறு சொல்வதால், தேவன் அதிகாலை நேரத்தில் மட்டுந்தான் பேசுகிறார் என்றல்ல; மாறாக, அந்நேரத்தில், தேவனுடைய சத்தத்தை கேட்பதற்கு நம்முடைய இருதயமானது தயாராக இருக்கிறது. தேவன் எப்பொழுதுமே நம்மோடுதான் இருக்கிறார். அதில் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும் (fluctuations) கிடையாது! நடனம் ஆடுவது, கரங்களை தூக்குவது, சரீரத்தை மென்மையாக அசைப்பது போன்ற யாவுமே மூளையை அமைதிப்படுத்தி, 'ஆல்ஃபா அலைகளின்' (alpha waves) நிலையை அடைய உதவுகிறது. இதனால்தான், தேவனை துதிப்பதும் ஆராதிப்பதும், ஒப்பற்ற விதத்தில், நம்முடைய இருதயத்தில் அவரோடு கூட ஐக்கியம் கொள்ளும்படி செய்கிறது.

தேவனோடு கூட அளவளாவி பழக நாம் கற்றுக்கொள்ளும்போது, நாம் அவரோடு ஐக்கியம் கொள்ளுகிறோம். அவருடைய பிரசன்னத்தை குறித்த விழிப்புணர்ச்சி மிகவும் நிஜமாகிறது. இப்படி ஓர் உறவில் அவரோடு நாம் இருக்கும்போது, *கிறிஸ்துவுக்குள் நீங்கள்* என்ற எண்ணம் உங்கள் மனதில் மேலோங்கி இருக்கும். அவருடைய பிரசன்னத்தில் நுழைந்து, தொடர்ந்து அங்கு வாழுவதற்கு, தியானத்தை செயல்படுத்துவது ஒன்றுதான் திறவுகோலாக இருக்கிறது.

வேதவசன ஆதாரங்கள்

1. தேசத்தை வேவுபார்க்கக் கர்த்தரின் தாசனாகிய மோசே என்னைக் காதேஸ்பர்னெயாவிலிருந்து அனுப்புகிறபோது, எனக்கு நாற்பது வயதாயிருந்தது; என் இருதயத்திலுள்ளபடியே அவருக்கு மறுசெய்தி கொண்டுவந்தேன். ஆனாலும் என்னோடேகூட வந்த என் சகோதரர் ஜனத்தின் இருதயத்தைக் கரையப்பண்ணினார்கள்; நானோ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினேன். அந்நாளிலே மோசே: நீ என் தேவனாகிய கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினால், உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமாயிருக்கக்கடவது என்று சொல்லி, ஆணையிட்டார். இப்போதும், இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார்; இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில், கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று; இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது; யுத்தத்திற்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது. ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்; அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்திவிடுவேன் என்றான் (யோசுவா 14:7-12).

2. அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாக ஜனங்களை அமர்த்தி: நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்றான் (எண்ணாகமம் 13:30).

3. பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது, வேறு சிந்தையாகி, இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள் (அப்போஸ்தலர் 28:3-6).

4. விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார் (மாற்கு 16:17-18).

5. அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11).

6. என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோவான் 6:55-56).

7. ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் (1 கொரிந்தியர் 11:26).

8

கர்த்தருடைய பந்தி

தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே, இயேசு, அப்பம் பிட்குதலையும் திராட்சரசம் பருகுதலையும் முதன்முதலாக துவங்கி வைத்தார். அதைத்தான் நாம் கர்த்தருடைய பந்தி என அழைக்கிறோம். தம்முடைய சீஷர்கள் அடிக்கடி இதை செய்யவேண்டுமென்று இயேசு ஏன் கூறினார் என்பதை நாம் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாக இருக்கிறது. நாமும் அவருடைய சீஷர்களாய் இருப்பதால், நம்மால் இயன்றவரை, நாமும் அடிக்கடி கர்த்தருடைய பந்தியை ஆசரிக்க வேண்டும். ஆனால், இயேசுவின் மரணத்தை நினைவுகூருவதில் இருக்கும் வல்லமை, பெரும்பாலும், குறைவாக மதிப்பிடப்படுகிறது.

இயேசு, கர்த்தருடைய பந்தியை அடிக்கடி அநுசரித்து, தம்மை நினைவுகூரும்படியாக தம்முடைய சீஷர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த வகையில் நாம் அவரை நினைவுகூரும்படியாக, இயேசு ஏன் கூறினார்? காரணம் என்னவாக இருக்கும்? ஒருவேளை, கர்த்தருடைய பந்தியில் நாம் முழு மனதுடன் பங்கேற்பதால், அச்செயல் நம்முடைய இருதயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துமோ? சற்றே இதை குறித்து ஆராய்தறிவோம்!

“நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு

தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" (1 கொரிந்தியர் 11:23-26).

மேலுள்ள வசனத்தில், இவ்வாறு நினைவுகூருவதில் உள்ள பலன் என்ன என்பதின் மீது அப்போஸ்தலனாகிய பவுல் வெளிச்சம் போட்டு காண்பிக்கிறார். கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பதை குறித்த வெளிப்பாட்டின் அறிவையும், அது எவ்வாறு சுகம் மற்றும் ஆரோக்கியத்தினால் சபையை ஆசீர்வதிக்கிறது என்ற வெளிப்பாட்டையும் பவுல் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டார். "நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். நாம் ஏன் இயேசுவின் மரணத்தை தெரிவிக்க வேண்டும்? சற்றே ஆழமாக இதனை ஆராய்வோம்.

அவருடைய சிலுவை என்பது உங்களுடைய சிலுவை ஆகும்

சிலுவையிலே, இயேசு, மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டார்[1]. அவர் சிலுவையிலே மரித்த பின்னர், அவர் அடக்கம்பண்ணப்படும் வரையில், அவருடைய உயிரற்ற உடல் சிலுவையிலே தொங்கிக்கொண்டிருந்தது. பாவம் அவர்மீது வைக்கப்பட்டபோது, தம்முடைய ஆவியில் முதலாவது மரித்தார். அதன் பிறகு, இயற்கையான சரீரத்தில் மரித்தார். ஆதியில், ஆதாம்

பாவம் செய்தபோது, **மாம்சம் பிறந்தது.** இவ்வுலகில், மிகவும் சக்தி வாய்ந்ததுதான் மாம்சம். தேவனையே எதிர்க்கக்கூடிய அளவுக்கு அது சக்தி வாய்ந்தது. சாத்தானுக்கு அந்த அளவுக்கு வல்லமை கிடையாது; அவன் மனிதனுக்குள்ளாக இருக்கும் மாம்ச பலத்தைதான் பயன்படுத்திக்கொள்கிறான். கடைசி ஆதாமாகிய இயேசு[2] பாவமாகி, சிலுவையிலே நமக்காக மரித்தபோது, **மாம்சம் மரித்தது**! சிலுவையிலே, மாம்சத்தின் வல்லமை முறிக்கப்பட்டது. போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய இருதயத்திலே குத்தினபோது, இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது[3]. சரீரத்திற்கு ஜீவன் கொடுக்கும் இரத்தமானது சிந்தப்பட்டது. ஆகவே, கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்ட இயேசுவின் சரீரத்தில் இரத்தத்தை தவிர எல்லா உறுப்புகளும் இருந்தது. சகல மாம்சத்ததின் உயிரும் அதின் இரத்தம் என்று வேதாகமத்தில் உள்ள லேவியராகமம் புத்தகத்தில் வாசிக்கிறோம்[4]. இயேசுவின் மாம்சத்திற்கு ஜீவனை கொடுக்கிற இரத்தம் முற்றிலும் சிந்தப்பட்டுவிட்டது. ஆகவே, இயேசுவில், மாம்சம் தனது வல்லமையை இழந்துவிட்டது. எல்லா தீய காரியங்களுக்கும் பிசாசுதான் வேராக இருக்கிறான். ஆனால், அவன் நம்மை மேற்கொள்கிற ஒரே வழி, நம்முடைய மாம்சத்தின் மூலமாக மட்டுந்தான். நாம் நமது மாம்சீக எண்ணத்தில் இருக்கும்போது, அவன் நம்மை தாக்குவதற்கு, அவனால் ஒரு வழியை கண்டுபிடிக்க முடியும். ஆனால், நாம் ஆவியாய் இருக்கிறோம்[5] என்பதுதான் நற்செய்தி. ஆவிக்கு விட்டுக்கொடுத்து நடப்பதினால், இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையை நம்மால் அனுபவிக்க முடியும். அவ்வாறான வாழ்க்கைக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழும்போது, பிசாசுக்கு நம்மீது எந்தவிதமான பிடிமானமோ அல்லது ஆதிக்கமோ இருக்காது.

இயேசுவில், மாம்சம் தனது வல்லமையை இழந்துவிட்டது.

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்"[6] என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். சிலுவையின் மீது இயேசு மரித்தது, என்னுடைய மரணம்! அவருடைய மரணத்தை நான் தெரிவிக்கும்போதெல்லாம், ஆசை இச்சைகளோடு கூடிய என்னுடைய மாம்சத்தின் மரணத்தையே தெரிவிக்கிறேன். ஆகவே, மாம்சம் தன்னுடைய தலையை தூக்க முயற்சிக்கையில், நான் உடனே எனது கவனத்தை சிலுவையின்மீது திசைதிருப்பிவிடுவேன். *"உங்களுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு" (to take up your cross)* என்பதற்கு இதுதான் அர்த்தம். சிலுவையிலே, இயேசு 'நீங்களாக' மாறிவிட்டார் (On the cross, Jesus became you)! அவர் சுமந்த சிலுவை உங்களுடைய சிலுவைதான். இப்பொழுது, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போது, அவருடைய மரணத்தை உங்களுடைய மரணமாக நினைவுகூர்ந்து, உங்களுடைய சிலுவையை எடுக்கக்கடவீர்கள். அவருடைய சிலுவை இப்பொழுது உங்களுடைய சிலுவை!

பரிமாற்றத்தில் பங்கெடுப்பது

கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கெடுக்கும்போது, நம்முடைய முழு திறனையும் பயன்படுத்தி, அவருடைய மரணத்தை நம்முடைய மரணமாக பார்க்கிறோம். அதாவது மாம்சத்தின் மரணம்! நமது மாம்சம் மரித்தது! மாம்சத்திற்கு ஜீவன் தருகின்ற இரத்தம் முற்றிலும் சிந்தப்பட்டாயிற்று. இயேசுவின் சரீரத்திலிருந்து சிந்திக்கொண்டு இருக்கும் இரத்தத்தை காண்பிக்கும் வரைகலை படமானது (graphic picture), நம்முடைய மாம்சத்தின் முழுமையான மரணத்தை காட்டும் ஓர் அழகிய சித்தரிப்பாக இருக்கிறது. ஆகவே, கர்த்தருடைய பந்தியில் நீங்கள் பங்கெடுக்கும்போதெல்லாம், உங்களுடைய மரணத்தை நினைவுகூர்ந்து, அதனை தெரிவிக்கிறீர்கள். இதுதான் வெற்றிக்கான திறவுகோல்! உயிர்த்தெழுதலின் ஜீவனையும், அவரோடு கூட நீங்களும் எழுந்திருக்கிறதை பார்க்க வேண்டுமென்றால், சிலுவையிலே நீங்கள் மரித்ததை முதலாவது பார்க்க வேண்டும்.

கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பது இதைத்தான் உங்களுக்கு செய்யும். கர்த்தருடைய பந்தி என்றால் இணைந்து பங்கெடுப்பது (joint participation) ஆகும். ஆம்! அவருடைய மரணத்தில் நீங்களும் இணைந்து பங்கெடுக்கின்றீர்கள். சிலுவையிலே நடந்த அவருடைய மரணத்தை, உங்களுடைய மாம்சத்தின் மரணமாக நீங்கள் பார்க்கிறீர்கள். அது உங்கள் இருதயத்தில் நிஜமாக மாறுகிறது. வேதாகமத்தில், ரோமர் 6ஆம் அதிகாரத்தில், "அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல்[7] கூறியதின் அர்த்தம் இதுதான். நான் இங்கு உங்களோடு பகிர்ந்துகொள்ளும் காரியம் மிகவும் வல்லமையுள்ளது. ஆகவே, நேரமெடுத்து இதில் உங்கள் சிந்தனையை செலுத்தி, இதை உங்கள் இருதயத்தில் கண்டு, வெளிப்பாடாக மாற்றிக்கொள்ளுங்கள்.

"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோமர் 8:1-2).

நீங்கள் மறுபடியும் பிறப்பதற்கு முன்பாக, மாம்சத்தில் இருந்தீர்கள். அதாவது, நீங்கள் பாவம் மற்றும் மரணம் என்ற பிரமாணத்தின் கீழ் இருந்தீர்கள். மறுபடியும் பிறந்த அனுபவத்தை பெற்றுக்கொள்ளும் வரையில், அது மாத்திரமே உங்களை குறித்த உண்மையாக இருந்தது. ஆனால், இப்பொழுது, மறுபடியும் பிறந்த பிறகோ, நீங்கள் ஆவியாய் இருக்கிறீர்கள். ஆகையால்,

மறுபடியும் பிறந்த பிறகோ, நீங்கள் ஆவியாய் இருக்கிறீர்கள். ஆகையால், இப்பொழுது, நீங்கள் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளீர்கள்.

இப்பொழுது, நீங்கள் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளீர்கள். இப்பொழுது, உங்களை குறித்த நிஜமாக (reality), இதை உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்வதை தேர்ந்தெடுக்கலாம். இந்த சத்தியத்தை கொண்டு உங்கள் இருதயத்தில் ஓர் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பது பெரிதாக உதவும்.

கிருபையானது, ஆவியின் மண்டலத்தினுள் நாம் நுழைவதை சாத்தியமாக்கி இருக்கிறது. இப்பொழுது, இந்த சத்தியத்தை நீங்கள் புரிந்துகொண்டு, ஆவி மண்டலத்தில், அவரோடு கூட நீங்கள் ஐக்கியம்கொள்ளவேண்டும்என்றுதேவன்காத்துக்கொண்டிருக்கிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்"[8] என்பதற்கு இதுதான் அர்த்தம். *'உன்னதங்களில்'* என்றால் ஆவிக்குரிய மண்டலம் ஆகும்.

கர்த்தருடைய பந்தியில் நீங்கள் பங்கெடுக்கும்போது, "இனியும் நான் மாம்சத்திற்குரியவன் அல்ல. நான் ஆவிக்குரியவன். மாம்சத்திற்கு என்மீது எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அவருடைய மரணத்தில் என்னுடைய மரணத்தை காண்கின்றேன்" என்று கூறுகின்றீர்கள். எல்லாவிதமான வியாதிகளுக்கும் பெலவீனங்களுக்கும் பிசாசுதான் வேராக இருக்கிறான். எனினும், உங்கள் மாம்சீக எண்ணங்கள் மூலமாகத்தான், அந்த வியாதிகளையும் பெலவீனங்களையும் கொண்டு உங்கள் சரீரங்களை தாக்க முடியும். நீங்கள் மாம்சீகத்திற்கு இடம் கொடுத்து, மாம்சத்தில் நடக்கும்பொழுது, உங்களுடைய வாழ்க்கையை, இருளானது, எல்லை மீறி நுழையும்படி (கவ்விக்கொள்ளும்படி) அனுமதிக்கின்றீர்கள். வியாதிகளும் பெலவீனங்களும் இருளின் கிரியைகளே! ஆனால், நீங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்து, அவருடைய மரணத்தை தெரிவிக்கும்போது, இருளின் வல்லமையை செயலிழக்கச் செய்கின்றீர்கள் என்பதுதான் நற்செய்தி! அவ்வாறு செய்கையில், வியாதி தானாகவே உங்கள் சரீரத்தை விட்டு விலகிப்போகும்.

பாத்திரமாய் அல்லது அபாத்திரமாய்

“இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும்குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி “போஜனபானம்பண்ணுகிறான் (1 கொரிந்தியர் 11:27-29).

நூற்றாண்டுகளாக, கிறிஸ்தவ மதவாதிகள், மேலுள்ள வசனத்தை தாறுமாறாக புரிந்துகொண்டு, விசுவாசிகளின் இருதயங்களில் ஆக்கினைத்தீர்ப்பின் எண்ணத்தை உட்புகுத்திவிட்டார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம், சிலுவையில் இயேசு செய்து முடித்த கிரியைகளை குறித்து நாம் சரியாக புரிந்துகொள்ளாததே! ஒரு விசுவாசி, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்க வரும்போது, சிலுவையிலே தன்னுடைய மரணத்தை பார்க்கும்படியாக ஊக்கப்படுத்தப்படாமல், தன்னுடைய மாம்சீக கிரியைகளின் பட்டியலை பார்க்கும்படி கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளார். மாம்சத்திலிருந்து நாற்றம்தான் புறப்படும் என்பதை மறவாதிருங்கள்! என்னிடத்தில் என்னென்ன குற்றங்குறைகள் இருக்கின்றன என்ற மனநிலையோடு கர்த்தருடைய பந்தியை அணுக முற்படுவீர்களானால், உங்களுடைய மாம்சம் மேலோங்குவதற்கு இடமளிக்கின்றீர்கள் என்று அர்த்தமாகும். நீங்கள் இப்பொழுது மாம்சீகமானவர்கள். மாறாக, உங்களை குறித்து, சிலுவையில் எல்லாம் சரிசெய்யப்பட்டிருக்கிறது என்ற எண்ணத்தோடு கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பீர்களென்றால், நீங்கள் ஆவியில் நடக்கிற ஆவிக்குரியவர்களாக இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் பாத்திரராக (தகுதியுள்ளவர்களாக) எண்ணப்படுகின்றீர்கள்!

(ஒருவேளை, நீங்கள் மாம்சத்திற்குள்ளாகி பாவம் செய்திருப்பீர்களானால், அறிக்கை செய்து, மனந்திரும்பி, விரைவாக

உங்களுடைய இயல்புநிலையாகிய ஆவிக்குரிய நிலைக்கு துள்ளி பாய்ந்துவிடுங்கள். நீங்கள் உங்கள் மாம்சத்தில் நீண்ட நேரம் தரித்திராதிருங்கள். எந்தவிதமான பாவ பழக்கவழக்கங்களிலிருந்தும் விடுதலையாவதற்கு உங்களையே நீங்கள் அபாத்திரமாய் பார்ப்பது திறவுகோல் அல்ல. மாறாக, 'கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார்' என்பதை விசுவாசித்து, அதை அறிக்கை செய்வதே விடுதலைக்கான திறவுகோல்).

கிறிஸ்துவோடு உங்களுக்குள்ள ஐக்கியம்தான் உங்களை தேவனுடைய பார்வையில் பாத்திரராக மாற்றுகிறது. உங்கள் மாம்ச கிரியைகள் அல்ல! உங்களையே நீங்கள் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாக காணும்போது மட்டுந்தான், சரியாக உங்களை கணிக்கின்றீர்கள் என்று அர்த்தம். அதாவது, உங்கள் மாம்சமானது அவருக்குள்ளாக மரித்துவிட்டது என்று தீர்ப்பளிக்கின்றீர்கள். உங்கள் ஜீவன் அவருக்குள் மறைந்திருப்பதால், நீங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற பாத்திரராய் இருக்கின்றீர்கள். நீங்கள் அவருக்குள் பரிபூரணராக இருக்கின்றீர்கள்! கர்த்தருடைய பந்தியை இந்த பார்வையில் நீங்கள் அநுசரிக்காமல், உங்களுடைய 'மாம்ச கிரியைகளின் இருப்புப்பட்டியலின்' (stock list) அடிப்படையில் அணுகினால், நீங்கள் அபாத்திரமாய் பங்கெடுக்கின்றீர்கள். நீங்கள் தவறான தீர்ப்பை உங்கள் மீது செலுத்தி, ஆக்கினைத்தீர்ப்புக்கு உங்களையே நீங்கள் ஆளாக்கிவிடுவீர்கள். ஆக்கினைத்தீர்ப்பு, மாம்சத்தை மேலோங்கச் செய்துவிடும்! சாத்தானுடைய முக்கியமான ஆயுதமே ஆக்கினைத்தீர்ப்புத்தான். உங்களையே நீங்கள் குற்றவாளிகளாக பார்க்கும்போது, பிசாசானவன் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்த துவங்குவான்! எல்லாவிதமான வியாதிகளுக்கும் பெலவீனங்களுக்கும் வேர், ஆக்கினைத்தீர்ப்புத்தான்.

ஆக்கினைத்தீர்ப்பு, மாம்சத்தை மேலோங்கச் செய்துவிடும்!

இயேசு என்ன சொன்னார் என்று நினைவிருக்கிறதா? "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான்"[9]. கர்த்தருடைய பந்தியில் நீங்கள் பங்கெடுக்கும்போதெல்லாம், அவருடைய மரணத்தை நினைவுகூருவது மட்டுமின்றி, அவருக்குள் நீங்களும் மரித்தவிட்டீர்கள் என்பதை பாருங்கள். இந்த வகையில் பங்கெடுக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்திற்குள் பாய்ந்து சென்று, உங்களுடைய சரீரத்தின் ஒவ்வொரு உயிரணுக்குள்ளும் கிறிஸ்துவின் ஜீவனை உட்புகுத்துவார். சபையானது, இந்த அறிவோடு கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போது, ஒருவர் கூட வியாதியஸ்தராகவோ பெலவீனராகவோ இருக்கவே முடியாது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னர், அவருடைய சபையானது, இந்த சத்தியத்தை புரிந்துகொண்டு, தெய்வீக ஆற்றல் கொண்ட மனுஷனாக (மனுஷியாக) நடைபோடுவதை நான் என் தரிசன கண்களால் பார்க்கிறேன். ஒருவேளை, அது புத்தியீனமாக தோன்றலாம். ஆனால் தேவனுடைய ஞானமானது, மாம்சீக மனதிற்கு பைத்தியமாகத்தான் தோன்றும். ஆனால், ஒருவர் இதை தன்னுடைய இருதயத்தில் நம்பி (பார்த்து), அதன்படி செயல்பட ஆரம்பித்தால், அது அந்த நபருடைய வாழ்வில் விளங்கும் தேவனுடைய வல்லமை ஆகும்.

உங்களையே சரியாக நிதானிப்பது

"என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" (1 கொரிந்தியர் 11:29-30).

ஒரு மருத்துவராக, "இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்" என்ற வரியை

வாசித்தவுடன், உற்சாகத்தால் நிறைந்தவனாக துள்ளிக் குதித்தேன். இவை மிகவும் உறுதியான சொற்கள் (definitive terms). இப்படிப்பட்ட ஜீவன் தருகிற உறுதியான வார்த்தைகளை மருத்துவ உலகில் நம்மால் காணவே முடியாது. மிகவும் அதிகமான பணத்தை செலவழித்து, முழு மருத்துவ உலகமே, அநேக நோய்களுக்கு தீர்வை காண முயற்சி எடுக்கையில், தேவனுடைய ஞானமோவென்றால், மிகவும் சாதாரணமான வரிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவும் வியாதிகளுக்கான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம் என்று பவுல் கூறவில்லை. மாறாக, **"இதினிமித்தம்"** என்ற உறுதியான வார்த்தையினால் கூறுகிறார்.

இயேசு, சிலுவையிலே பாவமாக்கப்பட்டபோது, ஒவ்வொரு வியாதியும் பெலவீனமும் அவருடைய சரீரத்திற்குள் சென்றது. இப்பொழுது, உங்களுடைய வியாதி அவருடைய சரீரத்திற்குள்ளாக செல்வதை, உங்களுடைய முழு பெலத்தோடு பாருங்கள். இதனால், வியாதி உங்களுடைய சரீரத்தில் குடிகொள்வதற்கு இனிமேலும் அனுமதிக்க முடியாது. இந்த சத்தியத்தினால் உங்களுடைய இருதயத்தை வசப்படுத்தினவர்களாக, ஒரு தேவனுடைய பிள்ளையாக முழு அதிகாரத்தையும் பிரயோகித்து, இப்பொழுதே அந்த வியாதியை சபித்து, உங்களுடைய சரீரத்தை விட்டு வெளியேறுமாறு கட்டளையிடுங்கள். அவ்வாறு கட்டளையிடும்போது, அந்த வியாதி எளிதாக விழுந்துவிடும்! இதை நீங்கள் தேவனுடைய வார்த்தையில் கண்டிருக்கின்றீர்கள்; உங்களுடைய இருதயத்தில் கண்டிருக்கின்றீர்கள்; இப்பொழுதோ, அது உங்கள் வாயின் மூலமாக நிஜத்தில் வெளிப்பட்டுவிட்டது. இப்பொழுது நீங்கள் **விசுவாசத்தில்** இருக்கின்றீர்கள்! இது வேதப்பூர்வமான விசுவாசம் என்பதை நினைவில்கொள்ளுங்கள். இப்படிப்பட்ட அசைக்கமுடியாத உறுதியில் நீங்கள் இருக்கும்போது, ஒரு மலையும் உங்கள் பாதையில் நிற்க முடியாது[10].

கர்த்தருடைய பந்தியில் பங்கெடுத்து, உங்களுடைய மனதை புதிதாக்கும் இந்த எளிமையான செயலானது, உங்களுடைய பரம்பரை சாபங்கள், மரபணு ரீதியான வியாதிகள், பெலவீனங்கள் மற்றும் நோய்களை உடைக்கும் வல்லமை கொண்டது.

ஒருவேளை உங்களுடைய வியாதி மரபணு சம்பந்தமாய் இருக்கலாம் அல்லது உங்களுடைய பெற்றோர்களிடமிருந்து பரம்பரை நோயாக வந்திருக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால், நீங்கள் மறுபடியும் பிறந்தபொழுது, பாவம் மற்றும் மரணம் என்ற பிரமாணத்தின் கீழிருந்து, மேலான தெய்வீகமான ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தின் கீழ் இடம்பெயர்க்கப்பட்டு இருக்கின்றீர்கள். ஆகவே, உங்களையே நீங்கள் அவருக்குள்ளாக பார்க்கும்பொழுது, உங்களுடைய வாழ்க்கையின் மீது வியாதிகளுக்கு இருந்த வல்லமை ஒன்றுமில்லாமற்போம். மறுபடியும் பிறந்தவர்கள், மேலிருந்து பிறந்தவர்கள் என்பதால், ஜீவனுள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட பிரமாணங்களை அனுபவிக்க முடியும்.

உங்கள் இருதயத்தை சத்தியத்தினால் நிறைத்து வசப்படுத்துவதுதான் இதற்கான திறவுகோல் ஆகும்! அவருடைய மரணத்தை உங்களுடைய மரணமாக நீங்கள் பார்த்துவிட்டால், உங்களுடைய மனதானது, உயிர்த்தெழுதலின் வல்லமையினால் ஒளிர ஆரம்பிக்கும். உயிர்த்தெழுதலின் வல்லமையை முற்றிலும் நம்புகிற இருதயமானது, தன்னுடைய சரீரத்தில் வியாதியை அனுமதிக்காது. மாறாக, சரீரத்தை விட்டு வியாதி நீங்கும்படியாக முழு நம்பிக்கையுடனும் உறுதியுடனும் கட்டளையிடும்.

இப்பொழுது, நீங்கள் என்ன செய்ய போகின்றீர்கள்? இப்பொழுதிலிருந்து கர்த்தருடைய பந்தியை எவ்வாறு அணுக போகின்றீர்கள்?

வேதவசன ஆதாரங்கள்

1. இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார் (லூக்கா 23:46).

2. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார் (1 கொரிந்தியர் 15:45).

3. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது (யோவான் 19:34).

4. சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது; இரத்தம் ஜீவனுக்குச் சமானம்; ஆகையால் எந்த மாம்சத்தின் இரத்தத்தையும் புசிக்கவேண்டாம்; சகல மாம்சத்ததின் உயிரும் அதின் இரத்தந்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்டுபோவான் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னேன் (லேவியராகமம் 17:14).

5. தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோமர் 8:9).

6. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலாத்தியர் 5:24).

7. ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6:5).

8. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார் (எபேசியர் 2:7).

9. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோவான் 6:56).

10. எவனாகிலும் இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற்கு 11:23).

9

ஆவியில் நடப்பது

றுபடியும் பிறந்தவுடன், ஒரு நபர், ஆவியில் இருக்கிறார் என்று முந்தின அத்தியாயங்களில் நாம் கண்டோம். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோமர் 8:9). எனினும், ஆவியின் ஜீவனை அனுதின வாழ்க்கையில் அனுபவிப்பதற்கு, ஆவியில் நடக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ஆவியில் ஆரம்பித்த கலாத்திய சபையானது மறுபடியும் மதகோட்பாடுகளுக்குள்ளாக சென்றுவிட்டது. ஆகவே, அவர்களை ஆவியில் நடக்கும்படி அப்போஸ்தலனாகிய பவுல் ஊக்கப்படுத்தினார். இங்கு, *'நடப்பது' (to walk)* என்றால், 'ஒன்றோடு வரிசைப்படுத்துவது' அல்லது 'ஒழுங்குபடுத்துவது' (to line up with) என்று பொருள்படும். அதாவது, தங்களுடைய நம்பிக்கைகளையும் நடக்கைகளையும், மறுபடியும் பிறந்த தங்களுடைய ஆவிக்கேற்றபடி ஒழுங்குபடுத்தும்படியாக பவுல் நிருபங்களை எழுதினார்[1]. வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டை எழுதிய ஒவ்வொருவரின் சாராம்சமான மையச்செய்தியும் இதுதான். தேவன் தம்முடைய பகுதியை செய்து முடித்துவிட்டார். இப்பொழுதோ, நம்முடைய மனதை தேவனுடைய வார்த்தையை கொண்டு புதுப்பித்து, ஆவிக்கேற்றபடி நடக்கும் பொறுப்பை நாம்

ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைத்தான் மனதின் போராட்டம் என்று அழைக்கிறோம். வேதாகமம் இதை *'விசுவாசத்தின் நல்ல போராட்டம்'* என்று விளக்குகிறது.

என்னுடைய சரீர சுகத்திற்காக வேதாகமத்தை நான் கருத்தோடு வாசிக்கையில், ஆவியில் நடப்பதைக் குறித்து கற்றுக்கொள்ளும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளாவிட்டால், கிருபை ஏற்கெனவே அருளியிருப்பதை அனுபவிக்காமல் அதை வீணாக்கினவனாக காணப்படுவேன் என்பதை உணர்ந்துகொண்டேன். ஜீவனம் பண்ணுவதற்கு வேண்டிய யாவற்றையும் (ஆரோக்கியம், சுகம், தேவைகள் சந்திக்கப்படுதல்), கிறிஸ்துவுக்குள் அவருடைய வல்லமையானது ஏற்கெனவே எனக்குள் தந்திருக்கிறது என்பதையும் கற்றுக்கொண்டேன்[2]. இவைகளை நடைமுறைக்கு கொண்டு வருவது எப்படி என்பதைத்தான் நான் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஆவியில் நடப்பதால் மாத்திரம்தான் நான் தேவனுடைய பரிபூரண ஜீவனை அனுபவிக்க முடியும் என்று என்னுடைய வேத ஆராய்ச்சியிலிருந்து நான் அறிந்துகொண்டேன். அதை செய்ய தவறும்போது, தேவன் எனக்குள் ஏற்கெனவே கொடுத்திருப்பதை நான் அனுபவிக்க முடியாமல் போய்விடும். ஆகவே, விசுவாசத்தில் நடந்திட வேண்டும் அல்லது தோல்வியிலேயே அமர்ந்திட வேண்டும்! இதை தவிர தேர்வு செய்வதற்கு வேறொன்றும் இல்லை!

ஆவியில் நடப்பது என்பது விசுவாச நடை ஆகும்.

ஆவியில் நடப்பது என்பது விசுவாச நடை ஆகும். ஆம்! அது அவ்வளவு எளிதானது! ஆனால், விசுவாசம் என்றால் என்ன? தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது உள்ள அசைக்க முடியாத நம்பிக்கைதான் விசுவாசம். ஆனால், இதில் கவனிக்க வேண்டிய காரியம் என்னவென்றால், உங்கள் இருதயத்தின் நம்பிக்கைகளின் எல்லைகளுக்குள்தான் விசுவாசம் செயல்படும். உங்களை குறித்து நீங்கள் என்ன நம்புகின்றீர்களோ, அது உங்கள் இருதயத்தில் ஒரு

எல்லையை உருவாக்கிவிடும். அந்த எல்லையை தாண்டி உங்களுடைய விசுவாசம் செயல்படாது. உங்கள் வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட பகுதியில், "உங்களுக்குள் கிறிஸ்து" என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும்போது, அந்த குறிப்பிட்ட காரியத்தில் நீங்கள் உருவாக்கிய எல்லையை தகர்த்துவிட்டீர்கள் என்று பொருள்படும். மனதை புதுப்பிக்கும் இந்த பயணத்தின் துவக்கத்தில், நீங்கள் உங்களை குறித்து நம்பிக்கொண்டிருந்த அடையாளமும், தேவன் உங்களை குறித்து வைத்திருக்கிற அடையாளமும் வித்தியாசமானதாக இருந்திருக்கலாம். ஆனால், தேவனுடைய வார்த்தையை நீங்கள் தொடர்ந்து தியானித்து, உங்கள் மனதை புதுப்பித்து வருவீர்களானால், அந்த இரண்டு அடையாளங்களும் ஒன்றாவதை நீங்கள் காண்பீர்கள். அந்நிலையில், தேவன் உங்களை பார்க்கும்விதமாகவே நீங்கள் உங்களை அதிகமாக காண ஆரம்பிப்பீர்கள். இதைத்தான் மறுரூபம் என்றழைக்கிறோம். அப்படியென்றால், நீங்கள் சரியான பாதையில் நடக்கின்றீர்கள் என்று அர்த்தம்.

இயேசுவின் முடிக்கப்பட்ட கிரியைகளின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்வதுதான் விசுவாசம்.

ஆண்டவராகிய இயேசு தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலினால் செய்து முடித்தவைகளின் மீதுதான் நம்முடைய விசுவாசம் நங்கூரமிட்டு இருக்கிறது. ஆகவே, விசுவாசம் என்பது விருப்பத்தோடு எண்ணுவதோ அல்லது கற்பனை செய்வதோ அல்ல. இயேசுவின் முடிக்கப்பட்ட கிரியைகளின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்வதுதான் விசுவாசம். இயேசுவின் மூலமாக தேவன் உங்களுக்கு இலவசமாக கொடுத்துள்ள அனைத்து ஈவுகளையும் குறித்து நீங்கள் முழுமையாக புரிந்துகொள்ளும்போது, விசுவாசத்தில் நடப்பதற்கு நீங்கள் ஆயத்தமாகிவிட்டீர்கள். தேவனுடைய வசனத்தை கேட்பதினாலே

விசுவாசம் வரும்[3]. *கேட்பது* என்றால் *முக்காட்டை நீக்குவது* என்று அர்த்தம் - சிலுவையிலே இயேசு செய்து முடித்த கிரியைகளின் மீதுள்ள முக்காட்டை நீக்கி, கிறிஸ்துவுக்குள்ளான உங்களுடைய உண்மையான அடையாளத்தை காண்பிப்பது!

தேவனுடைய வாக்குத்தத்தங்களை எல்லாம் கருத்தில் கொள்வதில்தான் விசுவாசம் தொடங்குகிறது. நீங்கள் அவருக்குள் இருப்பதால், அவருடைய வாக்குத்தத்தங்களை பெற்று அனுபவிப்பதற்கு நீங்கள் முற்றிலும் தகுதியுள்ளவர்கள்[4]. இப்பொழுது, உங்களுடைய இருதயத்தில் வாக்குத்தத்தங்களெல்லாம் மெய்யாவதை பார்க்க முடிகிறதல்லவா! உங்களுடைய கிரியைகளை அடிப்படையாக கொண்டு, இனி தேவனிடம் உங்கள் தேவைகளுக்காக கெஞ்சவோ அல்லது உங்களையே ஆக்கினைக்குட்படுத்தவோ அல்லது உங்களையே தகுதியில்லாதவர்களாக பார்க்கவோ தேவையில்லை.

இருதயத்தில் விசுவாசம்

'இப்பொழுதே அதை உண்மையாகிவிட்டதாக உங்கள் இருதயத்தில் பார்ப்பது' என்று பொருள்படுகிற கிரேக்க வார்த்தையிலிருந்துதான் *'விசுவாசம்'* மற்றும் *'நம்பிக்கை'* போன்ற வார்த்தைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. விசுவாச மண்டலத்தில் நேரம் என்ற கருத்திற்கே இடம் கிடையாது. அதனால்தான், நம்முடைய கண்களால் கண்ட பிறகு அல்ல, மாறாக, நாம் ஜெபித்த உடனேயே கேட்டதை பெற்றுக்கொண்டோம் என்று நம்பும்படியாக இயேசு கூறினார். நம்புவது என்றால், இருதயத்தில் பார்ப்பது என்று பொருள்படும்!

ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்கினால், எவ்வாறு இந்த செயல்முறையில் ஈடுபடுவது என்பதை புரிந்துகொள்ளலாம். பயங்கரமான மூட்டு வலியோடு கூடிய 'முழங்கால் கீல்வாதம்' (osteoarthritis) என்ற நோயினால் நீங்கள் பாதிக்கப்பட்டவர்களாக எடுத்துக்காள்வோம். உங்களுக்கோவென்றால், 'அவருடைய

தழும்புகளால் நீங்கள் எல்லா வியாதிகளிலிருந்தும் குணமானீர்கள்' என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் தெரிந்திருக்கிறது. உங்களுடைய 'முழங்கால் கீல்வாதத்தை' தம்முடைய உயிர்த்தெழுதலின் போது இயேசு மேற்கொண்டார் (நம்முடைய வியாதிகளும் பெலவீனங்களும்தான் அவர்மீது வைக்கப்பட்டது என்பதை நினைவில்கொள்ளுங்கள்). அவர் உயிரோடெழுந்தபோது, நீங்களும் அவரோடு எழுந்துவிட்டீர்கள். கிறிஸ்துவுக்குள்ளாக நீங்கள் அந்த 'முழங்கால் கீல்வாதம்' என்ற நோயை மேற்கொண்டுவிட்டீர்கள்!

இப்பொழுது, உங்களையே நீங்கள் வலியற்றவர்களாகவும், நன்கு ஓடுகிறவர்களாகவும், எந்தவித வரையறையுமில்லாமல் எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடுகிறவர்களாகவும் உங்கள் இருதயத்தில் காண ஆரம்பிப்பீர்கள். இதற்கு முன்னர் நாம் கற்றுக்கொண்ட தியானத்தை செய்துகொண்டிருக்கையில், நீங்கள் இவ்வாறு நலமாக உள்ளதாக உங்கள் இதயத்தில் காண்கின்றீர்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். நீங்கள் இவ்வாறு செய்கையில், போலித்தனமாக நடந்துகொள்ளவில்லை. உண்மையில், உங்கள் ஆவியில் உள்ள பரிபூரணத்தைத்தான் நீங்கள் பார்க்கின்றீர்கள். இதைத்தான் தேவனும் உங்களுடைய ஆவியில் இருப்பதாக பார்க்கின்றார். இந்த சாயலை நீங்கள் கூர்ந்து கவனிக்கையில், மகிழ்ச்சியும் சந்தோஷமும் உங்கள் உணர்ச்சிகளை நிரப்பும். நீங்கள் குணமாக்கப்பட்டவர்களாக மறுபடியும் மறுபடியுமாக காண ஆரம்பிப்பீர்கள். ஆபிரகாம், தன்னுடைய இருதயம், தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பும்படி செய்ததுபோல, நீங்களும் உங்களுடைய இருதயமானது தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பும்படி செய்கின்றீர்கள். இந்த உண்மை மட்டும் உங்களுடைய இருதயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால், ஒரு நாள், நீங்கள் இதை மிகவும் தெளிவாக பார்க்கவே, வலியே இல்லாமல் நடக்க ஆரம்பித்துவிடுவீர்கள். இதுவே உங்களுடைய இருதயத்தின் அற்புத வல்லமை!

இருதயத்தில் சந்தேகப்படுவது

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதே எடுத்துக்காட்டில், வலியினால் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டவர்களாக உங்களையே நீங்கள் பார்க்க தொடங்கினால், மருத்துவரிடம் செல்கிறவர்களாகவும், ஊன்றுகோலின் உதவியுடன் நடக்கிறவர்களாகவும்தான் உங்கள் இருதயத்தில் பார்ப்பீர்கள். பின்னர், ஓடவோ அல்லது நடக்கவோ முடியாதவர்களாகவும், எந்தவிதமான பிரயோஜனமான செயல்களையும் செய்ய இயலாதவர்களாகவும் உங்களை பார்க்க ஆரம்பிப்பீர்கள். இப்பொழுது, நீங்கள் சந்தேகத்தில் இருக்கின்றீர்கள். தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு முரண்பாடான காட்சிகளை உங்களுடைய இருதயத்தில் தீட்டும்போதுதான் நீங்கள் சந்தேகத்தில் இருக்கின்றீர்கள். பயம் உங்களுடைய உணர்ச்சிகளை ஆளுகை செய்ய ஆரம்பிக்கும். இப்படிப்பட்ட காட்சிகள் உங்களுடைய இருதயத்தில் உண்டாவதற்கு காரணம், உங்களுடைய கடந்தகால அனுபவங்களாகவோ அல்லது மற்றவர்களுடைய எதிர்மறையான அனுபவங்களாகவோ இருக்கலாம். தேவனுடைய வார்த்தையையும் அவருடைய உண்மையையும் தவிர வேறு ஏதாகிலும் உங்கள் கற்பனையை ஆளுகை செய்ய அனுமதிப்பீர்களானால், நீங்கள் சந்தேகத்தில் இருக்கின்றீர்கள் என்றுதான் அர்த்தம்.

சில நேரங்களில், விரைவாக கடந்து செல்லும் எதிர்மறையான எண்ணங்கள் நம்மில் எழுவதால், நாம் சந்தேகத்தில் இருக்கிறோம் என்று அர்த்தமல்ல. உங்கள் இருதயங்களில் வலியினால் முடக்கப்பட்டவர்களாக உங்களையே நீங்கள் காணும்பொழுது, நீங்கள் சந்தேகத்தில் இருக்கின்றீர்கள். "இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால்" என்று கீழ்கண்ட வசனத்தில் இயேசு கூறியதின் அர்த்தம் இதுதான்.

"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல்

விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 11:23).

இருமனம்

வேதாகமத்திலுள்ள யாக்கோபு எனும் புத்தகத்தில், "சந்தேகப்படுகின்ற மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக"[5] என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார். விசுவாசத்திற்கும் சந்தேகத்திற்கும் இடையில் உங்களுடைய கவனமானது ஊசலாடும்போதுதான் இருமனம் உண்டாகிறது. சுகத்தை பெற்றுக்கொள்ளும் பயணத்தை தொடங்கியபோது, நானும் இருமனமுள்ளவனாகவே காணப்பட்டேன். இந்த பயணத்தை மேற்கொள்ள வெகுசிலரே தயாராக இருப்பதால், இக்காரியத்தில் உங்களை ஊக்கப்படுத்துவதற்கு உங்களை சுற்றிலும் அநேகர் இருக்கமாட்டார்கள் என்பதை நினைவில்கொள்ளுங்கள். அநேகர், தேவனையோ அல்லது பிசாசையோ அல்லது சூழ்நிலையையோ குற்றம்சாட்டிவிட்டு, அதே நிலைமையில் இருப்பதை தேர்ந்தெடுக்கிறார்கள். இவையெல்லாம், 'மனுஷனால் ஏற்படுத்தப்பட்ட சூழ்நிலை சார்ந்த இறையியல்' (man-made circumstance theology) ஆகும். தங்களுடைய முழு பெலனையும் கொண்டு, தங்களுடைய மனதை, தேவனுடைய வார்த்தைக்கு இசைவாய் நடத்துவதற்கு நேரம் கொடுத்து பிரயாசப்படாதவர்கள் கொடுக்கிற காரணங்கள்தான் இவை யாவும்! வேதப்பூர்வமான எல்லா சுகங்களும் இவ்வாறுதான் நடைபெற்றன. என்னுடைய இருதயம் விசுவாசத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்தவுடன், எனது சரீரத்தில் சுகத்தை அனுபவிக்க ஆரம்பித்தேன். போதுமான அளவுக்கு ஆதாரம் இருக்கும்போது, உங்களுடைய இருதயம் வார்த்தையின் வசப்படும். இருமனதிற்கு தீர்வு என்னவென்றால், உங்களுடைய இருதயத்தை பலமான ஆதாரங்களினால் வார்த்தைக்கு இசையும்படி செய்வதுதான். தகவலும் உணர்ச்சியும் கலந்துதான் சத்தியத்தை உங்கள் இருதயத்தில் எழுதும் என்பதை எப்பொழுதும் நினைவில்கொள்ளுங்கள். இதனால்தான், தியானமானது நம்முடைய உணர்ச்சிகளில் ஒரு நேர்மறையான

தாக்கத்தை ஏற்படுத்தும்வரை, தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் வாழ்வதாகவே நமது மனக்கண்களில் பார்க்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தைதான் ஆதாரம்

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியாய் இருக்கிறது[6]. இயேசு கிறிஸ்து தம்முடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக நமக்காக நிறைவேற்றி முடித்தவைகளையே *'நம்பப்படுகிறவைகள்'* என்ற வார்த்தையானது குறிக்கிறது. இந்த விசுவாசம் நமக்குள் உண்டாவதற்கு, தேவனுடைய வார்த்தையிலிருந்து மட்டும்தான் ஆதாரங்களை சேகரிக்க முடியும். இந்த இடத்தில்தான், உலக காரியங்கள் மீது எனக்கிருந்த கவனச் சிதறல்களிலிருந்து என்னை நானே பரிசுத்தமாக்கி (ஒரு குறிப்பிட்ட உபயோகத்திற்கென்று பிரத்யேகப்படுத்தி - set apart) தேவனுடைய வார்த்தையை மாத்திரம் முற்றிலும் படிக்கும்படியாக என்னை ஒப்புக்கொடுத்தேன். தாவீது - கோலியாத் போன்ற விசுவாச கதைகளை வாசித்து அதை தியானிக்க ஆரம்பித்தேன். எனக்குள் அதே விசுவாச ஆவியுடையவனாக நான் இருந்ததால்[7], என்னை நானே தாவீதாகவும், எனக்கு முன் இருக்கும் கோலியாத்தை தோற்கடிப்பதாகவும் காண ஆரம்பித்தேன். இப்படிப்பட்ட விசுவாச கதைகளோடு இணைத்துக்கொண்டு, நம்மை நாமே ஊக்கப்படுத்திக்கொள்ளலாம். இதற்காகத்தான் பரிசுத்த ஆவியானவர், வேதாகமத்தில் இவைகளையெல்லாம் எழுதி வைத்துள்ளார். விசுவாசத்தில் இந்த கதைகளோடு நாம் இணையாவிட்டால், ஒரு சரித்திர புத்தகத்தை வாசிக்கிறவர்களாகத்தான் நாம் காணப்படுவோமேயன்றி, அதிலுள்ள வல்லமையை அனுபவிக்க மாட்டோம்.

உங்களையே நீங்கள் உலகத்திலிருந்து பிரித்தெடுத்து, தியானத்தின் மூலம், தேவனுடைய வார்த்தையில் உங்கள் மனதை செலுத்துவதினால் மட்டுமே உங்களுடைய இருதயத்தை வார்த்தையோடு இசைந்திருக்கச் செய்ய முடியும்[8]. அப்படியென்றால், நேரத்தை திருடுகிற தொலைக்காட்சி,

சமூக வலைதளங்கள் போன்றவைகளிலிருந்து விலகியிருக்க வேண்டும். அபிஷேகிக்கப்பட்ட பிரசங்கியார்களின் விசுவாசம் நிறைந்த செய்திகளை கேட்பது நல்லதுதான். ஆனால், யாருடைய செய்தியை கவனிக்கிறோம் என்பதில் ஜாக்கிரதையாயிருந்து, சரியானதை தேர்வு செய்யுங்கள். பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுங்கள். இருதயத்தில் அதை குறித்து சமாதானமாக உணரவில்லையென்றால், உடனே நிறுத்திவிடுங்கள்.

எதற்கு ஆதாரங்கள் அதிகமாக இருக்கிறதோ, அதையே இருதயமானது நம்பும். இவ்வாறு செயல்படும்படியாகத்தான் தேவன் உங்களுடைய இருதயத்தை சிருஷ்டித்திருக்கிறார். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு மட்டும்தான் உங்கள் இருதயத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். வேதாகமத்தில் உள்ள சுகத்தை பெற்றுக்கொண்ட ஒவ்வொரு அற்புதமும் இவ்வாறுதான் நடந்தேறியது. வேதாகமத்தில், சுகத்தை பெற்றுக்கொண்ட ஒவ்வொருவருடைய இருதயமும் தேவனுடைய வார்த்தையோடு இசைந்து இணைந்திருந்தது. அதை மேலும் அறிய ஓர் குறிப்பிட்ட நிகழ்வை எடுத்து ஆய்வு செய்வோம்.

நிகழ்வு ஆய்வு – ஆபிரகாம் – விசுவாசத்தின் தகப்பன்

ஆபிரகாம் 100 வயதானவனாய், குழந்தை பெற்றெடுக்கக்கூடிய உடலின் திறனை எல்லாம் இழந்துவிட்டான். சாராளுக்கு இருந்த பெண்களுக்குரிய வழிபாடு கூட முற்றிலும் நின்றுபோனது. இயற்கையாக குழந்தையை பெற்றெடுக்க அவர்களுக்கு வாய்ப்பே இல்லை. புறம்பாக பார்க்கும்போது, எந்தவிதமான நம்பிக்கையுமே இல்லை. இதை சற்று கவனமாக பார்க்க தவறினால், நமக்கென இதிலுள்ள மிகவும் முக்கியமான பாடத்தை தவறவிட்டுவிடுவோம். தன்னுடைய சரீரம் செத்துப்போனது என்ற உண்மையை ஆபிரகாம் அறிந்திருந்தாலும்,[9] அதை தன்னுடைய இருதயத்தில் நிஜமாக ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தை எடுத்து ஒரு புதிய உண்மையை தன்னுடைய இருதயத்தில் தீட்ட ஆரம்பித்தான். தேவனுடைய

வார்த்தையிலிருந்து அதிகமதிகமான ஆதாரங்களை தன்னுடைய இருதயத்திற்கு வழங்கியதால், அவனுடைய இருதயம் ஒரு அற்புதத்தை பிறப்பித்தது.

தேவனுடைய வார்த்தை நிறைவேறுவதை ஒருவராலும் தடுக்க முடியாது என்று ஆபிரகாம் அறிந்திருந்தான். அந்நேரத்தில், ஏற்கெனவே 25 ஆண்டுகள், ஆபிரகாம் தேவனோடு நடந்திருந்தான். அவனுக்கு பிறக்கப்போகிற பிள்ளைகள் வானத்து நட்சத்திரங்களை போலவும் மணலத்தனையாயும் இருப்பார்கள் என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணியிருந்தார். ஆகவே, தன்னுடைய இருதயத்தின் கற்பனையில், தன்னுடைய பிள்ளைகளை நட்சத்திரங்களை போலவும் மணலத்தனையாகவும் பார்க்க ஆரம்பித்தான். அவன் கற்பனை மேகத்தில் மிதக்கவில்லை. மாறாக, அவன் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருந்தான். தன்னுடைய இருதயத்தை வார்த்தையின் வசமாய் திருப்புவதற்கு அவனுக்கு சற்று நேரம் எடுத்தது. இதனால்தான், தன்னுடைய பெயரை ஆபிராம் (உயர்ந்த அல்லது மேலான தகப்பன்) என்பதிலிருந்து ஆபிரகாம் (ஜாதிகளுக்கு தகப்பன்) என்று மாற்றிக்கொள்ள ஒத்துக்கொண்டான். அவனுடைய இருதயம் முற்றிலும் வார்த்தையோடு இசைந்திருந்தபோது, அவனுடைய விசுவாசம் குழந்தையை பிறப்பிக்கச் செய்தது. விசுவாசமானது, தேவனுடைய வார்த்தையை பற்றி பிடித்துக்கொண்டு, அற்புதத்தை செயல்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இது அத்தனை எளிமையான இருதயத்தின் அற்புதம்! "சந்தேகப்படுகிற மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார். *'பெறலாம்'* என்ற வார்த்தைக்கு கிரேக்க பாஷையில்,

விசுவாசமானது, தேவனுடைய வார்த்தையை பற்றி பிடித்துக்கொண்டு, அற்புதத்தை செயல்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

என்றைக்காவது ஒரு நாள், தேவன் நம்முடைய விஷயத்தில் இடைபடுவார் என்று நம்பி எந்தவிதமான செயலும் செய்யாமல் காத்திருப்பது அல்ல. மாறாக, *'பெறலாம்'* என்ற வார்த்தைக்கு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை உறுதியாக பற்றிக்கொண்டு, அதை வெளிப்படும்படி செய்வது ஆகும். இதைத்தான் ஆபிரகாமும் செய்தார். இதுதான் விசுவாச நடை!

இயேசு கிறிஸ்து உயிரோடு எழுந்தபோதே நீங்கள் அவருக்குள்ளாக குணமாக்கப்பட்டீர்கள்! இப்பொழுது உங்களுடைய ஜீவன் அவருக்குள்ளாக மறைந்துள்ளது. இதை பற்றி பிடித்துக்கொண்டு, உங்களுடைய அற்புதத்தை வெளிப்படுத்துங்கள். உங்களுடைய இருதயத்தை வார்த்தையை கொண்டு வசப்படுத்துவதை எப்படியாவது நிறுத்தவேண்டும் என்று எல்லாவிதமான அம்புகளையும் பிசாசானவன் எய்வான். உங்கள் இருதயத்தை இவ்வாறு பயிற்றுவிக்கும்போது, நீங்கள் விரும்புவதை அடைந்துவிடுவீர்கள் என்றும் அவனுடைய ராஜ்யத்தை அழிப்பீர்கள் என்றும் பிசாசுக்கு தெரியும். பிசாசு உங்களை கண்டு பயந்துபோய் இருக்கிறான்! யாராவது 'சுகமளிக்கும் வரத்தில்' செயல்பட்டாலும்கூட, நான் மேற்கூறிய வகையில்தான் எல்லாரும் சுகத்தை பெற்றுக்கொள்கிறார்கள். இதனால்தான் இயேசு எல்லாரையும் சுகமாக்க முடியவில்லை - அவர்களுடைய அவிசுவாசம்தான்! நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது சந்தேகப்படும்போது, நீங்கள் அவிசுவாசத்தில் இருக்கின்றீர்கள் என்று பொருள்படும். ஆனால், நற்செய்தி என்னவென்றால், உங்களுடைய இருதயத்தை உங்களால் மாற்ற முடியும்.

ஆண்டவராகிய இயேசுவின் ஒவ்வொரு சீடனும் இவ்வாறு வாழ்வதற்கே அழைக்கப்பட்டிருக்கின்றான். பரிசுத்த ஆவியானவர் உங்களை தொடர்ந்து வழிநடத்துவார். தம்முடைய அன்பான பிள்ளைகள், தம்முடைய வழிகளை தழுவி, விசுவாசத்தில் நடக்கிறார்கள் என்று பார்ப்பதை காட்டிலும் வேறு எதுவும் பிதாவின் இருதயத்தை அதிகமாக பிரியப்படுத்த முடியாது. வேதாகமத்தில் புகழ்பெற்ற மனிதர்கள் எல்லாம் இந்த வழியில்தான் நடந்தார்கள்.

நல்ல போராட்டத்தை போராடுவது

அநேகர், தவறான ஆடுகளத்தில் தவறான போராட்டத்தை போராடுகிறார்கள். பிசாசு, பொய்களுக்குத் தகப்பன். அவன் பொய்களினால் நம்மை நிரப்புவான். எல்லா பொய்களுமே இருள்தான்! மறுபுறம், சத்தியம் என்பது வெளிச்சத்தோடு ஒப்பிடப்படுகிறது. பிசாசை நோக்கி கூச்சலிடுவதால் அவனை உங்களால் எதிர்த்து நிற்க முடியாது; மாறாக, சத்தியத்தை உங்களுடைய இருதயத்திற்குள்ளாக பேசுவதால் மட்டும்தான் முடியும். சத்தியத்தை நம்முடைய இருதயத்தில் பேசுவது என்றால், தேவனுடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் நம்முடைய இருதயத்தில் காட்சிகளை உருவாக்குவது ஆகும். வெளிச்சமாகிய சத்தியம் இருளை அகற்றிவிடும். நமது மனதானது (சுயநினைவுள்ள மனம், ஆழ்மனம்) முற்றிலும் சத்தியத்தினால் ஒளிர்ந்து கொண்டிருக்கும்போது (illuminated), நமது சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த போராட்டத்தின் களம், நமது மனம்தான்! அப்போஸ்தலனாகிய பவுல், "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்" என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்[10]. பற்றிக்கொள்வது என்றால், ஏற்கெனவே உங்களுக்குள் இருப்பதை உறுதியாக பிடித்துக்கொள்வது அல்லது உறுதியாக நம்புவது ஆகும். உங்களை குறித்து உங்களுடைய சாயலை காணும் கண்ணோட்டத்தை, நீங்கள் மாற்றிக்கொள்ளும்போது, மனதின் யுத்தம் முடிந்துவிடுகிறது! நீங்கள் அவருடைய இளைப்பாறுதலுக்குள் நுழைகின்றீர்கள். புதிய உடன்படிக்கையின் கீழ் நமக்கிருக்கும் ஒரே யுத்தம் இதுதான். சிலுவையிலே ஆண்டவராகிய இயேசு பிசாசானவனை முற்றிலும் செயலிழக்கச் செய்துவிட்டார். இப்பொழுது, நாம் செய்வதெல்லாம், விசுவாசத்தினால் அவருடைய வெற்றியில் பங்கெடுக்கிறோம்[11].

உங்களுடைய இருதயத்தை வார்த்தைக்கு ஒத்திருக்கச் செய்ய முயலும்போது, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாய் இருக்கும்படி[12] விழிப்புணர்வோடு

இருப்பது மிகவும் முக்கியமான காரியம். ஆனால், கடைசிவரைக்கும் உங்களோடு போரிடுவது சுயநீதியாக இருக்கும். இயேசுவின் மீது மாத்திரம் நீங்கள் கண்களை வைக்காமல், உங்களுடைய நற்கிரியைகளின் மீதும் உங்களுடைய கண்களை வைக்கும்படி திசைதிருப்புவதற்கு பிசாசானவன் எல்லாவிதமான முயற்சிகளையும் செய்வான். நம்முடைய எல்லா ஆசீர்வாதங்களும் அவருடைய கீழ்ப்படிதலை சார்ந்ததேயல்லாமல் நம்முடைய கீழ்ப்படிதலை சார்ந்தது அல்ல. ஒவ்வொரு எண்ணமும் சிலுவையின் வழியாக வடிகட்டப்பட வேண்டும். முடிவாக, எல்லாம் அவரை பற்றியது; மற்றும் நாம் அவருக்குள் பரிபூரணமாக இருப்பதை பற்றியது. நம்முடைய போராயுதங்கள் மாம்சத்துக்கு ஏற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாய் இருக்கிறது என்று பவுல் கூறுகிறார். விசுவாசமென்னும் கேடகம்தான் இருதயத்தின் மிகவும் வலிமை வாய்ந்த ஆயுதம் ஆகும். வேதாகமத்தில், எபேசியர் எனும் புத்தகத்தில், சர்வாயுதவர்க்க பட்டியலில், விசுவாசம் என்பது கேடகத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது[13]. இது விசுவாசத்தை மிகவும் நேர்த்தியாக விளக்கும் உருவகம். நேர்மறையான காட்சிகள் உங்கள் இருதயத்தை முழுவதும் ஆக்கிரமித்து இருக்கும்போது, அதற்கு எதிராக பிசாசு எறிகிற எந்தவொரு காட்சியும் உங்கள் இருதயத்தை ஊடுருவ முடியாது. தேவனுடைய வார்த்தையினால் இருதயமானது திடமாகி, கேடகம் போல செயலாற்ற தொடங்கும். இயேசுவை போல, உங்களுடைய ஒவ்வொரு அடியும் தேவனுடைய வார்த்தையினால் நடத்தப்படும். இதைத்தான் ஆவியில் நடப்பது என்று அழைக்கிறோம்!

விசுவாசமென்னும் கேடகம்தான் இருதயத்தின் மிகவும் வலிமை வாய்ந்த ஆயுதம் ஆகும்.

உங்களுடைய வாயின் அறிக்கை

விசுவாசம் எவ்வாறு செயல்படுகிறது என்று புரிந்துகொண்ட நாம், மற்றுமொரு முக்கியமான பகுதிக்கு நேராக நமது கவனத்தை திருப்புவோம் - உங்களுடைய வாயின் அறிக்கை!

தங்களுடைய இருதயத்தை விசுவாசத்தில் நிலைப்படுத்தாமல், "வாயின் அறிக்கைக்குள்" சட்டென்று குதித்தவர்கள் பின்னடைவைத்தான் சந்திக்கிறார்கள். இதனால், ஆரோக்கியமான வாயின் அறிக்கை என்பது, தவறாக புரிந்துகொள்ளப்பட்டு கெட்ட பெயரை வாங்கிவிட்டது. உங்கள் இருதயம் பொங்கி வழிவதனால் வருவதே வாயின் அறிக்கையாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையில் ஸ்தாபிக்கப்பட்ட இருதயத்திலிருந்து பொங்கி வழிவதுதான் விசுவாசம் நிறைந்த வார்த்தைகள் ஆகும். வார்த்தைகள் மிகவும் வல்லமை வாய்ந்தவைகள். ஆனால், துக்ககரமான விஷயம் என்னவென்றால், நமது சமுதாயம் வார்த்தைகளை மதிப்பிடுவதே இல்லை. இந்த உணர்வு முழுவதும் இல்லாவிட்டாலும், வார்த்தைகளின் தாக்கத்தை சந்தித்துக்கொண்டுதான் இருக்கிறோம். இயேசுவை பொறுத்தவரையில், வார்த்தைகள் எல்லாம் ஆவியாக இருக்கிறது! (யோவான் 6:63).

இயற்கை உலகத்தை நிர்வகிக்க இயற்பியல் பிரமாணங்கள் (laws of physics) உள்ளது போல, ஆவியினால் நடத்தப்படுகிற வாழ்க்கையை வாழுவதற்கும் ஆவிக்குரிய பிரமாணங்கள் இருக்கின்றன. விசுவாசம் நிறைந்த வார்த்தைகளை அறிக்கை செய்வதன் மூலமாகத்தான் ஆவியின் பிரமாணம் செயல்படுகிறது. இயேசு சொன்னார்:

"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று **சொல்லி**, தான் **சொன்னபடியே** நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் **சொன்னபடியே** ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மாற்கு 11:23).

அநேகமுறை உதாசீனப்படுத்தப்பட்ட ஞானத்தைதான் இயேசு இந்த வசனத்தில் கூறுகிறார். நாம் அறிக்கை செய்யும்போது, அந்த வார்த்தையின் வல்லமை கட்டவிழ்க்கப்படுகிறது! எனினும், தன்னுடைய இருதயத்தில் நம்பி, தன்னையே மலைகளை பெயர்க்கிறவராக பார்க்காமல், மலைகளை நோக்கி எவ்வளவுதான் பேசினாலும் ஒன்றுமே நடக்காது. வாயும் இருதயமும் ஒன்றாக செயல்பட வேண்டும். இந்நிலையில் இருந்து உங்களுடைய சூழ்நிலைகளுக்குள் பேசும்போது, அது உங்களுக்கு கீழ்ப்படியும். திறவுகோல் என்னவென்றால், சொல்வதே காரியம்; வெறுமனே சத்தம் போடுவது அல்ல! தேவனுடைய வார்த்தையில் நிலைநிறுத்தப்பட்ட இருதயத்திலிருந்து சொல்ல வேண்டும்!

வாயும் இருதயமும் ஒன்றாக செயல்பட வேண்டும்.

ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும் (நீதிமொழிகள் 15:4). ஜீவவிருட்சம் என்பது உங்கள் ஆவியில் ஏற்கெனவே இருக்கிறது. நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, தேவனுடைய வார்த்தை என்ற ஜீவவிருட்சம் உங்களுடைய இருதயத்தில் நடப்பட்டது. ஓர் ஆரோக்கியமுள்ள நாவு, ஆவியில் ஏற்கெனவே உள்ள வார்த்தைகளோடு தன்னை வரிசைப்படுத்திக் கொள்ளும் (aligns). ஓர் ஆரோக்கியமான நாவு, ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தையையே பேசும். மறுபுறம், மாறுபாடான நாவு என்பது, ஆவியோடு இசைந்திராமல், தன்னுடைய மாம்சீக மனதிலிருப்பவைகளை பேசும். இவ்வாறு செய்வதால், அது ஆவியின் ஜீவனை முறித்துப்போடும். *நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்* என்பதற்கு இதுதான் அர்த்தம்.

உங்களுடைய வார்த்தைகள் மிகவும் வல்லமை வாய்ந்தது. துக்ககரமான விஷயம் என்னவென்றால், அநேக ஆண்டுகளாக, நாவின் வல்லமையை குறித்து நான் புரிந்துகொள்ளாமல்

இருந்தேன். இப்பொழுதோ, நாவின் வல்லமையை நான் அறிந்திருப்பதால், நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறேன். ஆசீர்வாதத்தையோ அல்லது சாபத்தையோ நான் எனது நாவை உபயோகப்படுத்தி கட்டவிழ்க்கலாம். நாவு ஒரு ஆயுதம். அதை எவ்வாறு நான் பயன்படுத்துகிறேன் என்பதை குறித்து நான் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கிறது. நாவின் அபாயத்தை குறித்து அப்போஸ்தலனாகிய யாக்கோபு எச்சரிப்பு விடுக்கிறார். நாவானது நரக அக்கினி என்று யாக்கோபு சொல்லுகிறார் (யாக்கோபு 3:6). அதாவது, பிசாசானவன், பயம் மற்றும் சந்தேகம் நிறைந்த தன்னுடைய வார்த்தைகளை நாம் பேசவேண்டும் என்று விரும்புகிறான். பிசாசானவன் மாம்ச பிசாசு என்பதை நினைவில்கொள்ளுங்கள். மாம்சரீதியான மனம்தான் மாம்சத்தின் சிங்காசனமாக இருக்கிறது. ஆகவேதான், தேவனுடைய ஆவியானவர் வசிக்கும் உங்கள் இருதயத்திலிருந்து பேசாமல், மாம்சீகமான மனதிலிருந்து நீங்கள் பேச வேண்டும் என்று பிசாசானவன் விரும்புகிறான். நாவை குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது ஏன் என்று இப்பொழுது புரிந்திருக்கும். உங்களுடைய நாவினால் உங்கள் சரீரத்தை ஆசீர்வதித்து, ஜீவனை கட்டவிழ்க்க வேண்டும்.

நாவானது நரக அக்கினி

வதந்திகளை பரப்புபவர்களாகவும், வீண் பேச்சுகளை பேசுபவர்களாகவும் நீங்கள் இருப்பீர்களானால், நீங்கள் அமைதியாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது[14] என்று நீதிமொழிகள் கூறுகிறது. வீண்பேச்சுகள் மாம்சீக மண்டலத்திற்குள் இறுதியாக உங்களை கொண்டு சென்றுவிடும். அதிகமாக பேசுபவர்கள் கடைசியில் முட்டாள்தனத்தில்தான் முடிப்பார்கள். நகைச்சுவை மற்றும் நம்முடைய

உங்களுடைய நாவானது மிகவும் வல்லமையுள்ளது.

உணர்ச்சிகளை தூண்டுகிற கருத்துக்களிலும் கூட மரணம் கலந்திருக்கிறது. தாங்கள் சரீரத்தில் வாழுகிற ஆவி மனிதர்கள் என்பதை உணர்ந்துகொண்டால், வார்த்தையின் வல்லமையை அவர்கள் நிச்சயமாக பாராட்டுவார்கள். ஆவியின் நடத்துதலுக்கு தன்னையே ஒப்படைத்த ஒரு ஆத்துமா, வார்த்தைகளை பேசுவதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கும். உங்களுடைய நாவானது மிகவும் வல்லமையுள்ளது. அது, ஜீவனையோ அல்லது மரணத்தையோ கட்டவிழ்க்க வல்லமையுள்ளது. ஆகவே, நாவை ஞானத்தோடு பயன்படுத்தி, உங்கள் இருதயத்திலிருந்து தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்.

ஆவியில் நடப்பதை ஒரே நாளில் கற்றறிய முடியாது. அது ஒரு சீடனுடைய அன்றாட வாழ்க்கைமுறை ஆகும். அது ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கை பயணம். ஒரு சூழ்நிலையை எடுத்து, அதில், பரிசுத்த ஆவியானவர் உங்களை அமைதியான தண்ணீர்களண்டையிலும் பசும்புல்லிலும் நடத்தும்படி விட்டுக்கொடுத்து பழகுவதுதான் இந்த வாழ்க்கைமுறை.

விசுவாசத்தில் நடப்பது (ஆவியில் நடப்பது) என்பது 4 படிகளை உள்ளடக்கியது:

1. முதலாவது, வார்த்தையில் உள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களை பாருங்கள். அந்த எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் நீங்கள் தகுதியுள்ளவர்கள் என்பதை பாருங்கள் (நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதால்).

2. அந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில், தியானத்தின் மூலமாக நீங்கள் ஆரோக்கியமாகவும் பரிபூரணமாகவும் இருப்பதாக ஒரு படத்தை உங்கள் இருதயத்தில் வண்ணம் தீட்டுங்கள்.

3. உங்கள் இருதயத்தில் நீங்கள் கண்டதோடு உங்கள் நாவை ஒழுங்குப்படுத்தி வரிசைப்படுத்துங்கள்.

4. இப்பொழுது நீங்கள் கண்டு அறிக்கையிட்டதின்படியே செயல்பட ஆரம்பியுங்கள்.

இவ்வாறுதான் உங்கள் இருதயத்தை வார்த்தையின் பாதையில் நடத்த முடியும். வேறு வழியே இல்லை!

தோட்டத்தை பாதுகாப்பது

மாறுபாடுள்ளவனுடைய வழியிலே முள்ளுகளும் கண்ணிகளுமுண்டு; தன் ஆத்துமாவைக் காக்கிறவன் அவைகளுக்குத் தூரமாய் விலகிப்போவான் (நீதிமொழிகள் 22:5).

மாறுபாடு என்றால், 'கோணலான' அல்லது 'சிதைந்துபோன' என்று பொருள்படும். ஆத்துமா என்பது இருதயத்தின் ஒரு பகுதி என்றும், நம்மால் அதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் 'இருதயம்' என்ற அத்தியாயத்தில் நாம் கற்றுக்கொண்டோம். முள்ளுகளுக்கும் கண்ணிகளுக்கும் விலகியிருக்க வேண்டுமானால், கோணல்மானலான காரியங்களிலிருந்து உங்களுடைய இருதயத்தை காத்துக்கொள்ள வேண்டும் என்று தேவனுடைய ஞானம் கூறுகிறது. உங்களுடைய ஆவி பகுதி ஏற்கெனவே தேவனோடு மிக நேர்த்தியாக இருக்கிறது. நம்முடைய மனதையும் நாவையும் ஆவியோடு இசைந்திருக்கும்படி வைக்காவிட்டால், நாம் குழப்பங்களை உருவாக்கிவிடுவோம். ஒரு விசுவாசியின் வாழ்வில் உண்டாகிற எல்லா துயரங்களுக்கும் அதுதான் காரணம்!

நீங்கள் ஆவியில் நடக்கும்போது, தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் உங்களையே நீங்கள் நிதானிக்கின்றீர்கள். நீங்கள் அவருக்குள் இருப்பதால், உங்களையே நீங்கள் தகுதியுள்ளவர்களாக காண்பீர்கள். இந்த கண்ணோட்டத்தில் இருந்தால்தான், மற்ற விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலையையும் அவ்வாறே உங்களால் காண முடியும். உங்களை போலவே அவர்களையும் தகுதியுள்ளவர்களாக பார்க்க முடியும். இது, மனக்கசப்பிலிருந்து உங்களை காத்து, அன்பில் நடக்க உதவும். அன்பின் மூலமாகத்தான் விசுவாசம் செயல்படும். ஆவியில் நடப்பது என்றால் அன்பில் நடப்பது ஆகும்.

முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு[15] என்று இயேசு சொன்னார். முதலாவது, உங்களையே நீங்கள் ஆவியில் பார்த்தால்தான், மற்றவர்களையும் நீங்கள் சரியாக பார்த்து நிதானிப்பீர்கள் என்று இயேசு கூறுகிறார். கொரிந்தியர்களுக்கு எழுதும் போது, பவுலும் கூட இதே எண்ணத்தைத்தான் எதிரொலிக்கிறார்[16]. தங்களை ஆவியில் பார்க்கும்படியாக பவுல் அவர்களை ஊக்கப்படுத்துகிறார்! நமது மாம்சத்தை சுத்திகரிப்பதை குறித்து இயேசு இங்கு பேசவில்லை. மாம்சம் சுத்திகரிக்கப்படுவதற்கு வழியே இல்லை. ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: மரணம்! ஆவியில் நடப்பதினால் மட்டும்தான் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றாமல் இருக்க முடியும். இதற்கிடையில் ஒன்றும் இல்லை. வேறு வழியும் இல்லை!

மாம்சம் சுத்திகரிக்கப்படுவதற்கு வழியே இல்லை. ஒரே ஒரு வழிதான் இருக்கிறது: மரணம்!

களைந்து போடுங்கள் – தரித்துக் கொள்ளுங்கள்

பழைய மனுஷனால் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட யாவையும் நீங்கள் களைந்து போட்டு, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்[17] என்று பவுல் தன்னுடைய எல்லா நிருபங்களிலும் எழுதி விசுவாசிகளை ஊக்கப்படுத்துகிறார். இது மிகவும் சாதாரணமான ஆலோசனை. ஆனால் அனுதினமும் நடைமுறைபடுத்தக்கூடிய மிகவும் வல்லமையான ஆலோசனை ஆகும். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், அந்த துன்புறுத்துகிற எண்ணங்கள், மன்னியாமை மற்றும் உங்களை தொந்தரவுபடுத்துகிற எதிர்மறையான உணர்ச்சிகள் மேல் உங்களுடைய அதிகாரத்தை நீங்கள் செலுத்த முடியும். நீங்கள் தேவனோடு செலவிடும்

உங்களுடைய அமைதியான தியான நேரத்தில், அப்படிப்பட்ட எண்ணங்களோடு உறுதியாக அதிகாரத்தோடு பேசி, அவைகளை துரத்திவிடுங்கள். அந்த எண்ணங்கள் உங்களை விட்டு செல்வதை உங்கள் கற்பனையில் பாருங்கள். அவ்வாறு நீங்கள் அதிகாரத்தோடு பேசியதும், கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார் என்ற நிலையை நன்கு அறிந்தவர்களாய் கட்டளையிடுவதால், அப்படிப்பட்ட எண்ணங்கள் உங்களை விட்டு விலகியே தீரும் என்று உங்களுக்கு திட்டமாய் தெரியும். மறுபடியும் அப்படிப்பட்ட எண்ணங்கள் வரும்போது, அவைகளை நீங்கள் ஏற்கெனவே துரத்திவிட்டீர்கள் என்பதை மாத்திரம் நினைவில்கொள்ளுங்கள். அநேக சூழ்நிலைகளில், அது அத்தனை எளிதாகவே இருந்திருக்கிறது!

அப்படிப்பட்ட எதிர்மறையான எண்ணங்களை துரத்தின பின்னர், தேவனுடைய வார்த்தையிலுள்ள உங்களுடைய அடையாளத்தை குறித்த ஆரோக்கியமான நேர்மறையான எண்ணங்களினால் உங்களுடைய மனதை நிரப்புங்கள். 'கிறிஸ்துவுக்குள்', 'கிறிஸ்துவின் மூலமாய்', 'கிறிஸ்துவோடு' போன்ற வார்த்தைகள் உள்ள வசனங்களையெல்லாம் குறிப்பெடுத்துக்கொண்டு, தவறாமல் அறிக்கையிடுங்கள். 'தன்மை' (first person singular) என்ற இலக்கண நடையில் பேசுங்கள். அதாவது, 'நான்', 'எனக்கு', 'என்னுடைய', போன்ற வார்த்தைகளை தேவனுடைய வசனங்களில் சேர்த்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களை உங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளுங்கள். சங்கீதக்காரனாகிய தாவீது இந்த பயிற்சியை அடிக்கடி செய்து வந்தான். தேவன் எவ்வளவு நல்லவர் என்றும், கடந்த நாட்களில் தேவனுடைய செயல்கள் எத்தனை மகத்துவமுள்ளதாய் இருந்தது என்றும் அடிக்கடி தனக்குத்தானே தாவீது சொல்லிக்கொண்டான். அவ்வாறு செய்ததால், அவன் ஆண்டவராகிய இயேசுவை தரித்துக்கொண்டான். தேவனுடைய ராஜ்யத்தின் திறவுகோல்களை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார். ராஜ்யம் என்றால் மண்டலம்! உங்களுடைய இருதயத்திலிருந்து, வாயின் மூலமாகத்தான் ஆவிக்குரிய மண்டலம் செயல்படும்.

பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை (அதிகாரத்தை) நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது (தடைசெய்வது, ஒழுங்கில்லாதது, சட்டவிரோதமானது என்று அறிவிப்பது) எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் (ஏற்கெனவே), பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது (அனுமதிப்பது, சட்டரீதியானது என அறிவிப்பது) எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் (ஏற்கெனவே) என்றார் (மத்தேயு 16:19)

இவ்வாறாக ஆங்கிலத்தில் உள்ள Amplified Bible, ராஜ்யத்தின் திறவுகோல்கள் எவ்வாறு செயல்படுகிறது என்று தெளிவாக கூறுகிறது. நம்முடைய வாழ்க்கையில் நாம் எதை அனுமதிக்கிறோம் அல்லது தடைசெய்கிறோம் என்பதின் அடிப்படையில்தான் ராஜ்யம் செயல்படுகிறது. நம்முடைய ஆவியோடு ஒத்துப்போகும் வார்த்தைகளை பயன்படுத்தித்தான் நம்முடைய நடைகளின் ஒவ்வொரு அடியையும் உறுதிப்படுத்துகிறோம். ஆவியில் நடப்பது என்பதின் மையச்செய்தி இதுவே!

பயமும் அச்சுறுத்தலும் மிகவும் வேதனையுள்ளது. நீங்கள் விசுவாசத்தில் அடியெடுத்து வைக்கும்போது, பயங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கும். மரண பயம்தான் மிக கொடிய பயம். மரண பயமானது, தெரியாதவைகளை குறித்த பயமேயன்றி (fear of the unknown) வேறொன்றும் இல்லை. நீங்கள் விசுவாசத்தில் அடியெடுத்து வைக்கும்பொழுது, பயத்தின் எண்ணங்களைத்தான் பிசாசானவன் அக்கினியாஸ்திரங்களாக உங்கள் மீது எய்வான். ஆனால், உங்களுக்கோ அதிகாரம் இருக்கிறது. அதை நீங்கள்தான் செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு பயம் நிறைந்த எண்ணத்தையும் நீங்கள் சிலுவைக்கு அனுப்பிவிட வேண்டும். எவ்வாறு களைந்து போட வேண்டும் என்றும், தரித்துக்கொள்ள வேண்டும் என்றும், மனக்கசப்புக்களை சிலுவைக்கு எவ்வாறு அனுப்பிவிட வேண்டும் என்றும் என்னுடைய பிள்ளைகளுக்கு நான் கற்றுக்கொடுத்திருக்கிறேன். ஒருமுறை என்னுடைய மகள் இவ்வாறு கூறினாள்: "அப்பா, அப்படியானால், சிலுவை என்பது, நாம் அனுப்பிவிடும் எல்லா தீய காரியங்களையும் தன்

பக்கமாக ஈர்த்துக்கொள்ளுகிற காந்தம் இல்லையா?!" இதை விட தெளிவாக என்னால் கூற முடியாது! ஆம், உங்களுடைய கற்பனையில், உங்களது இருதயமாகிய தோட்டத்தின் மையத்தில் ஒரு சிலுவையை நிறுத்தி, அதின் மீது நீங்கள் அனுப்புகிற எல்லா எதிர்மறையான எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் அது தனக்குள் ஈர்த்துக்கொள்வதாக பாருங்கள்.

மன்னியாமையை அணுகுதல்

நமக்கு தவறு செய்தவர்களை நாம் மன்னிக்க வேண்டும் என்று இயேசு அறிவுறுத்துகிறார். தனக்கு தவறிழைத்தவரை ஒருவர் மன்னியாமற்போனால், தேவனும் கூட அவரை மன்னிக்கமாட்டார் என்ற தவறான போதனை பரவியிருக்கிறது. இயேசு கிறிஸ்து சிலுவையிலே செய்து முடித்த கிரியைகளை குறித்த அறியாமையும், வேதாகமத்தில் சில இடங்களில் இயேசு கூறியதை தவறாக புரிந்துகொண்டதாலும்தான், இப்படிப்பட்ட போதனைகள் வலம் வருகின்றன. கர்த்தருடைய ஜெபத்தில், "நாங்கள் எங்களுக்கு விரோதமாக குற்றம் செய்தவர்களை மன்னிக்கிறது போல, எங்களுடைய குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என்று இயேசு கூறும்படி கற்பித்தார். இந்த வரியினிமித்தம், நாம் மற்றவர்களை மன்னிக்காவிட்டால், நம்முடைய குற்றங்களை தேவன் மன்னிக்கமாட்டார் என்ற முடிவுரைக்கு மக்கள் வந்துவிட்டனர். மற்றுமொரு இடத்தில், இயேசு இவ்வாறாக கூறினார்:

"நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். [26]நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்" (மாற்கு 11:25-26).

இங்கு இன்னும் தெள்ளத்தெளிவாக இருக்கிறது! 26வது வசனத்தில், நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து மன்னியாதிருப்பீர்களானால்,

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்று இயேசு சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது. பொறுங்கள்! சற்றே பொறுங்கள்! இதுவரைக்கும், சிலுவையை குறித்து நாம் என்ன கற்றுக்கொண்டோம் என்பதை நினைவிற்கு கொண்டு வருவோமாக. கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து எழுந்தவுடன், பிதாவானவர் முழு உலகத்தின் பாவங்களையும் மன்னித்துவிட்டார். ஆம்! எல்லா மக்களுடைய சகல பாவங்களும் சிலுவையிலே மன்னிக்கப்பட்டுவிட்டது. அப்படியானால், எல்லாரும் இரட்சிக்கப்பட்டுவிட்டார்களா? இல்லை!

மன்னிப்பை கொடுப்பது என்பது ஒரு நபரை உட்படுத்தும் செயல். ஆனால், ஒப்புரவாக்குதலோவென்றால், இரு நபர்களை உட்படுத்தும் செயல். மனுக்குலமானது, ஆண்டவராகிய இயேசுவின் நாமத்தை நோக்கி கூப்பிட்டு, அவருடைய மன்னிப்பை பெற்றுக்கொண்டு, தேவனோடு கூட ஒப்புரவாக்கும்படி, முழு உலகத்திற்கும் மன்னிப்பை சிலுவையிலே தேவன் கட்டவிழ்த்துவிட்டார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மகா ஆச்சரியமான அறிவிப்பு இதுதான்! அப்போஸ்தலனாகிய பவுல் என்ன கூறுகிறார் என்று கீழே கவனியுங்கள்:

"இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், **தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி**, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" (2 கொரிந்தியர் 5:18-20).

நம்முடைய பாவங்கள் இயேசுவின் மீது சுமத்தப்பட்டதினால், தேவன் நம்முடைய மீறுதல்களை நம்மீது சுமத்துவது

இல்லை! நம்முடைய எல்லா பாவங்களும் சிலுவையிலே மன்னிக்கப்பட்டுவிட்டது! இப்பொழுதோ, தம்முடைய மன்னிப்பை பெற்றுக்கொண்டு, அவரோடு ஒப்புரவாகும்படியாக முழு உலகத்திற்கும் தேவன் அழைப்பு விடுக்கிறார். மாற்கு 11:26ல் இயேசு கூறியதை, இந்த புரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் எவ்வாறு காண்பது? தேவனுடைய வல்லமை நமது ஆவியில் வசிக்கிறது என்பதை நினைவில்கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களை மன்னியாமல் இருக்கும்பொழுது, நமது ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் ஒரு சுவரை நாமே கட்டுகிறோம். அதினால், நமது ஆவிக்குள் இருக்கும் ஜீவனும் சுகமும், உள்ளிருந்து வெளியே வர முடியாமல் போகிறது. ஆகவே, நமது ஆவியிலுள்ள தேவனுடைய ஜீவனை நாம் அனுபவிக்கும்படியாகத்தான், மனக்கசப்புகளை விட்டுவிடும்படியாக இயேசு நமக்கு ஞானமான போதனையை தருகிறார். யாராவது உங்களுக்கு துரோகம் செய்து, நீங்கள் அவரை மன்னிப்பதற்கு போராடிக்கொண்டிருந்தால், உங்கள் பரலோக பிதாவிடம் அதைக் குறித்து பேசுங்கள். அவர் முன்பாக நீங்கள் அறிக்கையிட்டால், அவர் உங்களை பெலப்படுத்துவார். தேவனுடைய மன்னிப்பு நிபந்தனையற்றது என்றும், அது உங்களுக்குள் வாசம் செய்கிறது என்றும் நீங்கள் முற்றிலும் நம்பும்போது, மற்றவர்களுக்கு மன்னிப்பை அருள்வது மிகவும் எளிதாகிவிடும். அச்சமயத்தில், "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினால் இந்த நபரையும் அவர் எனக்கு செய்த தவறையும் சிலுவைக்கு அனுப்புகிறேன். என்னுடைய மனக்காயங்களை எல்லாம் சிலுவைக்கு அனுப்பிவிட்டு, என்னுடைய ஆவிக்குள் இருக்கும் கிறிஸ்துவின் அன்பை நான் தரித்துக்கொள்கிறேன். நான் சுதந்திரமாய் நடப்பதை தேர்ந்தெடுக்கிறேன். ஆமென்" என்று கூறி உங்களுக்கு தவறிழைத்தவரை விடுதலையாக்கிவிடலாம். இப்படித்தான் நீங்கள் விசுவாசத்தில் செய்ய வேண்டும். உங்களுடைய உணர்வுகள் இதற்கு மாறாக இருந்தாலும், இதுதான் விசுவாச நடை என்பதை நினைவில்கொள்ளுங்கள். உங்களுடைய உணர்ச்சிகள் சீக்கிரத்தில் உங்கள் விசுவாசத்தை பின்தொடர்ந்து வந்துவிடும். முடிந்தால், அந்த மனக்கசப்புகள் உங்களிடமிருந்து

சிலுவைக்கு செல்வதாக கண்டு, கர்த்தருடைய பந்தியில் பங்கெடுங்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் சுகத்தை அனுபவிக்கும்படியாக, புது சிருஷ்டியை தரித்துக்கொள்வதும், பழைய மனுஷனை களைந்து போடுவதும்தான் உயிர்த்தெழுதலின் வாழ்க்கையை வாழுவதற்கு வேதப்பூர்வமான ஒரே வழி ஆகும்!

வேதவசன ஆதாரங்கள்

1. நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம் (கலாத்தியர் 5:25).

2. தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி (2 பேதுரு 1:3).

3. ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17).

4. எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரிந்தியர் 1:20).

5. அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான் (யாக்கோபு 1:7-8).

6. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள் (எபிரெயர் 11:1-2).

7. விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம் (2 கொரிந்தியர் 4:13).

8. இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய

களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் (1 பேதுரு 2:1-3).

9. அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர் 4:19-21).

10. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய் (1 தீமோத்தேயு 6:12).

11. தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவான் 5:4).

12. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2 கொரிந்தியர் 10:4-5).

13. பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள் (எபேசியர் 6:16).

14. சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் (நீதிமொழிகள் 10:19).

15. நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய் (மத்தேயு 7:3-5).

16. ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான் (1 கொரிந்தியர் 2:14-15).

17. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 4:22-24).

10

அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தல்

ஏழாம் நாளில் தேவன் ஓய்வெடுத்தார் என்று ஆதியாகமம் புத்தகத்தில் உள்ள சிருஷ்டிப்பின் கதையில் நாம் வாசிக்கிறோம். ஆறாம் நாளில் தேவன் மனிதனை சிருஷ்டித்த பின்னர் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். ஓய்வு நாள் என்பது இந்த இளைப்பாறுதலுக்குள் நுழைவதற்கு சமம் ஆகும். பத்து கட்டளைகளில் நாலாவது கட்டளை என்னவென்றால், ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும்[1] என்பதே. இது, உண்மையான இளைப்பாறுதலை தரவிருக்கும் மேசியாவின் வருகையை எதிர்நோக்கியிருக்கும்படி, நினைவுபடுத்தலாக இருந்தது. ஏதேன் தோட்டத்தில், ஆதாமுக்கு வேண்டிய எல்லாமே கொடுக்கப்பட்டிருந்தது. சமாதானமும் அமரிக்கையும் நிறைந்த ஒரு சூழலில், தேவனோடு ஓர் அருமையான உறவை ஆதாம் அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருந்தான். மனுக்குலம் அனைத்திற்கும் இதுதான் தேவனுடைய பரிபூரண சித்தம். ஆண்டவர் மறுபடியும் ஒரு நாள் வந்து புதிய வானத்தையும் புதிய பூமியையும் ஸ்தாபிப்பார் என்று இரட்சிக்கப்பட்ட நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்பொழுது நம்முடைய இருதயங்கள் நம்பிக்கையினாலும் மகிழ்ச்சியினாலும் நிறைந்திருக்கும். ஆனால், அந்த நாள் வருவதற்கு முன்னர், இப்போதைய வாழ்க்கையில் அவர் நம்மை உதவியற்றவர்களாக விட்டுவிடவில்லை. அவர் நமக்குள்ளாக

ஒரு ராஜ்யத்தையே நிறுவியிருக்கிறார். அந்த ராஜ்யத்திற்குள்ளாக நுழைந்து, இப்பொழுது இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

மனிதன் தன்னுடைய மகிமையான நிலையினின்று விழுந்ததிலிருந்து, நாம் அவருடைய இளைப்பாறுதலுக்குள் நுழைந்துவிட வேண்டும் என்று தேவன் பிரயாசப்பட்டுக்கொண்டே இருக்கிறார். மதரீதியான அல்லது புறம்பான காரியங்களில் லயித்திருக்கும் மனதை உடையவர்களுக்கு இளைப்பாறுதல் என்ற யோசனையே விகற்பமாக இருக்கும். எபிரெயர் 4ஆம் அதிகாரத்தில், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுதல் காத்துக்கொண்டிருக்கிறது என்று எபிரெய ஆக்கியோன் எழுதுகிறார். பழைய ஏற்பாட்டில், வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் என்பது, இஸ்ரவேலர்களுக்கு ஒரு இளைப்பாறுதலாக இருந்தது. ஆனாலும், அது மெய்யான இளைப்பாறுதல் கிடையாது. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளாக இஸ்ரவேலர்களை யோசுவா நடத்திக்கொண்டு சென்றான். அதுதான் மெய்யான இளைப்பாறுதலாக இருக்குமென்றால், யோசுவாவுக்கு பின்னர் அநேக ஆண்டுகள் கழித்து வந்த தாவீது, இனிமேல் வரவிருக்கும் இளைப்பாறுதலை குறித்து பேசியிருக்கமாட்டார். இயேசுதான் எப்பொழுதுமே உண்மையான இளைப்பாறுதல் ஆவார்! பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் இயேசுதான் அச்சாணி ஆவார். சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது[2]. வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசம் என்பது, வரவிருக்கும் மெய்யான இளைப்பாறுதலுக்கு நிழலாயிருந்தது. அந்த இளைப்பாறுதல், இப்பொழுது இயேசுவுக்குள் இருக்கிறது.

அதே அதிகாரத்தில், இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்படியாக விசுவாசிகள் ஜாக்கிரதையாய்

இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கு நாம் செயலாற்ற வேண்டுமாம்!

இருக்க வேண்டும் என்று எபிரெய ஆக்கியோன் அழைப்பு விடுக்கிறார். 'ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்' என்பது விசுவாச வாழ்க்கைக்கு முரணாக செயல்பட சொல்வது போல் காட்சியளிக்கிறது. அதாவது, இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கு நாம் செயலாற்ற வேண்டுமாம்! நாம் இளைப்பாறுதலுக்குள் நுழைந்தவுடன், செயல்பாடுகள் நின்றுபோகும். அந்த அதிகாரத்தை நீங்கள் ஜாக்கிரதையாக வாசிப்பீர்களானால், 11வது வசனத்திற்கும் 12வது வசனத்திற்கும் நடுவில், எபிரெய ஆக்கியோன் தலைப்பையே மாற்றுவது போல இருக்கிறது.

[11]ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம். [12]தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது (எபிரெயர் 4:11-12).

11வது வசனத்தில், "நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்" என்று எல்லா விசுவாசிகளுக்கும் அழைப்பு விடுக்கிறார். 12வது வசனத்திலோ, தேவனுடைய வார்த்தையிலுள்ள ஜீவனை குறித்து பேசுகிறார். இதில் எந்த தலைப்பும் மாறவில்லை. புதிய உடன்படிக்கையின் கீழ், ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் வேதாகமம் வாக்களிக்கும் மெய்யான இளைப்பாறுதல் எதுவென்றால், தேவனுடைய வார்த்தைதான்! புதிய உடன்படிக்கையின் விசுவாசிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் எதுவென்றால், தேவனுடைய வாக்குத்தத்தங்கள்தான். நாம் அவருடைய வாக்குத்தத்தங்களின்படி வாழும்போது, மெய்யாகவே அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம். கடந்த அத்தியாயங்களிலிருந்து, விசுவாசத்தினால் வரும் தேவநீதி என்பது ஒரு ஈவு என்று நீங்கள்

தேவனுடைய வாக்குத்தத்தங்களால் உங்களுடைய இருதயமானது முழுவதும் வசப்பட்டிருக்கையில், வியாதி மற்றும் நோயில் உங்களால் இருக்கவே முடியாது.

புரிந்திருப்பீர்கள். ஆகவே, நாம் நீதிமான்களாவதற்காக செயல்படுவதில்லை. மாறாக, நீதியின் வல்லமைக்கு நம்மையே விட்டுக்கொடுக்கும்படியாக செயல்படுகிறோம். அவ்வாறு நாம் செய்ய தொடங்கும்போது, தேவநீதியானது, நம்முடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், நடக்கைகள் மற்றும் ஆரோக்கியத்திற்குள்ளாக ஊடுருவி பாய்ந்திட ஆரம்பிக்கும். தேவனுடைய வாக்குத்தத்தங்களால் உங்களுடைய இருதயமானது முழுவதும் வசப்பட்டிருக்கையில், வியாதி மற்றும் நோயில் உங்களால் இருக்கவே முடியாது. இந்த செயலில் இறங்குவதற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இது, தேவனுடைய வார்த்தையை கொண்டு மனதை புதுப்பிப்பதால் செய்ய முடியும். ஆகவே, மறுரூபமடைவதற்கும் மெய்யான இளைப்பாறுதலை அனுபவிப்பதற்கும், மனம் புதிதாவதுதான் தொடக்கப்புள்ளி!

வேறொரு வசனத்தை ஆராய்வோம்:

"தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப்** பங்குள்ளவர்களாகும்பொருட்டு, **மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும்** அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:3-4).

நமக்கு மகா மேன்மையும் அருமையான வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது! நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், அந்த

வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்கு நாம் தகுதியுள்ளவர்களாய் இருக்கிறோம். தேவனுடைய நன்மைகளில் பங்கெடுப்பதற்கு நாம் தகுதியுள்ளவர்கள். இப்பொழுது, நாம் அதை சுதந்தரிப்பதற்காக செயலில் இறங்குகிறோம். அந்த வாக்குத்தத்தங்களில் நாம் வாழுவதாக நம்முடைய இருதயங்களில் காண்கிறோம். அந்த வாக்குத்தத்தங்களின் மீது நமது முழு கவனத்தையும் செலுத்தும்போது, குறிப்பிட்ட சூழ்நிலையை குறித்த அந்த வாக்குத்தத்தங்கள் நமது இருதயத்தில் உண்மையாக மாறுகிறது. அந்த சமயத்தில்தான் நம்முடைய இருதயம் இளைப்பாறுதலுக்குள் நுழைகிறது. ஆம்! நாம் நம்முடைய இருதயத்தை சம்மதிக்க வைத்துவிட்டோம்! அதன் பிறகுதான், அது நமது வாழ்வில் வெளிப்பட ஆரம்பிக்கிறது.

பாவ சுபாவமா? தெய்வீய சுபாவமா?

இந்த வார்த்தைகளை குறித்து அநேக விசுவாசிகள் குழப்பமடைந்திருக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர், தாங்கள் மறுபடியும் பிறந்த பிறகும் கூட தங்களுக்குள் பாவ சுபாவம் இருப்பதாக நம்புகிறார்கள். ஆனால், தேவனுடைய வார்த்தையின்படி, பாவ சுபாவம் உங்களுக்குள் இல்லை; மாறாக, தெய்வீய சுபாவம்தான் உங்களுக்குள் இருக்கிறது. இந்த காரியத்தை குறித்து நீங்கள் உங்கள் இருதயத்தில் முதலாவது தீர்க்கமாக முடிவுகட்டுங்கள். இது உங்களுடைய தொடக்கப்புள்ளியாக இராவிட்டால், நீங்கள் உங்கள் பயணத்தை தொடங்கவே முடியாது. நீங்கள் இருளிலிருந்து ஒளியின் ராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டு இருக்கின்றீர்கள்[3]. உங்களுடைய பாவ சுபாவம் ஒழிந்துபோனது. அதற்கு பதிலாக, உங்களுக்கு

தேவனுடைய வார்த்தையின்படி, பாவ சுபாவம் உங்களுக்குள் இல்லை; மாறாக, தெய்வீய சுபாவம்தான் உங்களுக்குள் இருக்கிறது.

திவ்விய சுபாவம் அருளப்பட்டிருக்கிறது. ஆம்! அவருடைய வாக்குத்தத்தங்களின் மூலமாக, அவருடைய திவ்விய சுபாவத்தில் நாம் பங்கெடுக்கும்படியாக தேவன் நம்மை அழைக்கிறார். ஆனாலும் உங்களுக்கு ஓர் மாம்சம் இருக்கிறது என்பதை நினைவில்கொள்ளுங்கள். நாம் முந்தின அத்தியாயங்களில் கற்றுக்கொண்டபடி, கிறிஸ்துவோடு கூட உங்களது மாம்சம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. ஆகவே, நமது மாம்சத்தை நாம் சிலுவையில் அறைவதற்கு முயற்சிப்பதில்லை. இயேசுவின் மரணத்தில் நமது மாம்சத்தின் மரணத்தை காண்கிறோம். அவ்வளவுதான்! நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்போதெல்லாம், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை நிறைந்த ஜீவியத்தை அடையும்படி, அவருடைய மரணத்தில் நம்முடைய மரணத்தை அறிக்கை செய்கிறோம். "அவருடைய இளைப்பாறுதலில் நுழையுங்கள்" என்பது நம் அனைவரையும் நோக்கி வருகிற அழைப்பு ஆகும். இளைப்பாறுதலில் மாத்திரம்தான் பூரண ஆரோக்கியத்தை, உள்ளபடியே (தேவநீதியினிமித்தம்) அனுபவித்து மகிழ முடியும். ஆகவே, இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்.

ஆவியில் நிறைந்திருப்பது

நம்முடைய இருதயத்தில் இருக்கிறவண்ணமாக தேவனுடைய வாக்குத்தத்தங்களை அனுபவிப்பதற்கு, ஆவியில் எவ்வாறு நிரம்பி இருக்க வேண்டும் என்று புரிந்துகொள்வது அவசியமாயிருக்கிறது. ஆவியில் நிரம்பியிருப்பது என்றால், அப்போஸ்தலர்கள் கற்றுக்கொடுத்ததிலிருந்து வழி விலகிப்போய், அது ஏதோ மாயமானது என்று சிலர் தவறாக புரிந்துகொண்டார்கள். ஆவியில் நிரம்புவதை பற்றி தவறான கருத்துக்கள் பரவியிருப்பதால், சில கிறிஸ்தவ அமைப்புகள், ஆவியை முழுமையாக நிராகரிக்கின்றனர். இதனால், அநேகர், ஆவியில் நிரம்புவதை தவிர்க்கிறார்கள். சிலர், ஆவியில் நிரம்புவதை, அந்நிய பாஷையில் பேசுவதோடு

சமன்படுத்துகிறார்கள். இது முற்றிலும் சரியல்ல. மாறாக, அந்நிய பாஷையில் ஜெபிப்பது என்பது, ஆவியில் நிறைந்திருப்பதால் பொங்கி வழிவது ஆகும். பெந்தெகொஸ்தே நாளில், அவர்கள் முதலாவது ஆவியில் நிரம்பியிருந்தார்கள். பிற்பாடு, வேறே பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள்.

எபேசு சபைக்கு எழுதின நிருபங்கள் வாயிலாக, ஆவியில் நிரம்புவது எப்படி என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு காண்பித்திருக்கிறார். அதைக் குறித்து எழுதும்போது, "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து கொண்டிருங்கள்"[4] என்று கூறுகிறார். இதுதான் வேதாகமத்தின் அடிப்படையில், ஆவியில் நிரம்புவது ஆகும். கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்று நமக்கு நாமே அடிக்கடி நினைவுபடுத்திக்கொண்டு, அதையே பாடலாக பாடி, இயேசுவை (நமக்குள் வாழ்பவர்) ஆராதனை செய்து, இருதயத்தில் ராகத்தை முணுமுணுத்துக்கொண்டிருந்து, அந்த உண்மையோடு நாம் இணைவதால், நமது மனதில் ஆவிக்குரிய உண்மையை பதிக்கிறோம். அப்பொழுது, உம்முடைய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் தேவனுடைய ஜீவன் நிறைக்க ஆரம்பித்ததும், நாம் ஆவியில் நிறைகிறோம். அதன் பின்னர், இந்த பொங்கி வழிகிற ஆவிக்கு நாம் நமது நாவை விட்டுக்கொடுக்கும்போது, நமது ஆவியிலிருந்து வார்த்தைகளை பேச ஆரம்பிக்கிறோம். இதைத்தான், இயேசு, சுருக்கமாக கீழுள்ள வசனத்தில் கூறியிருக்கிறார்:

நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்கு கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் (யோவான் 4:14).

குறிப்பு: "ஊறுகிற நீரூற்று" என்றால் உள்ளிருந்து ஊறுகிறது என்று அர்த்தமாகும்.

ஆவியில் நிறைந்திருந்ததால், தாவீது சங்கீதங்களை பாடினார். தீர்க்கதரிசி சாமுவேலினால் அபிஷேகிக்கப்பட்ட அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்[5]. மேசியாவின் வாழ்க்கையை குறித்து மகத்துவமான வெளிப்பாடுகளை தாவீது பெற்றிருந்ததற்கு காரணம், பரிசுத்த ஆவியானவர்தான். சங்கீதங்களை நாம் வாசித்து அதை நமக்குள்ளேயே பேசிக்கொள்கையில், நமக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவரோடு நாம் இணைந்துகொள்கிறோம். விசுவாசத்தினால் வரும் தேவநீதியில் ஒருவர் தன்னுடைய இருதயத்தை ஸ்திரப்படுத்தி வைத்திருக்கும்போது, இப்படிப்பட்ட மறுரூபத்தை உடனே அனுபவிக்க முடியும். வேதாகமத்திலுள்ள சங்கீத புத்தகத்தை தியானிப்பதில் வல்லமை இருக்கிறது!

அந்நிய பாஷையில் பேசுவதின் வல்லமை

தேவன் என்னை ஊழியத்திற்கு அழைத்த நாட்களில், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அந்நிய பாஷையில் ஜெபிக்கும் நேரத்திற்குள் என்னை அவர் நடத்தினார். ஆகவே, நான் மணிக்கணக்காக அந்நிய பாஷையில் ஜெபித்துக்கொண்டிருந்தேன். நான் என்ன ஜெபிக்கிறேன் என்று புரியாவிட்டாலும், நான் அந்நிய பாஷையில் ஜெபிக்கையில், தேவனோடு கூட இரகசியங்களை பேசுகிறேன் என்பதை மாத்திரம் நன்கு அறிந்திருந்தேன் (1 கொரிந்தியர் 14:1-3). இவ்வாறு செய்யும்பொழுது, என்னுடைய மனம் சலிப்பினால் நிறைந்து கூச்சலிட்டாலும், பின்னணியில் இசையை வாசிக்கவிடுவேன் அல்லது அந்நிய பாஷையில் பேசிக்கொண்டே வேதாகமத்தை வாசிப்பேன் அல்லது வேதாகமத்தை பார்த்து என்னுடைய நாளேட்டில் வசனங்களை எழுதுவேன். ஆவியில் நடப்பதை பயிற்றுவிப்பதில், அந்நிய பாஷையில் பேசுவது என்பது முக்கியமான இடத்தை வகிக்கிறது. கிறிஸ்துவின் சபையானது அந்நிய பாஷையில் பேசும் வரத்தை மிகவும் குறைத்து

மதிப்பிடுகிறது. ஒருவர் அந்நிய பாஷையில் பேசும்பொழுது, சிந்தனையில் ஈடுபடுகிற மூளை பகுதியை பயன்படுத்துவதில்லை என்று மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்து காண்பித்துள்ளனர். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், அந்நிய பாஷையில் பேசுவது என்பது ஆழ்ந்த இளைப்பாறுதலின் நிலைக்கு நம்மை கொண்டு செல்லும். மனம் இளைப்பாறும்போது முழு சரீரமும் இளைப்பாறும். ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில் இதைத்தான் தேவன் வாக்குப்பண்ணுகிறார்.

பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள் (ஏசாயா 28:11-12).

அந்நிய பாஷையில் பேசும்பொழுது, நாம் ஆவியிலிருந்து ஜெபித்து பாடுவதால், அது தேவனே நமக்கு கொடுக்கும் இளைப்பாறுதல் ஆகும். அதோடு கூட, தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது பதிந்துள்ள மனதையும் இணைக்கும்போது, மறுரூபம் தொடங்குகிறது. இது, புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் ஜெபிக்கும் ஜெப வகைகளில் ஒன்றாகும். ஆகவே, அந்நிய பாஷையில் பேசுவதன் மூலமாக, இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.

உபவாசம்

உபவாசம் என்பது மனதை புதிதாக்குவதில் உதவுகிற ஒரு ஒப்பற்ற ஆயுதம் ஆகும். விசுவாசத்தில் செயல்படும்பொழுது, தேவனுடைய வார்த்தையை கொண்டு, அதற்கு உங்களுடைய இருதயத்தை சம்மதிக்கப்பண்ணி, அதில் உங்களுடைய இருதயத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கின்றீர்கள். உங்களுடைய வலியோ அல்லது வியாதியின் எந்த அறிகுறியோ வெளிப்படுத்துகிற உண்மையை காட்டிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அதிக உண்மையாகும்படி,

அவைகளின் மீது மட்டும் கவனம் செலுத்தி அதை தியானம் செய்வதற்கென்றே உங்களை அர்ப்பணிக்கிறீர்கள். உபவாசத்தை குறித்து விளக்கம் கேட்கப்பட்டபோது, இயேசு இவ்வாறாக பதில் கொடுத்தார்:

"மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்: ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான், இணைத்தால், அதினோடே இணைத்த புதியதுண்டு பழையதை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வார்த்துவைத்தால், புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்; புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும் என்றார்" (மாற்கு 2:20-22).

புதிய வஸ்திரமும் புதிய துருத்தியும் ஆவியினால் நிரம்பின வாழ்க்கையின் சக்தி வாய்ந்த தன்மையை காட்டுகிறது. நம்முடைய மறுபிறப்பின்போது, இந்த ஆவியைத்தான் பெற்றுக்கொண்டோம். எனினும், பழைய மனப்பாங்கானது, பழைய வஸ்திரம் அல்லது பழைய துருத்தி போல கடினமாக இருக்கிறது. புதிய ஆவியின் பரிமாணத்தோடு பழைய மனப்பாங்கை இணைத்து செயல்பட முடியாது. ஆகவே, பழைய மனப்பாங்கை மாற்றுவதற்கு இணையற்ற ஞானத்தை இயேசு தருகிறார். உபவாசம்!

உபவாசிப்பதுதான் மாம்சீக மனதின் வல்லமையை ஆற்றல் மிக்க வகையில் நொறுக்க ஒரே வழி ஆகும்.

ஐம்புலன்களாகிய பார்த்தல், முகர்தல், கேட்குதல், சுவைத்தல் மற்றும் தொடுதல் மூலமாக வந்த தகவல்களின் அடிப்படையில் உங்களுடைய மனதானது பல வருடங்களாக உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் உபவாசிக்கும்போது, இந்த ஐம்புலன்களிலிருந்து உபவாசிப்பதை இலக்காக வைக்க வேண்டும். தொலைக்காட்சியை

பார்ப்பது, சமூக வலைதளங்களில் வலம் வருவது, தேவனுடைய வார்த்தையை தவிர்த்துவிட்டு பிற புத்தகங்களை வாசிப்பது போன்ற காரியங்களையெல்லாம் விட்டு விலகி பரிசுத்தப்படுத்திக்கொள்வது மட்டுமல்லாமல், உணவிலிருந்தும் உபவாசிப்பதுதான் மாம்சீக மனதின் வல்லமையை ஆற்றல் மிக்க வகையில் நொறுக்க ஒரே வழி ஆகும். அவ்வாறு செய்யும்போது, உங்களுடைய மனதை தேவனுடைய வார்த்தையை கொண்டு புதிதாக உருவாக்க ஆரம்பிக்கின்றீர்கள். இது, உலகப் பிரகாரமான ஒழுங்குமுறையோடு (world system) ஒத்து வாழ்ந்து செயல்பட்ட பழைய மனதை உடைக்கும். இவ்வாறு உபவாசிப்பதை வழக்கமாக்கிக்கொள்ளும்போது, உங்களுடைய உள்ளான ஆவிக்கேற்ப மனதானது புதுப்பிக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்படும். அப்பொழுது, உங்களால் ஆவியில் மிகவும் எளிதாகவும், எந்தவிதமான தங்குதடையுமின்றி நடக்க முடியும். இதுதான் ஒரு சீடனுடைய வாழ்க்கைமுறை ஆகும்!

தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து அதில் வசிப்பதின் நன்மை என்னவென்றால், சமாதானமும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்க்கை ஆகும். இது, நாம் 'செயல்பட்டாலும்,' 'இளைப்பாறுதலுக்குள் வசிக்கும்' உயிர்த்தெழுந்த வாழ்க்கையை காட்டும் முரண்பாடான இலக்கணம் (paradox) ஆகும். நாம் ஏதோ அதிகமாக தியாகம் செய்வது போல தோன்றினாலும், உண்மை என்னவென்றால், நாம்தான் தேவனுடைய வழிகளினால் அதிகமான அளவில் ஆதாயப்படுகிறோம். இதுதான் உண்மையான விடுதலை. தேவனுடைய பிள்ளைகளுக்கு அவருடைய வழிகள் எல்லாம் ஜீவனும் சமாதானமும் நிறைந்தவை ஆகும். இத்தனை ஆண்டுகளாக, இவ்வாறுதான் நீங்கள் வாழ வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதை நீங்கள் இப்பொழுதுதான் கண்டுபிடித்துள்ளீர்கள். இப்பொழுதே உங்கள் இருதயமானது சொல்லிமுடியாத சந்தோஷத்தினாலும் மகிமையினாலும் நிறைந்திருக்கிறது!

அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும்

இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும் (2 பேதுரு 1:19).

இவ்வாறு, மனதை புதிதாக்குவதில் நீங்கள் ஈடுபடும்போது, வெளிச்சமானது கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி பட்டப்பகலைப் போல ஆவதை பார்ப்பீர்கள். அதுமட்டுமல்ல, வெளிச்சம் இன்னும் அதிகமாக பிரகாசிக்கையில், விடிவெள்ளி நட்சத்திரம் (இயேசுவை) உங்கள் இருதயங்களில் உதிப்பதை பார்ப்பீர்கள். அதாவது, 'உங்களுக்குள் கிறிஸ்து' என்ற சத்தியம் உங்கள் இருதயத்தில் மேலோங்கி நிற்க ஆரம்பிக்கும். உங்களுக்கும் அவருக்கும் இடையில் எந்தவிதமான தடுப்புச்சுவருமே இல்லாதது போல, இயேசுவின் வாழ்க்கையை உங்கள் இருதயத்தில் மிகத் தெளிவாக பார்க்க ஆரம்பிப்பீர்கள். அவருடைய வெற்றி உங்களுடைய வெற்றி ஆகும். அவருடைய ஆரோக்கியம் உங்களுடைய ஆரோக்கியம் ஆகும். இப்பொழுது, நீங்கள் அவருடைய இளைப்பாறுதலுக்குள் நுழைந்துவிட்டீர்கள். இங்குதான் நீங்கள் உங்களையே அவரில் இழந்துவிடுவீர்கள்! உங்களுடைய செயலை நீங்கள் நிறுத்துவதற்கும், அவர் தம்மையே உங்கள் மூலம் வெளிப்படுத்துவதற்கும் இடையில் இருக்கும் எல்லைக்கோடு முற்றிலும் அழிக்கப்பட்டு போகும்!

வேதவசன ஆதாரங்கள்

1. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக (யாத்திராகமம் 20:8).

2. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோசெயர் 1:15-17).

3. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோசெயர் 1:13-14).

4. துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து (எபேசியர் 5:18-20).

5. அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான்; அந்நாள்

முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்; சாமுவேல் எழுந்து ராமாவுக்குப் போய்விட்டான். (1 சாமுவேல் 16:13).

முடிவுரை

இப்பொழுதுதான் நீங்கள் உங்களுடைய மறுரூபப்படுத்தப்பட்ட வாழ்க்கையை ஆரம்பித்திருக்கின்றீர்கள்! நீங்கள் இந்த புத்தகத்தை ஆரம்பித்தபொழுது, உங்களுடைய சரீரத்திலும் மனதிலும் குணமடைய வேண்டும் என்பது மட்டுமே ஒரே குறிக்கோளாக இருந்தது. ஆனால், இப்பொழுதோ குறிக்கோள் மாறிவிட்டது! இப்பொழுது, தெய்வீக ஆரோக்கியத்தில் நடக்க வேண்டும் என்று உங்களுக்கு விருப்பம் வந்துவிட்டது. கிறிஸ்துவுக்குள்ளாக உங்களுக்கு இருக்கும் உண்மையான அடையாளத்தை நீங்கள் கண்டுபிடித்ததால், உங்களுடைய இருதயம் சந்தோஷத்தினால் துள்ளிக்கொண்டு இருக்கிறது. "உங்களுக்குள்ளிருக்கும் சுகத்தை கட்டவிழ்த்துவிடுங்கள்" என்பது இப்புத்தகத்தின் தலைப்பு மட்டுமல்ல, இதுவே உங்களுடைய வாழ்க்கை முறையாக மாறி, உங்களிலிருந்து மற்றவர்களுக்கும் சுகம் கடந்து செல்ல போகிறது.

பரிசுத்த ஆவியானவர்தான் நம்மை மறுரூபப்படுத்துகிறவர். ஆனால், நம்முடைய ஒத்துழைப்பின்றி அவரால் ஏதும் செய்ய இயலாது. ஆண்டவரையே உற்று நோக்கிக்கொண்டிருக்கும்போது நடப்பதைத்தான் மறுரூபம் என்று அழைக்கிறோம். உற்று நோக்குவது என்றால் கண்களை அவர் மேலேயே பதித்து கருத்தோடு பார்ப்பது ஆகும். வெறுமனே கடந்து செல்லும்போது பார்க்கும் மேலோட்ட பார்வை அல்ல. அவர் நம்மில் வாழ்கிறார் என்பதை நாம் முழுவதும் புரிந்துகொள்வது மிகவும் அவசியம்.

2 கொரிந்தியர் 3:18ல் "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் காண்போம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். தேவனுடைய வார்த்தை எனும் கண்ணாடி, நமக்குள் வாழும் கிறிஸ்துவை காண்பிக்கிறது. உண்மையான மாற்றத்திற்கு இதுவே ஆரம்பம்! அவரையே நோக்கிப் பார்த்துக்கொண்டு பயணத்தை தொடங்கும் நாம், 'அவருக்குள் நாம் பரிபூரணமாக இருக்கிறோம்' என்பதை புரிந்துகொண்டதும், சேர வேண்டிய இடத்தை சென்றடைகிறோம். நாம் பரிபூரணராகும்படிக்கு எதையாவது செய்ய முயற்சித்தால், அவை எல்லாமே காலியான தத்துவங்களும், உலக அமைப்பின் கொள்கையே அல்லாமல் வேறொன்றுமில்லை என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (கொலோசெயர் 2:8).

சிலுவையிலே என்ன நடந்தது என்றும், அதினிமித்தம் உங்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை பற்றின ஒப்பற்ற அறிவினால் நீங்கள் இப்பொழுது நிறைந்துள்ளீர்கள். தேவனுடைய வார்த்தையை நீங்கள் முன்னர் பார்த்தது போல இனி பார்ப்பதில்லை. தேவனுடைய வார்த்தைதான் உங்களுடைய மெய்யான அடையாளம் என்று இப்பொழுது உங்களுக்கு தெரியும். வார்த்தை உங்களை குறித்து சொல்வது மட்டுமே மெய்யான அடையாளம் ஆகும். அப்படிப்பட்ட உண்மைகளை தியானத்தின் மூலமாக உங்கள் இருதயத்தின் நம்பிக்கையாக மாற்றுவது எப்படி என்று இப்பொழுது உங்களுக்கு தெரியும். ஆம்! மறுரூபமாவதின் திறவுகோலை நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்கள். அதிக நேரம் வார்த்தையை வாசித்து மனதை புதிதாக்க வேண்டும் என்ற ஆவல் வந்துவிட்டது. பிசாசு, சூழ்நிலைகள் போன்ற நேரத்தை திருடுகிற காரியங்களோடு உங்களுக்கு இருந்த போராட்டம் முடிந்தது! இப்பொழுது, "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறியதை புரிந்திருப்பீர்கள். 'அவர்களை' என்பது ஆங்கிலத்தில் 'them' என்று உள்ளது. அது, எல்லா தீய ஆவிகளையும்

குறிக்கிறது. இப்பொழுது, பிசாசோடு போராடிக்கொண்டு உங்கள் நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை. தேவனுடைய வார்த்தையை கொண்டு மனதை மாத்திரம் புதிதாக்கினால் போதும்! 'அரண்கள்' என்றால் பிசாசுகள் அல்ல என்றும், அவை உங்களை சிறைப்படுத்தி வைத்திருக்கும் எண்ணங்களே என்றும் புரிந்துகொண்டீர்கள். சிறைப்படுத்தி வைத்திருக்கும் எண்ணங்கள் என்றால், 'கிறிஸ்துவுக்குள் நீங்கள் யார்' என்ற உண்மையான அடையாளத்திற்கு புறம்பான எண்ணங்கள்தான்.

இந்த ஈடு இணையற்ற பயணத்தில், இயேசுவை பின்பற்றுவது என்பது இனிமேலும் அச்சுறுத்தலாக இல்லாமல் மகிழ்ச்சியாக மாறிவிட்டது. உங்களுடைய கருத்துக்களை விட்டுவிட்டு, தேவனுடைய வார்த்தையில் உள்ள சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு காணப்படுகின்றீர்கள். இதுதான் மெய்யான அர்ப்பணம்! இப்பொழுது, நீங்கள் அவருடைய உண்மையான சீடனாகிவிட்டீர்கள். மனந்திரும்பின வாழ்க்கை என்பது உங்களது வாழ்க்கை முறையாகிவிட்டது.

பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தை கேட்பது, வாழ்க்கையில் மிகுதியான பலனை தரும். மற்ற புறஜாதியார் நடப்பது போல நீங்கள் நடக்கமாட்டீர்கள். உங்களுக்குள்ளிருக்கும் தேவனுடைய ஜீவனுக்கு இனிமேல் நீங்கள் வேற்று மனிதராக இருக்கமாட்டீர்கள். நீங்கள் இளைப்பாறுதலான இடத்திற்குள் பிரவேசித்துவிட்டீர்கள். அவருக்குள் நீங்கள் பரிபூரணராக இருக்கின்றீர்கள். இப்பொழுதோ, எல்லாவற்றிற்காகவும் நீங்கள் கிறிஸ்துவையே நோக்கி பார்க்கின்றீர்கள். அவரே உங்கள் ஜீவனானபடியால், அவரிடமிருந்து நீங்கள் பிரியவே முடியாது.

ராஜ்யத்தின் திறவுகோல்களை நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்கள். பெதஸ்தா குளத்தினருகே, தண்ணீரை கலக்க ஒரு தேவதூதன் வருவான் என்று அநேக நோயாளிகள் காத்திருந்ததுபோல (யோவான் 5), நீங்கள் தேவனுடைய அடுத்த அசைவுக்காக காத்துக்கொண்டிருக்கவில்லை. *எழுப்புதல்* உங்களுக்குள்தான் இருக்கிறது என்பதை நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்கள்.

நீங்கள்தான் உலகத்தின் வெளிச்சமாக இருக்கின்றீர்கள் என்று நீங்கள் உணர்ந்துகொண்டதால், பிரகாசிக்க தயாராகிவிட்டீர்கள். தேவனுடைய ராஜ்யத்தை தேடுவதற்கு உங்கள் வாழ்க்கையில் நீங்கள் முன்னுரிமை கொடுப்பதால், வாழ்வின் எல்லா கவலைகளும் ஒன்றுமில்லாமல் போய்விட்டது. இப்படிப்பட்ட பரிபூரண ஜீவனைத்தான் இயேசு வாக்களித்திருக்கிறார்.

உங்களுடைய உண்மையான அடையாளத்தில் இருதயத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கையில், சில நேரம் தடுமாறுவீர்கள். ஆனாலும், விழுந்த இடத்திலேயே இருக்க மாட்டீர்கள். உங்கள் ஆவியில் தேவனோடு ஐக்கியம் கொள்ள நீங்கள் கற்றுக்கொண்டதால், அவர் உங்களை தொடர்ந்து நடத்துவார். இயேசு உங்களுடைய நல்ல மேய்ப்பராக இருப்பதால், நீங்கள் நடக்க வேண்டிய உங்களுடைய ஒவ்வொரு அடியையும் அவரே ஏற்படுத்துகிறார். நீங்கள் அவரை தவறவிட்டாலும், அதை உடனே உணர்ந்து அவரோடு மறுபடியும் இணைந்திடுவீர்கள்.

சரியான துல்லியமான அறிவின் முக்கியத்துவத்தை நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். உங்களுடைய இருதயத்தை காத்துக்கொள்வதின் மேன்மையையும் கற்றுக்கொண்டீர்கள். சத்தியத்தோடு ஒத்துவராத பிரசங்கத்தையும் பாடலையும் நீங்களே நிராகரித்துவிடுவீர்கள். ஆரோக்கியமாக வாழ்வதற்கு இதுவே வழி. நீங்கள் மற்ற காரியங்களை குறித்து தீர்ப்பளிக்கிறவர்களாக இல்லாமல், உங்களுடைய இருதயத்தை காத்துக்கொள்வதில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கின்றீர்கள். இதுதான் எஜமானின் ஞானம் (மாற்கு 4:24).

தேவனுடைய வார்த்தையைக் கொண்டு உங்கள் இருதயத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதே உங்களுக்கு இப்பொழுது முதன்மையான காரியமாக இருக்கிறது. அர்த்தமில்லாத மதரீதியான செயல்பாடுகளுக்கு நேரம் செலவிடுவதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். சிறு வயதிலிருந்து நீங்கள் மனப்பாடம் செய்த வேத வசனங்கள் இப்பொழுது மிகவும் பிரயோஜனமாய் இருக்கும். இதை படித்துக்கொண்டிருக்கும்பொழுது, அவை

யாவும் உங்கள் இருதயத்தில் படபடவென்று பட்டாசு போல வெடித்துக்கொண்டிருக்கின்றன. இது, பரிசுத்த ஆவியானவரின் செயல் ஆகும். இந்த விசுவாச பாதையில் நடக்கும்படி, உலகத் தோற்றத்திற்கு முன்னரே நீங்கள் முன்குறிக்கப்பட்டவர்கள். இப்பொழுதுதான் நீங்கள் அதை கண்டுபிடித்துள்ளீர்கள்! இனி எதுவுமே உங்களை நிறுத்த முடியாது!

ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை நான்கு தூண்களின் மீது கட்டுகிறார்கள் - ஆரோக்கியம், சொத்து, பணி, உறவுகள். இவைகளை கட்டியெழுப்புவதற்கு, ஒருவர் பயன்படுத்தும் நாணயம், நேரம் ஆகும்! உங்களுடைய நேரத்தை அவரது பிரசன்னத்தில் செலவிடும்பொழுது, அந்த நான்கு காரியங்களுமே தானாகவே நேர்த்தியாக செயல்பட ஆரம்பிக்கும். "தேவனுடைய ராஜ்யத்தை நீங்கள் முதலாவது தேடும்பொழுது, இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும்" என்று இயேசு சொன்னதை நினைவில்கொள்ளுங்கள். தேவனுடைய ராஜ்யத்தை முதலாவது தேடுவது என்றால், ஆவியில் நடக்கும் வாழ்க்கைக்கு முதன்மையான இடத்தை கொடுத்து வாழ்வது. உங்களுடைய பரலோக பிதாவோடு நேரம் செலவிடுவதின் முக்கியத்துவத்தை இப்பொழுது நீங்கள் அறிந்துகொண்டீர்கள்! இப்பொழுது, உங்களுடைய வாழ்க்கை முற்றிலும் வேறு திசை நோக்கி திருப்பிவிடப்பட்டிருக்கிறது. இதுதான் உங்கள் இருதயத்திலிருந்து வாழும் மகிழ்ச்சி ஆகும்.

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கான இரகசியம் என்னவென்றால், இருதயத்திலிருந்து வாழ்வதுதான். அநேகர் விசாலமான வழியை தெரிந்துகொள்கின்றார்கள். ஆனால் நீங்களோ, இப்பொழுது, உங்கள் இருதயத்திலிருக்கும் குறுகலான வழியை தெரிந்துகொண்டுள்ளீர்கள். கர்த்தருடைய பந்தியில் அடிக்கடி பங்கெடுங்கள். அது, இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை கொண்டு, உங்களுடைய எண்ணங்களை, ஒப்பற்ற விதத்தில் பாதுகாக்கும்படி உதவும். ஒரு சமயத்தில், ஒரு சூழ்நிலை என்று எல்லாவற்றிலும் உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிப்பதே நமது குறிக்கோளாகும்!

கடைசியாக சில வார்த்தைகள்

“பரிசுத்தரை குறித்த அறிவு” என்ற புத்தகத்தில், A.W. டோஸர் என்பவர் இவ்வாறாக எழுதுகிறார்: “தேவன் பரிசுத்தமானவர். இவ்வுலகின் ஆரோக்கியத்திற்காக, பரிசுத்தத்தை தார்மீக நிலையாக ஏற்படுத்தியிருக்கிறார். பாவத்தின் தற்காலிக பிரசன்னம் கூட இதை உச்சரித்துக்கொண்டே இருக்கிறது. **பரிசுத்தமாக இருக்கும் எதுவுமே ஆரோக்கியமாக இருக்கிறது.** தீயன யாவுமே ஒழுக்க நெறிமுறையில் தொற்றிக்கொண்ட வியாதி ஆகும். அது, மரணத்தில்தான் முடிவடையும்.” மொழியின் அமைப்பே இதைத்தான் பரிந்துரைக்கிறது. பரிசுத்தம் என்று பொருள்படுகின்ற “holy” என்ற ஆங்கில வார்த்தை ஆங்கிலோ-சாக்ஸன் (Anglo-Saxon) மொழியில் உள்ள ‘ஹலிக்’ (halig) என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. ‘ஹல்’ (Hal) என்றால், “நன்றாக, முழுமையாக” என்று பொருள்படும்.

“பரிசுத்தம்” என்றால் முழுமை அல்லது பரிபூரணம் என்று பொருள்படும். “நான் பரிசுத்தர். ஆகவே நீங்களும் பரிசுத்தராயிருங்கள்” என்று தேவன் கூறியபோது, அவர் நம்மை மிரட்டவில்லை. மாறாக, கிறிஸ்துவின் மூலமாக, அவருடைய பரிபூரணத்தில் பங்கெடுக்கும்படியாக நம்மை அழைக்கிறார்! “அவருக்குள் நீங்கள் பரிபூரணராக இருக்கின்றீர்கள்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். ஒவ்வொரு சவாலிலும், நமது மனதை புதிதாக்கி, வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் நம்மை நாமே பரிபூரணராக பார்க்க கற்றுக்கொள்கிறோம்.

இப்பொழுது, இதை நினைவில் கொள்ளுங்கள்: "நீங்கள் அவருக்குள் **பரிபூரணராக** இருக்கின்றீர்கள்."

ஏழு திறவுகோல் வசனங்கள்

இந்த பகுதியில், என்னுடைய விளக்கத்தோடு கூட, சில முக்கியமான திறவுகோல் வசனங்களை கொடுத்திருக்கிறேன். என்னுடைய தேவை நிறைந்த நேரத்தில் இவை எனக்கு அதிகமாக உதவின. இவை உங்களுக்கும் உதவும் என்று விசுவாசிக்கிறேன்.

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 **பேதுரு** 2:24)

(இங்கு, நாம் ஏற்கெனவே குணமாக்கப்பட்டிருக்கிறோம் என்று பேதுரு தெளிவாக கூறுகிறார். இது சிலுவையில் நடந்தது. இப்பொழுது, நாம் செய்ய வேண்டியதெல்லாம், நம்முடைய மனதை புதிதாக்கி, அதை நமது இருதயத்தில் உண்மையாக மாற்ற வேண்டும்).

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது (**ஆவிக்குரிய ரீதியாக**) **போல** (**எனக்கு தெரியும்**) **நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி** (**சரீரப்பிரகாரமாக**) **வேண்டுகிறேன்** (3 **யோவான்** 2)

(மனம் புதிதாவதினாலே நமக்குள்ளாக இருக்கும் காட்சி மாறும்பொழுது, அது நம்முடைய சுகம் மற்றும் எல்லா பகுதிகளிலும் வெளிப்பட ஆரம்பிக்கும் என்று யோவான் கூறுகிறார்).

மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது (இயற்கையான) பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் (அவர் கொடுப்பதால்) ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (**ரோமர்** 8:10-11).

(இது என்னை பொறுத்தவரை ஒரு புரட்சிகரமான வசனம். ஆரோக்கியத்தை குறித்த எனது கண்ணோட்டத்தையே மாற்றிவிட்டது. ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில், பரிசுத்த ஆவியானவர் மிகவும் முக்கியமான நபர் ஆவார். உங்களுடைய வாழ்க்கைமுறையே ஆரோக்கியமாக இருக்கத்தக்கதாக, அவர் உங்களுக்கு கற்பித்து, உங்கள் மனதை கூர்மையாக்குவார். ஆவியின் ஜீவனாலேதான் நம்முடைய ஒவ்வொரு உயிரணுவும் வாழ்கிறது).

என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள் (1 **கொரிந்தியர்** 11:29-30).

("கர்த்தருடைய பந்தி" என்ற அத்தியாயத்தில் நான் ஏற்கெனவே விளக்கினபடி, ஆண்டவராகிய இயேசுவின் சரீரத்தில் உங்களுடைய வியாதிகள் அனைத்தும் சென்றுவிட்டதாக பார்க்க வேண்டும். இன்றைக்கு, அவருடைய சரீரத்தை இவ்வாறுதான் கனப்படுத்த முடியும்).

என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; **என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய். அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்** (**நீதிமொழிகள்** 4:20-22).

(தேவனுடைய வார்த்தையை சாராமல் வாழ்வது என்பது, ஜீவனை அதின் ஆதாரத்திலிருந்து துண்டிப்பது போன்றதாகும். ஒரு மீனை தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துவிட்டால், அது மரித்துவிடும். அதுபோல, அவருடைய வார்த்தையிலிருந்து உங்களை துண்டித்தால், நீங்கள் உலர்ந்துபோய்விடுவீர்கள்).

ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; **நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்** (**நீதிமொழிகள்** 15:4).

(ஆவியின் ஜீவனை கட்டவிழ்க்கவோ தடுக்கவோ வல்லமை உடையதுதான் நாவு. இதை நமக்கு நாமே அடிக்கடி நினைவுப்படுத்திக்கொள்ள வேண்டும். இருதயம் புதிதாக்கப்பட்டுவிட்டால், உங்களுடைய வார்த்தைகள் உங்களது இருதயத்தோடு தானாகவே ஒத்திருக்கும்).

மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; **அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்** (**நீதிமொழிகள்** 18:21).

(நாவு ஒரு வல்லமையுள்ள ஆயுதம். உங்களுடைய சூழ்நிலை மீது ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் தொடர்ந்து பேசுங்கள். உங்களுடைய வாழ்க்கை ஓட்டத்தை நீங்கள் நிர்ணயிக்கும்படியாகத்தான் நாவு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, ஞானத்தோடு அதை பயன்படுத்துங்கள்!)

ஆசிரியரை பற்றி

ஆன்ட்ரூ, இந்தியாவில் வளர்ந்தவர். 17வது வயதில் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார். தன்னுடைய மருத்துவ பட்டத்தையும், மயக்க மருந்து அளிப்பதில் (anaesthesia) முதுகலை படிப்பையும் இந்தியாவில் பயின்று முடித்து, லண்டன் மாநகரத்தில் உள்ள Royal College of Anaesthetist-ல் FRCA fellowship program முடித்தார். பிற்பாடு, இங்கிலாந்தில் உள்ள தேசிய மருத்துவ சேவையில் (National Health Services) இணைந்து, மயக்க மருந்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவில் பணியாற்றினார். தன்னுடைய மருத்துவ துறையில், பணியின் உச்சியில் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தபோது, தேவன் அவரை ஊழியத்திற்கு அழைத்தார். ஆம், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து போதகம் பண்ணவும் பிரசங்கிக்கவும் அவரை அழைத்தார். தேவனுடைய அந்த அழைப்பிற்கு ஆன்ட்ரூ உடனே கீழ்ப்படிந்து, தன்னுடைய மருத்துவ பணியை ராஜினாமா செய்துவிட்டு, புது உடன்படிக்கையின் ஊழியனாக மாறினார். இன்றைக்கு, தன்னுடைய உள்ளூர் ஆலயத்தில், உதவி போதகராக செயலாற்றுகிறார். அது மட்டுமல்லாமல், உலகமெங்கும் பயணம் செய்து, சிறு குழுக்கள், முகாம்கள் மற்றும் ஆலயங்களுக்கு சென்று இயேசு கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்து வருகிறார்.

உலகமெங்கிலும் உள்ள உள்ளூர் ஆலயங்களோடு இணைந்து, *சுகமளிக்கும் பள்ளி* மற்றும் *சுகமளிக்கும் கருத்தரங்குகளை* நடத்துகிறார்.

தன்னுடைய அன்பான மனைவி நிஷா மற்றும் இரண்டு பிள்ளைகளாகிய சாமுவேல் மற்றும் ரூத் ஆகியோருடன் இங்கிலாந்து தேசத்தில் (ஐக்கிய ராஜ்யம்) வசித்து வருகிறார்.

சுகமளிக்கும் பள்ளி மற்றும் வார இறுதியில் நடைபெறும் சுகமளிக்கும் கலந்தாய்வு கூட்டங்கள் (healing workshops) குறித்து மேலும் அறிய, ஆன்ட்ரூவை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

ஈமெயில் முகவரி: releaseyourhealing@gmail.com

அவர் எழுதியிருக்கும் புத்தகங்கள்:

1. Release Your Healing
2. உங்களுக்குள்ளிருக்கும் சுகத்தை கட்டவிழ்த்துவிடுங்கள்
3. Divine Healing - A Study Guide